வெளியீடு 9-4-2007 Issued 9-4-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜனவரி 24, 2007—தொகுதி 19—எண் 3

Wednesday the 24th January, 2007—Volume 19—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

24 1 2007

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. அறிவிப்பு**—

வினா-விடை நேரத்தில் வேறு பொருள் எழுப்ப அனுமதி மறுத்தல் .. 257-258

**2. வினாக்கள்-விடைகள்**—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. 258-290

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2) .. 290-415

**3 தகவல் கோரல்**—

(அ) பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்க நடவடிக்கை .. 415-417

(ஆ) பண்ருட்டி, முந்திரி ஏற்றுமதி மையம் அமைத்தல் .. 417-418

**4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி .. 419-497

திரு. ச. லட்சுமணன் .. 419-422

திரு. கோவை தங்கம் .. 422-432

* டாக்டர் க. நெடுஞ்செழியன் .. 432-440

* திரு. ஞா. ஜாண் ஜோசப் .. 440-445

திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி .. 445-449

திருமதி பி. பத்மாவதி .. 449-455

| | | பக்கங்கள் |
|---|---|---|
| **4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | | |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | .. | 455-466 |
| * திரு. கோ. எதிரொலி மணியன் | .. | 467-473 |
| திரு. அ. சௌந்தரபாண்டியன் | .. | 473-475 |
| * திரு. வை. காவேரி | .. | 475-479 |
| திரு. கே. மகேந்திரன் | .. | 480-484 |
| * திரு. குத்தாலம் க. அன்பழகன் | .. | 484-490 |
| * திரு. விடியல் எஸ். சேகர் | .. | 490-497 |
| **5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | .. | 497-498 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 10, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஜனவரி 24, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்"

அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள். (குறுக்கீடுகள்)

## 1. அறிவிப்பு

### வினா விடை நேரத்தில் வேறு பொருள் எழுப்ப அனுமதி மறுத்தல்

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டு கோஷமிட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்யக் கூடாது. விதி எண் 32 இன்படி, முதலில் Question hour தான். (குறுக்கீடுகள்) அதற்கு முன்னால் எதையும் எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், முதலில். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், முதலில். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டு தொடர்ந்து கோஷமிட்டனர்.)

நீங்கள் அவை நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப எச்சரிக்கையாகச் சொல்கின்றேன்.

காப்பகம்
227483
சென்னை-600 008

உட்காரு... எல்லோரும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழ...) மு... எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, எதிர்க்கட்... தலைவர், எல்லோரிடமும் சொல்லி உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் போங்கள்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே அவையிலிருந்து வெளியேறினர்.)*

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளியேறினர்.)*

பேரவைக்கு ஓர் அறிவிப்பு. விதி எண் 32-இன்படி, 'The first hour of every sitting shall unless the House unanimously resolves otherwise be available for the asking and answering of questions. The Speaker may in his discretion extend the time for questions.'

So, முதலில் இருக்கக்கூடியது கேள்வி-பதில்தான். அதற்கு முன்னால் எதையும் எழுப்ப முடியாது. இது குறித்து 1980-81 – பேரவையில் – ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது, "வினா–விடைகளுக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில், அவற்றிற்குப் புறம்பான வேறு எதையும் அனுமதிப்பதற்கில்லை" என்று. ஏற்கெனவே, 1983-ல் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இன்று, எதிர்க்கட்சியினரின் நடவடிக்கைகள் எல்லாம் அவை மரபிற்கு மீறிய செயல்; அவையினுடைய விதிகளுக்கு மீறிய செயல் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 21, 22 மற்றும் 23 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

**24—**

### பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***5355—திரு. கே.எல். இளவழகன்:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், புதுப்பாடி ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், புதுப்பாடி ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளி, 2006–2007 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.*

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப்பாடி ஊராட்சியில் இருக்கக்கூடிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுத்தமைக்காக முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று எனது தொகுதிக்குட்பட்ட திமிரி ஒன்றியத்தில், மழையூர் ஊராட்சியிலே, அந்தக் கிராமத்திலே இயங்கக்கூடிய நடுநிலைப் பள்ளியையும் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பள்ளியில் பயிலக்கூடிய மாணவர்கள் உயர் கல்வியைப் பயிலுவதற்கு அருகிலுள்ள திமிரி, வளையாத்தூர் போன்ற கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், 10 கிலோ மீட்டர் செல்லவேண்டிய நிலைமை இருக்கின்றது. அந்தக் குறையைப் போக்குகின்ற வகையிலே வருகின்ற கல்வி ஆண்டிலே அந்தப் பள்ளியையும் தரம் உயர்த்தித் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய முன்மொழிவுகள் நம்முடைய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களாலே பெறப்படும் என்று சொன்னால், வரக்கூடிய கல்வி ஆண்டிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன்

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியில் இடை நிற்றலைத் தவிர்ப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டார்கள். உண்மையிலேயே கடைக்கோடி மக்களுடைய கல்வி வளர்ச்சிக்கு இது மிகவும் அத்தியாவசியமானது, மகிழ்ந்து வரவேற்கத்தக்கது. அதேசமயத்தில் மதுரை மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கக்கூடிய பிள்ளைகள் மாநகராட்சி control-ல் வருகிறார்கள். கல்வி இலாகா தனியாக இருக்கிறது, மாநகராட்சி தனியாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, மதுரை கிழக்கு தொகுதியிலுள்ள பள்ளிகளின் ஆசிரியர்கள் எல்லாம் சிரமப்பட்டு, கடைக்கோடி மக்களைத் தேற்றி வருகிறார்கள். அந்தப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படாததன் விளைவாக பெரிய பாதிப்பு இருக்கிறது. அதுபற்றி மாநகராட்சிக்கும் தெரிவித்து, கல்வித் துறையும் தலையிட்டு அந்தப் பணியை விரைந்து நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை குறித்து நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் பலமுறை என்னிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வரக்கூடிய கல்வி ஆண்டிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், புதிதாக இந்த ஆண்டு தரம் உயர்த்தப்படக்கூடிய பள்ளிகளுக்கு பட்டியல் தயாரிக்கும் போது, நிச்சயமாக அவருடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதி, மருங்கூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அக்கோரிக்கையை ஏற்று, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு எனக்கு என்று தனி உத்தரவு வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் அவர்களுக்கும், அதற்கான முயற்சி எடுத்து அந்த உத்தரவை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி சொல்லி, அந்தப் பள்ளியில் தேர்வு எழுதுவதற்கான centre கேட்டு மனு செய்திருக்கிறார்கள். அதையும் தாங்கள் வழங்குவதற்கு ஆவன



செய்ய முடியுமா என்பதையும், அந்தப் பள்ளிக்கு தலைமை ஆசிரியரையும் நீங்கள் உடனடியாக நியமனம் செய்து தர முடியுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்த மருங்கூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகச் சிறப்பாகத் தரம் உயர்த்தித் தருவதற்காக தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலிலே உத்தரவினை அளித்தார்கள். அதைத் தொடர்ந்து அந்தப் பள்ளியிலே இப்பொழுது புதிதாக தேர்வு மையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை உறுப்பினர் எழுப்பியிருக்கின்றார்கள். ஒரு தேர்வு மையம் அமைக்கப்பட வேண்டுமென்றால், அங்கே குறைந்தபட்சம் 200 மாணவர்கள் தேர்வு எழுதுவதற்காக தயார் நிலையிலே இருந்திட வேண்டும். இப்பொழுது ஏற்கெனவே அவர்கள் தேர்வு எழுதிக்கொண்டிருக்கக்கூடிய மையத்திலிருந்து No Objection Certificate ஒன்றை அவர்கள் பெற்றிட வேண்டும். எனவே, இத்தகைய criteria என்று சொல்லக்கூடிய சில நிபந்தனைகளை அவர்கள் பூர்த்திசெய்யக்கூடியபட்சத்திலே உங்களுடைய கோரிக்கையை நிச்சயமாக அரசு கருத்திலே கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் அரசுக்கு இணையாக தனியார். பள்ளிகளும் நிதி உதவி பெற்று தமிழகத்தில் சிறப்பாகக் கல்விப் பணி ஆற்றி வந்தன. 1991–க்குப் பிறகு தனியார் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டதற்கு அரசு நிதி உதவி வழங்கவில்லை. ஆனால், 1991–க்குப் பிறகு ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அரசால் தரம் உயர்த்தப்பட்டும், ஆரம்பிக்கப்பட்டும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, அந்தத் தனியார்கள் தங்களுக்கு இழப்பு ஏற்படுத்தியதாகக் கருதுகின்றார்கள். மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் தலைமையில் நடைபெறுகின்ற இந்த நல்லாட்சியில் தனியார் பள்ளிகள், 1991–க்குப் பிறகு தரம் உயர்த்தப்பட்ட தனியார் பள்ளிகளுக்கும் நிதி உதவி வழங்கப்படுமா, தரம் உயர்த்துவதற்கு அனுமதிப்பீர்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2007 ஜனவரி 24

முற்பகல் 9–10

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டுக்குப் பிறகு அத்தகைய தரம் உயர்த்தப்படக்கூடிய தனியார் பள்ளிகளுக்கு நிதி உதவி வழங்குவது இல்லை என்பதை அரசு ஒரு கொள்கை முடிவாக எடுத்திருக்கிறது. அதற்குக் காரணம், அரசினுடைய நிதிச் சுமை. அத்தகைய பள்ளிகளுக்குப் புதிதாக ஆசிரியர் பணியிடங்களுக்கான அனுமதி வழங்குகிறபோது, தமிழ்நாடு முழுவதும் அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கு மேலாக அரசுக்கு நிதிச் சுமை ஏற்படுவதாக எங்களுக்கு தெரிய வந்திருக்கிறது. ஏற்கெனவே இந்த அவையிலேகூட நான் அதுகுறித்த விளக்கத்தைத் தெரிவித்திருக்கிறேன். உறுப்பினருடைய இந்தக் கோரிக்கையைப் பொறுத்தமட்டிலே, அரசினுடைய நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்துபேசி, வருங்காலங்களிலே அதுகுறித்த ஆய்வினை மேற்கொள்ள முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், ஏராளமான மக்கள் புதிதாக பல்வேறு மாவட்டங்களிலிருந்து குடியேறியுள்ள நிலையில், கடந்த ஆட்சியில் S.S.A. திட்டத்தின் மூலம் பல்வேறு புதிய பள்ளிகளைத் தொடங்கினார்கள். ஏற்கெனவே இருந்த ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிறைய மாற்றிவிட்டார்கள். அந்த நடுநிலைப் பள்ளிகளுக்குரிய எந்த அடிப்படை வசதிகளும் அங்கு கிடையாது. கட்டட வசதியோ அல்லது குறைந்தபட்சம் மாணவர்கள் அமர்வதற்கான பெஞ்ச் உள்பட எதுவுமே இல்லாத நிலையில் இருக்கிறது. ஆகவே, அந்த நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு உரிய கட்டடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது ஒன்று. அடுத்தது, நடுநிலைப் பள்ளியிலிருந்து படித்து வெளியே வரக்கூடிய மாணவர்களுக்கு, நடுநிலைப் பள்ளிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப, உயர்நிலைப் பள்ளியோ, மேல்நிலைப் பள்ளியோ இல்லாத காரணத்தினால் அவர்கள் அடுத்தகட்ட கல்வி பயில்வதற்கு இடம் கிடைக்காமல் அலைமோதுகிற ஒரு நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்தில் போன பட்ஜெட் கூட்டத் தொடரின்போதே தெரிவித்தேன். ஒரு பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக அவர்கள் உயர்த்திக் கொடுத்தார்கள், நன்றி. ஆனால், இதை மற்ற



2007 ஜனவரி 24]

சட்டமன்றத் தொகுதிகளோடு தயவுசெய்து ஒப்பிடாமல் அங்குள்ள தேவையைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, இன்றைக்குக் கூடுதலாக நடுநிலைப் பள்ளியிலிருந்து வெளியேறுகிற மாணவர்களுக்கு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியில் இடம் கிடைக்கக்கூடிய வகையில், அந்தப் பள்ளியினுடைய தரத்தை உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய நடுநிலைப் பள்ளிகளிலிருந்து உயர்நிலைப் பள்ளிகளாக, உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை பரவலாக தமிழகம் முழுவதுமே இருந்தாலும்கூட, குறிப்பாக திருப்பூர் பகுதியிலே இருக்கக்கூடிய பள்ளிகள், நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, பல ஆரம்பப் பள்ளிகள், பல தொடக்கப் பள்ளிகள் கடந்த ஆண்டுகளிலே நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இந்தக் கேள்வியைப் பொறுத்தமட்டிலே, இப்போது இருக்கக்கூடிய நடுநிலைப் பள்ளிகளுக்கு உரிய Infrastructural facilities என்று சொல்லக்கூடிய அடிப்படை வசதிகள், கட்டட வசதி, கழிவறை வசதி, ஆய்வக வசதி போன்ற வசதிகளை அனைவருக்கும் கல்வித் திட்டத்திலிருந்து எடுத்துக்கொள்ளக்கூடிய பணிகளின் மூலமாக, நிச்சயமாக அங்கே ஒரு முன்னுரிமை கொடுத்துச் செய்ய முடியும். இரண்டாவதாக, அத்தகைய பள்ளிகளை மேலும் தரம் உயர்த்துவதற்கு, வரக்கூடிய ஆண்டுகளிலே அரசினுடைய நிதிநிலைமையையும் கருத்திலே கொண்டு, அங்கே இருக்கக்கூடிய தேவையைக் கருத்தில்கொண்டு, ஏனென்றால் மற்ற இடங்களில் இருப்பதைப்போல இல்லாமல் அந்த இடத்தில் சற்று வித்தியாசமான சூழ்நிலை காணப்படுகிறது என்பதை நானும் அறிவேன். எனவே, அந்தச் சூழ்நிலையையும் கருத்தில்கொண்டு, வரக்கூடிய ஆண்டுகளிலே பள்ளிகளைத் தரம் உயர்த்தக்கூடிய பட்டியலைத் தயாரிக்கின்றபோது, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களிடத்திலேயிருந்து முறையான முன்மொழிவுகளை அதற்காக அரசு கேட்டுப்பெற்று, நிச்சயமாக நம்முடைய உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் பொரணியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளி, உரிய நிதி செலுத்தப்பட்டு, அனைத்துத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு,

தயார் நிலையில் உள்ளது. மேற்கண்ட அந்தப் பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிர்ணயித்து இருக்கக்கூடிய அந்தத் தொகையைச் செலுத்தி, மேலும் அதற்கான இதர நிபந்தனைகளும் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு, அந்த முன்மொழிவுகள் அரசுக்கு வரப் பெற்றிருக்கும் என்று சொன்னால், வரக்கூடிய கல்வியாண்டிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

***4679—திரு. வி.எஸ். பாபு:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு, அரசு ஏதேனும் சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் காற்று மாசை பொறுத்தவரை, பேசின் பிரிட்ஜ் மின் நிலையம் தவிர, சுற்றுச்சூழலைப் பாதிக்கும் எத்தகைய பெரிய தொழிற்சாலைகளும் நகர எல்லைக்குள் இல்லை. சென்னை நகரின் காற்று மாசுபடுவதற்கு முக்கிய காரணம், வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையாகும். எனவே, வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் நச்சுப் புகையைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதனைக் கருத்தில்கொண்டு தமிழக அரசும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.





முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு.

**திரு. வி.எஸ். பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் மக்கள் தொகைப் பெருக்கமும், வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகவும், சிறு சிறு தொழிற்சாலைகள் சென்னை நகரின் எல்லைக்குள் அதிகமாக அமைந்துள்ளதாலும், சுற்றுச்சூழல் கெட்டு, உடல்நலக் கோளாறு ஏற்படக் காரணமாகிறது. இதனைக் கட்டுப்படுத்த அரசிடம் ஏதேனும் நவீன சிறப்புத் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல், மாசு ஏற்படுகிற சூழலைப் பொறுத்தவரை, சென்னையில் பேசின் பிரிட்ஜ் மின் நிலையம் தவிர, எந்த ஒரு பெரிய தொழிற்சாலையும் இல்லை. காற்றின்மூலம் மாசு ஏற்படுகிற அந்த நிகழ்வுகளிலிருந்து மக்களைக் காப்பாற்றுகின்ற எண்ணத்தில் அனைத்து வாகனங்களுக்கும் 6 மாதத்திற்கு ஒரு முறை புகை சோதனை கட்டாயமாக்கப்பட்டு, அதற்காக தமிழகம் எங்கும் சுமார் 263 தனியார் வாகன புகை சோதனை நிலையங்களுக்கு அரசு அங்கீகாரம் வழங்கி செயல்படுத்தி வருகிறது. சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில், கனரக வாகனங்களைப் பரிசோதிக்கும் பொறுப்பு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்காக வாரியம் புகை சோதனை நிலையங்களை அமைத்து செயல்படுத்தி வருகிறது. இன்றும் மாநகர போக்குவரத்துக் கழக வாகனங்களை, மாநகர போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து 6 பரிசோதனை நிலையங்களை தனியாக அடையாறு, ஆலந்தூர், தண்டையார்பேட்டை, அயனாவரம், வடபழனி மற்றும் அண்ணா நகர் ஆகிய இடங்களில் அமைத்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் செயல்படுத்தி வருகிறது. சென்னை நகரில் 23 இடங்களில் தானியங்கி திரவ பெட்ரோலிய எரிவாயு (L.P.G.) பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் ஐந்து இடங்களில் நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற தகவலையும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சென்னை நகரில் ஐந்து இடங்களில் அண்ணா நகர், அடையாறு, தியாகராய நகர், கீழ்ப்பாக்கம் மற்றும் வள்ளலார் நகர் ஆகிய இடங்களில் காற்று மாசு ஆய்வு செய்து வருகிறது. சென்னை நகரில் காற்று மாசினைக் கட்டுப்படுத்த வாரியம் அவ்வப்போது

விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், துண்டுப் பிரசுரங்கள், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் வாயிலாக காற்று மாசு குறித்து விழிப்புணர்வைப் பொதுமக்களிடம் ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக, தீபாவளி மற்றும் போகிப் பண்டிகை காலங்களில் பட்டாசு வெடிப்பதாலும், பழைய வேண்டாத பொருள்களை எரிப்பதாலும் ஏற்படக்கூடிய காற்று மாசு குறித்து சிறப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மற்றும் மாசுக் கட்டுப்பாடு குறித்து அத்தனை எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் காற்று மாசுபடுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். சென்னை மாநகரில் இருக்கக்கூடிய 10 மண்டலங்களில் 7 மண்டலங்களின் குப்பைகளைக் கொட்டக்கூடிய கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பைகள் எரிக்கப்படுவதால், அங்கே காற்று மாசுபடுகிறது. சுற்றுப் புறத்திலே வாழக்கூடிய மக்களுக்கு, 3 இலட்சம் மக்களுக்கு புற்றுநோய் வரும் என்று பத்திரிகைகளிலே செய்தி வந்துகொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்பையை எரிப்பதனால், காற்று மாசுபடுவதன் மூலம் ஏற்படும் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்கெனவே இந்தச் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய ஆலோசனையைப் பெற்று, மாநகரத்தில் இருக்கின்ற குப்பைகளை எரிப்பதை நிறுத்துவதற்கும், அந்தக் குப்பைகளை முறையாக உரமாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கிய அந்தப் பதிலில் நச்சுப் புகையினால் ஆஸ்துமா,





பிராங்கிட்டீஸ், மூச்சுத் திணறல் போன்ற நோய்கள் எல்லாம் பரவக்கூடிய வாய்ப்பு இருக்கிறதென்றும், அதனைக் கட்டுப்படுத்துகின்ற வகையிலே தங்களுடைய துறை நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்திருக் கின்றார்கள். டெல்லிப் பட்டணத்தில் C.N.G. என்று சொல்லுகின்ற Compressed Natural Gas Cylinder பொருத்தி, வாகனங்களில் அந்த சிலிண்டரைப் பயன்படுத்தித்தான் ஓட்ட வேண்டும் என்று ஓர் ஆணை இருக்கிறது. அதுபோல சென்னையிலே C.N.G. சிலிண்டர் பொருத்தக்கூடிய திட்டம் துறையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9–50*

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்தோடு கலந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அந்தப் பிரச்சினை ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**26—**

### பாலம் சீரமைப்பு

***10264—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரியில் குளித்தலை–முசிறியை இணைக்கும் தந்தை பெரியார் பாலம் பழுதடைந்துள்ளதைச் சீரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) ஆம். இந்த ஆண்டு ஜூலை இறுதியில் பழுது பார்ப்புப் பணி நிறைவுறும்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதியிலே 1957 ஆம் ஆண்டு நம்முடைய

[2007 ஜனவரி 24

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல் முறையாக சட்டப் பேரவைக்குப் போட்டியிட்டபோது குளித்தலையையும், முசிறியையும் இணைக்கின்ற அந்தக் காவிரிப் பாலத்தைக் கட்டித் தருவேன் என்று வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். 'சொன்னதைச் செய்வோம், செய்வதையே சொல்வோம்' என்ற உன்னதக் கொள்கையோடு ஐந்தாவது முறையாக அரியணை ஏறி, நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்கள், இன்றைக்கு மட்டும் அல்ல அன்றைக்கும் சொன்னதைச் செய்திருக்கிறார்கள். அந்த வகையிலே அவர் 1971 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற அந்தக் காலத்திலே, ஆகஸ்ட் திங்கள் 28 ஆம் நாளன்று அந்தக் காவிரிப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டி தமிழகத்திலேயே மிக நீண்ட பாலம் என்ற பெருமையோடு அந்தப் பாலம் கட்டப்பட்டது. தந்தை பெரியாருடைய பெயரால் அந்தப் பாலம் அமைந்துள்ளது. மிகவும் சீரழிந்து, பழுதடைந்துள்ள அந்தப் பாலத்தைச் சீர் செய்ய வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை பகுதியிலே இருக்கக்கூடிய பாலங்கள் எல்லாம் மிகப் பழமையானதாக இருக்கின்றன. குறிப்பாக நமது மரியாதைக்குரிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மிகுந்த பொறுப்புணர்வோடு 20 தினங்களுக்கு முன்பு வந்து அந்தப் பாலங்களைப் பார்வையிட்டு, அதைத் திருத்தியமைக்க ஆவன செய்வதாகக் கூறியிருந்தார்கள். நேற்று நசுவினியாற்றின் மேலே கட்டப்பட்டுள்ள ஒரு பாலம் இடிந்து விழுந்து விட்டது. நல்லவேளை, யாருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. எனவே விரைவிலேயே இந்த நிதியாண்டிலேயே அந்தப் பாலங்களைச் சீரமைக்க நிதியொதுக்கீடு செய்திட ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய குளித்தலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், குளித்தலைப் பாலம் பழுது பார்க்கும் பணியைப் பற்றி இங்கே வினா எழுப்பி இருக்கிறார்கள். இது நம்முடைய முசிறி,



2007 ஜனவரி 24]

குளித்தலை, பட்டுக்கோட்டை, ஆலங்குடி, பேராவூரணி, சேதுபாவாசத்திரம் என்கின்ற பகுதிகளை இணைக்கக்கூடிய மாநில நெடுஞ்சாலை எண் 71-ல் காவிரி ஆற்றின் குறுக்கே, [illegible] மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் [illegible] மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1957 ஆம் ஆண்டு குளித்தலைத் தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட்டபொழுது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று அங்கே வாக்குறுதி தந்து, அதன் அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக தமிழகத்திலே பொறுப்பேற்றிருந்தபோது, 1972-73 ஆம் நிதியாண்டிலே அதற்காக அரசாணை வழங்கி, அதற்கு அடிக்கல் நாட்டி, அந்தப் பாலப் பணியைத் துவக்கி, அது ஏறத்தாழ 1979 ஆம் ஆண்டு அந்தப் பாலப் பணி நிறைவேற்றப்பட்டு சிறப்பாக அந்தப் பகுதி மக்களுக்கும் பயன்பட்டது.

அது பழுது ஏற்பட்டுள்ளது என்று நமது சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், பொறியாளர்களும் என்னிடம் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் நானும், துறையினுடைய செயலாளரும், பொறியாளர்களும் கடந்த 11-11-2006 ஆம் நாளில் அந்தப் பாலத்தை நேரில் ஆய்வு செய்தோம். அங்கே கனரக வாகனங்கள் செல்கிறபோது அதிர்வு அதிகமாக ஏற்பட்டதை அறிந்தோம். அதன் அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே அதுபற்றி, சுமையோடு செல்லக்கூடிய கனரக வாகனங்கள் சென்றால் பாலம் அதிகம் பழுது ஏற்பட வாய்ப்புள்ளது; எனவே, அதில் போக்குவரத்தை நிறுத்த வேண்டும் என்று ஆலோசனை பெற்றோம். அதன் அடிப்படையில் அந்தப் பகுதியினுடைய மக்கள் பிரதிநிதிகளை வைத்து ஆலோசனைக் கூட்டம் நடத்தி அதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்லி உத்தரவு வழங்கி, அதன் அடிப்படையில் கடந்த 4 ஆம் தேதியிலிருந்து சுமை ஏற்றிச் செல்லக்கூடிய கனரக வாகனங்கள் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. Bearing என்ற அந்தப் பொருளில் அங்கே பழுது ஏற்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 30 ஆண்டு காலமாக உழைத்த அந்த உழைப்பின் காரணமாக அந்தப் பழுது ஏற்பட்டிருக்கிறது. நமது மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அதைச் சரி செய்யச் சொல்லி உத்தரவிட்டதன் அடிப்படையில், 2 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவிலே பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தப் பாலம் தமிழகத்திலே உள்ள மிகப் பெரிய பாலங்களில் ஒன்றாகும். அந்தப் பணிகள் இந்த ஆண்டு ஜூலை மாத இறுதியில் நிறைவுறும். அதேபோல நமது பட்டுக்கோட்டை தொகுதி

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த பகுதியிலே, டெல்டா பகுதியிலே ஏற்கெனவே ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட ஆர்ச் பாலங்கள் அதிக அளவில் உள்ளன.

பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரினால், அங்கே நீராதாரங்கள் அதிகம் செல்லக்கூடிய காரணத்தினால், பணிகள் நடைபெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. அதற்கிடையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப் பகுதியிலே பாலப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே, இப்போது டெல்டா பகுதி என்று சொல்லி, குறிப்பிட்ட பாலங்களைக் கட்டுவதற்காக, அரசு பட்டியல் தயாரித்துக் கொண்டிருக்கின்றது. அது போக, ஏறத்தாழ 500 கோடி ரூபாய் இந்த ஆண்டு பாலங்கள் பணிகளைச் செய்வதற்குத் தேவைப்படுவதாக செயற்குறிப்புடன்கூடிய பட்டியல் அரசுக்கு வந்துள்ளது. அதன் அடிப்படையில், முன்னுரிமை அடிப்படையில் டெல்டா பகுதிக்கு முக்கியத்துவம் தந்து, அந்தப் பகுதியினுடைய பாலப் பணிகள், மோசமாக உள்ள பாலங்களையும், குறுகலாக உள்ள அந்தப் பாலங்களையும் பழுது பார்த்து, அதேபோல, புதிய பாலங்கள் கட்டுவதற்கு, தேவையான இடங்களில் புதிய பாலங்களைக் கட்டி அந்தப் பகுதியினுடைய நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேறுகின்ற வகையில், நம்முடைய முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், விரைவில் அந்த டெல்டா பகுதியிலே குறிப்பாக அந்தப் பாலங்கள் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டத்தை இணைக்கின்ற தென்பெண்ணையாற்றுப் பாலம், அனுமன் தீர்த்தப் பாலம், ஏறக்குறைய வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்தில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட பாலம். அந்தப் பாலம், இப்போது இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கிறது. ஏறக்குறைய ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் அந்தப் பாலத்தின் வழியாகச் செல்கின்றன. கடந்த 2000 ஆம் ஆண்டு மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே பாலத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் பிறகு வந்த ஆட்சியில் அடிக்கல்லே எடுக்கப்பட்டு, தேனி மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது. ஆக, மூன்று பாலங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் இரண்டு பாலங்களைக் கட்டி முடித்தார்கள். சின்னாங்குப்பம். மொரப்பூரில்கூட அந்தப் பாலம் பாக்கியிலே இருக்கிறது. ஒதுக்கப்பட்ட நிதி அப்படியே தேனி மாவட்டத்திற்கு மாற்றப்பட்ட காரணத்தால், ஏறக்குறைய எந்த நேரத்தில் இடிந்து விழுமோ என்ற நிலையில் ஆயிரக்கணக்கான பேருந்துகள் பாதிக்கப்படுகின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். மாவட்ட ஆட்சியர் அவர்களும் அதை வலியுறுத்தியிருக்கிறார். ஆக, இந்தக் காலத்திலாவது அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் முன்பே குறிப்பிட்டேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சியில் இருக்கின்றாரோ அப்பொழுதெல்லாம் வரலாற்றில் குறிப்பிடக்கூடிய அளவிலே மேம்பாலங்களையும், பெரிய பெரிய ஆற்றுப் பாலங்களையும் கட்டியிருக்கின்றார்கள். எனவே, இப்போது ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற இந்தக் காலகட்டத்திலும் தமிழகம் முழுவதும் உள்ள பழுதடைந்த பாலங்கள். நிச்சயமாகப் புதியதாகக் கட்டப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை by-pass சாலைப் பணிகள் முடியும் தருவாயில் இருக்கின்றன. ஆனால், அதிலே இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு இரயில்வே துறை அனுமதி தராமல் காலம் தாழ்த்துகிறது. விரைந்து அனுமதி பெற துறை நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆய்வுப் பணியை மேற்கொண்டோம். அப்போது நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய திருவண்ணாமலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அண்ணன் பிச்சாண்டி அவர்களும் இதைக் குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதியைப் பார்வையிட்டு வந்திருக்கின்றோம். இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 24 மணி நேரத்தில் அந்த இரயில்கள் போகக்கூடிய எண்ணிக்கையையும், அந்தச் சாலையிலே செல்லக்கூடிய

[2007 ஜனவரி 24

வாகனங்கள் எண்ணிக்கையையும் பெருக்கினால், ஒரு இலட்சம் யூனிட், T.V.U. என்கிற, Train Vehicle Unit என்கிற கணக்கு ஒத்து வர வேண்டும். அப்போதுதான் மத்திய அரசு, இரயில்வே துறை அதற்கு ஒப்புதல் வழங்கும்; 50 சதவீத செலவையும் ஏற்றுக்கொள்ளும். இல்லையென்றால், புதியதாக அந்தப் பாலம் அமைக்க வேண்டுமென்று சொல்லி மாநில அரசு கோரிக்கை வைத்தால், முழுச் செலவையும் மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, திருவண்ணாமலை அதிக மக்கள்தொகை வந்து செல்லக்கூடிய பகுதியாக இருப்பதால், நிச்சயமாக மாநில அரசு முழுத் தொகையையும் ஏற்றுக்கொண்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பாலம் நிச்சயம் இந்த ஆண்டு கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், கேள்வியை மாத்திரம் கேட்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்னால், வேலூர்-காட்பாடியை இணைக்கிற பாலாற்றுப் பாலம் இடிந்து விழுந்து இன்று போக்குவரத்தே தடைபட்டிருக்கிறது. அது குறித்து நம்முடைய மத்திய அமைச்சர் மாண்புமிகு டி.ஆர். பாலு அண்ணன் அவர்கள் அதற்காக நிதியை ஒதுக்கிவிட்டதாகக்கூடச் சொன்னார்கள். அதற்கான estimate எல்லாம் போய், sanction எல்லாம்கூட ஆனது. ஆனால், இன்னும் அந்தப் பணி, வேலூரையும் காட்பாடியையும் இணைக்கிற அந்தப் பாலாற்றுப் பாலப் பணி 9 ஆண்டுகளாகச் செய்யப்படாமல் இருப்பதை அமைச்சர் அறிவாரா? அதேபோல, இங்கே சென்னையை எடுத்துக்கொண்டால், வேலூரிலிருந்து நாங்கள் பூந்தமல்லிக்கு 1¼ மணி நேரத்தில் வந்துவிடுகிறோம். ஆனால், பூந்தமல்லியிலிருந்து சென்னைக்கு வருவதற்கு இரண்டு மணி நேரம் ஆகிறது. போக்குவரத்து அவ்வளவு நெரிசல் இருக்கிற காரணத்தினாலே, சென்னை முழுவதும் டெல்லி, மும்பை போன்ற பகுதிகளில் இருப்பது போல, முக்கியமான அத்தனை சாலைகளிலும் பாலங்களை அமைத்து, two-tier system-படி கீழேயும் மேலேயும் வாகனங்கள் செல்லக்கூடிய அளவிற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் தலைமையிலே பொறுப்பேற்றிருக்கின்ற இந்த அரசு நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக நிறைவேற்றுகின்ற பணிகள் குறித்து நாங்கள் எல்லாம் ஆய்வு செய்தோம். நம்முடைய



2007 ஜனவரி 24]

மாண்புமிகு முதல்வர் அவர்களும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு துறையைப் பற்றி ஆய்வு செய்திருக்கின்றார்கள். அதுகுறித்து பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பல பகுதிகளிலே தடை ஏற்பட்டது. அதாவது, நிலம் கையகப்படுத்துகின்ற பணி, அதேபோல Schedule of rates என்கின்ற அடிப்படையிலே, ஒப்பந்தக்காரர்களுக்கு-அந்த அரசு நிர்ணயித்து இருக்கின்ற தொகை காரணமாக, அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி அந்தப் பாலப் பணிகளை மேற்கொண்டபோது, அவர்களுக்கு நட்டம் ஏற்பட்ட காரணத்தினால், பாலப் பணியைச் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வராத ஒரு நிலைமை ஏற்பட்டு இருந்தது. அதற்குப் பிறகு நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்று, 2 முறை அரசின் சார்பாக நிர்ணயிக்கக்கூடிய அந்த Schedule of rates பொதுப் பணித் துறையின்மூலம் நிர்ணயிக்கக்கூடிய அந்த rate-ஐ உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அதற்கேற்ப இப்போது சிமெண்ட் விலை, கம்பி விலை போன்ற பொருட்கள் அதேபோன்று, metal விலை எல்லாம் உயர்ந்து இருக்கின்ற காரணத்தினால் அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுத்து இருக்கின்றது. எனவே, நம்முடைய மாண்புமிகு வேலூர் தொகுதி சட்டமன்ற உறப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அந்தப் பாலம் கட்டுகிற பணியும் அரசின் பரிசிலனையில் உள்ளது. இரண்டு அடுக்கு என்று சொல்லி இருந்தார்கள். அது design-ஐப் பொறுத்தது. அதை அந்த design wing அலகுக்கு அனுப்பி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, தேவைப்படுமானால், அதற்கேற்ப அரசு அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரம் நாகர்கோவில். நாகர்கோவில் நகரம் இன்றைக்கு போக்குவரத்து நெரிசலாலும், பொதுமக்கள் நெரிசலாலும் அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டு இருக்கிறது. நாகர்கோவிலில் புறவழிச் சாலைகூட இல்லை. சென்னையில் இருந்து நெல்லை வரை, நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் ஏராளமான பாலங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், நம்முடைய சபாநாயகர் அவர்களுடைய நெல்லையிலேகூட, ஒரு பெரிய மேம்பாலத்தை நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞருடைய ஆட்சியில் தந்தார்கள். எனவே, சென்னையில் இருந்து நெல்லை வரை கண் திறந்து இருக்கின்ற நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், குமரிக்கும் தன்னுடைய ஆதரவைத் தெரிவிக்கக்கூடிய அளவில், என்னுடைய நாகர்கோவிலில் கோட்டார் பகுதியிலேயும்,

வடசேரி பகுதியிலேயும் ஒரு மேம்பாலம் கட்டித் தர நடவடிக்கை எடுப்பாரா என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றுதான், 9 மணி 30 நிமிடத்திற்குத்தான் என்னிடத்திலே அதை எழுத்துபூர்வமாகத் தந்து இருக்கின்றார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். எனவே, அதைப்பற்றி எதிர்காலத்திலே அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திருமதி ஜி. லதா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**27—**

**கால்நடை மருத்துவமனை**

***8713—திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பரதராமி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதியில் பரதராமி பகுதியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு தாப்பில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதிக்கு அருகில் இருக்கின்ற பாதராமி பகுதி, ஆந்திர மாநிலத்தையும், தமிழ் மாநிலத்தையும் இணைக்கின்ற பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியிலிருந்து ஏறத்தாழ 40 கி.மீ. குடியாத்தம் வந்துதான் கால்நடைகளுக்கு சிகிச்சை பெறவேண்டிய அவசியம் இருக்கிறது. பாதராமி பகுதி மலையைச் சார்ந்த பகுதி. ஏறத்தாழ 11 பஞ்சாயத்துகள் மலையைச் சார்ந்த பகுதியாக இருக்கின்றன. அதே நேரத்திலே அங்கிருந்து 40 கி.மீ. வரை மாடுகளை ஓட்டிக்கொண்டு



வந்து வைத்தியம் பார்த்துவிட்டு திரும்பப் போவதிலேயும் சிரமங்கள் அதிகமாக இருப்பதால், அந்தச் சிரமங்களைக் கணக்கில்கொண்டு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலாகிலும், மலையைச் சார்ந்த பகுதியாகவும், இரண்டு மாநிலங்களை இணைக்கின்ற முக்கியமான பகுதியாகவும் இருப்பதால், அந்த இடத்திலே ஒரு மருத்துவமனை அமைக்க வேண்டும். ஏற்கெனவே அந்தப் பகுதியில் மருந்தகம் இருக்கின்றது. அந்த மருந்தகம் பெயரளவில்தான் மருந்தகம் என்று தரம் உயர்த்தப்பட்டதே தவிர, கட்டட வசதிகள் எதுவும் இல்லை. அப்படி அதைக் கொண்டுவர கால அவகாசம் இல்லையென்றாலும், கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லையென்றாலும், நடமாடும் மருத்துவமனையாகிலும் ஏற்படுத்தித்தர உறுதி செய்தால்தான், அந்தப் பகுதியிலே ஓரளவிற்கு விவசாயிகளும் அந்த கால்நடைகளைப் பராமரிப்பதற்கு உதவியாக இருக்கும். இந்தச் சாத்தியக்கூறுகளை அரசு ஏற்படுத்தித் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல, அந்த பரதராமி கிராமத்தில் 1-1-2005-ல் அந்தக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக அதாவது–Dispensary–ஆக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால், உண்மையிலேயே அதற்குக் கட்டடங்களோ மற்ற எந்த ஒரு வசதியும் செய்யப்படாத ஒரு நிலை இருக்கிறது. இது அரசின் கவனத்திற்கு வந்து, அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம். நம்முடைய உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, அந்த மலைப்பகுதியில் உள்ள அனைத்துக் கால்நடைகளுக்கும் சிகிச்சை அளிக்கவேண்டும் என்று கூறியதைப்போல, பரதராமி கிராமத்திலே நடமாடும் கால்நடை மருந்தகம்மூலம் சிகிச்சை அளிக்க, வரும் வாரத்தில் இருந்தே நடவடிக்கை எடுத்துத் தருகிறேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

*முற்பகல் 10–05*

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் தருமபுரி–கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் குண்டல்பட்டி என்கின்ற இடத்தில் கால்நடை

ராய்ச்சி மையம். கல்லூரி அங்கே நடைபெற்று வருகிறது. அதைச் சுற்றி இருக்கிற சுமார் 15 கிராமங்களுக்கு அங்கே கால்நடை மருத்துவமனை இல்லாமல் இருக்கிறது. அந்த ஆராய்ச்சி மையத்தில் இருக்கின்ற மருத்துவர்களைக் கொண்டு அங்கே மருத்துவமனை ஒன்று கூடுதலாக இயங்குமானால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற கால்நடைகளுக்கும் விவசாயிகளுக்கும் பெரும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து இதை அரசு செய்வதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆராய்ச்சி நிலையம் என்பது நம்முடைய கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம் மூலம் அங்கே செயல்பட்டு வருகிறது. அதன்மூலம் நம்முடைய கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க வாய்ப்புகள் குறைவு; அவர்கள் ஆராய்ச்சிதான் செய்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல அந்தப் பகுதியில் அவ்வளவு தேவைகள் இருப்பின், 10,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் அந்தப் பகுதியில் இருப்பின், வரும் நிதி ஆண்டில் அந்தப் பகுதிக்காக கால்நடை மருந்தகம் அமைக்க இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராசிபுரம் தொகுதியைச் சுற்றி 62 கிராமப் பஞ்சாயத்துகளும், 7 பேரூராட்சிகளும் இருக்கின்றன. அந்தக் கிராமப்புற பகுதியிலே கால்நடைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அதுமட்டுமல்லாமல் கோழிப் பண்ணைகளும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் இருக்கின்ற மருந்தகங்களை மருத்துவமனைகளாக மாற்றக்கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன். அதுமட்டுமல்லாமல், இப்பொழுது 19 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் அளவிலே நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியிலே அங்கே புதிய நவீன வசதிகளோடுகூடிய கட்டடங்கள் 3 இடங்களிலே கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, அந்த மருந்தகங்களைத் தரம் உயர்த்தி மருத்துவமனைகளாக மாற்றக்கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இராசிபுரம் தொகுதி சட்டமன்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் மருந்தகங்களை மருத்துவமனைகளாக உயர்த்தும் திட்டம் ஏதும் இந்த அரசின் செயற்குறிப்பில் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

## மீன்பிடித் துறைமுகம்

***4867—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், பூம்புகார் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மீன்பிடிக்கும் துறைமுகம் அமைத்திடும் பொருட்டு மாதிரி ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் பூம்புகார், வானகிரி, புதுக்குப்பம், மேலக்கரை, கீழமூவர்கரை, சின்னங்குடி, மாணிக்கப்பங்கு, சின்னூர்பேட்டை, தாழம்பேட்டை, குட்டியாண்டியூர், தரங்கம்பாடி, சந்திரப்பாடி போன்ற 18-க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் 10,000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய வாழ்வாதாரம்

[2007 ஜனவரி 24

மீன்பிடித் தொழில்தான். அங்கு ஏறக்குறைய 300 விசைப் படகுகள் 500 சிறு விசைப் படகுகள், அதைப்போல கட்டுமரங்களை வைத்து, இந்தத் தொகுதியினுடைய முக்கிய வாழ்வாதாரமே மீன்பிடித் தொழிலைத்தான் நம்பியிருக்கிறது; அப்படிப்பட்ட அந்த மக்கள் தங்களுடைய ஒரு விழாவிலே மாண்புமிகு அமைச்சரிடம் எங்களுடைய நீண்டநாள் கனவு இந்த மீன்பிடித் துறைமுகம் பூம்புகாரில் அமைய வேண்டும் என்று கேட்டார்கள். அப்பொழுதுகூட அமைச்சர் அவர்கள் சிறப்பான ஒரு பதிலைச் சொன்னார்கள். உப்பை விற்று நாங்கள் சம்பாதித்த பணத்தை 6 இலட்சத்திற்கும் மேலாக இந்த மீன்பிடித் துறைமுகத்தைப் பெறுவதற்கு நாங்கள் செலவிட்டோம் என்ற கோரிக்கையைச் சொன்னபொழுது, அதற்கு அழகாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நீங்கள் கடந்த கால ஆட்சியிலே காய்க்காத மரத்திலே கல்லை விட்டு அடித்திருக்கிறீர்கள். நீங்கள் இப்பொழுது டெல்லிக்கு அலைய வேண்டியது இல்லை; பெங்களூருக்கு அலைய வேண்டாம். நீங்கள் அறிவாலயத்தைச் சுற்றிச்சுற்றி வந்து அதைக் கேட்டிருந்தீர்கள் என்றால், நிச்சயமாக கிடைத்திருக்கும். அதற்கு ஒரு மாம்பழக் கதையையே நம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "முருகனும், பிள்ளையாரும் மாம்பழத்தைப் பெறுவதற்கு கேட்டபோது அப்போது முருகன் மயிலிலே ஏறி ஊரெல்லாம் சுற்றப் போய்விட்டான். கணபதி, அவர் அப்பாவையும் அம்மாவையும், உலகம் என்றால் என்ன என்று கேட்டார். அது தானப்பா தாய் தந்தையர் என்று சொன்னார்கள். உடனே சுற்றி வந்து மாம்பழத்தை வாங்கிவிட்டார். அதேபோல், நீங்கள் உலகம் தெரியாமல் ஊரெல்லாம் சுற்றியிருக்கிறீர்கள். அறிவாலயத்தைச் சுற்றினீர்கள் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி உங்களுடைய கனவை நனவாக்கித் கொடுப்பார்" என்று சொல்லி, அங்கே அழகாக பதிலைச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். ஆக, அப்படிப்பட்ட அந்தத் திட்டம் மத்திய அரசால் ஆய்வு செய்யப்பட்டு, அந்த மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்குத் தயாராக இருக்கிறது. அதற்கு மத்திய அரசும் நிதியை ஒதுக்கிவிட்டது. ஆகவே, பூம்புகார் என்று சொன்னால், அது நமக்குப் பண்டைய துறைமுகம். அதைப்போல, மாண்புமிகு தமிழகத்தினுடைய பண்பாட்டுச் சின்னம் கண்ணகி. மூன்றாவதாக, இன்றையநாளிலே . . .

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரியசாமி, கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.



2007 ஜனவரி 24]

**திரு. மு.க. பெரியசாமி:** பூம்புகார் என்று சொன்னாலே நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள்தான். ஆகவே, அப்படிப்பட்ட அந்தப் பழைய துறைமுகத்தை, அந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு, இந்த நிதியாண்டிலேயே நம்முடைய துறைமுகத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களும் முன்வருவார்களா என்று கேட்டு, அந்தத் துறைமுகம் அமைய ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நான் பூம்புகார் சென்றிருந்தபோது, பூம்புகார் முதல் தரங்கம்பாடிவரை, கீழமூவர்கரை, மேலமூவர்கரை மீனவ கிராமங்களைச் சேர்ந்த மக்கள் என்னிடம் அங்கே பூம்புகார் மீன்பிடித் துறைமுகம் அமைவது குறித்துக் கேட்ட கேள்விக்கு, நான் சொன்ன பதிலை மிகத் தெளிவாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழகத்திலே பொறுப்பேற்றிருக்கக்கூடிய நம்முடைய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சமீபகாலமாக மீனவ மக்களுக்காக எந்த அளவிற்கு நல்லபல சலுகைகளை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். நம்முடைய கவர்னர் உரையிலேயே மீனவ மக்களுடைய உள்ளங்களெல்லாம் இனிக்கின்ற வகையிலே, மீனவர் நல வாரியம் அமைத்து, தமிழகத்தில் வாழ்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர் இதயங்களனைத்திலும் பால் வார்த்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே, தலைவர் கலைஞர் அவர்களுடைய இதய நிறைவான, ஒரு தலைசிறந்த கிராமமான பூம்புகார் மீனவ கிராமத்தில், சிறப்புக்குரிய மீன்பிடித் துறைமுகத்தின் கடலலை தடுப்புச் சுவர் மற்றும் வார்ப்பின் வடிவமைப்பினைச் செய்திடும்பொருட்டு, மாதிரி ஆய்வுப் பணிகள் சென்னை தேசிய கடல் தொழில்நுட்பக் கழகத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு, ஆய்வுப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. மாதிரி ஆய்வின் இறுதி அறிக்கை பெற்றவுடன், இத்திட்டத்திற்கான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் திட்ட மதிப்பீட்டு அறிக்கை ஆகியவை தயாரிக்கப்பட்டு இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்திடமிருந்து பெறப்பட்டு, அதன்பின் மத்திய விவசாய அமைச்சகத்தின் நிர்வாக ஒப்புதல் பெற்று, வரலாற்றுச் சிறப்புமிக்க பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் விரைவில் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

[2007 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மீன்பிடித் துறைமுகம் அமைவதற்கு வாய்ப்பளித்துக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகாருக்குப் பெருமை சேர்த்தவர், கண்ணகிக் கோட்டம் கண்டவர், வரலாற்று நிகழ்வினை நாட்டுக்கு உணர்த்தியவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். ஆகவே, அவர்களுடைய திருக்கரத்தால் பூம்புகார் மீன்பிடித் துறைமுகம் அமையவிருப்பதற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியை இந்த வேளையிலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில், உழைக்கிற மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருக்கிற இந்த வேளையிலேதான், மீனவர்கள் நலன் காக்க மீனவர் நல வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிற அதே வேளையில், தமிழகம் நீண்ட கடற்கரையைக் கொண்ட மாநிலம். கடலோரம் ஏராளமான மீனவக் கிராமங்கள் நிறைந்து மீனவர்கள் வாழக் கூடிய மீனவர் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், பூம்புகார் துறைமுகம் அமைக்கிற அதே வேளையில், இன்னும் மீன்பிடித் தொழிலை ஊக்குவிப்பதற்காக, வெளியில் ஏற்றுமதி செய்வதற்காக, மீன்பிடித் தொழில் மேலும் பலன் பெறுவதற்கு, பூம்புகாரோடு சேர்ந்து இன்னும் பல இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைப்பதற்கு அரசு முன்வருமா? அப்படிப்பட்ட திட்டங்கள் அரசிடம் இதுவரையிலே ஏற்பாடு செய்யப்பட்டு அல்லது ஆய்வு பணித் தொடங்கப்பட்டிருக்கிறதா என்ற முழு விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகாரைப் போன்றே மீன்பிடித் துறைமுகங்கள் அமைவதற்காக, நம்முடைய முட்டம், தேங்காய்ப்பட்டணம் மற்றும் சில இடங்களில் ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தேவைப்படுமானால் நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆலோசனைப்படி மீன்பிடித் துறைமுகங்கள் நிறைய அமைக்கப்படும்.



2007 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29. மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**29—**

## பால் குளிரூட்டும் மையம்

***3420—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடியில் பால் குளிரூட்டும் மையம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி பகுதியில், அரசின் கொள்கை முடிவின்படி பால் குளிரூட்டும் நிலையத்திற்குப் பதிலாக, மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் என்பது, மிகப் பழமையான, பாரம்பரியமான பால் வழங்கும் சங்கமாகும். அநேகமாக, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலேயே அதுதான் மிகப் பெரிய சங்கமாகச் செயல்பட்டது. இடைப்பட்ட காலத்திலே அது தொடர்ந்து நலிந்த நிலையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. சென்ற முறையும் இதைப்பற்றி ஆய்வு செய்வதாக சென்ற ஆட்சியின்போது சொல்லப்பட்டது. ஆனால், தொடர்ந்து இதே நிலை நீடிக்கிற காரணத்தினாலே, அந்தப் பகுதியிலே பால் உற்பத்தி என்பதும், அதைச் செய்யக் கூடிய விவசாயிகளும் நம்பிக்கை இழந்த நிலையிலே இருக்கிற காரணத்தினாலே, அங்கேயே பால் குளிரூட்டும் நிலையம் தொடங்கப்படுமானால், பால் உற்பத்தியும் அதிகமாவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக இருக்கிற காரணத்தினாலே, மன்னார்குடியிலே பால் குளிரூட்டும் நிலையத்தை உடனடியாக தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2007 ஜனவரி 24

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக, நாள் ஒன்றுக்கு 15,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. உள்ளூர் விற்பனையில் 9,000 லிட்டர் போக, 6,000 லிட்டர் தஞ்சாவூர் யூனியனுக்கு அளிக்கப்படுகிறது. தற்போது, சுனாமியால் பாதிக்கப்பட்ட முத்துப்பேட்டை ஒன்றியத்தில், அதாவது அங்குள்ள சுய உதவிக் குழுக்களுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டு, 3,000 லிட்டர் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டமும் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆக, 10,000 லிட்டர் வரை பால் பதனிடும் அளவிற்கு பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்குப் பதிலாக, 5,000 லிட்டர் வரை உள்ள பால் குளிர்விப்பான்கள் இரண்டு அமைத்து, 10,000 லிட்டரில் அரசு பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு 21-1-2007-ல் தினகரன் நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி வேண்டி விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. மார்ச் மாத இறுதிக்குள்ளாக குளிர்விப்பான்கள் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்கப்படும் என்ற அறிவிப்பை செய்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, விவசாயிகள் எல்லாம் மகிழ்ச்சியிலே ஆழ்ந்திருக்கிறார்கள். அதேபோல, பால் உற்பத்தியாளர்களும் விவசாயத்தைச் சார்ந்தவர்கள்தான். அவர்களுக்குப் பால் விலை மிகக் குறைவாக இருக்கிறது என்ற ஒரு வருத்தம் உள்ளது. அதற்கு எப்படியாவது நமது தமிழக முதல்வர் அவர்கள் தீர்வு கண்டு விவசாயிகளை மகிழ்விக்க வேண்டும். அதேபோல, பால் வாங்குபவர்களுக்கு விலை அதிகப்படுத்தினால் அவர்கள் சிரமப்படுவார்கள் என்ற ஒரு காரணத்தினால், பால் விலையை ஏற்றவில்லை. அதனால் பட்டுவாடா செய்யும்போது அதாவது குறுக்கே பால் கொடுப்பவர்களுக்கும், வாங்குபவர்களுக்கும் 2 ரூபாய் வித்தியாசம்



2007 ஜனவரி 24] [திரு. எம்.ஆர். சுந்தரம்]

இருக்கின்றது. அந்த shortage ஆகக்கூடிய ரூபாய் குறைவாக இருக்கிறதனாலே சரியான பட்டுவாடா வழங்க முடியவில்லை. அதைக் கிட்டத்தட்ட வாரம் ஒருமுறை பால் பணத்தை பட்டுவாடா செய்தார்கள். இப்போது ஒரு மாதம், இரண்டு மாத காலம் ஆகின்றது, அதனால் விவசாயிகள் அதற்காக கொஞ்சம் வருத்தம் தெரிவித்தார்கள். அதை எப்படியாவது நமது பால் வளத் துறை அமைச்சர் அவர்கள், முதலில் வழங்கியது போலவே வாரம் ஒருமுறை பால் பணத்தைப் பட்டுவாடா செய்யவேண்டும். அதேபோல ஒரு லிட்டர் குடிநீர் 15 ரூபாய்க்கு விற்கின்றது, ஒரு லிட்டர் பால் 10 ரூபாய்க்குத்தான் விற்கின்றது. அதற்கு நமது தமிழக முதல்வர் அவர்களும், பால் வளத் துறை அமைச்சர் அவர்களும் விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

(முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பாலினுடைய விலை கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, 2004-லே கொள்முதல் விலையை ஏற்றினார்களே தவிர, விற்பனை விலையை ஏற்றவில்லை. அதனால் தற்பொழுது தொழிற் சங்கத் தலைவர்களும், விவசாயிகளுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களும் பாலினுடைய விலையை உயர்த்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு இது எடுத்துச் செல்லப்பட்டு, அதற்கான முடிவு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்று, பாலினுடைய வாங்குகிற விலைக்கும், விற்பனை விலைக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். பாலை வாங்கி பதப்படுத்தி விற்கக்கூடிய காரியங்களைச் செய்கிறபோது அந்தச் செலவுகள் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு இது எடுத்துச்செல்லப்பட்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுமையும் பால் குளிரூட்டும் மையம் அமைக்க இந்த நிதி ஆண்டில் அரசு முன்வருமா, அப்படி மையங்கள் உருவாக்குகின்றபோது

[2007 ஜனவரி 24

தமிழகம் முழுமைக்கும் எத்தனை மையங்கள் உருவாக்க இருக்கின்றார்கள் என்பதை நான் உங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கான பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அணுகி அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் ம. வரதன்.

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதியிலே அம்மாபாளையம் என்ற பகுதியிலே ஆறு ஆண்டுகளாக பால் குளிரூட்டும் மையம் அமைப்பதற்கு கடந்த கால ஆட்சியிலும் வந்து பார்வையிட்டார்கள்; செய்யவில்லை. பல முறை இந்த அவையிலே நான் கோரிக்கை வைத்தேன். செய்கிறோம், செய்கிறோம் என்று சொன்னார்கள்; செய்யாமலே போய்விட்டார்கள். எங்களுடைய உள்ளூர் அமைச்சர் மாண்புமிகு அண்ணன் எ.வ. வேலு அவர்களுடைய முயற்சியிலே, நம்முடைய அமைச்சரும் இரண்டு முறை வந்து அதைப் பார்வையிட்டார்கள். இதுவரையில் அதில் நடவடிக்கை எடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. திருவண்ணாமலை–பெங்களூர் நெடுஞ்சாலையில் அந்தப் பகுதி இருப்பதனால் அந்தத் தொகுதி முழுக்க முழுக்க விவசாயம் நிறைந்த தொகுதி, பால் நிறைய கிடைக்கிறது. பால் குளிரூட்டும் மையம் அங்கு அமைப்பதனால், அந்தப் பகுதியில் இருக்கின்ற பால் உற்பத்தியாளர்களுக்கு நிறைய நன்மைகள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதை விரைவில் உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லுகின்றபோது சொன்னார்கள். பால் வாங்குகிற விலைக்கும், விற்கிற விலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. அதை சரி பண்ணவேண்டும். அதை குளிரூட்டும் நிலையங்களில் கொண்டுபோய் சீர்செய்வதற்கு செலவு ஆகிறது என்று சொன்னார்கள். ஒரு பாட்டில் தண்ணீர் வாங்கினால் 10 ரூபாய் கொடுக்கிறோம். ஆனால், ஒரு லிட்டர் பாலுக்கு 8 ரூபாய் கொடுக்கிறோம். தண்ணீரைவிட பாலினுடைய விலை குறைவாக இருக்கிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் குறைத்து எடைபோடவில்லை. பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.



2007 ஜனவரி 24]

**திரு. போளூர் ம. வரதன்:** கேள்வியைத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள். மற்ற விளக்கங்கள் தேவையில்லை.

**திரு. போளூர் ம. வரதன்:** விவசாயிகளுக்குப் பாதிப்பு; 8 ரூபாய் என்பது விலை குறைவாக இருக்கிறது பாலுக்கு. உங்கள் ஊருக்கும் சேர்த்து சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா ஊரிலும்தான். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** தமிழகத்தில் வாங்குகின்ற பால் 8 ரூபாய் என்பது குறைவாக இருக்கிறது. அதனுடைய விலையைக் கூட்டித்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலின் விலை குறைவாக இருக்கிறது, தண்ணீருடைய விலை அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். பாலை எப்பொழுதும் குடித்துக்கொண்டிருக்க முடியாது. தண்ணீர் எப்பொழுதும் குடிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கவேண்டும் என்று சொன்னார்கள். திருவண்ணாமலையிலே வருகிற நிதி ஆண்டிலேயே பால் powder plant ஒன்று நிறுவ இருக்கிறோம். அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

**30—**

### கதர்ப் பொருட்கள்

***8922—திரு. க. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் பகுதியில் கதர்த் துறைமூலம் சோப்பு மற்றும் கதர்ப் பொருட்கள் தயாரிக்கும் அலகு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜெயங்கொண்டம் பகுதியில் கதர்த் துறைமூலம் சோப்பு மற்றும் கதர்ப் பொருட்கள் தயாரிக்கும் அலகு அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் ஆளூர் பஞ்சாயத்தினுடைய பெருவிளை என்ற குக்கிராமத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்த கதர்ப் பொருட்கள் தயாரிக்கின்ற அலகு கடந்த 3 ஆண்டுக் காலமாக மூடப்பட்டுக் கிடக்கின்றது. விசாலமான ஒரு பெரிய கட்டடம் இருக்கின்றது. அதற்கான இயந்திரங்கள் எல்லாம் அங்கே அப்படியே இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கதர்ப் பொருட்கள் தயாரிக்கின்ற அலகை மீண்டும் திறந்து, அந்த மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் ஏற்பாடு செய்வாரா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் கதர்த் துறைமூலமாக நடத்தப்பட்டு வந்த அலகுகள் நட்டத்தில் இயங்கியதன் காரணமாக அவற்றை கடந்த கால அரசு மூட உத்தரவிட்டு, மூடப்பட்டுள்ளன. தற்போது கதர் கிராமத் தொழில் வாரியம், மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையக் குழுவின்மூலம் கிராமிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை, மானியம் வழங்கி, திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டத்தின்மூலம் அந்தப் பகுதியில் வாழும் மக்கள் தொழில் புரிய முன்வந்தால் அவர்களுக்கு 25 முதல் 30 சதவீதம் வரை மானியம் வழங்கி அந்தத் தொழிலை நடத்த இந்தக் கதர்த் துறை அவர்களுக்கு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.





21—

## மின் நிலையம்

***6192—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் கோசூர் மற்றும் காணியாளம்பட்டியில் இரண்டு 110 கி.வோ. மின் நிலையங்கள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோசூரில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. காணியாளம்பட்டியில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் தற்பொழுது எழவில்லை.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கிருஷ்ணராயபுரம் தொகுதியில் கோசூரிலிருந்து சுமார் 17 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சிந்தாமணிப்பட்டியிலும் சுமார் 14 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பஞ்சப்பட்டியிலும் துணை மின் நிலையங்கள் அமைந்துள்ளன. அதேபோல காணியாளம்பட்டியிலிருந்து சுமார் 17 கிலோமீட்டர் தொலைவில் வெள்ளியணையில் துணை மின் நிலையம் உள்ளது. மேற்கண்ட கோசூர் மற்றும் காணியாளம்பட்டி பகுதியைச் சுற்றிலும் சுமார் 100 குக்கிராமங்கள் உள்ளன. 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள். குறைந்த மின் அழுத்தத்தால் இந்தப் பகுதியில் இரவு நேரங்களில் தெரு விளக்குகள் எரிவதில்லை. வீட்டு விளக்குகளும் எரிவதில்லை. விவசாயிகளுக்கும் எந்தப் பயனும் இல்லை. எனவே, அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் அரசு முன்னுரிமை கொடுத்து, 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைத்துத் தர ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல அந்தப் பகுதியிலே எங்கேயாவது அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்குமானால் அதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். ஆனால், கோசூர் பகுதிக்கு தற்போது சிந்தாமணிப்பட்டி

[2007 ஜனவரி 24

33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. மின்பாதை மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மின்பாதையினுடைய நீளம் 15 கிலோமீட்டர் ஆகும். இந்தப் பகுதியில் நிலவி வரும் குறைந்த மின் அழுத்தத்தைப் போக்கிட கோத்தூரில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க கருத்துரு தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு அதாவது, 2007–2008 ஆம் ஆண்டு அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்புதலை மின் வாரியம் அளிக்கும். 6 மாத காலத்திற்குள்ளாக அந்தப் பணிகள் முடிவுறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். காணியாளம்பட்டி பகுதிக்கு தற்போது அருகில் உள்ள வெள்ளியணை 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. காணியாளம்பட்டி மின்பாதைமூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இந்தப் பகுதியிலே குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குன்னூர் தொகுதிக்குட்பட்ட ஓலிகல் சேலாஸ் பகுதிகளில் மாலை நேரங்களில் தெரு விளக்குகளும், வீட்டு விளக்குகளும் சரியாக எரியவில்லை.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின்முன் அனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** அப்பகுதியில் கூடுதலாக துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிவதோடு, அது மலைப் பிரதேசம் என்பதால் தெரு விளக்குகள் இன்றி இரவு நேரங்களில் கரடிகளுக்கு பொது மக்கள் அஞ்சி வாழ்கிறார்கள். ஆகவே, அவசியத் தேவை கருதி துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் இங்கே அறிவித்ததைப்போல, தமிழ்நாட்டிலே இன்னும் 200 துணை மின் நிலையங்கள் அமைத்தால்தான் இந்தக் குறைபாடுகள் மொத்தமாக நீங்கும். அதற்கான நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்து வருகிறது. இதற்காக மத்திய



2007 ஜனவரி 24]

அரசாங்கத்திடம் நாம் நிதி உதவியும் கேட்டிருக்கின்றோம். மேட்டூரிலே ஒரு அனல் மின் நிலையம் அமைக்கவும், அதைப்போலவே வட சென்னையிலே ஒரு அனல் மின் நிலையம் அமைக்கவும், கிராமப் பகுதிகளிலே மின் அழுத்தக் குறைபாடுகள் இருப்பதைப் போக்கவும். மேலும் தமிழ்நாட்டிலே உள்ள மாநகராட்சிகளிலே எல்லாம் overhead lines இருப்பதை மாற்றி, பூமிக்கடியிலே கேபிள்களைப் பதிக்கவும், நமக்கு 10,000 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தப் பணத்தை மத்திய அரசாங்கத்திடம் கேட்டிருந்தோம். மத்திய அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கி, பிப்ரவரி மாதம் முதல் வாரத்திலே Memorandum of Understanding போடுவதற்காக வர இருக்கிறார்கள். முதலமைச்சர் முன்னிலையிலே அந்தத் திட்டத்திற்கான பணம் ஒதுக்குவதற்கு MoU போடப்படும். அதற்குப் பிறகு அந்தப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் துறை அமைச்சர் அறிவித்ததைப்போல, புதிதாகத் தொடங்க உள்ள 200 துணை மின் நிலையங்களில் ஒரு துணை மின் நிலையமாக – நான் கடந்த முறையே கோரிக்கை வைத்தேன்– காங்கேயத்திற்கு அருகில் இருக்கிற ஊதியூரிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்கிற கோரிக்கை நீண்ட காலமாக பரிசீலனையில் இருந்து வருகிறது. இடமில்லை என்கின்ற காரணத்தால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பிறகு தனியார் ஒருவர் இடம் கொடுப்பதாக ஒப்புதலை, பத்திரத்தோடு சேர்த்து உரிய S.E.–யிடம், C.E.–யிடம் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைவதற்கு முன்னுரிமை அளித்து, ஊதியூரிலே அந்தத் துணை மின் நிலையம் அமைய அமைச்சர் இணைத்துக்கொள்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல, தனியாரிடத்திலேயிருந்து நிலத்தை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வாரேயானால் அல்லது பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்குமானால், 2007–2008 ஆம் ஆண்டிலே அந்தத் திட்டம் இணைக்கப்பட்டு நான்கு மாத காலத்திற்குள்ளாக அந்தத் துணை மின் நிலையம் அமைத்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

[2007 ஜனவரி 24

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு 16 இலட்சம் பம்ப் செட் விவசாயிகளுக்கும், தற்போது ஆட்சிப் பொறுப்பேற்றதும் 2,40,000 ஏழை விவசாயிகளுக்கும் இலவச மின்சாரத்தைத் தந்த தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் இந்த ஆண்டு விவசாயிகளுக்கு எவ்வளவு பம்ப் செட் மின் இணைப்புகள் வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 1969 ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் 40 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுக்க வேண்டுமென்று எண்ணிக்கையை நிர்ணயித்தார்கள். அது தொடர்ந்து நீடித்துக்கொண்டு வருகிறது. அதனால்தான் அப்போது இரண்டு இலட்சமாக இருந்த மின்சார இணைப்புகள் இன்றையதினம் விவசாயிகளுக்கு ஏறக்குறைய 18 இலட்சம் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் 40 ஆயிரம் மின் இணைப்புகள் விவசாயிகளுக்காக வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22 மற்றும் 23 தள்ளி வைக்கப்படுகின்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2)@

## முதலாவது பட்டியல்

1—

### மின்சார அலுவலகம் செயல்படும் இடம்

**வினா எண் 1157—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் அருகில் வல்லம் கிராமத்தில் உள்ள மின்சார அலுவலகத்தை தொடர்ந்து அதே இடத்தில் இயக்க அரசு முன்வருமா?

@ உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2007 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். தற்போது இளநிலை மின் பொறியாளர் (இயக்குதலும், பராமரித்தலும்) அலுவலகம் வல்லத்திலேயே தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

2—

### மின் வாரியத்தில் ஒப்பந்தப் பணியாளர்கள்

**வினா எண் 1680—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மின் வாரியத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்களா?

(ஆ) ஆம் எனில், எத்தனை தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் எந்த ஒரு ஒப்பந்தத் தொழிலாளரையும் வாரியம் நேரிடையாக ஈடுபடுத்துவதில்லை. மின் வாரியம் தனது பணிகளை, பணி ஒப்பந்த அடிப்படையில் (Works Contract) மட்டுமே நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. வேலையின் தேவைகளைப் பொறுத்து, ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஒப்பந்ததாரர்களால் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

3—

### சாலை செப்பனிடுதல்

**வினா எண் 2680—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, சோலையாறு அணை அருகிலுள்ள மின்சாரத் துறைக்குச் சொந்தமான பன்னிமேடு சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, சோலையாறு அணை அருகிலுள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான பன்னிமேடு என்ற இடத்தில் சாலைகள் எதுவும் இல்லை. சோலையார் அணையிலிருந்து சோலையாறு–2 மின் நிலையம் செல்லும் சாலையின் ஒரு பகுதியான பொச்சின் சந்திப்பிலிருந்து சோலையாறு–2 மின் நிலையம் 2–க்கு இடையேயான சாலை தமிழ்நாடு மின்சார வாரியப் பராமரிப்பிற்கான ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டு ஆணை வழங்கப்படவுள்ளது. விரைவில் பணி மேற்கொள்ளப்படும்.

4—

## மின் மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 3212—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாட்டுத் திட்டத்தினையும், சீரமைப்புத் திட்டத்தினையும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம் கடந்த 1–10–2003 முதல் சுமார் ரூபாய் 220.93 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் ரூபாய் 81.03 இலட்சத்திற்கு உண்டான திட்டம் முடிவு பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு:-

1. மின்மாற்றிகளில் மின் தேக்கிகள் நிறுவுதல் 1395 கே.வி.ஏ.ஆர்.
2. ஐயர்பாடி 110 கி.வோ. துணை மின் நிலையத்தில் உள்ள உபகரணங்களைப் புதுப்பித்தல் மற்றும் நவீனமாக்குதல்



3. புதிய பகிர்மான மின்மாற்றிகள் நிறுவுதல் – 3 மின்மாற்றிகள் நிறுவப்பட்டன.
4. 22 கி.வோ. மின்பாதையில் மாற்றுக் கம்பிகள் நிறுவுதல் – 44.26 கி.மீ.
5. தாழ்வழுத்த மின்பாதையில் மாற்றுக் கம்பிகள் நிறுவுதல்–13.82 கி.மீ.
6. புதிய உயர் மின்னழுத்த மின்பாதை நிறுவுதல் – 18 கி.மீ.
7. புதிய உயர் மின்னழுத்த மின்பாதை நிறுவுதல் – 4 கி.மீ.
8. வாடிக்கையாளர் அட்டவணைப்படுத்துதல்–23753 எண்ணிக்கை.

மீதமுள்ள ரூபாய் 139.90 இலட்சத்திற்கு உண்டான திட்டம் நடைபெற்று வருகிறது. அதில் துணை மின் நிலையத்தில் ரூபாய் 51.66 இலட்சம் கணினி விவர (Data Logging) வகைப்பாடு மையம் மற்றும் நுகர்வோர் மின் கட்டண வசூல் கணினி மூலம் வழங்குவதற்குண்டான திட்டத்தில் ரூபாய் 85.33 இலட்சம் வேலை மட்டும் நிலுவையில் உள்ளது. நுகர்வோர் மின் கட்டண வசூல், கணினிமூலம் வழங்குவதற்குண்டான திட்டம் வரும் 12/2006–க்குள் நிறைவடைய உள்ளது. துணைமின் நிலையத்தில் கணினி விவர (Data Logging) வகைப்பாடு பணிகள் ஆய்வில் உள்ளது.

5—

## மின்சார வாரியத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 7929—திரு. கி.க. ராஜா:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் இயங்கி வரும் தமிழ்நாடு மின்சார வாரிய மத்திய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் இயங்கி வரும் தமிழ்நாடு மின்சார வாரிய மத்திய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை பரிசீலனையில் உள்ளது.

6—

### கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 893—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கரியஞ்செட்டிபாளையம் ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனியிலுள்ள பழுதடைந்த தார்ச் சாலைக்குப் பதிலாக கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கரியஞ்செட்டிபாளையம் ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனியில் 5 குறுக்கு சந்துகளுக்கு கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள ஒரு சாலைக்கு 2006–2007 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா திட்டத்தில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7—

### கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 894—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனியிலுள்ள பழுதடைந்த தார்ச் சாலைக்குப் பதிலாக கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் தார்ச் சாலை ஏதும்



இல்லை. மண் சாலை மட்டுமே உள்ளது. மண் சாலையை கான்கிரீட் சாலையாக மாற்ற ரூ.2.50 இலட்சம் தேவைப்படும். தற்போது போதிய நிதி வசதியில்லை. இப்பணியினை நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

### கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 896—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி ஊராட்சியில் ஜெ.ஜெ. நகர் ஆதி திராவிடர் காலனிக்கு கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி, ஜெ.ஜெ. நகர் ஆதி திராவிடர் காலனியில் 3 முக்கிய வீதிகளில் 2 வீதிகளுக்கு ஏற்கெனவே கான்கிரீட் பாதை அமைக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள ஒரு முக்கிய வீதியில் 5 குறுக்குத் தெருக்களுக்கு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப கான்கிரீட் பாதை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

### கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 897—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி, வேடசந்தூர் ஆதி திராவிடர் காலனிக்கு கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேடசந்தூர் ஆதி திராவிடர் காலனியில் 3 சாலைகளில் ஏற்கெனவே கான்கிரீட் பாதைகள் அமைக்கப்பட்டுவிட்டன. மீதம் உள்ள ஒரு சாலைக்கு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப கான்கிரீட் பாதை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**10—**

**கான்கிரீட் சாலை அமைத்தல்**

**வினா எண் 898—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிக்கு கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில், ஆதி திராவிடர் காலனியில் ஏற்கெனவே 5 குறுக்குச் சாலைகளுக்கு கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுவிட்டது. மீதம் 7 சாலைகளுக்கு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப கான்கிரீட் சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**11—**

**கான்கிரீட் சாலை அமைத்தல்**

**வினா எண் 899—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 24]

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சி, ஆதி திராவிடர் காலனிக்கு கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சியில் ஏற்கெனவே 2 தெருக்களுக்கு கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுவிட்டது. மீதம் 4 சாலைகளுக்கு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப கான்கிரீட் சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**12—**

**கான்கிரீட் சாலை அமைத்தல்**

**வினா எண் 900—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி, கோடங்கிபட்டி கிராமம் ஆதி திராவிடர் காலனிக்கு கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சி, கோடங்கிபட்டி ஆதி திராவிடர் காலனியில் ஏற்கெனவே 5 குறுக்குச் சாலைகளில் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள 3 சாலைகளுக்கு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப கான்கிரீட் சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2007 ஜனவரி 24

13—

## கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 901—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பாரமடையூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் காலனிக்கு கான்கிரீட் சாலை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, பாரமடையூர் ஆதி திராவிடர் காலனிக்கு கான்கிரீட் சாலை அமைக்க நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14—

## கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 902—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஜல்லிப்பட்டி ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் காலனிக்கு கான்கிரீட் சாலை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஜல்லிப்பட்டி ஊராட்சியில் ஆதி திராவிடர் காலனியில் 5 குறுக்குச் சாலைகளில் கான்கிரீட் பாதை அமைக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 4 சாலைகளுக்கு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப கான்கிரீட் சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2007 ஜனவரி 24]

15—

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 903—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சிக்குத் தேவையான தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிலிசின்னம்பாளையம் ஊராட்சியில் தற்போது போதுமான அளவில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு, தற்போது நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

16—

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 906—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, பெத்தநாயக்கனூர் ஊராட்சிக்குத் தேவையான தெரு விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெத்தநாயக்கனூர் ஊராட்சியில் தற்போது போதுமான அளவில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு, தற்போது நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

17—

### தெரு விளக்கு வசதி

**வினா எண் 923—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை, கம்பலாபட்டி அரசூர் கிராமத்தில் கூடுதல் தெரு விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கம்பலாபட்டி அரசூர் கிராமத்தில் தற்போது போதுமான அளவில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

18—

### தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 924—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சி, கோடங்கிபட்டி கிராமத்திற்குக் கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை, கம்பலாபட்டி ஊராட்சி, கோடங்கிபட்டி கிராமத்திற்குக் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு, தற்போது நல்ல முறையில் எரிந்து வருகின்றன.



19—

### தெரு விளக்கு வசதி

**வினா எண் 943— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை, கம்பலாபட்டி ஊராட்சிக்குப் போதுமான தெரு விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கம்பலாபட்டி ஊராட்சியில் போதுமான தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

20—

### தெரு விளக்கு வசதி

**வினா எண் 944—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை, ஜல்லிப்பட்டி ஊராட்சியில் போதுமான தெரு விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஜல்லிப்பட்டி ஊராட்சியில் போதுமான தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

[2007 ஜனவரி 24

21—

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 945—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சிக்குப் போதுமான தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் தற்போது போதுமான அளவில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு, தற்போது நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

22—

## தெரு விளக்கு

**வினா எண் 946—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, அங்கலக்குறிச்சி ஊராட்சிக்குப் போதுமான தெரு விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அங்கலக்குறிச்சி ஊராட்சியில் தற்போது போதுமான அளவில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் எரிந்து வருகின்றன.



2007 ஜனவரி 24]

23—

## கழிப்பிடம் கட்டுதல்

**வினா எண் 949—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, காளியாபுரம் ஊராட்சி, அரசூரில் கழிப்பிடம் ஒன்று கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

24—

## ஆழ்குழாய்க் கிணறு மற்றும் பொதுக் கழிப்பிடம் அமைத்தல்

**வினா எண் 1563—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒலகடம் பேரூராட்சி, குந்துபாயூர் கிராமத்தில் பொது கழிப்பிட வசதியும் ஆழ்குழாய்க் கிணறும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், ஒலகடம் பேரூராட்சியில் அமைந்துள்ள குந்துபாயூர் கிராமத்திற்கு தற்போது கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே

[2007 ஜனவரி 24

அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்த குழாய்கள் உள்ளே விழுந்துவிட்டபடியால், அவற்றை எடுக்க இயலாமல் உள்ளது. இக்கிராமத்திற்கு அருகிலுள்ள ஒட்டப்பாளையம் ஊராட்சியின்மூலம் கழிப்பிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது இங்குள்ள பொதுமக்கள் இதனைப் பயன்படுத்தி வருகிறார்கள். 2006–2007 ஆம் ஆண்டில் அரசுத் திட்டத்தின்மூலம் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றவுடன் இப்பகுதிக்கு ஆழ்குழாய்க் கிணறு மற்றும் பொதுக் கழிப்பிடம் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**25—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 1574—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, செம்புளிச்சாம்பாளையம் பகுதியில் கூரை வீடுகள் கொண்ட 100 வீடுகளுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் வீடற்ற ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான பயனாளிகள் 2002 ஆம் ஆண்டின் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர் கணக்கெடுப்புப் பட்டியலை (B.P.L. List) அடிப்படையாகக் கொண்டு கிராம சபைமூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். தற்போது ஊராட்சி வாரியாக நிரந்தர காத்திருப்போர் பட்டியல் (Permanent Wait List) தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பட்டியல் கிராம சபைமூலம் இறுதி செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் இடம் பெற்றவர்களுக்கு ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப வரிசைக்கிரமப்படியும், தகுதிப்படியும் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.



2007 ஜனவரி 24]

**26—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 1575 திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, வெள்ளக்காட்டூரில் உள்ள 10 தெருக்களுக்கும், வேட்டுவனூர் பகுதி ஆகிய இடங்களில் வீடு இல்லாதவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் வீடற்ற ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான பயனாளிகள் 2002 ஆம் ஆண்டின் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர் கணக்கெடுப்புப் பட்டியலை (B.P.L. List) அடிப்படையாகக் கொண்டு கிராம சபைமூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். தற்போது ஊராட்சி வாரியாக நிரந்தர காத்திருப்போர் பட்டியல் (Permanent Wait List) தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பட்டியல் கிராம சபைமூலம் இறுதி செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் இடம் பெற்றவர்களுக்கு ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப அவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

**27—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 1925—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஜனவரி 24

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, பெரியகோட்டை ஊராட்சி, இந்து நகர் மற்றும் ராஜீவ் நகர் பகுதிகளுக்கு தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, பெரியகோட்டை ஊராட்சி, இந்து நகர் மற்றும் ராஜீவ் நகர் பகுதிகளுக்கு ஏற்கெனவே போதுமான அளவு தெரு விளக்குகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

**28—**

**தெரு விளக்கு வசதி**

**வினா எண் 1927—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சின்னபூலான்கிணறு கிராமம், போடிப்பட்டி ஊராட்சி, போடிப்பட்டி சமுதாய நலக் கூடம் அருகில் தெரு விளக்கு வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சின்னபூலான்கிணறு கிராமம், போடிப்பட்டி ஊராட்சியில் ஏற்கெனவே தெரு விளக்குகள் உள்ளன. கூடுதல் தெரு விளக்குகள் தேவைப்படும் இடங்கள் குறிப்பிடப்படும் பட்சத்தில் உடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**29—**

**தெரு விளக்கு வசதி**

**வினா எண் 1942—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 24]

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் கணக்கம்பாளையம் ஊராட்சி, கமல் ஸ்பின்னர்ஸ் பகுதிக்கு தெரு விளக்கு வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கணக்கம்பாளையம் ஊராட்சி, கமல் ஸ்பின்னர்ஸ் பகுதிக்கு நடப்பாண்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் தெரு விளக்குகள் அமைத்துத் தரப்படும்.

**30—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 2480—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வீராபுரம் ஆதி திராவிடர் பகுதிக்கு தார்ச் சாலை அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வீராபுரம் ஆதி திராவிடர் பகுதிக்கு ஏற்கெனவே தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

**31—**

**ஓடை தூர் வாருதல்**

**வினா எண் 2961—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஜனவரி 24

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, தங்கம்மாள் ஓடை தூர் வாருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**32—**

### கான்கிரீட் சாலைகள்

**வினா எண் 3222—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம், அக்ரஹார சாமக்குளம் ஊராட்சியில் ஊராட்சிமன்ற அலுவலகம் முதல் பெருமாள் கோயில் வரையிலும் மற்றும் பெருமாள் கோயில் முதல் மாரியம்மன் கோயில் வரை கான்கிரீட் சாலைகள் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம், அக்ரஹார சாமக்குளம் ஊராட்சியில் அக்ரஹார சாமக்குளத்திலிருந்து பெருமாள் கோயில் வரை 220 மீட்டர் உள்ள மண் சாலையை இரண்டு அடுக்குக் கப்பிச் சாலையாக அமைக்க சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா (2006-2007) திட்டத்தின்கீழ் ரூ.1.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற உள்ளது.

**33—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 3230—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 24]

(அ) மன்னார்குடி தொகுதி, வடபாதிமங்கலம் ஊராட்சி, புனவாசல் பாலத்திலிருந்து மேலத்தெரு வரையுள்ள சாலை தார்ச் சாலையாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, வடபாதிமங்கலம் ஊராட்சி, புனவாசல் பாலத்திலிருந்து மேலத்தெரு வரையுள்ள சாலை, 900 மீட்டர் நீளமுள்ள ஊராட்சி சாலையாகும். ஓரடுக்கு கப்பிச் சாலையாக உள்ள இச்சாலையினை அடுத்து ஓரடுக்கு கப்பி போட்டு தார்ச் சாலையாக மாற்ற ரூ.4.70 இலட்சம் நிதி தேவைப்படும். இப்பணியினை நிதிநிலைக்கேற்ப ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**34—**

### தரைப் பாலம் கட்டுதல்

**வினா எண் 3241—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தில் நேசனூர் ஊராட்சியிலுள்ள நேசனூர்–திருநாதராஜபுரம் கிராமங்களை இணைக்க தரைப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தில் நேசனூர் முதல் திருநாதராஜபுரம் கிராமங்களை இணைக்க தரைப் பாலம் கட்டும் பணி மற்றும் சாலைப் பணி சேர்த்து பிரதம மந்திரி கிராம சாலை மேம்பாட்டுத் திட்டம்–7 ஆண்டு செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

[2007 ஜனவரி 24

**35—**

**கடுகாட்டிற்குப் பாதை அமைத்தல்**

**வினா எண் 3248—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுகா, 19 பண்டாரவாடை ஊராட்சியிலுள்ள மேலமாங்குடி கிராமத்திலுள்ள சுடுகாட்டிற்குப் பாதை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பண்டாரவாடை ஊராட்சி, மேலமாங்குடி கிராமத்தில் சுடுகாடு மண் சாலை 400 மீ. நீளமும், 2.50 மீ. அகலமும் உள்ளது. 100 மீ. நீளமுள்ள இச்சாலையை 3.50 மீட்டருக்கு அகலப்படுத்தி, ஓரடுக்கு கருங்கல் கப்பிச் சாலையாக மாற்றி அமைக்க ரூ.1,55,000/- செலவாகும். இப்பணியினை இந்த நிதியாண்டில் (2006-2007) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**36—**

**கழிப்பிடம் கட்டித் தருதல்**

**வினா எண் 3258—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஜல்லிப்பட்டி ஊராட்சி, ஜல்லிமேடு பகுதியில் கழிப்பிடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2007 ஜனவரி 24]

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஜல்லிப்பட்டி ஊராட்சி, ஜல்லிமேடு பகுதியில் கழிப்பிடம் கட்ட ரூ.2.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. அரசு நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் இப்பணி மேற்கொள்ளப்படும்.

**37—**

**தரைப் பாலம் கட்டுதல்**

**வினா எண் 3259—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சி, பாலாற்றுத் தரைப் பாலம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் கிராமத்தில் பாலாற்றில் தரைப் பாலம் கட்ட ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**38—**

**அணுகுசாலை அமைத்தல்**

**வினா எண் 3263—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சி, பாலாற்றுப் பாலத்திற்கு அணுகுசாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

[2007 ஜனவரி 24

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சியிலிருந்து பாலாற்றுப் பாலம் அணுகுசாலை 2006–2007 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். மாவட்ட ஊராட்சி உறுப்பினர் நிதியில் வேலைகள் மேற்கொள்ள முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் தொடங்கப்படும்.

**39—**

## திண்காரை சாலை அமைத்தல்

**வினா எண் 3264—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர், சேத்துமடை கலைஞர் நகர், கோட்டூர் சிறப்பு ஊராட்சி, புளியங்கண்டு குடியிருப்பு பகுதி, அங்கலக்குறிச்சி புதுக்காலனி முதல் குடியிருப்பு பகுதி இரண்டாவது குறுக்கு சாலை, இரண்டாவது புதுக்காலனி குறுக்கு சாலை, ஜல்லிப்பட்டி ஊராட்சி, மாரியம்மன் கோயில் சாலை ஆகிய இடங்களிலுள்ள சாலைகளை கான்கிரீட் (திண்காரை) சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்கு உட்பட்ட சேத்துமடை கலைஞர் நகர் ஆகிய இடங்களில் கான்கிரீட் சாலைகள் அமைக்க ரூ.4.00 இலட்சம் ஆகும். வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் நிதி வசதி இன்மையால் மேற்குறிப்பிட்ட வேலையைச் செய்ய இயலவில்லை.

அங்கலக்குறிச்சி புதுக்காலனி முதல் குடியிருப்புப் பகுதி, இரண்டாவது குறுக்குச் சாலை, புதுக்காலனியில் குறுக்குச் சாலை, ஜல்லிப்பட்டியில் மாரியம்மன் கோயில் சாலை ஆகிய இடங்களில் கான்கிரீட் சாலைகள் அமைக்க ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறின் மேற்காண் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2007 ஜனவரி 24]

**40—**

## தரைப் பாலம் அமைத்தல்

**வினா எண் 3314—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி வட்டம், அகூர் கிராமத்திற்கும் பொதட்டூர்பேட்டை சாலைக்கும் இடையே ஓடும் நந்தி ஆற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருத்தணி வட்டம், அகூர் கிராமத்திற்கும் பொதட்டூர்பேட்டை சாலைக்கும் இடையே ஓடும் நந்தி ஆறு 75 மீட்டர் அகலம் உள்ளது. மேற்படி நந்தி ஆற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைக்க ரூ.20 இலட்சமும் மற்றும் பாலத்திற்கு இணைப்புச் சாலை அமைக்க ரூ.10 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.30 இலட்சம் தேவைப்படும். மேற்படி பாலம் அமைக்க திருத்தணி ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் போதிய வசதி இல்லை.

**41—**

## நவீன கழிப்பிடம் கட்டித் தருதல்

**வினா எண் 3367—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் சிறப்பு சிற்றூராட்சி, பூலாங்கினார் குடியிருப்புப் பகுதி, பர்லியா குடியிருப்புப் பகுதி, மன்னம்பதி, புளியங்கண்டி குடியிருப்புப் பகுதி, ஆலாங்கடவு குடியிருப்புப் பகுதி ஆகிய இடங்களில் நவீன கழிப்பிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பூலாங்கினார் குடியிருப்புப் பகுதி, பர்லியார் குடியிருப்புப் பகுதி, மன்னம்பதி, புளியங்கண்டி குடியிருப்புப் பகுதி, ஆலாங்கடவு குடியிருப்புப் பகுதி ஆகியவற்றில் பொது முழு சுகாதாரத் திட்டத்தின்கீழ் கழிப்பிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**42—**

## கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 3500—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சி, காளிமுத்து வீடு, ராஜேஸ்வரி வீடு, பாலாற்றுப் பாலம்–விஜயேஸ்வரி மில், மாரியம்மன் கோயில் காடு–வாய்க்கால் கான்கிரீட் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சியில் காளிமுத்து வீடு முதல் ராஜேஸ்வரி வீடு வரை, பாலாற்றுப் பாலம் முதல் விஜயேஸ்வரி மில் வரை தார்ச்சாலை அமைக்க ரூ.10.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. மேலும், மாரியம்மன் கோவில் வாய்க்கால் சாலை வரை கான்கிரீட் சாலை அமைக்க ரூ.5.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் இப்பணியை எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



2007 ஜனவரி 24]

**43—**

## தார்ச் சாலை/கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 3507—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ரமணமுதலிபுதூர் ஊராட்சியில், 1-வது வார்டில் தார்ச் சாலையும் மற்றும் 2-வது வார்டு ஆதிதிராவிடர் காலனியில் கான்கிரீட் சாலையும் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வால்பாறை தொகுதி, ரமணமுதலிபுதூர் ஊராட்சியில், 1-வது வார்டில் தார்ச் சாலை அமைக்க ரூ.5.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. 2-வது வார்டில் 4 தெருக்களில் 3 தெருக்களுக்கு ஏற்கெனவே கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதம் ஒரு தெருவிற்கு ரூபாய் 2.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப இப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**44—**

## இடுகாட்டிற்குப் பாதை

**வினா எண் 3574—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வழுதூர் ஊராட்சியில் உள்ள காட்டூர் இடுகாட்டிற்குப் புதியதாக பாதை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

[2007 ஜனவரி 24

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வழுதூர் ஊராட்சியிலுள்ள காட்டூர் இடுகாட்டிற்குப் புதிதாகப் பாதை அமைக்க வரும் நிதி ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

45—

## புதிய பாலம் கட்டுதல்

**வினா எண் 3575—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், தத்தளூர் ஊராட்சி, குறுமுகை கிராம இணைப்புச் சாலையிலுள்ள பழுதடைந்த சிறு பாலத்திற்குப் பதிலாக புதிய சிறு பாலம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், தத்தளூர் ஊராட்சி, குறுமுகை கிராம இணைப்புச் சாலையிலுள்ள பழுதடைந்த சிறு பாலத்திற்குப் பதிலாக, நடப்பு நிதி ஆண்டில் ஊராட்சி நிதியில் புதிய பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

46—

## சிமெண்ட் சாலைகள் அமைத்தல்

**வினா எண் 3580—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், வல்லம் ஊராட்சி, சாந்தி நகரில் புதியதாக சிமெண்ட் சாலைகள் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2007 ஜனவரி 24]

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், வல்லம் ஊராட்சி, சாந்தி நகரில் புதிய சிமெண்ட் சாலைகள் அமைக்க நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

## தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா எண் 3581—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், தத்தளூரிலிருந்து கிளாபாக்கம் செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், தத்தளூரிலிருந்து கிளாபாக்கம் செல்லும் சாலையில் தற்போது ஓரடுக்கு சரளைக்கல் சாலை அமைக்கப்பட்டுள்ளது. சாலையை அகலப்படுத்தி பின்னர் தார்ச் சாலையாக மாற்ற நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

48—

## சாலை இணைப்பு

**வினா எண் 3583—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு அண்ணா நகர்–காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலமையூர் கே.கே. நகர்–திருமணி என்.ஜி.ஓ. நகர் சந்திப்புச் சாலையை இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு அண்ணா நகர், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலமையூர் கே.கே. நகர்—திருமணி சாலை சந்திப்பை இணைக்க ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் ரூ.4.70 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய ஊராட்சி ஒன்றியக் குழு 17-7-2006-ல் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. இப்பணி ஒப்பந்த அடிப்படையில் நடப்பு நிதி ஆண்டில் செய்து முடிக்கப்படும்.

**49—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 3598—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், புளியம்பட்டி ஊராட்சி, I-வது வார்டு வேதகார மேட்டுப்பட்டி–N.H. பைபாஸ் சாலை வரை, கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, கொழந்தைவேல் கொட்டாய்-கலர் காடு, தாராபுரம் ஊராட்சி, குமரன் காடு பகுதி, சக்கரசெட்டிப்பட்டி ஊராட்சி, வேங்கனூர்–கருத்தானூர் வரை தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், புளியம்பட்டி ஊராட்சி, I-வது வார்டு வேதகார மேட்டுப்பட்டி–N.H. பைபாஸ் சாலை வரை, வேங்கனூர்–கருத்தானூர் வரை தார்ச் சாலை அமைக்கவும் மற்றும் காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, கொழந்தைவேல் கொட்டாய்-கலர் காடு, பகுதிக்கு தார்ச் சாலை அமைக்கவும் போதிய நிதி வசதி இல்லை. தாராபுரம் ஊராட்சி, குமரன் காடு செல்லும் சாலை, 2005-2006 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், மாவட்ட ஊராட்சி ஒதுக்கீட்டில் ரூ.1,60,000/- மதிப்பீட்டில் இரண்டடுக்கு கப்பிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.



**50—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 3602—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், பி. நல்லாகவுண்டம்பட்டி ஊராட்சியில் மின்மாற்றி அமைந்துள்ள பகுதி–அருந்ததியர் தெரு, நாரணம்பாளையம் ஊராட்சி, மைலப்பாளையம் பகுதி, முள்ளிச்செட்டிப்பட்டி-தின்னப்பட்டி, எட்டி-குட்டப்பட்டி ஊராட்சி, செக்காரப்பட்டி பகுதி மாரியம்மன் கோயில்–கிருஷ்ணன் வீடு, குண்டங்காடு பாலம் அருகேயுள்ள இட்டேரி பாதை மற்றும் தும்பிப்பாடி ஊராட்சி, ரெட்டியூர் பகுதி அரசுப் பள்ளிக்குச் செல்லும் பாதை ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், பி. நல்லாகவுண்டம்பட்டி ஊராட்சியில் மின்மாற்றி அமைந்துள்ள பகுதி,—அருந்ததியர் தெரு, நாரணம்பாளையம் ஊராட்சி, மைலப்பாளையம் பகுதி, முள்ளிச்செட்டிப்பட்டி, தின்னப்பட்டி, எட்டி-குட்டப்பட்டி ஊராட்சி, செக்காரப்பட்டி பகுதி மாரியம்மன் கோயில், கிருஷ்ணன் வீடு, குண்டங்காடு பாலம் அருகேயுள்ள இட்டேரி பாதை மற்றும் தும்பிப்பாடி ஊராட்சி, ரெட்டியூர் பகுதி அரசுப் பள்ளிக்குச் செல்லும் பாதை ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க ஒன்றியப் பொது நிதியில் போதுமான நிதி வசதி இல்லை.

**51—**

### கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 3608—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாராபுரம் ஊராட்சி, குருமன்காடு அருந்ததியர் தெரு, கருப்பூர் சிற்றூராட்சி 1-வது வார்டு, அருந்ததியர் பகுதி, நாரணம்பாளையம் ஊராட்சி, மைலம்பாளையம் வினாயகர் கோயில்-பழனியப்பன் வீடு, சக்கரைசெட்டிப்பட்டி ஊராட்சி புதுக்கடை பகுதி, மூங்கில்பட்டி ஊராட்சி, செம்மாண்டப்பட்டி ஊராட்சி, புதுத்தெரு பகுதி, கொல்லப்பட்டி ஊராட்சி, அண்ணா நகர் பகுதி ஆகிய இடங்களில் கான்கிரீட் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், தாராபுரம் ஊராட்சி, குருமன்காடு அருந்ததியர் தெரு மக்களுக்கு 2004–2005 ஆம் ஆண்டு மாவட்ட ஊராட்சியின் மாநில நிதிக் குழு திட்டத்தில் ரூ.75,000/- மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. நாரணம்பாளையம் ஊராட்சி, மைலம்பாளையம் விநாயகர் கோயில், பழனியப்பன் வீடு, சக்கரைச்செட்டிப்பட்டி ஊராட்சி, புதுக்கடை பகுதி, மூங்கில்பட்டி ஊராட்சி, செம்மாண்டப்பட்டி ஊராட்சி, புதுத்தெரு பகுதி, கொல்லப்பட்டி ஊராட்சி, அண்ணா நகர் பகுதி ஆகிய இடங்களில் கான்கிரீட் சாலை அமைக்க போதிய நிதி வசதி இல்லை.

**52—**

### சாலை வசதி

**வினா எண் 3626—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி கிராமம், குண்டுகாட்டூர் கிராமப் பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சி, குண்டுகாட்டூர் கிராமத்தில் 2006–2007 ஆம் ஆண்டு மாவட்ட ஊராட்சியின் மாநில நிதிக் குழு ஒதுக்கீட்டில் ரூ.30,000/- மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு வருகிறது.

**53—**

### கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 3731—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், நாரணம்பாளையம் ஊராட்சி, மோலாண்டிப்பட்டி பகுதி, கொல்லப்பட்டி ஊராட்சி, தட்டான்சாவடி புதூர் பகுதி, காமலாபுரம் ஊராட்சி, காட்டூர் பகுதி ஆகிய பகுதிகளில் கான்கிரீட் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், நாரணம்பாளையம் ஊராட்சி, மோலாண்டிப்பட்டி பகுதி, கொல்லப்பட்டி ஊராட்சி, தட்டான்சாவடி புதூர் பகுதி, காமலாபுரம் ஊராட்சி, காட்டூர் பகுதி ஆகிய பகுதிகளுக்கு கான்கிரீட் சாலை அமைக்க 2006–2007 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செயய நடவடிக்கை எடுக்கப்படும்.

[2007 ஜனவரி 24

**54—**

## மயானப் பாதை அமைத்தல்

**வினா எண் 3737—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சி, குண்டுகாட்டூர் பகுதி மக்களுக்கு மயானப் பாதை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சி, குண்டுகாட்டூர் பகுதி மக்களுக்கு உள்ள மயானப் பாதைக்குச் செல்லும் சாலை பட்டா நிலமாக உள்ளது. எனவே, மயானப் பாதை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

**55—**

## குடிநீர் வழங்கல்

**வினா எண் 3893—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், வல்லம் ஊராட்சி, காந்தி நகர் பகுதி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது வல்லம் ஊராட்சியில் உள்ள காந்தி நகர் பகுதிக்கு, நேருநகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. காந்தி நகர் மேட்டுப் பகுதியாக உள்ளதால், குடிநீர் வழங்கல்



2007 ஜனவரி 24]

போதுமானதாக இல்லை. இப்பகுதியில், சிறு மின்விசைப் பம்பு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**56—**

## சாலைகள் செப்பனிடுதல்

**வினா எண் 3902—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில், கம்பலாபட்டி ஊராட்சியில் அமணலிங்கபுரம் சாலை, குள்ளேகவுண்டன்புதூர் சாலை மற்றும் ஜல்லிப்பட்டி ஊராட்சி நான்கு முனைப் பாதை, நல்லிக்கவுண்டன் குட்டை வரையுள்ள சாலைகளைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில், கம்பலாபட்டி ஊராட்சியில் அமணலிங்கபுரம் சாலை, குள்ளேகவுண்டன்புதூர் சாலை ஆகியவை தார்ச் சாலைகளாக ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. ஜல்லிப்பட்டி நான்கு முனைப் பாதை மற்றும் நல்லிக்கவுண்டன் குட்டை வரை சாலை அமைக்க ரூ.4.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில் மேற்கண்ட பணியினை எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**57—**

## கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 3905—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கம்பலாபட்டி ஊராட்சியில் அரசூர் கிராமத்தில் மதுரை வீரன் கோயில் சாலை, குருசாமியூரில் நாச்சிமுத்து கவுண்டர் வீடு, மகாலிங்கம் வீடு, பாரமடையூர் கிராமம், அருணாசலம் வீடு, பொன்னைய நாயக்கர் வீடு, பூவலப்பருத்தி கிராமத்தில் கண்ணன் செட்டியார் வீடு, மாரியம்மன் கோயில் கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 24

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சி, அரசூர் கிராமத்தில் மதுரை வீரன் கோயில் முதல் குருசாமி வீடுவரை, நாச்சிமுத்து கவுண்டர் வீடு முதல் மகாலிங்கம் வீடு வரை, பாரமடையூர் கிராமம், அருணாசலம் வீடு முதல் பொன்னைய நாயக்கர் வீடு வரை, பூவலப்பருத்தி கிராமத்தில் கண்ணன் செட்டியார் வீடு முதல் மாரியம்மன் கோவில் வரை கான்கிரீட் சாலைகள் அமைக்க ரூ.16.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கண்ட பணியினை எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

58—

## சாலை செப்பனிடுதல்

**வினா எண் 4309—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் அங்கலக்குறிச்சி 3-வது வார்டில் பழுதடைந்துள்ள மதுரை வீரன் கோயில் சாலையை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி 3-வது வார்டில் பழுதடைந்துள்ள 1 கிலோ மீட்டர் சாலையை தார்ச் சாலையாக அமைக்க ரூ.7.50 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. இப்பணியினை எடுத்துச் செய்ய தற்போது போதிய நிதி வசதி இல்லை.



2007 ஜனவரி 24]

59—

## குடிநீர்க் குழாய் அமைத்தல்

**வினா எண் 4558—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், எல்லப்பாளையம்புதூர் ஊராட்சி, செட்டிபாளையம் காலனியில் குடிநீர்க் குழாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): காங்கேயம் தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், எல்லப்பாளையம்புதூர் ஊராட்சிக்குட்பட்ட செட்டிபாளையம் அரிசனக் காலனியில் சுமார் 30 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிக்கு ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்து மின் மோட்டார் அமைத்து, குடிநீர் ஏற்றி, விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 1,000 லிட்டர் கொள்ளளவுள்ள சின்டெக்ஸ் தொட்டி நிறுவி, ஆழ்குழாய் கிணற்றில் காற்றழுத்த மின் மோட்டார் பொருத்தி, குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும், கூடுதலாக 2,000 லிட்டர் கொள்ளளவுள்ள சின்டெக்ஸ் தொட்டி வைத்து, குடிநீர் வழங்க, ஊராட்சி நிதியில் வேலைகள் முடித்து, பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இக்கிராமத்திற்குப் போதுமான குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

60—

## சாலை செப்பனிடுதல்

**வினா எண் 4581—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஜனவரி 24

உசிலம்பட்டி தொகுதி, முதலைக்குளம் பஞ்சாயத்து, கருகப்பிள்ளை விக்கிரமங்கலம் ரோடு பிரிவிலிருந்து முதலைக்குளம் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் சொல் வழக்கில் உள்ள கருகப்பிள்ளை விக்கிரமங்கலம் சாலை என்பது, கோவிலாங்குளம்-திம்மநத்தம் சாலையாகும். இந்தச் சாலையிலிருந்து முதலைக்குளம் ஊராட்சியைச் சார்ந்த கஸ்பா முதலைக்குளம் கிராமம் செல்லும் மெட்டல் சாலை, ஊராட்சி சாலையாகும். இச்சாலை தற்போது மெட்டல் உதிர்ந்து மிகவும் சிதிலமடைந்து காணப்படுகிறது. இந்தச் சாலையின் நீளம் 800 மீட்டர். இந்தச் சாலையை ஓரடுக்கு மெட்டல் மற்றும் தார் பரத்தும் வேலையின்மூலம் சீராக்க இயலும். இதற்கான மதிப்பீடு ரூ.8.00 இலட்சம் ஆகும். இது பேருந்து செல்லும் சாலை என்பதால், முன்னுரிமையின் அடிப்படையில் நடப்பு நிதியாண்டில் உரிய திட்டத்தில் சேர்த்து செயல்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**61—**

## திண்காரை சாலை அமைத்தல்

**வினா எண் 6006— டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், பரமத்தி ஒன்றியம், மணியனூர் ஆதி திராவிடர் தெருவில் திண்காரை சாலை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் என அறிய விரும்புகிறேன்?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2007 ஜனவரி 24]

(அ) மற்றும் (ஆ): நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், பரமத்தி ஒன்றியம், மணியனூர் ஆதி திராவிடர் தெருவிற்கு திண்காரை சாலை அமைத்துத்தர தற்சமயம் ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு அல்லது வேறு நிதி ஒதுக்கீடு கிடைக்கும்பட்சத்தில் மணியனூர் ஆதி திராவிடர் தெருவிற்கு திண்காரை சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**62—**

## சாலை வசதி

**வினா எண் 6633— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் காளியாபுரம் ஊராட்சியில், செல்லபிள்ளைகரடு கிராமத்திற்கு சாலை வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, காளியாபுரம் ஊராட்சி செல்லபிள்ளைகரடு கிராமத்திற்கு ஊராட்சி நிதியில் சாலை போடப்பட்டுள்ளது.

**63—**

## கூட்டுறவு பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு

**வினா எண் 6030—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு பட்டயப் படிப்பு படித்த மாணவ மாணவியர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கூட்டுறவு மேலாண்மையில் பட்டயப் படிப்பு கூட்டுறவுச் சங்கங்களில் நேரடி பணி நியமனம் பெறுவதற்கு வேலைவாய்ப்புப் பயிற்சியாக நடத்தப்படும் படிப்பு அல்ல. கூட்டுறவுச் சங்கங்களில் பணி நியமனம் பெற தேவையான கல்வித் தகுதியைப் பெற நடத்தப்படும் பட்டயப் படிப்பாகும். 1988 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் விதி எண் 149—ன்படி கூட்டுறவு நிறுவனங்களில் அனைத்துப் பணியிடங்களும் வேலைவாய்ப்பகத்திலிருந்து பட்டியல் பெற்றுத்தான் நிரப்பப்பட வேண்டும். எனவே, கூட்டுறவு பட்டயப் படிப்பு தேர்ச்சி பெற்றவர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்களது பெயர்களைப் பதிவு செய்திருப்பார்களேயானால், கூட்டுறவு நிறுவனங்களில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுவதற்காக மாவட்ட வேலை வாய்ப்பகங்களிலிருந்து பெயர் பட்டியல்கள் அனுப்பப்படும்பொழுது, அரசால் அவ்வப்போது தெரிவிக்கப்படும் நெறிமுறைகளின் அடிப்படையில் பணி நியமனம் பெற இவர்கள் தகுதியுடையவர்களாகிறார்கள்.

(ஆ) கேள்வி எழவில்லை.

**64—**

**வேளாண் பொருட்களை விற்பனை செய்தல்**

**வினா எண் 6020—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நியாய விலைக் கடைகளில் விவசாயிகளுக்குத் தேவையான உரம், மருந்து, விதை ஆகிய வேளாண் பொருட்களை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தற்போது கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் நியாய விலைக் கடைகள் பெரும்பாலானவை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் நடத்தப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்குத் தேவையான உரம், மருந்து போன்ற இடுபொருட்கள் தற்போது நியாய விலைக் கடைகளை நடத்தும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு



2007 ஜனவரி 24]

வங்கிகளால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், அத்தியாவசியப் பொருட்களோடு, உரம் மற்றும் பூச்சி மருந்தைச் சேர்த்து வைப்பது சுகாதாரக்கேடு விளைவிப்பதாக அமையும். எனவே, விவசாயத்திற்குத் தேவையான உரம், மருந்து போன்ற இடுபொருட்களை நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**65—**

**உழவர் சந்தையை மீண்டும் துவக்குதல்**

**வினா எண் 4545—திரு. வி.எஸ். பாபு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, கொளத்தூரில் மூடிக்கிடக்கும் உழவர் சந்தையை மீண்டும் தொடங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கொளத்தூர் உழவர் சந்தை கட்டுமானப் பணி முடிவுற்று, திறக்கும் தருவாயில், கொளத்தூர் உழவர் சந்தை கட்டப்பட்ட இடம் தனக்குச் சொந்தம் என ஒரு தனியாரால் தொடரப்பட்ட வழக்கு, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கினை முடிவிற்குக் கொண்டுவர, சென்னை மாவட்ட ஆட்சியர் மூலமாக, எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணையில் உள்ளது. நீதிமன்றத்திலிருந்து இறுதித் தீர்ப்பு கிடைக்கப்பெற்றவுடன் கொளத்தூர் உழவர் சந்தையைத் திறக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**66—**

**மினிபஸ் வசதி**

**வினா எண் 2951—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த ஆண்டு எத்தனை வழித்தடங்களில் புதிய மினிபஸ் இயக்கப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது நடைமுறையிலுள்ள பகுதி திட்டத்தின்கீழ் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களுக்கும் 250 சிற்றுந்து அனுமதிச் சீட்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. சில மாவட்டங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 250 அனுமதிச் சீட்டுகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன. போக்குவரத்து வசதி தேவையுள்ள கிராம மக்களுக்கு சிற்றுந்து வசதியைப் பரவலாக்கும் வகையில் மிகக் குறைவான அனுமதிச் சீட்டுகள் வழங்கிய பிற மாவட்டங்களில் பயன்படுத்தப்படாத அனுமதிச் சீட்டுகளைத் தேவையான மாவட்டங்களுக்கு பஞ்சாயத்து ஒன்றியம் வாரியாக மறு ஒதுக்கீடு செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

**67—**

### இலவச சலவைப் பெட்டி வழங்குதல்

**வினா எண் 453—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சலவைத் தொழிலாளருக்கு இலவச சலவைப் பெட்டி வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். சலவைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அவர்களுக்கு இலவச சலவைப் பெட்டி வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. ஆண்டுதோறும் வரப்பெற்ற மனுக்களின் முதுநிலை மற்றும் தகுதியின் அடிப்படையில் சலவைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து இலவச சலவைப் பெட்டிகள் வழங்கும் இத்திட்டம் இத்துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**68—**

### ஊக்கத்தொகை வழங்குதல்

**வினா எண் 1411—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



ஊராட்சி ஒன்றியம் மற்றும் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றியம் மற்றும் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**69—**

### இலவச சலவைப் பெட்டி வழங்குதல்

**வினா எண் 2147—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியிலுள்ள சலவையாளர்களின் நலன் கருதி சலவைப் பெட்டி இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சலவைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அவர்களுக்கு சலவைப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் வரப்பெற்ற மனுக்களின் முதுநிலை மற்றும் தகுதியின் அடிப்படையில் இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே செங்கல்பட்டு தொகுதியிலுள்ள தகுதியான சலவைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்படவுள்ளன.

**70—**

### அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

**வினா எண் 3568—செல்வி ஆ. அங்கயற்கண்ணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஜனவரி 24

(அ) விழுப்புரம் மாவட்டம், வடபொன்பரப்பியில் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு இந்த நிதியாண்டில் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வடபொன்பரப்பியில் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு இந்த நிதியாண்டில் புதிய கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**71—**

### சட்டக் கல்லூரிக்கு அடிப்படை வசதி

**வினா எண் 4222—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு, டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரிக்கு போதிய அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் போதிய அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

(ஆ) எழவில்லை.

**72—**

### பெரியமலைக் கோயிலைச் சுற்றுலாத் தலமாக்குதல்

**வினா எண் 5423—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 24]

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பெரியமலைக் கோயிலைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பெரியமலைக் கோயிலைச் சுற்றுலாத் தலமாக்குவது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை. மேலும், சுற்றுலாத் துறையின்மூலம் எந்தவொரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுற்றுலாத் துறை நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டப் பணிகள் விவரம் பின்வருமாறு:—

| வருடம் | திட்டத்தின் பெயர் | சுற்றுலாத் துறையின் பங்கு (ரூ. இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 2004-05 | முகமது கவுஸ் குளம் மேம்பாடு, காட்சிக் கோபுரம் மற்றும் தொலைநோக்கி வசதிகள் செய்தல் | 38.50 | பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. |
| 2005-06 | தேவபெட்டா பகுதியில் அடிப்படை வசதிகள் செய்தல் | 31.50 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2005-06 | தளி பெரிய ஏரியைச் சுற்றி மேம்பாட்டுப் பணிகள் செய்தல் | 30.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2005-06 | அருள்மிகு சந்திரசூடேஸ்வர் கோவில் பகுதியை மேம்பாடு செய்தல் | 13.50 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |

[2007 ஜனவரி 24

73—

## சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி

**வினா எண் 5759—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட பருவத மலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட பருவத மலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி அமைக்கும் திட்டம் குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

74—

## ஜலகாம்பாறை வாசஸ்தலத்தைச் சுற்றுலாத் தலமாக்குதல்

**வினா எண் 6411—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம் ஜலகாம்பாறை வாசஸ்தலத்தை சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

சுற்றுலாத் துறையின்மூலம் எந்தவொரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அரசு அறிவிப்பதில்லை.

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், ஜலகாம்பாறை வாசஸ்தலத்தை சுற்றுலாத் தலமாக மாற்றுவது குறித்து



2007 ஜனவரி 24]

செயற்குறிப்பு எதுவும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

75—

## ஆத்தூர் கோட்டைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவித்தல்

**வினா எண் 6545—திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் கோட்டைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் கோட்டைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக ஆக்குவது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை. மேலும், சுற்றுலாத் துறையின்மூலம் எந்தவொரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. ஆனால், சேலம் மாவட்டத்தில் கீழ்க்காணும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

**சேலம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்**

| ஆண்டு | திட்டம் | தொகை (ரூ.இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 2001–02 | ஏற்காடு ஏரி மேம்பாடு (முதல் கட்டம்) | 10.00 | பணிகள் முடிவுற்றன. |
| 2004–05 | ஏற்காடு சுற்றுலாத் தலம் மேம்பாடு | 448.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2005–06 | தாரமங்கலம் சுற்றுலா மேம்பாடு | 20.15 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |

[2007 ஜனவரி 24

76—

## கொல்லி மலையில் சில வசதிகள்

**வினா எண் 7820—திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தற்பொழுது சுற்றுலாத் துறையின்மூலம் எந்தவொரு பகுதியையும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவிப்பதில்லை. ஆனால், சுற்றுலாத் தலத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை, அப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் குடிநீர் வசதி, உணவகம், சாலை வசதி, தங்கும் வசதி, போக்குவரத்து, நிலச் சீரமைப்பு, வாகன நிறுத்துமிடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, கழிவறை போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்த சுற்றுலாத் துறையின்மூலம் நிதி உதவி வழங்கப்படுகிறது. இதனடிப்படையில், 2001-02 ஆம் ஆண்டில் கொல்லிமலையில் கட்டமைப்பு வசதிகள் (கழிப்பறை, உடைமாற்றும் அறை, குடிநீர்த் தொட்டி பழுதுபார்த்தல், சாலை மேம்பாடு, இளைஞர் விடுதி பழுதுபார்த்தல், குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் போன்றவை) ஏற்படுத்துவதற்காக ரூ.20.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. மேற்காண் வேலைகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 2005-06 ஆம் ஆண்டில் கொல்லிமலையில் கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.7.00 இலட்சம் (சுற்றுலாத் துறை பங்கு ரூ.3.50 இலட்சம் + மாவட்ட நிர்வாகப் பங்கு ரூ.3.50 இலட்சம்) ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. 2004-05 ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்டத்தில் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த மொத்த திட்ட மதிப்பீடான ரூ.99.40 இலட்சத்தில் சுற்றுலாத் துறை தனது பங்காக ரூ.49.40 இலட்சம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கி பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

77—

## ஒகேனக்கல் சுற்றுலா மையத்தை மேம்படுத்துதல்

**வினா எண் 8226—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 24]

ஒகேனக்கல் சுற்றுலா மையத்தை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

ஒகேனக்கல் சுற்றுலா மையத்தை மேம்படுத்தும் திட்டப் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உணவகத்துடன்கூடிய தங்கும் விடுதியையும், இளைஞர் விடுதியையும் நடத்தி வருகிறது.

1986-87 ஆம் ஆண்டு மைய அரசு நிதியுதவித் திட்டத்தின்மூலம் ஒகேனக்கல் சுற்றுலாப் பகுதியில் ரூ.3.39 இலட்சம் செலவில் (உடை மாற்றும் அறை) அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1987-88 ஆம் ஆண்டு மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.17.56 இலட்சம் மதிப்பீட்டில் ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தில் தொங்கு பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

1992-93 மற்றும் 1998-99 ஆம் ஆண்டு மைய / மாநில நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் பொதுக் கழிப்பிடம் கட்ட ரூ.16,75,600/- ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1995-96 ஆம் ஆண்டு மாநில அரசுத் திட்டத்தின்கீழ் ரூ.10.50 இலட்சம் செலவில் காட்சிக் கோபுரம், நடைபாதை மற்றும் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

1999-2000 ஆம் நிதியாண்டில் மைய / மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.20.00 இலட்சம் செலவில் ஒகேனக்கல் சுற்றுலாத் திட்டத்தில், வாகனம் நிறுத்துமிடம், சோடியம் ஆவி விளக்கு போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2005-2006 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் மாநில நிதியுதவிமூலம் ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தில் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள ரூ.150.00 இலட்சம் (சுற்றுலாத் துறையின் பங்கு ரூ.75.00 இலட்சம் + மாவட்ட நிர்வாகம் ரூ.75.00 இலட்சம்) ஒப்பளிப்பு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2007 ஜனவரி 24

தருமபுரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலாச் சிறப்பிடங்கள், வண்ணச் சுவரொட்டிகள், மடிப்பேடுகள் மற்றும் இணைய தளம்மூலம் சுற்றுலாத் துறையால் விளம்பரப்படுத்தப்படுகிறது. சுற்றுலாத் துறையின்மூலம் பொங்கல் சுற்றுலா விழா, உலகச் சுற்றுலா தின விழா ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

**78—**

**விளம்பரக் கட்டணம்**

**வினா எண் 932—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை தொலைக்காட்சிகளுக்கு அரசின் சார்பாக வழங்கப்பட்ட மொத்த விளம்பரக் கட்டணம் எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

*2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை தொலைக்காட்சிகளுக்கு அரசின் சார்பாக வழங்கப்பட்ட மொத்த விளம்பரக் கட்டணம் ரூ.4,82,11,013/- ஆகும்.*

**79—**

**மணிமண்டபம்**

**வினா எண் 2284—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் சுதந்திரப் போராட்ட தியாகி பி. சீனிவாசராவ் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

*இக் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.*



2007 ஜனவரி 24]

**80—**

**கிருபானந்த வாரியாரின் நூற்றாண்டு விழா**

**வினா எண் 3243—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருமுருக கிருபானந்த வாரியாரின் நூற்றாண்டு விழாவினை அரசு சார்பில் கொண்டாடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

*திருமுருக கிருபானந்த வாரியாரின் நூற்றாண்டு விழாவினை அரசு சார்பில் கொண்டாடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**81—**

**மாணவர்களின் நல்லொழுக்கம்**

**வினா எண் 5275—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களில் மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்களுக்கு ஒழுக்கம், நேர்மை, நன்னடத்தை பற்றிய செய்திகளைத் தயாரித்து தொடர்ந்து வெளியிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களில் மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்களுக்கு ஒழுக்கம், நேர்மை, நன்னடத்தை குறித்து அரசு பாடப் புத்தகங்களில் பல்வேறு தலைப்புகளில் வெளியிட்டுள்ளது. இந்நிலையில் இதுபற்றிய செய்திகளைத் தயாரித்து தொடர்ந்து வெளியிடுவது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

[2007 ஜனவரி 24

82—

### சீரணி அரங்கம்

**வினா எண் 6000—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலைத் தொகுதி, மோகனூர் ஒன்றியம், பாலப்பட்டி குமாரபாளையத்தில் ஒரு சீரணி அரங்கம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

83—

### நினைவு மண்டபம்

**வினா எண் 6035—திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியில் சுதந்திரப் போராட்டத் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்கள் தியாகத்தை இளைய சமுதாயத்திற்கு உணர்த்தும் வகையில் நினைவு மண்டபம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

(அ) கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

84—

### சிலை அமைத்தல்

**வினா எண் 7819—திருமதி டி. யசோதா:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 24]

(அ) மறைந்த மாபெரும் தலைவர், முன்னாள் உள் துறை அமைச்சர், தியாகி கக்கன்ஜி அவர்களுக்கு சிலை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டியில் (தும்பைப்பட்டி) ஏற்கெனவே கக்கன்ஜி அவர்களுக்கு மணிமண்டபமும், அம்மணிமண்டபத்தில் கக்கன்ஜி அவர்களின் மார்பளவு சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இக் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

### பள்ளிக்கு அடிப்படை வசதிகள்

**வினா எண் 1137—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை ரொட்டிக்கடை உயர்நிலைப் பள்ளிக்கு போதுமான அடிப்படை வசதிகளும், கூடுதல் வகுப்பறைகளும், கழிப்பிட வசதிகளும் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை ரொட்டிக்கடை உயர்நிலைப் பள்ளியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப் போதுமான இடவசதி இல்லை. பள்ளிக்கான நிலம் பெற்ற பின்னர் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

86—

### பள்ளிக்கு கழிப்பிடக் கட்டுதல்

**வினா எண் 1313—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சி, உயர்நிலைப் பள்ளிக்கு கழிப்பிடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சி, உயர்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கித் திட்டம் (-ன்கீழ் கழிப்பிடம் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**87—**

### கழிப்பிடம் கட்டுதல்

**வினா எண் 1314—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் சிறப்பு ஊராட்சி, பொங்காளியூர் உயர்நிலைப் பள்ளிக்கு கழிப்பிடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கோட்டூர் சிறப்பு ஊராட்சி, பொங்காளியூர் உயர்நிலைப் பள்ளிக்கு அனைவருக்கும் கல்வித் திட்டம் மூலம் கழிப்பிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**88—**

### பள்ளிகளுக்குக் கூடுதல் கழிப்பிடங்கள்

**வினா எண் 1315—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை மற்றும் கோட்டூரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் கழிப்பிடங்களைக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மற்றும் கோட்டூரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு நபார்டு வங்கித் திட்டம் (-ன்கீழ் கூடுதல் கழிப்பிடங்கள் கட்டித்தர அரசு அனுமதி வழங்கியுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**89—**

### விளையாட்டு மைதானம்

**வினா எண் 6958—திரு. வை. காவேரி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், எருமைப்பட்டி கிராமம், வெள்ளக்கல்பட்டி இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், எருமைப்பட்டி கிராமம், வெள்ளக்கல்பட்டி இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**90—**

### விளையாட்டு மைதானத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 8083—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், தெற்கு இராமலிங்கபுரம் அம்பேத்கர் குடியிருப்பில் விளையாட்டு மைதானத்தைச் சீரமைத்து, உபகரணங்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், தெற்கு இராமலிங்கபுரம் அம்பேத்கர் குடியிருப்பில் விளையாட்டு மைதானத்தைச் சீரமைத்து, உபகரணங்கள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**91—**

**சாலை சீரமைத்தல்**

**வினா எண் 1388—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கருமலை பாலாஜி கோயில் சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, கருமலை முதல் பாலாஜி கோயில் வரையிலான சாலை டீ எஸ்டேட் ஆப் இந்தியா, ஸ்டேன் மோர், வால்பாறை நிறுவனத்தாரர்களுக்குச் சொந்தமான தனியார் சாலையாகும். எனவே, இச்சாலையை நெடுஞ்சாலைத் துறைமூலம் சீரமைக்க இயலாது.

(ஆ) எழவில்லை.



**92—**

**கூடுதல் அறைகள் கட்டுதல்**

**வினா எண் 1389—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அட்டகட்டியில் தங்கும் அறைகளை ஒட்டி கூடுதல் அறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, அட்டகட்டியில் தங்கும் அறைகளை ஒட்டி கூடுதல் அறைகள் கட்ட கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**93—**

**பாலம் அகலப்படுத்துதல்**

**வினா எண் 2385—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவிரி ஆற்றின் குறுக்கே சோழசிராமணி–பாசூர் இடையே அமைக்கவுள்ள பாலத்தின் அகலத்தினை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

காவிரி ஆற்றின் குறுக்கே சோழசிராமணி–பாசூர் இடையே தமிழ்நாடு மின்சார வாரியத்தால் கட்டப்பட்டுவரும் கதவணைப் பாலத்தினை அகலப்படுத்தி சாலையாகவும் பயன்படுத்த ரூ.6.00 கோடிக்கு

[2007 ஜனவரி 24

நிர்வாக ஒப்புதல் அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மின்சார வாரியம் பணிகளை மேற்கொள்ளும்.

**94—**

### மீன் வளர்ப்பு

**வினா எண் 4205—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகரிலுள்ள சிங்காநல்லூர் மற்றும் குறிச்சி குளத்தில் மீன்கள் அதிகமாக வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சிங்காநல்லூர் குளத்தில் விரைவில் வளரக்கூடிய இந்திய பெருரகக் கெண்டை மீன்களான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதா கெண்டை இன மீன்குஞ்சுகள் குத்தகைதாரரால் இருப்பு செய்யப்பட்டு மீன்கள் நன்கு வளர்ந்த பிறகு பிடிக்கப்பட்டு வருகிறது. குறிச்சி குளம் மீன்பாசி உரிமை பொது ஏலம்மூலம் அருகிலுள்ள உள்நாட்டு மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் அப்பகுதி மீனவர்கள் மீன் வளர்த்து பயன் பெற்று வருகின்றனர்.

**95—**

### மீன் வளர்ப்பு

**வினா எண் 4207—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரில் உக்கடம் குளத்தில் விரால் மீன்கள் அதிக அளவில் வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகரில் உக்கடம் குளத்தில் விரால் மீன் குஞ்சுகளை வியாபார ரீதியில் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் முழுமையாக வளர்ச்சியடையாததால் இம்மீன்களை அதிக அளவில் இருப்பு செய்து வளர்க்க சாத்தியக்கூறுகள் இல்லை.



2007 ஜனவரி 24]

**96—**

### புதிய இரகங்கள்

**வினா எண் 4134—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் பட்டுத் துணிகளைத் தயார் செய்யும்போது புதிய இரகங்களை அறிமுகம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் பட்டுத் துணிகளில் சரிகை அதிகம் இல்லாத வகையில் ஒரு புதிய இரகமும், பட்டுத் துணியில் எம்பிராய்டரி, பிரிண்டிங் முதலியவைகளைச் செய்து தற்போதைய சூழ்நிலையில் மக்கள் விரும்பும் வண்ணம் புதிய இரகங்கள் அறிமுகம் செய்யப்பட்டு விற்பனையும் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**97—**

### சிறு தொழில்கள்

**வினா எண் 4135—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கதர் நூல் தயார் செய்யும் சிறுதொழில்களை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் நிலவிவரும் ஈரப்பதமான சீதோஷ்ண நிலை நூல் நூற்புக்கு உகந்ததாக இருக்காது. எனவே, வால்பாறை

தொகுதியில் கதர் நூல் தயார் செய்யும் சிறுதொழில்கள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

98—

**விற்பனைப் பணியாளர்கள்**

**வினா எண் 4138—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் நூல் தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு பெண்களை அதிக எண்ணிக்கையில் ஈடுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) கதர் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அலகுகளில் நூற்பாளர்கள், நெசவாளர்கள் மற்றும் விற்பனைப் பணியாளர்களாக சுமார் 12,500 பெண்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது மேற்கொண்டு பெண்களை ஈடுபடுத்த "சுருதி திட்டத்தின்" கீழ் இராட்டைகள், தறிகள்மூலம் கதர் நூல் மற்றும் கதர் துணிகள் உற்பத்தி அதிகப்படுத்தும் திட்டம் உள்ளது. இத்திட்டத்தில் மேலும் 500 பெண்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மேலும், சுருதித் திட்டத்தின்கீழ், இராட்டைகள், தறிகள் கொள்முதல் செய்ய மைய அரசிடமிருந்து நிதியுதவி பெறப்பட்டதும் கூடுதல் பெண்கள் இத்திட்டத்தில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

99—

**நூல் தூற்புப் பணி**

**வினா எண் 4614—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில், கதர் நிறுவனங்களில் நூற்கும் நூல் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 29 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்படுகின்றன. இந்நூற்பு நிலையங்களுக்கு தற்போது தட்டுப்பாடின்றி பஞ்சு பட்டை, மும்பை கதர் ஆணைக் குழு மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, நூல் நூற்புப் பணி தொய்வின்றி நடைபெற்று வருகிறது. இதனால் நூல் தட்டுப்பாடு ஏதும் ஏற்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

100—

**காந்தியடிகளின் திருவுருவச் சிலை**

**வினா எண் 4617—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரில் உள்ள கதர் அங்காடி வளாகத்தில் நுழைவாயிலில் அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலையை வைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) கோவை கதரங்காடியின் மாடியில் அண்ணல் காந்தியடிகளின் அருங்காட்சியகம் நிறுவப்பட்டுள்ளது. இதனில் காந்தியடிகளின் திருவுருவச்சிலை இடம் பெற்றுள்ளது. கதரங்காடியின் நுழைவாயிலின் முன்பகுதி சாலைப் பகுதியாக இருப்பதால் காந்தியடிகளின் திருவுருவச் சிலை அமைப்பது உகந்ததாக இருக்காது. எனினும், காந்தியடிகளின் திருவுருவப்படம் கதரங்காடியின் முகப்பில் இடம் பெற்றுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2007 ஜனவரி 24

## இரண்டாவது பட்டியல்

1—

### தனி வலைதளம்

**வினா எண் 403—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகரிலுள்ள அனைத்து இணையதள மையங்களையும் காவல் துறை கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கும் தனி வலைதளம் தொடங்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கோயம்புத்தூர் மாநகரிலுள்ள அனைத்து இணையதள மையங்களையும் காவல் துறை கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கும் தனி வலைதளம் எதுவும் தொடங்கப்படவில்லை.

2—

### காவல் துறையை நவினப்படுத்துதல்

**வினா எண் 2874— திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆம். இவ்வாண்டில் (2006-2007) காவல் துறையை நவீனப்படுத்துதலுக்காக ரூபாய் 68 கோடிக்கான திட்டம் உள்ளது.

3—

### இலஞ்ச ஒழிப்புப் பிரிவை விரிவுபடுத்துதல்

**வினா எண் 3321—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 24]

கோவை மாவட்ட காவல் துறையின் இலஞ்ச ஒழிப்புப் பிரிவை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்பொழுது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, கோயம்புத்தூர் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையே போதுமானதாகக் கருதப்படுவதால், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, கோவை பிரிவை மேலும் விரிவுபடுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை.

D Y211,31'P07 P07.19.3

4—

### மின் இணைப்பு

**வினா எண் 1453—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமானூர் ஒன்றியம், திருமானூர், திருமழபாடி, கீழப்பழுவூரிலுள்ள விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

ஒவ்வொரு வருடமும் அரசு நிர்ணயிக்கும் குறியீட்டிற்குத் தகுந்தவாறு, பதிவு மூப்பு அடிப்படையில், வரிசைப்படி, சாதாரண வரிசையில் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் விருப்பப்பட்டால் நீண்ட நாள் காத்திராமல் விரைவில் விவசாய மின் இணைப்பு பெறும் பொருட்டு, சுயநிதித் திட்டங்களின்கீழ் விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நிலுவையிலுள்ள அனைத்துப் பிரிவுகளையும் சார்ந்த விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 5,26,742 ஆகும். விவசாய மின் இணைப்புகள் ஒவ்வொரு ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் குறியீட்டின்படி விண்ணப்பங்களின் பதிவு மூப்பு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

சாதாரண வரிசையில் பதிவு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் வாரியமே அனைத்து மதிப்பீட்டுச் செலவுகளையும் ஏற்று மின் இணைப்பு வழங்குகிறது.

227483 Chennai-600 008

மகளிருக்கான தாட்கோ திட்டத்தில், தாட்கோ, வாரியத்திற்கு ஒரு மின் இணைப்பிற்கு ரூ.10,000/– வழங்குகிறது. மற்ற அனைத்து மதிப்பீட்டு செலவினங்களையும் வாரியம் ஏற்கிறது.

மேலும், சிறப்பு திட்டங்களான ஜீவன்தாரா திட்டம் மற்றும் உடல் ஊனமுற்றோர், விதவைகள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருக்கு முன்னுரிமை அளித்து வாரியமே அனைத்து மதிப்பீட்டுச் செலவினங்களையும் ஏற்று சிறப்பு முன்னுரிமையில் மின் இணைப்பு வழங்குகிறது.

விவசாயிகளுக்கு விரைவில் மின் இணைப்பு கிடைக்கும் பொருட்டு, விவசாயிகளின் விருப்பத்தின்பேரில் சுயநிதித் திட்டங்களின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

5—

### மின் கம்பங்கள் சரிசெய்தல்

**வினா எண் 2596—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், இருங்குன்றம்பள்ளி கிராமத்தில் பிரதான சாலையிலுள்ள மின் கம்பங்களை சரி செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், இருங்குன்றம்பள்ளி கிராமத்தில் பிரதான சாலையிலுள்ள மின் கம்பங்களில் ஆறு மின் கம்பங்கள் மாற்றப்பட்டுள்ளன. இரண்டு மின் கம்பங்கள் விரைவில் மாற்றப்படும்.

6—

### மின் இணைப்பு

**வினா எண் 2805—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன் புதூர் சிறப்பு ஊராட்சி, டான்னாமேடு குடியிருப்பு, குடிசை வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒரு வீடு ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ், 250 சதுர அடிக்கு மிகாமல் இருக்கும் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் (2006–2007) குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன் புதூர் சிறப்பு ஊராட்சி, டான்னாமேடு பகுதியிலிருந்து குடிசை வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.

விண்ணப்பம் பெறப்படின், வாரிய விதிமுறைப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

### மின்கம்பிகள் மாற்றியமைத்தல்

**வினா எண் 3425—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதியில் வீடுகளுக்கு மேலாக செல்லும் மின் கம்பிகளை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

பள்ளிப்பட்டு தொகுதியில் வீடுகளுக்கு மேல் செல்லும் உயர் அழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் கம்பிகளை மாற்றியமைக்க மதிப்பீட்டுத் தொகையினை செலுத்த சம்மதம் தெரிவித்து, பதிவுக் கட்டணம் ரூ.500 செலுத்தி விண்ணப்பம் செய்தால், வாரிய விதிமுறைகளின்படி

மதிப்பீட்டுத் தொகையை செலுத்திய பின்னர், மேற்படி மின் கம்பிகளை மாற்றியமைக்க ஆவன செய்யப்படும்.

8—

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 3635—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்ட கவுண்டம்பட்டி ஊராட்சி, ஆணை கவுண்டம்பட்டி பகுதியில் புதிய மின் கம்பம் அமைத்து தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்ட கவுண்டம்பட்டி ஊராட்சி, ஆணை கவுண்டம்பட்டி பகுதியில் புதிய மின் கம்பம் அமைத்து, தெரு விளக்கு அமைக்கக் கோரி எவ்வித மனுவும் நிலுவையில் இல்லை. விண்ணப்பம் பெறப்பட்டு, தேவையான மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டவுடன், வாரிய விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இப்பகுதியில் ஏற்கெனவே 24 தெரு விளக்குகள் (5 மின் இணைப்புகள்) ஒளிர்விக்கப்பட்டுள்ளன.

9—

## அணையின் தடுப்பு

**வினா எண் 6957—திரு. வை. காவேரி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டிக்கும், நெருஞ்சிப்பேட்டைக்கும் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே மின்சாரம் தயாரிக்க நீர்த்தேக்கத்திற்குக் கட்டப்பட்டுள்ள அணையின் தடுப்பு (Barrage 2) இரவு நேரத்திலும் திறக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

மேட்டூர் புனல் மின் குழுமத்தில் நான்கு கதவணை மின் நிலையங்கள் உள்ளன. இந்தக் கதவணை மின் நிலையங்கள், விவசாயத்திற்கு நீர் திறந்து விடப்படும்போது, மின் உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாடு அரசு விவசாயிகளின் தேவைக்கேற்ப மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட பொதுப் பணித் துறைக்கு உத்தரவிடுகிறது. இந்த உத்தரவின்பேரில் மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்து விடப்படுகின்றது. அந்த நீர் மேட்டூர் அணை மற்றும் மேட்டூர் சுரங்க மின் நிலையங்களில் மின்சாரம் தயாரித்தப் பிறகு கதவணை மின் நிலையங்களை வந்தடைகின்றது. கதவணையின் நீர் மட்டத்தினை பொறுத்து, மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, நீர் வெளியேற்றப்படுகின்றது. இதைப்போலவே, அடுத்தடுத்துள்ள கதவணை மின் நிலையங்களும் செயல்படுகின்றன. இந்தக் கதவணை மின் நிலையங்கள் இரவுப் பகலாகச் செயல்படுகின்றன. இந்தக் கதவணை மின் நிலையங்கள் மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்படும்போது மட்டும் இரவு பகலாகச் செயல்படும்.

10—

## மின்மாற்றிகள் பழுது பார்த்தல்

**வினா எண் 7942—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் விவசாயத்திற்கு அமைக்கப்பட்டிருக்கும் மின்மாற்றிகளை உடனுக்குடன் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் விவசாயத்திற்கு அமைக்கப்பட்டிருக்கும் மின்மாற்றிகளில் பழுது ஏற்படும்போது, உடனடி நடவடிக்கையாக அருகில் உள்ள மின்மாற்றிமூலம், மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து, பண்டகசாலையில் நல்ல நிலையில் உள்ள

[2007 ஜனவரி 24

மின்மாற்றியை பழுதடைந்த மின்மாற்றிக்குப் பதிலாக உடனுக்குடன் நிறுவப்பட்டு, சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. பழுதடைந்த மின்மாற்றிகள் சிறப்பு பராமரிப்புப் பிரிவிற்குக் கொண்டு செல்லப்பட்டு, சிறப்பு பராமரிப்புப் பிரிவிலோ அல்லது ஒப்பந்தக்காரர்கள் மூலமாகவோ, விரைவில் சரி செய்யப்பட்டு, பண்டகசாலையில் தயார் நிலையில் வைத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

11—

**சாக்கடை வசதி**

**வினா எண் 447—திரு. பி. பலராமன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொன்னேரி தொகுதி, பாடியநல்லூர் ஊராட்சியில் பாதாளச் சாக்கடை வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*பாடியநல்லூர் ஊராட்சியில் பாதாளச் சாக்கடை வசதி ஏற்படுத்த போதுமான நிதி ஆதாரம் இவ்வூராட்சியில் இல்லை.*

12—

**சர். பி.ட்டி. தியாகராயர் அரங்கை திறத்தல்**

**வினா எண் 452—திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை, தியாகராய நகரில் தற்போது உபயோகப் படுத்தப்படாமல் உள்ள சர். பி.ட்டி. தியாகராயர் அரங்கைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?*



2007 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) சர். பி.ட்டி. தியாகராயர் கலை அரங்கத்தில் மின் கசிவு மூலம் ஏற்பட்ட விபத்தினால் தற்காலிகமாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்படாமல் இருந்தது. பின்னர், பொது மக்களின் வசதிக்காக கலை அரங்கத்தின் இரண்டாவது தளத்தில் புதிய சமையல் மற்றும் உணவு அறை ரூ.13,80,000/- திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. மேலும், மின் கசிவினால் சேதமுற்ற மின் இணைப்புகள் ரூ.3,67,500/- மதிப்பீட்டிலும், சேதமுற்ற பழைய கட்டடத்தை ரூ.4,92,000/- மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.*

*(ஆ) புதிய வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட சர். பி.ட்டி. தியாகராயர் கலை அரங்கம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 19-7-2006 அன்று திறந்து வைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.*

13—

**கழிப்பறைகள் கட்டுதல்**

**வினா எண் 642—திரு. ஆர். ஞானதாஸ்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சிவகாசி தொகுதியில் கிராமப்புறங்களிலும், நகர்ப் புறங்களிலும் பெண்களுக்கு தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறைகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*சிவகாசி தொகுதிக்குட்பட்ட சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் உள்ள 54 ஊராட்சிகளில், 67 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் கழிப்பிடம் தேவை அதிகம் உள்ளதும், சிவகாசி நகர்ப்புறத்தை ஒட்டியுள்ளதுமான ஊராட்சிகளில் ஏற்கெனவே கீழ்க்கண்ட விவரப்படி ஒன்றுக்கு மேற்பட்ட வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன.*

[2007 ஜனவரி 24

**சிவகாசி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கழிப்பிடம் கட்டப்பட வேண்டிய விவரம்**

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள வளாகங்களின் எண்ணிக்கை | மேலும் கட்டப்பட வேண்டிய கழிப்பிடங்களின் எண்ணிக்கை | உத்தேச மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | அனையூர் | 3 | 1 | 2.25 |
| 2. | அனுப்பன்குளம் | 4 | 1 | 2.25 |
| 3. | பள்ளப்பட்டி | 3 | 1 | 2.25 |
| 4. | மங்களம் | 2 | 1 | 2.25 |
| 5. | நாரணாபுரம் | 2 | 1 | 2.25 |
| 6. | விஸ்வநத்தம் | 3 | 1 | 2.25 |
| 7. | செங்கமல நாச்சியார்புரம் | 2 | 1 | 2.25 |
| 8. | சித்துராஜபுரம் | 2 | 1 | 2.25 |
| | மொத்தம் | 21 | 8 | 18.00 |

மேற்கண்ட ஊராட்சிகளில் மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள பகுதிகளாகவும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ளவையாகவும் இருப்பதால், கூடுதலாக 8 கழிப்பிடங்கள் கட்டப்பட வேண்டியுள்ளன.

சிவகாசி நகராட்சிப் பகுதியைப் பொறுத்தவரை, ஏற்கெனவே 52 கழிப்பிடங்கள் கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. அங்கு கீழ்க்கண்ட இடங்களில் கூடுதலாகக் கழிப்பிடங்கள் கட்டப்பட வேண்டியுள்ளன. போதிய இடவசதியும் உள்ளது.



2007 ஜனவரி 24]

**சிவகாசி நகராட்சியில் கழிப்பிடம் கட்டப்பட வேண்டிய விவரம்**

| வ. எண் | கழிப்பிடம் கட்டப்பட வேண்டிய பகுதி தொகை (ரூ. இலட்சத்தில்) | உத்தேச மதிப்பீட்டுத் |
|---|---|---|
| 1. | வார்டு 1, காமராஜபுரம் காலனி | 4.00 |
| 2. | வார்டு 5, பராசக்தி காலனி, ஆதி திராவிடர் பகுதி அருகில் | 4.00 |
| 3. | வார்டு 6, பராசக்தி காலனி, சி.என். அண்ணாதுரை ரோடு | 4.00 |
| 4. | வார்டு 9, ஞானகிரி ரோடு - கருந்தி பள்ளி அருகில் | 4.00 |
| 5. | வார்டு 18, ஓடைத் தெரு | 4.00 |

எனவே, சிவகாசி கிராமப் பகுதிகளில் கூடுதலாக 8 கழிப்பிடங்களும், சிவகாசி நகர்ப்புறத்தில் கூடுதலாக 5 கழிப்பிடங்களும் கட்டப்பட வேண்டியுள்ளன. 2006-2007 ஆம் ஆண்டு சுகாதாரத் திட்டம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிவகாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால், மேற்கண்ட இடங்களில் கழிப்பிடம் கட்டப்படும்.

14—

## கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 895—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி ஊராட்சி, புதுக்காலனியிலுள்ள பழுதடைந்த தார்ச் சாலைக்குப் பதிலாக கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி புதுக்காலனியில் உள்ள சாலைகளில் 6 சாலைகளுக்கு ஏற்கெனவே கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள 2 சாலைகளுக்கு ரூ.2.00 இலட்சம் நிதி தேவைப்படும். நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப கான்கிரீட் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**15—**

## தெரு விளக்குகள்

**வினா எண் 910—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, தென்சங்கம்பாளையம் ஊராட்சிக்குத் தேவையான தெரு விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, தென்சங்கம்பாளையம் ஊராட்சியில், தற்போது போதுமான அளவில் உள்ள தெரு விளக்குகள் நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

**16—**

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 947— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சிப் பள்ளிக்கு போதுமான தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெத்தநாயக்கனூர் ஊராட்சியில் தற்போது போதுமான அளவில் தெரு விளக்குகள் நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

**17—**

## நீர் உந்து நிலையங்களில் ஜெனரேட்டர் பொருத்துதல்

**வினா எண் 1163 — திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி நாங்குனேரி திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குட்பட்ட பத்தமடை, சிங்கிகுளம், மறுகால்குறிச்சி, நாங்குனேரி, பெருமாள் நகர், பாப்பாடி, சமூகரெங்கபுரம், ராதாபுரம், சடக்கன்குளம், தெற்கு விஜயநாராயணம், திசையன்விளை, சண்முகபுரம், விஜயபாதி, திருவம்பயாபுரம், ஆவரை குளம், கூட்டப்புளி, மன்னார்புரம் விலக்கு I, பட்டாரகட்டிவளை, மன்னார்புரம் விலக்கு II, இட்டமொழி, குமாரபுரம், பரதர் உவரி ஆகிய இடங்களில் உள்ள தரைமட்ட நீர் உந்து நிலையங்களில் ஜெனரேட்டர் பொருத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திசையன்விளை நாங்குநேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பத்தமடையில் தலைமைப் பணியிடமும், 7 இடங்களில் பிரதான நீர் உந்து நிலையங்களும் மற்றும் 12 இடங்களில் சிறிய நீர் உந்து நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

2. பத்தமடை தலைமை நீர் உந்து நிலையத்தில் உயர் அழுத்த மின்சார இணைப்பு பெறப்பட்டுள்ளதால் இங்கு ஜெனரேட்டர் வசதி தேவையில்லை.

[2007 ஜனவரி 24

3. சிங்கிகுளம், மாவடி தெற்கு விஜயநாராயணம், சமூகரெங்கபுரம், திசையன்விளை, இராதாபுரம் மற்றும் வடக்கன்குளம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பிரதான 7 நீருந்து நிலையங்களுக்கு தனி மின் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மின்தடுப்பான் அமைக்கும் பணி மின் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி முடிவுற்றவுடன், தனி மின்பாதை மூலம் மேற்கூறிய 7 இடங்களில் சீரான மின்சாரம் கிடைக்கும் என்பதால், இயங்கும் ஜெனரேட்டர் தேவையில்லை.

4. மீதமுள்ள 12 சிறிய நீர் உந்து நிலையங்களிலும், தனி மின்பாதை அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு விரைவில் மின் வாரியம்மூலம் தனி மின்பாதை அமைக்கப்பட உள்ளது. எனவே, இந்த 12 இடங்களிலும் உள்ள நீர்உந்து நிலயங்களில் தனி மின்பாதை அமைத்து, சீரான மின்சாரம் கிடைக்கும் என்பதால் இயங்கும் ஜெனரேட்டர் நிறுவத் தேவையில்லை.

**18—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 1165—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை சிறப்பு சிற்றூராட்சிப் பகுதியில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2001 ஆம் வருட கணக்கெடுப்பின்படி திசையன்விளை பேரூராட்சியின் மக்கள் தொகை 19,559 ஆகும். ஏற்கெனவே திசையன்விளை பேரூராட்சியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மொத்த கொள்ளளவு 8.00 இலட்சம் லிட்டர் ஆகும். தேவைப்படும் கொள்ளளவைவிட தற்போதுள்ள மொத்த கொள்ளளவு அதிகமாக இருப்பதால், மேலும் ஒரு 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய தேவை இல்லை.



2007 ஜனவரி 24]

**19—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 1166—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி சிறப்புநிலை சிற்றூராட்சிப் பகுதியில் புதிதாக 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2001 ஆம் வருட கணக்கெடுப்பின்படி, பணகுடி பேரூராட்சியின் மக்கள் தொகை 25,442 ஆகும். ஆனால், ஏற்கெனவே பணகுடி பேரூராட்சியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மொத்த கொள்ளளவு 12.00 இலட்சம் லிட்டர் ஆகும். தேவைப்படும் கொள்ளளவைவிட தற்போதுள்ள மொத்த கொள்ளளவு அதிகம். எனவே, மேலும் ஒரு 5.00 இலட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**20—**

## புதிய குடிநீர்த் திட்டம்

**வினா எண் 1168—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் ஊராட்சி, மறவர் குடியிருப்பு, பழவூர் புது காலனி, தெற்கு கருங்குளம் ஊராட்சி சங்கனாபுரம் கிராமம், இந்திரா காலனி, காந்தி நகர் நாடார் குடியிருப்பு, ஆவரைகுளம் ஊராட்சி, சிவஞானபுரம் முதலிய கிராமங்களில் நீராதாரத்துடன் கூடிய புதிய குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

[2007 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், பழவூர் ஊராட்சியில், வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மறவர் குடியிருப்பு மற்றும் பழவூர் புது காலனி ஆகியவை தனி குடியிருப்புகளாக இல்லாமல் பழவூர் மற்றும் கே.சி. பழவூர் ஆகிய குடியிருப்புகளின் விரிவாக்கப் பகுதியாக உள்ளன. பழவூர் மற்றும் கே.சி. பழவூர் ஆகிய குடியிருப்புகளில் நடப்பு நிதியாண்டில் புதிய நீராதாரத்துடன் கூடிய தனி மின்விசைத் திட்டங்கள் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இரண்டு கிராமங்களில் திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது, மறவர் குடியிருப்பு மற்றும் பழவூர் புது காலனி ஆகிய விரிவாக்கப் பகுதிகளும் பயன்பெறும்.

2. ஆவரைகுளம் ஊராட்சி, சிவஞானபுரம் குடியிருப்பிலும் நடப்பு நிதியாண்டில் புதிய நீராதாரத்துடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

3. தெற்கு கருங்குளம் ஊராட்சியிலுள்ள சங்கனாபுரம் குடியிருப்பில் அதன் மக்கள்தொகைக்கேற்ப 60,000 லிட்டர் மேல்நிலை தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதால், கூடுதலாக குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

4. மேலும், வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்திரா காலனி, காந்தி நகர் நாடார் குடியிருப்பு ஆகியவை மறு ஆய்வின்படி தனிக் குடியிருப்புகளாக இல்லாமல், முழுமையான குடிநீர் வசதி பெற்றுள்ள சங்கனாபுரம் குடியிருப்பின் விரிவாக்கப் பகுதிகளாக உள்ளதால், இப்பகுதிகளுக்கு என்று தனியாக குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**21—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 1491—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 24]

கிருஷ்ணராயபுரம் தொகுதியிலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொகுதியின் அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா?

**விடை**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கிருஷ்ணராயபுரம், கடவூர் மற்றும் வையம்பட்டி ஒன்றியங்களைச் சார்ந்த 541 குடியிருப்புகளுக்கான காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்கெனவே வடிவமைக்கப்பட்டு, இத்திட்டத்தினை 5/2007-ல் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் கிருஷ்ணராயபுரம் தொகுதியைச் சேர்ந்த கடவூர் ஒன்றியத்தில் உள்ள 249 குடியிருப்புகளுக்கும், கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த 20 குடியிருப்புகளுக்கும் காவிரி குடிநீர் வழங்கப்படும். இத்தொகுதியின் மற்ற பகுதிகள் முழுமையாகவும், பகுதியாகவும் குடிநீர் வசதி பெற்றுள்ளதால், இத்திட்டத்தினை அப்பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**22—**

## தெரு விளக்குகள்

**வினா எண் 1585—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, நாரணம்பாளையம் ஊராட்சி, கணக்கிச்சிகாடு, எழும்பாகவுண்டர் வட்டம், தங்கவேல் வட்டம், முனியப்பன் கோவில் வட்டம், சோரையான்காடு, அண்ணா நகர், கிருஷ்டியன் தெரு, கரடியான்குட்டை சின்னபையன் வட்டம் ஆகிய பகுதிகளில் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துக் கொடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், நாரணம்பாளையம் ஊராட்சியிலுள்ள மேற்படி 9 குக்கிராமங்களிலும்

தெரு விளக்கு வசதி உள்ளது. நாரணம்பாளையம் ஊராட்சிக்கு ஒதுக்கப்படும் மாநில நிதிக் குழு மானியத் தொகையானது நிர்வாகச் செலவினங்களுக்குச் செலவிடவே சரியாக உள்ளது. கூடுதல் தெரு விளக்குத் தேவைப்படும் பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் 2007-2008 ஆம் ஆண்டில் படிப்படியாக கோரிக்கை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

**23—**

**பொதுக் கழிப்பிடம் கட்டுதல்**

**வினா எண் 1783—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் அங்கலக்குறிச்சி ஊராட்சியில் நான்கு முனை சுங்கம் சந்தைப்பேட்டையில் பொதுக் கழிப்பிடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அங்கலக்குறிச்சி ஊராட்சி நான்கு முனை சுங்கம் சந்தைப்பேட்டையில் பொதுக் கழிப்பிட வசதி அமைக்க போதிய இடவசதி இல்லை.

**24—**

**கூடுதலாக துப்புரவுத் தொழிலாளர்கள் நியமித்தல்**

**வினா எண் 2376—திரு. க.ப. வேலுமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, குனியமுத்தூர் மற்றும் குறிச்சி ஆகிய நகராட்சிகளில் கூடுதலாகத் துப்புரவுத் தொழிலாளர்களை பணியமர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அரசின் தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதற்கேற்ப, கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள குனியமுத்தூர் மற்றும் குறிச்சி ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிகளில் காலியாக உள்ள துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை, நியமன விதிகளைக் கடைபிடித்து பூர்த்தி செய்துகொள்ள செயல் அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**25—**

**தெரு விளக்குகள்**

**வினா எண் 2415—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், கம்பலாபட்டி ஊராட்சி கோடங்கிபட்டி கிராமம், ஆதி திராவிடர் தெற்கு தெரு குடியிருப்பு, கோடங்கிப்பட்டி பள்ளிக்கூடம் எதிரில் குங்குலிகவுண்டர் கிராமம், அரசூர் கிராமம் ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கம்பலாபட்டி ஊராட்சியில் தற்போது போதுமான அளவில் உள்ள தெரு விளக்குகள், நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

**26—**

**கான்கிரீட் சாலை அமைத்தல்**

**வினா எண் 2435—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், கம்பலாபட்டி ஊராட்சி, கோபால் வீடு முதல் சிவகாமி வீடு வரை கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் கம்பலாபட்டி ஊராட்சியில் கோபால் வீடு முதல் சிவகாமி வீடு வரை கான்கிரீட் பாதை அமைக்க ரூ.2.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. இப்பணியை எடுத்துச் செய்ய தற்போது ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

**27—**

### கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 2436—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், கம்பலாபட்டி ஊராட்சி, கோடங்கிபட்டி கிராமம், கோபால் வீடு முதல் கடையன் வீடு வரை, மாணிக்கம் வீடு முதல் திருமலைசாமி வீடு வரை, மதுரைவீரன் கோயில் முன்பு, செந்தூர பாண்டியன் வீட்டுச்சாலை, ஆதி திராவிடர் காலனி மற்றும் மணிகண்டன் வீடு வரை கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் கம்பலாபட்டி ஊராட்சியைச் சேர்ந்த கோடங்கிபட்டி கிராமத்தில் 4 கான்கிரீட் சாலைகள் அமைக்க ரூ.10.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. மேற்படி பணியினை எடுத்துச் செய்ய தற்போது ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.



**28—**

### மகளிர் துப்புரவு வளாகம் கட்டுதல்

**வினா எண் 2447—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கம்பலாபட்டி ஊராட்சி, பாரமடையூர் கிராமத்தில் மகளிர் துப்புரவு வளாகம் ஒன்றை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் கம்பலாபட்டி ஊராட்சி, பாரமடையூர் கிராமத்தில் மகளிர் துப்புரவு வளாகம் கட்ட போதிய வசதி இல்லை.

**29—**

### தெரு விளக்கு

**வினா எண் 3247—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நன்னிலம் ஒன்றியம், கீழ்குடி ஊராட்சியிலுள்ள வீராக்காணம் தெற்கு காலனிக்கு மின்சாரம் வழங்கி தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரம், வீராக்காணம் ஆதி திராவிடர் காலனி புதியதாக தோற்றுவிக்கப்பட்டு 27 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்த காலனி கீழ்குடி மெயின் ரோட்டிலிருந்து

பிரிந்து செல்கின்றது. 27 குடும்பங்கள் வசித்து வருகின்றன. சிமெண்ட் சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு இரண்டு மின் கம்பங்கள் நடப்பட்டு இரண்டு மின் ஒயர்கள் செல்கின்றன. இதில் தெரு விளக்கு எரியவிட இயலாது. மொத்தம் நான்கு ஒயர்கள் தேவை. மேலும், இப்பகுதிக்கு புதியதாக நான்கு மின் விளக்கு கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும். மேலும், இந்த ஊராட்சி மிகவும் நலிவுற்ற ஊராட்சியாகும். இச்செலவினம் மேற்கொள்ள ஊராட்சியில் நிதி இருப்பு இல்லை. இருப்பினும் ஊராட்சி மூலமோ, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சிறப்பு அனுமதி பெற்றோ இந்த நிதியாண்டில் விரைவில் இப்பணி முடிக்கப்படும்.

**30—**

## தெரு விளக்குகள்

**வினா எண் 3486—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், சோமந்துறை ஊராட்சியில் பழுது அடைந்துள்ள தெரு விளக்குகளைச் சரி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : சோமந்துறை ஊராட்சியில் தெரு விளக்குகள் தற்பொழுது பழுது நீக்கம் செய்யப்பட்டு புதிய தெரு விளக்குகள் போடப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**31—**

## சமையல் அறை கட்டுதல்

**வினா எண் 3496—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், ரமணமுதலிபுதூர் ஊராட்சியில் சமுதாய நலக் கூடத்திற்கு சமையல் அறை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : வால்பாறை தொகுதியில், ரமணமுதலிபுதூர் ஊராட்சியில் சமுதாய நலக் கூடத்திற்கு சமையல் அறை கட்டுவதற்கு உரிய நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்ற பின்னர் சமையலறை கட்டடம் கட்டப்படும்.

**32—**

## குளம் சீர் செய்தல்

**வினா எண் 3573—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி, பாண்டூர் கொல்லமேட்டில் உள்ள குளத்தினைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2006–2007 ஆம் ஆண்டில் எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தில் குளத்தினைச் சீர்செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

**33—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 3615—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, கோவிந்தா கவுண்டனூர் பகுதி, தீவட்டிப்பட்டி ஊராட்சி, தாசசமுத்திரம்-கோடப்பட்டரை, நைனாக்காடு-சிற்றூராட்சி, கே. மோரூர் ஊராட்சி, கரடிகுண்டு பகுதி, கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, சின்னாண்டிபட்டி பகுதி-கலர்காடு ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, கோவிந்தா கவுண்டனூர் செல்லும் சாலை ஏற்கெனவே தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. தீவட்டிப்பட்டி ஊராட்சி, தாசசமுத்திரம், கோணம்பட்டி., நைனாக்காடு செல்லும் பகுதிகள் பொது பணித் துறைக்கு சம்பந்தப்பட்ட ஏரிக்கரைப் பகுதிகளாகும். வேப்பிலை ஊராட்சி, கரடிகுண்டு பகுதிக்கு செல்லும் 2 கிமீ. தூரத்திற்கு தார்ச் சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு பெற்றதும் பணிகள் மேற்கொள்ளப்படும். கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, சின்னாண்டிபட்டி, கலர்காடு செல்லும் சாலை கிராமச் சாலைத் திட்டத்தில் பணி செயல்படுத்தத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**34—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 3620—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, பெரியாண்டிப்பட்டி-ஊமகவுண்டம்பட்டி, கணவாய்புதூர் ஊராட்சி, சின்னாகவுண்டனூர் இருப்புப்பாதை பாலம், ஜாலி கொட்டாய்வழி, ராமதாஸ் நகர் வரை, ஜாலி கொட்டாய்-மோரூர், காடையாம்பட்டி சிற்றூராட்சி 9-வது வார்டு நைனாகவுண்டர் பகுதி-கணவாய்புதூர் கிராமம் லேண்டு காலனி பகுதி N.H. சாலை-குளியாத்து கோம்பை ஏரி ஆகிய இடங்களில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, பெரியாண்டிப்பட்டி ஊராட்சி, கவுண்டம்பட்டி பகுதி சாலை





பட்டா நிலமாக உள்ளது. கணவாய்புதூர் ஊராட்சி, சின்னாகவுண்டனூர் இருப்புப் பாதை பாலம், ஜாலி கொட்டாய் வழி, ராமதாஸ் நகர் வரை உள்ள பகுதியும் பட்டா நிலமாக உள்ளது. ஜாலி கொட்டாய்-கே. மோரூர் சாலை தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. காடையாம்பட்டி சிற்றூராட்சி 9-வது வார்டு நைனாக்காட்டுப் பகுதி கிராமச் சாலைகள் திட்டத்தில் பணி செயல்படுத்தப்பட உள்ளது. கணவாய்புதூர் லேணடு காலனி சாலை பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தில் செயல்படுத்த முன்மொழிவு தயாரிக்கப்பட்டுள்ளது. குளியாத்து கோம்பை ஏரி செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைக்க நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**35—**

### கப்பிச் சாலை அமைத்தல்

**வினா எண் 3625—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கொல்லப்பட்டி ஊராட்சி, மூக்கரையான்காடு பகுதி, மூங்கில்பட்டி ஊராட்சி, வெள்ளாளப்பட்டி கோரிமேடு-கரும்பலைக்காடு ஆகிய இடங்களில் கப்பிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கொல்லப்பட்டி ஊராட்சி, மூக்கரையான்காடு பகுதி, மூங்கில்பட்டி ஊராட்சி, வெள்ளாளப்பட்டி கோரிமேடு-கரும்பலைக்காடு ஆகிய இடங்களில் கப்பிச் சாலை அமைக்க 2006-2007 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

36—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 3708— திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், காளிமேட்டூர், கணவாய்புதூர் லேண்டு காலனி பகுதி, கூ.குட்டப்பட்டி ஊராட்சி, மோனக்கரட்டூர் பகுதி, கொங்குபட்டி-குண்டுகாட்டூர் பகுதி, தின்னப்பட்டி சந்தை-கோட்டமேடு பிரிவு-பெரியவடகம்பட்டி மேல்நிலைப் பள்ளி-ரைஸ் மில், கூஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, புதுகுடியான் கொட்டாய் பகுதி ஆகிய பகுதிகளில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், காருவள்ளி ஊராட்சி, காளிமேட்டூர் பகுதியில் தார்ச் சாலை அமைக்க அகலமான இடவசதி இல்லை. கணவாய்புதூர் லேண்டு காலனி பகுதி, கூ.குட்டப்பட்டி ஊராட்சி மோனக்கரட்டூர் பகுதியில் சுமார் 2 கி.மீ. தூரம் தார்ச் சாலை அமைக்க போதிய நிதி வசதி இல்லை. கொங்குபட்டி ஊராட்சி, குண்டுகாட்டூர் பகுதிக்கு சாலை அமைக்க பட்டா நிலமாக உள்ளது. கூ.குட்டப்பட்டி ஊராட்சி, தின்னப்பட்டி சந்தை-கோட்டைமேடு பிரிவு பகுதிக்கு சாலை வசதி அமைக்க போதிய நிதி வசதி இல்லை. டேனிஷ்பேட்டை ஊராட்சி, மேல்நிலைப் பள்ளி, ரைஸ் மில் வரையும், கூஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, புதுகுடியான் கொட்டாய் ஆகிய பணிகளுக்கு தார்ச் சாலை அமைக்க போதுமான இடவசதிகள் இல்லை.

37—

## கான்கிரீட் சாலை அமைத்தல்

**வினா எண் 3715 – திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி கிராமம், தொட்டம்பட்டி அருந்ததியர் தெரு பகுதியில் மூன்று வீதிகள் தீர்த்தகவுண்டர் காட்டுவளவு ஊர் பகுதி தொட்டம்பட்டி பகுதி தெருக்கள் ஆகிய பகுதிகளில் கான்கிரீட் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி கிராமம், தொட்டம்பட்டி ஆதி திராவிடர் தெரு பகுதிகளுக்கு 2006-2007 ஆம் ஆண்டில், ஒன்றிய பொது நிதி மூலம் ரூ.75,000/- மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

38—

## கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 3718—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், நல்லூர் கிராமம், கொங்குப்பட்டி கிராமம், தொட்டம்பட்டி, அருந்ததியர் தெரு, மூன்று வீதிகள், கே. மோரூர் குப்பன் கொட்டாய் ஆகிய பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சி, நல்லூர் கிராமம், கொங்குப்பட்டி கிராமம், தொட்டம்பட்டி அருந்ததியர் தெரு மூன்று வீதிகள், கே. மோரூர் கிராமம் மற்றும் குப்பன் கொட்டாய் ஆகிய பகுதிகளுக்கு மற்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. வடிகால் வசதி அளிக்க ஊராட்சியில

தற்போது போதுமான நிதி வசதி இல்லை. 2007-2008 ஆம் நிதியாண்டில் போதிய நிதி வசதி கிடைக்கப்பெறின், முன்னுரிமை அடிப்படையில் கழிவுநீர்க் கால்வாய் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) 2007-2008 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில், மேற்படி பணிகள் மேற்கொள்ளப்படும்.

39—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 3735— திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், புளியம்பட்டி ஊராட்சி, நடுநிலைப் பள்ளி -குப்பாண்டியூர் பாதை மற்றும் கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி, ஆனைக்கவுண்டம்பட்டி ரமணி தோட்டம்-ஆண்டிக்கவுண்டம்பட்டி ஆகிய இடங்களுக்கு தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், புளியம்பட்டி ஊராட்சி, நடுநிலைப்பள்ளி குப்பாண்டியூர் பாதை மற்றும் கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி, ஆனைக்கவுண்டம்பட்டி ரமணி தோட்டம்-ஆண்டிக்கவுண்டம்பட்டி ஆகிய இடங்களுக்கு தார்ச் சாலை அமைக்க 2006 2007 ஆம் நிதியாண்டில் நிதி வசதிக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

## சமத்துவபுரம்

**வினா எண் 3868— திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், புது காருவள்ளி பகுதியில் சமத்துவபுரம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 69, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 4-7-2006-ல் முன்பு அமைக்கப்பட்டுள்ள சமத்துவபுரங்களை பழுது நீக்கி, சாலை, குடிநீர் மற்றும் தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கவும், வீடுகளைப் பழுது பார்க்கவும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதியதாக சமத்துவபுரம் அமைப்பது குறித்து தற்சமயம் ஏதும் நடவடிக்கை இல்லை.

41—

## குடிநீர் வசதி

**வினா எண் 3910—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், கம்பலாபட்டி ஊராட்சியில், பூவலப்பருத்தியூர் கிராமம், ரெட்டியார்மடம் குடியிருப்புப் பகுதி மற்றும் அரசூர் கிராமத்திற்குக் குடிநீர் குழாய்கள் அமைத்து போதுமான குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில், கம்பலாப்பட்டி ஊராட்சியில், பூவலப்பருத்தியூர் கிராமம், ரெட்டியார்மடம் குடியிருப்புப் பகுதி மற்றும் அரசூர் கிராமத்திற்குப் போதிய குடிநீர் வசதி உள்ளது.

[2007 ஜனவரி 24

அரசு நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறும் பட்சத்தில் இப்பகுதிகளுக்குக் கூடுதலாகக் குடிநீர்க் குழாய்கள் அமைத்து போதுமான அளவு குடிநீர் வசதி செய்து தரப்படும்.

**42—**

**சாலை வசதி**

**வினா எண் 4196—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம், வையம்பாளையம் அருகே வரதையங்கார்பாளையம்–குரும்பாளையம் ஆகிய பகுதிகளில் சாலை வசதி செய்து தர, அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் ஊராட்சி ஒன்றியம், குரும்பாளையம் முதல் வரதையங்கார்பாளையம் வரை உள்ள ஊராட்சி ஒன்றியச் சாலையை அமைக்க நெடுஞ்சாலைத் துறை மூலம் (ஊரகச் சாலைகள்) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளன.

**43—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 4565— திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மணலூர் முதல் அகரம் ஜோதிபுரம் சாலையை செப்பனிடவும், மேலச்சொரிக்குளம்–கீழச்சொரிக்குளம் பஞ்சாயத்து சாலையைத் தார்ச் சாலையாகவும் மாற்ற அரசு முன்வருமா?



2007 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மணலூரிலிருந்து ஜோதிபுரம் வரை செல்லும் சாலை (அகரம் வழி) கி.மீ. 0/0–4/6 கி.மீ. ஆகும். இதில் 0/0–2/0 வரை ராஷ்டிரிய சாம் விகாஸ் யோஜனா திட்டத்தில் 2004–2005 ஆம் ஆண்டில் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2.06 கி.மீ. தூரமுள்ள சாலையை ஓரடுக்கு மெட்டல் மற்றும் தார்ச் சாலையாக அமைக்க ரூ.18.00 இலட்சம் தேவைப்படும். இச்சாலையை 2006–2007 ஆம் ஆண்டு ராஷ்டிரிய சாம் விகாஸ் யோஜனா திட்டம் (Rashtriya Sam Vikas Yojana) அல்லது வேறு சிறப்புத் திட்டத்தில் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் கீழச்சொரிக்குளம், மேலச்சொரிக்குளம் வரை சாலை நீளம் 1.2 கி.மீ. ஆகும். கிராமச் சாலைத் திட்டத்தில் இச்சாலை ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இதன் நிலை 0.5 கி.மீ. மெட்டல் சாலையாகவும், 0.7 கி.மீ. தார் சேதமடைந்த நிலையில் உள்ளது. தற்போது இதனை ஓரடுக்கு மெட்டல் சாலை போட்டு தார்ச் சாலையாக மாற்றிட ரூ.5.00 இலட்சம் செலவாகும். எல்லாவிதமான பராமரிப்புப் பணிகளும், பழுதுபார்க்கும் பணிகளும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில் தடை செய்யப்பட்ட பணிகளாக இருப்பதால் மேற்படி திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலவில்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி மெட்டல் சாலைகளை தார்ச் சாலையாக உயர்த்துதலுக்கு அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 0.5 கி.மீ.-க்கு மெட்டல் சாலையை தார்ச் சாலையாக உயர்த்த சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்து தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். மீதமுள்ள 0.7 கி.மீ.க்கு தார்ச் சாலை நிதி நிலைமைக்கு ஏற்ப எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**44—**

**கான்கிரீட் சாலை மற்றும் சாக்கடை வசதி**

**வினா எண் 4745—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கணக்கம்பாளையம் ஊராட்சி, எம்.ஜி.ஆர். நகரில் சாக்கடை வசதி மற்றும் சாலையூர் கிராமத்தில் கான்கிரீட் சாலை மற்றும் சாக்கடை வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கணக்கம்பாளையம் ஊராட்சிக்கு சென்ற நிதியாண்டில் அனைத்து வசதிகளும் ரூ.1 கோடி செலவில் செய்து தரப்பட்டுள்ளன. சாலையூர் கிராமத்தில் இந்த நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டில் செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**45—**

## மண்சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா எண் 5412—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பாலக்கோடு ஒன்றியம், அடக்கம் கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்க, திம்மாபுரம்–பூங்காவனத்தான் நகரில் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திம்மாபுரம், பூங்காவனத்தான் நகரிலுள்ள 2 கி.மீ. சாலையில் 1 கி.மீ. சாலை ஒரடுக்கு ஜல்லி சாலையாக அமைக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 1 கி.மீ. சாலை மண் சாலையாக உள்ளது. 2006–2007 ஆம் ஆண்டிற்கான சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா திட்ட ஒதுக்கீடு முடிந்துவிட்டது. மேலும் ஒன்றிய பொது



நிதியிலும் போதுமான நிதி வசதி இல்லாததாலும் இப்பணியை தற்போது எடுத்துச் செய்ய சாத்தியமில்லை.

**46—**

## சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 8033—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, காரணை ஒன்றியம், முகையூர் ஒன்றியங்களிலுள்ள சாலைகளைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

முகையூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முகையூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் காரணை ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் இதுவரை பல்வேறு திட்டங்களின்கீழ் செப்பனிடப்பட்ட சாலைகள் போக மீதமுள்ள செப்பனிட வேண்டிய சாலைகளை 2006–2007 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**47—**

## பருத்தி உற்பத்தியை அதிகரித்தல்

**வினா எண் 7018—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழக அரசு, மாநிலத்தில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பருத்தி விதை பெருக்கத்

திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்திற்கென ரூ.5.00 இலட்சம், சான்று விதை உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தீவிர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.16.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேளாண்மை இடுபொருட்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இது தவிர, வேளாண்மைத் துறையினரால் விவசாயிகளுக்குப் பருத்தி சாகுபடி பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்துப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், கிராமக் கூட்டங்களிலும், முன்பருவ முகாம்கள், பணிமனை கூட்டங்கள் மூலமாகவும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

**48—**

## காட்டாமணக்கு சாகுபடி

**வினா எண் 7639— திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர், மேச்சேரி, ஓமலூர் பகுதிகளில் காட்டாமணக்கு சாகுபடியை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் சேலம் மாவட்டம், மேட்டூர், மேச்சேரி மற்றும் ஓமலூர் பகுதிகள் உட்பட 24 மாவட்டங்களில் காட்டாமணக்கு சாகுபடியை மேம்படுத்த அரசு ஆவன செய்து வருகிறது.

(ஆ) காட்டாமணக்கு சாகுபடியை மேம்படுத்த காட்டாமணக்குக் கன்றுகளை விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் வழங்கவும், 50 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனக் கருவிகள் வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்தவும், தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது. மேலும் வரும் 5 ஆண்டு காலத்திற்குள் தமிழகத்தில் 1 இலட்சம் எக்டேர் பரப்பில் காட்டாமணக்குப் பயிரைச் சாகுபடி செய்ய அரசு திட்டம் ஒன்றை



தீட்டி, 2006–2007 ஆம் நிதியாண்டிலேயே தொடங்கிடத் திட்டமிட்டுள்ளது.

**49—**

## அணையைத் தூர்வாருதல்

**வினா எண் 1618—திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பேச்சிப்பாறை அணையின் கொள்ளளவு, மண் அரிப்பு காரணமாகக் குறைந்து கொண்டு வருவதால், அணையினைப் பாதுகாத்து விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

பேச்சிப்பாறை அணையில் 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அணையின் உட்பகுதியில் மண் சரிந்து விழுந்துள்ளது. எனினும், பேச்சிப்பாறை அணையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, பயன்படுத்த முடியாத நீர் மட்டத்திற்குக்கீழ்தான் (Dead Storage of Water) வண்டல் மண் படிந்துள்ளது. இதனால் பயன்பாட்டிற்குரிய கொள்ளளவிற்கு (Useful Storage) அணையில் தண்ணீரை தேக்குவதால் பாதிப்பு ஏதும் இல்லை. எனவே, தற்போது தூர் வாரும் அவசியம் ஏதும் இல்லை.

**50—**

## பட்ட மேற்படிப்பு வகுப்புகள்

**வினா எண் 1442—திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளத்திலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் மகளிர் கல்லூரியில் பட்டமேற்படிப்பு பாட வகுப்புகள் (M.Com., M.Sc., M.A.) 2006–2007 ஆம் கல்வியாண்டில் தொடங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

இல்லை.

**51—**

## அரசு மகளிர் கல்லூரி

**வினா எண் 4589—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் அரசு மகளிர் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூரில் மகளிர் கல்லூரி ஆரம்பிப்பது குறித்தான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஒரு கோடி ரூபாய் நிதியும் 5 ஏக்கர் நிலமும் அந்த ஊர் மக்கள் கொடுத்தால் அங்கு கல்லூரி ஆரம்பிப்பது குறித்து தேவையின் அடிப்படையில் அரசு பரிசீலிக்கும்.

**52—**

## துணை போக்குவரத்து அலுவலகம்

**வினா எண் 951—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதியில் ஒரு துணை போக்குவரத்து அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப் பகுதியில், ஒரு துணை போக்குவரத்து அலுவலகம் (பகுதி அலுவலகம்) அமைப்பது தற்பொழுது



சாத்தியமில்லை. இருப்பினும், அனைத்து மக்களின் போக்குவரத்து வசதியைப் பூர்த்தி செய்யும்வகையில், தேவையான இடங்களில் புதிய போக்குவரத்து அலுவலகங்கள் அமைத்து பணியாற்றுவதென அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, உரிய காலத்தில் மலைவாழ் மக்களுக்கு முன்னுரிமை தந்து புதிய போக்குவரத்து அலுவலகம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**53—**

## விரைவுப் பேருந்து

**வினா எண் 1269—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதியில், திருமானூர்–சென்னை மற்றும் திருமழப்பாடி (வழி) திருமானூர்–சென்னை ஆகிய வழித்தடங்களில் அரசு விரைவுப் பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் திருமழப்பாடியிலிருந்து சென்னைக்கு திருமானூர், அரியலூர், பெரம்பலூர் வழியாக ஒரு இரவு நேரப் பேருந்து 15–7–2006 முதல் தினந்தோறும் இயக்கப்பட்டு வருகிறது.

**54—**

## பேருந்து வசதி

**வினா எண் 3595—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து அரங்கனூர் வரை, தாத்தியம்பட்டி காலனி, பெரியப்பட்டி வழித்தடத்தில் பேருந்து எண் 58A, 58 இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2007 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மூலமாக சேலத்தில் இருந்து ஓமலூர், செட்டிப்பட்டி, தாத்தியம்பட்டி, தாராபுரம், செம்மாண்டப்பட்டி வழித்தடத்தில் பெரியப்பட்டி மற்றும் அரங்கனூருக்கு தடம் எண் 58 மற்றும் 58A பேருந்துகள் மூலம் தினசரி 26 நடைகள் இயக்கப்படுகின்றன. இவ்வழித்தடத்தில் உள்ள தாத்தியம்பட்டி பேருந்து நிறுத்தத்தில் இருந்து தாத்தியம்பட்டி காலனி 1 கி.மீ. தொலைவில் உள்ளது. அரசு வழிகாட்டுதலின்படி பேருந்து வசதியுள்ள பிரதான சாலையில் இருந்து 1 கி.மீ. தூரம் வரையிலான பகுதிகள் அனைத்தும் பேருந்து வசதி பெற்றதாகவே கருதப்படுகிறது. மேலும் தடம் எண் 106 தடப் பேருந்து மூலம் ஓமலூரில் இருந்து தாத்தியம்பட்டி காலனி வரை பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

**55—**

## பேருந்து வசதி

**வினா எண் 3875—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பொம்மிடி வரை தடம் எண் 06 பேருந்தை கொங்காரப்பட்டி வழியாக இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தடம் எண் 06, தடம் ஓமலூர்–வே. கொங்காரப்பட்டி தட நீளம் 29.6. கி.மீ. மற்றும் வே. கொங்காரப்பட்டி–பொம்மிடி 22.6 கி.மீ. எனவே, ஓமலூர்–பொம்மிடி மொத்த தட நீளம் 52.2 கி.மீ. ஆகும். அரசு வழிகாட்டுதலின்படி நகரப் பேருந்துகளுக்கு அனுமதிக்கப்பட்ட தட நீளத்தைவிட அதிகமாவதால் 06 ஆம் எண் நகரப் பேருந்தினை நீட்டித்து இயக்க வழிவகையில்லை. இருப்பினும் கோரிக்கை வழித்தடத்தில் புறநகர் பேருந்து 2 மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.



2007 ஜனவரி 24]

(ஆ) இக்கேள்வி எழாது.

**56—**

## பேருந்து வசதி

**வினா எண் 3877—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி கிராமம், செல்லப்பிள்ளைகுட்டை காலனி வழியாக S.8A என்ற பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது சேலம்–ஓமலூர் தடத்தில் S.8A என்ற தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலப் பேருந்து, பூமிநாயக்கன்பட்டி கிராமப் பள்ளி மாணவர்கள் முத்துநாயக்கன்பட்டி கிராமப் பள்ளிக்குச் செல்லுமாறு இயக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கூறிய பேருந்தை செல்லப்பிள்ளைகுட்டை வழியாக மாற்றி இயக்கிட இயலாது. ஆயினும் தடம் எண் ஓ7 மற்றும் தடம் எண் 106–ன் மூலம சேலம்–ஓமலூர் வழி செல்லப்பிள்ளைகுட்டை தடத்தில் தினசரி 2 நடைகள் பள்ளி மாணவர்கள் பயனடையும்வகையில் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்வி எழாது.

**57—**

## பேருந்து வசதி

**வினா எண் 3878— திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூரிலிருந்து ஒண்டிவீரனூர் கிராமம் வரை செல்லும் 79, 97 எண் கொண்ட பேருந்தை பாரதிபுரம் அம்பேத்கர் நகர் வரை நீட்டிப்புச் செய்து இயக்க அரசு முன்வருமா?

[2007 ஜனவரி 24

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 6-7-2006 முதல் தடம் எண் 79 தடப் பேருந்தின் 4 நடைகள் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் பாரதிபுரம் அம்பேத்கர் நகர் வரை நீட்டிப்புச் செய்து இயக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இக்கேள்வி எழாது.

**58—**

## பேருந்து வசதி

**வினா எண் 4073—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலிருந்து வால்பாறையில் உள்ள பச்சமலைக்கு ஊசிமட்டம், சோலையாறு அணைப் பகுதி, ஷேக்கல்முடி குடியிருப்புப் பகுதி, பன்னீர்மேடு பங்களா பகுதி, ஹை பாரஸ்ட் குடியிருப்புப் பகுதி ஆகிய பகுதிகளுக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவையிலிருந்து இரு பேருந்துகள் வாயிலாக தினசரி 2 நடைகள் (single trips) நேரடியாக சோலையாறு டேம் மற்றும் ஷேக்கல்முடி பகுதிகளுக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட். பேருந்துகளை இயக்கி வருகிறது. கோவை-பொள்ளாச்சி பகுதியில் ஒவ்வொரு 2 முதல் 5 நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து வீதமும், பொள்ளாச்சி-வால்பாறை பகுதியில் சராசரியாக 20 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து வீதமும் பேருந்துகள் இயங்கி வருகின்றன. மேலும் வால்பாறையிலிருந்து பச்சமலை, ஊசிமலைமட்டம், சோலையாறு அணைப் பகுதி, ஷேக்கல்முடி குடியிருப்புப் பகுதி, பன்னீர்மேடு பங்களா பகுதி மற்றும் ஹை பாரஸ்ட் பகுதிகளுக்கு தற்போதுள்ள பேருந்து வசதி விவரம் வருமாறு:



2007 ஜனவரி 24]

| | | பேருந்துகளின் எண்ணிக்கை (தினசரி) | நடைகள் (Single trips) |
|---|---|---|---|
| 1 | பச்சமலை | 11 | 108 |
| 2 | ஊசிமலைமட்டம் | 7 | 32 |
| 3 | சோலையாறு அணைப் பகுதி | 22 | 68 |
| 4 | ஷேக்கல்முடி குடியிருப்புப் பகுதி | 17 | 40 |
| 5 | பன்னீர்மேடு பங்களா பகுதி | 8 | 29 |
| 6 | ஹை பாரஸ்ட் குடியிருப்புப் பகுதி | 6 | 30 |

மேற்கூறிய பேருந்து வசதிகளே தற்போதைய பயணிகள் அடர்விற்குப் போதுமானதாகும்.

**59—**

## பேருந்து வசதி

**வினா எண் 4080— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பெரிய கல்லாறு குடியிருப்புப் பகுதி, சின்ன கல்லாறு, உப்பாசி ஆராய்ச்சி மையம், சிறுகுன்றா குடியிருப்புப் பகுதி, வெள்ளைமலை மேல்பகுதி ஆகிய பகுதிகளில் பேருந்து விட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட்., கோயம்புத்தூர் மூலமாக தற்போது கீழ்க்கண்ட பகுதிகளுக்கு இயங்கிவரும் பேருந்து வசதி விவரம் வருமாறு:—

| | | பேருந்துகளின் எண்ணிக்கை (தினசரி) | நடைகள் (Single trips) |
|---|---|---|---|
| 1 | பெரிய கல்லாறு | 3 | 16 |
| 2 | சின்ன கல்லாறு | 4 | 14 |
| 3 | உப்பாசி ஆராய்ச்சி மையம் | 1 | 4 |
| 4 | சிறுகுன்றா குடியிருப்புப் பகுதி | 19 | 96 |
| 5 | வெள்ளைமலை மேல்பகுதி | 7 | 30 |

தற்போதைய பயணிகள் அடர்விற்கு மேற்கூறிய பேருந்து வசதிகளே அப்பகுதிக்குப் போதுமானதாகும்.

**60—**

## பேருந்து வசதி

**வினா என் 4764—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, தீபாலப்பட்டி கிராமத்தில் பள்ளி நேரத்தில் மாணவர்கள் நலன் கருதி புதிதாகக் கூடுதல் பேருந்து வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை நகரப் பேருந்து தீபாலப்பட்டி கிராமம் வழியாக கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட். மூலமாக தினசரி 12 நடைகள் (single trips) இயக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக காலை 8.00 மணி மற்றும் மாலை 4.55 மணி நடைகள் தீபாலப்பட்டி பள்ளி மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலையில் மேற்காணும் நடைகளே போதுமானதாகும்.



**61—**

## பேருந்து நிறுத்தம்

**வினா என் 5117—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, சேலத்திலிருந்து மேட்டூர் செல்லும் அரசுப் பேருந்துகள் சிந்தாமணியூர் அருகில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மூலமாக சேலத்திலிருந்து மேட்டூர் செல்லும் பேருந்துகள் அனைத்தும் சிந்தாமணியூர் அருகில் நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன.

(ஆ) இக்கேள்வி எழாது.

**62—**

## பேருந்தை இயக்குதல்

**வினா என் 5416—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, தருமபுரியிலிருந்து சென்னை செல்லும் பேருந்தை அரசம்பட்டி வழியாக இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, தருமபுரியிலிருந்து சென்னை செல்லும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிட்., சேலம் புறநகர்ப் பேருந்து தடம் என் 275பி-ன்

[2007 ஜனவரி 24

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் பேருந்து நிலையத்தில் இருந்து தின்னப்பட்டி வரை பெத்தேல் வழியாக டேனிஷ்பேட்டை-பெத்தேல் மருத்துவமனை வரை, காடையாம்பட்டி ஒன்றியம், குழந்தை நகர், சுண்டக்காப்பட்டி வழி பொம்மிடி வரை, பன்னப்பட்டி ஊராட்சி, மாரக்கவுண்டன்புதூர் பகுதி வரை, லோக்கூர் பகுதி முதல் பொம்மிடி வரை ஆகிய பகுதிகளுக்குப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை —**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலம் கீழ்க்கண்டவாறு நகரப் / புறநகர்ப் பேருந்துகள் ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகின்றன:-

1. ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து தின்னப்பட்டி வரை நகரப் பேருந்துகள் 10 மூலம் தினசரி 132 நடைகளும்,

2. ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து டேனிஷ்பேட்டை, பெத்தேல், பெத்தேல் மருத்துவமனை வழியாக நகரப் பேருந்து ஒன்று மற்றும் புறநகர்ப் பேருந்துகள் 6 மூலம் தினசரி 48 நடைகளும்,

3. ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து காடையாம்பட்டி ஒன்றியம், குழந்தை நகர், சுண்டக்காப்பட்டி வழியாக நகர மற்றும் புறநகரப் பேருந்துகள் மூலம் தினசரி 10 நடைகளும்,

4. ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து பன்னப்பட்டி ஊராட்சி, மாரக்கவுண்டன்புதூர் வரை 3 நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 6 நடைகளும் மற்றும்

5. ஓமலூரிலிருந்து லோக்கூர் வழியாக பொம்மிடி வரை 6 புறநகர்ப் பேருந்துகள் மூலம் 36 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

**67—**

## மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 3541 - திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —



2007 ஜனவரி 24]

(அ) மானாமதுரையில் தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் நல விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை —**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி மட்டுமே தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 72, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 18-7-2005-ல் ஆணை வெளியிடப்பட்டு, தற்போது தரைத் தள கட்டுமானப் பணி முடிவடைந்துள்ளது.

**68—**

## வாழ்க்கைத் தரம்

**வினா எண் 3858—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுபான்மையினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு சிறுபான்மையினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் எண்ணத்தின் அடிப்படையில் மாநில சிறுபான்மையினர் ஆணையம், தமிழ்நாடு என்ற அமைப்பு ஒன்று அரசால் 1989 முதல் துவக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாணையத்தில் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவராக

உள்ளனர். இவ்வாணையம் சிறுபான்மை இன மக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் தொடர்பாக, மனுதாரர்களை அழைத்து நேரடி விசாரணை செய்து அம்மனுக்களில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள்மீது சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகளைப் பெறுகிறது. சிறுபான்மையினரின் பிரச்சினைகளைக் கண்டறியும்பொருட்டு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு இவர்களுக்கான நலத் திட்டங்களைத் திறம்படச் செயலாக்கிட அரசுக்குத் தக்க பரிந்துரைகளைச் செய்து வருகின்றது. அதன்மீது அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் சிறுபான்மை மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) ஒன்றும், 1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, சிறுபான்மையினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு முனைப்புடன் தனிக் கவனத்தினைச் செலுத்தி வருகிறது.

**69—**

## இலவச சலவைப் பெட்டிகள்

**வினா எண் 4057—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் காளியாபுரம் ஊராட்சிகளில் ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம், கம்பலாபட்டி ஆகிய பகுதிகளில் சலவைத் தொழில் செய்பவர்களுக்கு இலவசமாக சலவைப் பெட்டிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் காளியாபுரம், ரமணிமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம், கம்பலாபட்டி ஆகிய ஊராட்சிகளில் இலவச சலவைப் பெட்டி கோரி மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை.



**70—**

## இலவச சலவைப் பெட்டிகள்

**வினா எண் 4064— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், கரியாஞ்செட்டிபாளையம், அங்கலக்குறிச்சி, பிலிசின்னம்பாளையம், வேட்டைக்காரன்புதூர் ஆகிய ஊராட்சிகளில் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு இலவசமாக சலவைப் பெட்டிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில், கரியாஞ்செட்டிபாளையம், அங்கலக்குறிச்சி, பிலிசின்னம்பாளையம், வேட்டைக்காரன்புதூர் ஆகிய ஊராட்சிகளில் இலவச சலவைப் பெட்டிகள் கோரி மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை.

**71—**

## புதிய அலுவலகக் கட்டடம்

**வினா எண் 9257—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் பத்திரப் பதிவு அலுவலகத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணி துவங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

மேட்டுப்பாளையம் பத்திரப் பதிவு அலுவலகம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கட்டடம் மிகவும் பழமையான கட்டடம் என்பதால் அதனை இடித்துவிட்டு புதிய அரசுக் கட்டடம் கட்டுவதற்கு

அரசாணை (நிலை) எண் 33, வணிக வரி (மற்றும்) பதிவுத் (யு) துறை, நாள் 24-2-2006-ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி அலுவலகத்திற்கு புதிய அரசுக் கட்டடம் கட்ட மாதிரி வரைபடம் (Sketch Plan) மாவட்டப் பதிவாளரிடமிருந்து பெற்று கட்டடம் கட்டும் பணி விரைவில் துவங்கப்படும்.

**72—**

## புறம்போக்கு நிலங்கள் பற்றிய விவரம்

**வினா எண் 2525—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட நகராட்சிப் பகுதிகள் மற்றும் 17 ஊராட்சிப் பகுதிகளில் பல்வேறு இனங்களில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் உள்ளது? தற்போது அந்த நிலங்கள் அரசிடம் உள்ளதா? அல்லது தனியார் ஆக்கிரமிப்பில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட நகராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1 | வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட நகராட்சிப் பகுதிகள் (மற்றும்) ஊராட்சிப் பகுதிகளில் பல்வேறு இனங்களில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களின் மொத்தப் பரப்பு | 4292.93.5 ஹெக்டேர் |
| 2 | ஆக்கிரமிப்பில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களின் பரப்பு | 433.63.0 ஹெக்டேர் |
| 3 | அரசிடம் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களின் பரப்பு | 3859.30.5 ஹெக்டேர் |





**73—**

## புதிய கட்டடம்

**வினா எண் 3564—செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் குற்றவியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

சங்கராபுரம் குற்றவியல் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலத்தினை நிலமாற்றம் செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**74—**

## ஓடை ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 3744—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, பாமன் கரடு பகுதியில் உள்ள ஓடைப் புறம்போக்கில் தனிநபர் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) வெள்ளக்கல்பட்டி கிராமம், பாமன் கரடு சர்வே எண் 75/3 என்பது ஓடை புறம்போக்கு நிலமாகும். மேற்படி ஓடைப் புறம்போக்கு நிலத்தில் 26 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியும், உழவடை செய்தும் வருகிறார்கள். மேற்படி நிலத்தின் பேரில் பி. மெமோ ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி நிலத்தின்

[2007 ஜனவரி 24

26 ஆக்கிரமிப்புதாரர்களில் திருமதி தாயம்மாள் என்பவர் சாலை ஓரத்தில் கூரை போட்டு மாட்டுத் தொழுவம் அமைத்து வருவதே ஆட்சேபணையான ஆக்கிரமிப்பு. மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்ற நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905-ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) எழவில்லை.

**75—**

## ஓடையில் ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 9605—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, ஜோ. மீனாட்சிபுரம், ஜோதில்நாயக்கனூர் கிராமத்திற்கு மேற்கே தாடையம்பட்டி ஓடையில் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், தாடையம்பட்டி கிராமம் புல எண் 22-1, சக்கியன்குளம் கண்மாய்க்கு வரும் உபரிநீர் உசிலம்பட்டி வட்டம், ஜோதில்நாயக்கனூர் கண்மாய்க்குச் சென்றடைகிறது. ஓடைப் புறம்போக்குகள் புல எண்கள் 102, 111-12 முதலானவை ஆக்கிரமிப்பில் உள்ளன. இவை சுமார் 12 மீட்டர் அகலத்தில் கீழ் மேலாகச் செல்கிறது. இந்த ஓடையின் வடபுறம் மற்றும் தென்புறங்களில் உள்ள பட்டா நிலங்களின் உரிமையாளர்கள் அவர்களது வயல்களுக்கு அருகில் உள்ள ஓடைகளை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இந்த ஓடை சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குக் கட்டுப்பட்டதாக உள்ளது. எனவே, சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்மூலம் ஆக்கிரமிப்பைக் காலி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**76—**

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 9606— திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 24]

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பொட்டுலுப்பட்டி கிராம சின்னக்குளம் கண்மாயிலுள்ள ஆக்கிரமிப்பை அகற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி வட்டம், சிந்துபட்டி உள்வட்டம், கட்டகருப்பன்பட்டி கிராமம், சர்வே எண் 91எ/1-ல் 33.86.0 எக்டேர் பரப்பில் ஆனையூர் சின்னக்குளம் கண்மாய் உள்ளது. இந்த சின்னக்குளம் கண்மாயில் தற்போது ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை. கண்மாய் முழுவதும் தண்ணீர் நிரம்பி உள்ளது.

**77—**

## நிலமில்லாதவர்களுக்கு நிலம் வழங்குதல்

**வினா எண் 9661—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, வெள்ளக்கல்பட்டியில் உள்ள டால்மியா நிறுவனத்திடம் உள்ள காட்டு புறம்போக்கு தரிசு நிலங்களை மீட்டு நிலமில்லா ஏழைகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வெள்ளக்கல்பட்டி கிராமத்தில் உள்ள டால்மியா நிறுவனம் அரசு புறம்போக்கு நிலங்களை குத்தகைக்கு எடுத்தும், தண்டத் தீர்வை செலுத்தியும் அனுபவம் செய்து வருகின்றனர். மேற்படி நிறுவனம், அரசு நிலங்களை குத்தகைக்கு எடுத்தது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும், சேலம் மாநகராட்சி எல்லையில் இருந்து 16 கி.மீ. சுற்றுவட்டாரத்திற்குள் நில ஒப்படை வழங்க இயலாது என அரசு தடையுள்ளதால், மேற்படி பகுதியில் உள்ள நிலங்களுக்கு ஒப்படை வழங்க இயலாது.

[2007 ஜனவரி 24

**78—**

## சிவில் வழக்குகள்

**வினா எண் 9864— திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர், தாரமங்கலம் பகுதிக்குட்பட்ட சிவில் வழக்குகளை ஓமலூர் நீதிமன்றத்தில் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

ஓமலூர் வட்டத்தில் (Taluk) தாரமங்கலம் ஒரு குறு வட்டம் (Firka) ஆகும். ஓமலூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் (District Munsif-cum-Judicial Magistrate Court) இயங்கி வருகிறது. ஓமலூர் வட்டத்தில் உள்ள அனைத்து உரிமையியல் (Civil) வழக்குகளும் மேற்கண்ட நீதிமன்றத்தில் வழக்காடப்பட்டு வருகின்றன. எனவே, தாரமங்கலம் பகுதிக்குட்பட்ட உரிமையியல் (Civil) வழக்குகளும், ஓமலூரில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் (District Munsif-cum-Judicial Magistrate Court) வழக்காடப்பட்டு வருகின்றன. இப்பகுதிக்குட்பட்ட சார்பு நீதிமன்றம் (Sub-Court) தொடர்பான வழக்குகள் மேட்டூரிலுள்ள சார்பு நீதிமன்றத்தில் (Sub-Court) வழக்காடப்பட்டு வருகின்றன.

**79—**

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 10165—திரு. வை. காவேரி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி வட்டம், பூலாம்பட்டி, வளைய செட்டியூர் பொது வழித்தடத்தில் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2007 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி வட்டம், பூலாம்பட்டி கிராமம், வளைய செட்டியூரிலிருந்து ஆனைக்காட்டான்புதூர்-சித்தூர் கிராம எல்லை வரை பாதை செல்கிறது. மேற்படி வண்டிப் பாதையில் தற்போது மாட்டு வண்டி, டிராக்டர் போன்ற வாகனங்கள் தாராளமாக சென்று வருகின்றன. தற்போது வாகனங்கள் இயல்பாக சென்று வருவதாலும், நிலையான ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லாததாலும், வயல் காட்டு ஓரத்தில் உழவடை செய்து வருவதை தார்ச் சாலை அமைக்கும்போது இருபுறமும் அத்துக்களை அளந்து ஆக்கிரமிப்புகளை அகற்ற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) எழவில்லை.

**80—**

## மயான நில ஆக்கிரமிப்பு

**வினா எண் 10552—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி, பழையூரில் மயான புறம்போக்கு நில ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி, பச்சனம்பட்டி கிராமம், பழையூர் புல எண் 219/4, விஸ்தீரணம் 0.35.0 எக்டேர் நிலம் கிராம கணக்கின்படி 'மயானம்' என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் இரண்டு நபர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தது தற்போது அகற்றப்பட்டு, மேற்படி நிலம் தரிசாக உள்ளது.

**81—**

## அலுவலகக் கட்டடம்

**வினா எண் 10559—திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஜனவரி 24

கிராம நிர்வாக அதிகாரிகளுக்கான அலுவலகம் பேருந்து போக்குவரத்துள்ள இடத்தில் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 12,506 கிராம நிர்வாக அதிகாரிகளுக்கான அலுவலகக் கட்டடங்களில் 12,300 கட்டடங்கள் தற்போது உள்ளன. மீதமுள்ள 206 கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்போது, பேருந்து போக்குவரத்து உள்ள இடத்தில் நிலம் தேர்வு செய்து, அரசின் நிதிநிலைக்கேற்ப கட்டடங்கள் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**82—**

## ஓடையில் ஆக்கிரமிப்பு

**வினா எண் 10960—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, காமநேரி ஓடையில் ஆக்கிரமிப்பை அகற்றித் தடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி கிராமம், புல எண்கள் 449/1, 448/1, 428/5 மற்றும் 424/2 கொண்ட வண்டிப் பாதை, காமநேரி ஊரில், தென்புறம் ரோட்டின் தென்புறம், மேற்கிலிருந்து கிழக்காகச் செல்கிறது. மேற்படி வண்டிப் பாதை பொதுமக்களால் காமநேரி ஓடை என்று அழைக்கப்பட்டு வருகிறது. மேற்படி விஜயாபதி கிராமக் கணக்கில் பாதை எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் புல எண் 425/2-ன் வழியாகச் செல்லும் ரோட்டில் மேற்கண்ட வண்டிப் பாதை முடிவடைவதால், மேற்படி வண்டிப் பாதைகளின் எல்லைகள் பொது மக்களின் முன்னிலையில் நில அளவை செய்து காட்டப்பட்டுள்ளது. மேற்படி வண்டிப் பாதையின் ஒரு சில இடங்களில் இருபுறமும் கரை போன்ற மண் திட்டுகளும், ஒரு சில இடங்களில் முட்புதர்களும் வளர்ந்துள்ளன. மழைக் காலங்களில், இதன் வழியாகச் செல்லும் மழை வெள்ளம் தேக்கமடைந்து காமநேரி ஊருக்குள் புகுந்துவிடுகிறது. மேலும், மேற்படி வண்டிப் பாதையில் ஏற்பட்டுள்ள மண் திட்டுகளையும், முட்புதர்களையும் அகற்ற விஜயாபதி ஊராட்சி மன்றத் தலைவரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் புல எண் 564 வழியாகச் செல்லும் சாலையின் தெற்கு ஓரத்தில் தற்போது ஓடையாகப் பயன்படுத்தி வரும் இடங்களையும் சீரமைத்து, காமநேரி குளம் வரையிலும் சீர்படுத்தித் தர ராதாபுரம் வட்டாட்சியர்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



2007 ஜனவரி 24]

(ஆ) எழவில்லை.

**83—**

## திருட்டு வி.சி.டி. தயாரிப்போர்மீது நடவடிக்கை

**வினா எண் 8301—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருட்டு வி.சி.டி. தயாரிப்பவர்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது திருட்டு வி.சி.டி. தயாரிப்பவர் மற்றும் விற்போர்மீது அரசு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவில், இவ்வாண்டில் இதுநாள் வரை (30-9-2006) திருட்டு வி.சி.டி. தயாரிப்போர் மற்றும் விற்போர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, 888 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 101 வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர். அது தவிர, இக்குற்றங்களில் தொடர்ந்து ஈடுபடுவோரைக் கண்காணித்து கடும் நடவடிக்கை மேற்கொண்டு, 2004 ஆம் ஆண்டு இரண்டு குற்றவாளிகளும், 2005 ஆம் ஆண்டு எட்டு குற்றவாளிகளும், 2006 ஆம் வருடத்தில் இதுவரை பத்து குற்றவாளிகளும் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**84—**

**தகவல் மையம்**

**வினா எண் 8456—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களின் தலைநகரங்களில் தகவல் மையம் அமைக்க அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்து மாவட்டங்களின் தலைநகரங்களில் தகவல் மையம் அமைத்தல் தொடர்பாகக் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**85—**

**கடும் நடவடிக்கை**

**வினா எண் 9164—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருட்டு வி.சி.டி. தயாரிப்பவர்கள் மற்றும் விநியோகிப்பவர்கள்மீது அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருட்டு வி.சி.டி. தயாரிப்பவர்கள் மற்றும் விநியோகிப்பவர்கள்மீது இந்த ஆண்டு 69 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் 8 வழக்குகளில் குற்றவாளிகள் தண்டனை பெற்றுள்ளனர். அது மட்டுமின்றி, 2005 ஆம் ஆண்டு, 2 குற்றவாளிகளும், 2006 ஆம் ஆண்டில் (30-9-2006) இதுவரை ஒரு குற்றவாளியும் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.





**86—**

**மணிமண்டபம்**

**வினா எண் 9741—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திராவிட இயக்கத் தலைவர்களின் நினைவைப் போற்றும் வகையில் மணிமண்டபம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**87—**

**பெரியார் சிலை அமைத்தல்**

**வினா எண் 10304—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், செம்மாண்டப்பட்டியில் பெரியார் சிலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

(அ) கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**88—**

**மகதூலை அரசே வாங்குதல்**

**வினா எண் 2472—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளிடமிருந்து ஏகபோகக் கொள்முதல் திட்டத்தின்கீழ் அவர்கள் மகசூலை அரசே வாங்கிக்கொள்ள முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் ஏகபோக/இணை கொள்முதல் திட்டத்தின்கீழ் தற்போது நெல் கொள்முதல் செய்யப்படுவதில்லை. மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு அரசின் முகவராகச் செயல்பட்டு, இம்மாநிலத்தில் நெல்லினை விவசாயிகளிடமிருந்து மைய அரசு நிர்ணயம் செய்யும் விலையில் கொள்முதல் செய்து வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**89—**

### கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

**வினா எண் 8946—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வாழப்பந்தல் கிராமத்தில் பட்டு நெசவாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வாழப்பந்தல் கிராமத்தில் பட்டு நெசவாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க விண்ணப்பம் எதுவும் இதுவரை பெறப்படவில்லை. வாழப்பந்தல் கிராமத்தில் பட்டு நெசவாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் துவக்கக் கோரி விண்ணப்பம் பெறப்படின், கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

(ஆ) இவ்வினா எழவில்லை.



**90—**

### பட்டுச் சேலைகளில் முத்திரை வழங்குதல்

**வினா எண் 10070— திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுச் சேலைகளில் G.I. முத்திரை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் பூகோளக் குறியீடு சட்டத்தின்கீழ் (Geographical Indication Act) பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சேலைகளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு சேலைகளின் தரத்தை ஆய்வு செய்து G.I. முத்திரை வழங்குவதற்கென ஒரு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், இப்பட்டுச் சேலைகளில் பதிப்பதற்கென தனியாக ஒரு குறியீடு (Hologram) உருவாக்கி, அதை உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் இப்பணி முடிக்கப்பட்டு, G.I. முத்திரை வழங்கப்படும்.

**91—**

### நூலகத்தை இடம் மாற்றுதல்

**வினா எண் 1109—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மக்கள் தொடர்பு இல்லாத இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள நூலகத்தை மீண்டும் அனுப்பானடியில் பழைய இடத்தில் இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

[2007 ஜனவரி 24

இந்த இடத்தில் நூலகம் பொதுமக்கள் பயனடையும் வகையில் நன்முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, வீட்டு வசதி வாரியத்தில் இலவசமாக போதிய இட வசதியுடன் வழங்கப்பட்ட இக்கட்டடத்தை மாற்றவேண்டிய அவசியம் எழவில்லை.

**92—**

**நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 2242— திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், அமணம்பாக்கத்திலுள்ள நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், வல்லம் ஊராட்சியைச் சார்ந்த அமணம்பாக்கத்தில் 28-11-2003 முதல் ஊர்ப்புற நூலகம் செயல்பட்டு வருகிறது. மேற்படி நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட காலி மனை ஏதும் இல்லை. காலிமனை பெறப்பட்டவுடன் கட்டடம் கட்டுவதற்குப் பரிசீலிக்கப்படும்.

**93—**

**நூலகத்தை நவீனப்படுத்துதல்**

**வினா எண் 2622— திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்ட மைய நூலகத்தினை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு மாவட்ட மைய நூலகத்தினை நவீனப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போதைக்கு இல்லை.



2007 ஜனவரி 24]

**94—**

**கல்விக் கட்டணம்**

**வினா எண் 11324— திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கான 2005-2006 ஆம் கல்வி ஆண்டுக் கட்டணத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 127, பள்ளிக் கல்வித் துறை, நாள் 27-7-2006-ல் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு 2005-2006 ஆம் கல்வி ஆண்டில் வழங்கப்பட்ட சிறப்புக் கட்டணம், கற்பிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகிய கட்டணச் சலுகைகளை 2006-2007 ஆம் கல்வி ஆண்டிற்கும் நீட்டித்து அரசு ஆணையிட்டுள்ளது.

**95—**

**சத்துணவு மையம்**

**வினா எண் 5180— திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், வானகிரி ஊராட்சியில் ஸ்ரீராமானுஜா உதவிபெறும் தொடக்கப் பள்ளியில் உள்ள சத்துணவு மையத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளுக்கு சத்துணவு மையம் கட்டித் தர விதிமுறையின்படி வழிவகை இல்லை.

[2007 ஜனவரி 24

**96—**

### புதிய திட்டம்

**வினா எண் 4218— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கால்நடை வளர்ச்சி மற்றும் பராமரிப்பிற்காக அரசிடம் புதிய திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கால்நடை அபிவிருத்தி மற்றும் இனப் பெருக்கம் இத்துறையின் முக்கிய பணியாகும். மேலும், செயற்கை முறை கருவூட்டலும், உள்நாட்டு இனங்களைப் பெருக்குதலும் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வருங்காலங்களில் செயற்கை முறை கருவூட்டல் மேலும் பரவலாக்கப்படும். மேலும், கால்நடைகளின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பிற்காக கீழ்க்கண்ட சிறப்புத் திட்டங்கள் இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

1. கால்நடை பாதுகாப்புத் திட்டம்

2. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.

**97—**

### எருமை மாடுகள் இனப்பெருக்கம்

**வினா எண் 7582— திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எருமை மாடுகள் இனப் பெருக்கத்திற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**



2007 ஜனவரி 24]

1. தமிழ்நாட்டில் கால்நடை வளர்ச்சித் திட்டத்தில் எருமையினப் பெருக்கம் ஒரு பகுதியாகச் செயல்படுகிறது.

2. பசு மற்றும் முர்ரா இன காளைகளிலிருந்து விந்து சேகரித்து, ஈச்சங்கோட்டை உயிரின கால்நடை பெருக்குப் பண்ணை, உதகை மற்றும் ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த மூன்று வருடங்களில் எருமையினத்தில் 8.96 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. சுமார் 3,000 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் மூலம் பயனாளிகளுக்கு, அவர்களது தேவைக்கேற்ப செயற்கை முறை கருவூட்டல் தடைபடாமல் நடைபெற்று வருகிறது.

4. நாட்டின் பெருக்கத் திட்டத்தின்கீழ் தோடா இன எருமைகளைப் பாதுகாக்க தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**98—**

### மருத்துவர் நியமனம்

**வினா எண் 8822— திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, திருக்கடையூர் அரசினர் கால்நடை மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் நியமனம் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மண்டலம், பூம்புகார் தொகுதியில் மயிலாடுதுறை கோட்டத்தில், திருக்கடையூரில் அரசு கால்நடை கிளை நிலையம், கால்நடை ஆய்வாளர் (நிலை-2) பதவியினைக் கொண்டு இயங்கி வருகிறது. மேற்படி பதவி 1-1-2003 முதல் காலியாக உள்ளது. அக்கிளை நிலையப் பணிகளை பூம்புகார் கால்நடை கிளை நிலைய கால்நடை

[2007 ஜனவரி 24

ஆய்வாளர் கூடுதல் பொறுப்பில் கவனித்து வருகிறார். கால்நடை ஆய்வாளர் பயிற்சி துவங்குவது குறித்து ஆணையிட்டவுடன் திருக்கடையூர், கால்நடை கிளை நிலைய கால்நடை ஆய்வாளர் (நிலை-2) பதவியினை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**99—**

**மருத்துவர்களை நியமித்தல்**

**வினா எண் 8842— திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை தாலுகா பகுதியில் உள்ள சோமாபுரம், வேளாளப்பட்டி, மட்டங்கால், நாயக்கம்பட்டி ஆகிய இடங்களிலுள்ள கால்நடை மருத்துவமனைகளில் மருத்துவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோமாபுரம் கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர் பதவியைத் தவிர, ஏனைய 3 பதவிகளும் நிரப்பப்பட்டுவிட்டன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து தெரிவுப் பட்டியல் பெறப்பட்டதும் மீதமுள்ள பதவியும் நிரப்பப்படும்.

**100—**

**மருத்துவமனைக்குப் புதிய கட்டடம்**

**வினா எண் 8883—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீன்சுருட்டி கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?



2007 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

மீன்சுருட்டி கால்நடை மருந்தகம் தற்போது சொந்தக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. நபார்டு RIDF XII திட்டத்தின்கீழ் மீன்சுருட்டி கால்நடை மருந்தகத்திற்கு சுற்றுச் சுவர், மேல்நிலைத் தொட்டி மற்றும் கழிப்பறை கட்டுவதற்கு மட்டும் ரூ.9.10 இலட்சம் செலவிற்கான பிரேரணை பெறப்பட்டுள்ளது. நபார்டு RIDF XII திட்டம் தயாரிக்கும்போது இப்பணியும் சேர்க்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு** : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### (அ) பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்க நடவடிக்கை

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, (குறுக்கீடு) Speaker Sir... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சொல்லுங்கள்? எதையாவது பேசக் கூடாது.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, எதையாவது இல்லை. ஏற்கெனவே எங்களுடைய மாவட்டத்தினுடைய மிக மிக முக்கியமான ஒரு பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அப்பொழுதே என்னிடம் கேட்டது, 'நான் ஏதாவது பேச வேண்டும், என்றுதான்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை. நான் குறிப்பிட்டே கேட்கிறேன். பாலாற்றில் ஏற்கெனவே அணை கட்டுவதற்கு ஆந்திர அரசு 28 ஆம் தேதி, தேதி குறித்துவிட்டு அடிக்கல் நாட்டுவது குறித்து அறிந்து எங்களுடைய மாவட்டம் கொந்தளித்து, இப்போது பல

ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, தமிழக அரசு அங்கே பாலாற்றின் குறுக்கே கணேசபுரம் என்ற இடத்தில் இப்பொழுது குப்பம் அருகில் ஆந்திர முதலமைச்சர் 28 ஆம் தேதி அணை கட்டுவதற்கு 30 கோடி ரூபாயிலே கட்டப்படக்கூடிய அந்த அணைக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தாமல் தடுப்பதற்குத் தமிழக அரசு எடுக்க இருக்கிற நடவடிக்கை என்ன? மத்திய வனத் துறை அமைச்சர் மூலமாகவாவது அல்லது அந்த ஆந்திர முதல்வரோடு பேசியாவது தமிழக அரசு ஏதாவது உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை நேற்றுகூட நான் எழுப்பியிருக்கிறேன். இன்று அரசு அதுகுறித்து ஏதாவது இந்த அவைக்கு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, ஆந்திர அரசு குப்பம் பகுதியிலே அப்படிப்பட்ட அணை கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமானால், ஆந்திர அரசோடும் பேசி, நம்முடைய மத்திய வனத் துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சரிடத்திலேயும் பேசி அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இந்த அரசு முயற்சி செய்யும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, இந்த குப்பம் பகுதியிலே ஆந்திர அரசு கட்டக்கூடிய அணைக்கு வரும் 28 ஆம் தேதி அடிக்கல் நாட்டப்படும் என்ற செய்தி பத்திரிகைகளிலே வந்திருக்கின்றது. அது மக்கள் மத்தியிலே, அந்த மூன்று மாவட்ட மக்கள் மத்தியிலே, மிகப்பெரிய பீதியை உண்டாக்கியிருக்கிறது. ஆகவே, 28 ஆம் தேதி என்பது, குறுகிய காலமாக இருக்கின்ற காரணத்தால், அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து, அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, அரசு உடனடியாக அதை முன்னெடுத்துச் செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன். *(குறுக்கீடு)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *(குறுக்கீடு)* நீங்களும் அதே subject-தானே பேசப் போகிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருந்தாலும்கூட, பொதுவாக பாலாற்றிலே எப்போது தண்ணீர் வருகிறது என்பது இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். மழை பெய்தால் தண்ணீர் வருகிறதே தவிர, அங்கே கர்நாடகாவிலேயிருந்து அணையைத் திறந்து தண்ணீர் வருவது என்பது பத்தாண்டுகளுக்கு ஒரு முறை அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான். இதற்கிடையிலே, பல அணைகளை அந்தப் பகுதியிலே கட்டிவிட்டார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யும்.

## (ஆ) பண்ருட்டி, முந்திரி ஏற்றுமதி மையம் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியின் உள்ளடங்கிய பகுதியில், முந்திரி விவசாயம் அதிகமாக உற்பத்தியாகின்ற காரணத்தினால், முந்திரி விவசாயிகளுக்கு ஏற்றவாறு, அங்கு ஓர் ஏற்றுமதி வணிக வளாகம் அமையவேண்டுமென்று நான் கடந்த ஐந்து ஆண்டுகாலமாகக் குரல் கொடுத்தேன், அது நடைபெறவில்லை. ஆனால், கடந்த கூட்டத் தொடரில் நான் குரல் கொடுத்தேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், அதற்கான நிதி 10 கோடி ரூபாயில் முந்திரி வணிக வளாகம் அமையும் என்று அறிவித்தார். அப்படி அறிவித்ததனுடைய அடிப்படையிலே, நேற்றைய முன்தினம் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு, துறையினுடைய அதிகாரிகள் அங்கே ஆய்வு செய்திருக்கிறார்கள். அப்படி ஆய்வு செய்து, அங்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்கின்ற நல்ல செய்தியையும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், தொடர்ந்து ஐந்து ஆண்டுகாலமாக முந்திரி தொழிற்சாலை அமைய வேண்டிய இடம் பண்ருட்டி என நான் வேண்டுகோள் வைத்தேன். நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் வருகை தந்தபோதும் நான் அந்தக் கருத்தை

வலியுறுத்தினேன். ஆனால், அது வேறு இடத்தில் அமைவதாகச் செய்தித் தாள்களில், பத்திரிகைகளில் வெளிவந்து, இன்றையதினம் பண்ருட்டி மற்றும் விருத்தாசலத்தில் அந்த முந்திரியை அதிகமாக உற்பத்திச் செய்யக்கூடிய மக்களெல்லாம் ஒன்றுசேர்ந்து அங்கே மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆதலால், அந்த முந்திரி தொழிற்சாலை, முந்திரி எங்கு உற்பத்தி அதிகமாக இருக்கிறதோ, அதற்கு முக்கியத்துவம் தரும் வகையிலும், என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்றவகையிலும் பண்ருட்டியிலேயே அந்த முந்திரி ஏற்றுமதி வணிக வளாகத்தை அமைத்து, அந்த மக்களுக்கு ஒரு பாதுகாப்பு அரணாக இருப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அந்த முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலையில் அதற்கான சொசைட்டியில் உறுப்பினர் சேர்க்கையெல்லாம் கடந்த கால ஆட்சியில் தவறுதலாக அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களை மட்டும் அதிலே சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் மறுபரிசீலனை செய்து, புதிதாக அறிவித்து, அந்த முந்திரி ஏற்றுமதி வணிக வளாகம் ரூ.10 கோடியில் பண்ருட்டியில் அமைவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கவேண்டும் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி ஏற்றுமதி மையம், கடந்த நிதிநிலை அறிக்கையின்போது அறிவித்தது, 10 கோடி ரூபாயில் கடலூரில் அமைக்கப்படும் என்றுதான் அறிவித்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினராக இருக்கக்கூடிய காரணத்தினால், அந்தப் பகுதியிலே அதிகமாக முந்திரி விளைகின்ற காரணத்தால், அங்கே இந்த ஏற்றுமதி மையத்தை அமைக்கவேண்டுமென்று அவருடைய விருப்பமாக, வேண்டுகோளாக அங்கே கேட்கின்றார். ஆனால், கப்பல் போக்குவரத்து, ஏற்றுமதிக்கான சூழ்நிலை கடலூரில் உள்ளது. பண்ருட்டிக்கும் கடலூருக்கும், ரொம்ப தூரம் இல்லை. அதனாலே, கடலூரில் அமைப்பதுதான் சிறந்ததாக இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். இருந்தாலும், இன்னும் அதுபற்றி இறுதி முடிவை அரசு எடுக்கவில்லை. அவருடைய கேள்வியைக் கருத்திலேகொண்டு அரசு பரிசீலிக்கும்.



முற்பகல் 10-40

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். இங்கே 13 உறுப்பினர்கள் பேசுவதற்காகப் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்களுக்கு மிகாமல் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன் அவர்கள்.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தேனி மாவட்டம், போடி தொகுதிக்குட்பட்ட இராசிங்காபுரம் என்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட கிராமத்தில், விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னைச் சட்டமன்ற வேட்பாளராக அறிவித்து, பண பலம், அதிகார பலம் அனைத்தையும் வீழ்த்தி, என்னை வெற்றிபெறச் செய்து, இந்தச் சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த அவையில் என்னை அங்கம்பெற வைத்த தமிழினத் தலைவர் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் இனமான பேராசிரியர் அய்யா அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், என்னை போடி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகவும், பின்னர், என்னை போடி ஒன்றியக் கழகச் செயலாளராகவும், பின்னர் சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கி, எனக்கு முகவரி தந்த "உதய சூரியன் தந்த இளைய சூரியன்" மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி), தென்பாண்டிச் சிங்கம், அஞ்சா நெஞ்சன் அண்ணன் மு.க. அழகிரி அவர்களுக்கும், வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அண்ணன் I.P. அவர்களுக்கும், தேனி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் அண்ணன் மூக்கையா அவர்களுக்கும், என்னை வெற்றிபெறச் செய்த போடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்குப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், என்னைப் பெற்றெடுத்த பெற்றோருக்கும், நண்பர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

2007 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20 ஆம் நாள், சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைமீது நன்றி தெரிவிக்கும்விதமாக, என்னைப் பேச அனுமதித்தமைக்கு நன்றி

[திரு. ச. லட்சுமணன்] [2007 ஜனவரி 24

...றிக்கொள்கிறேன். பதின்மூன்றாவது சட்டப் பேரவையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசின் செயல்பாடுகளை, திட்டங்களை, நோக்கங்களை, கொள்கைகளைப் பொருளடக்கமாகக் கொண்ட ஆளுநர் உரை அறிவு ஜீவிகள் அனைவராலும் பாராட்டப்பெறும் வரலாற்றுப் பேழையாகவும், காலக் கண்ணாடியாகவும் அமைந்துள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். மொத்தத்தில் ஆளுநர் உரை கலைஞர் அரசின் அற்புதங்களை, திட்டங்களை நாடறியச் செய்திடும் காவியமாகும் என்றால் அது மிகையாகாது. அக்காவியத்தில், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம், அடுத்து, இலவச எரிவாயுத் திட்டம், பள்ளி மாணவ மாணவிகளுக்குக் கட்டணக் குறைப்பு மற்றும் சத்துணவில் வாரம் இரண்டு முட்டை, இலவச வண்ணத் தொலைக்காட்சி, ஏழை மகளிர் மற்றும் ஆடவருக்கு இலவச வேட்டி, சேலை, ஊனமுற்றோருக்கு உதவித் தொகை மற்றும் ஊனமுற்றோருக்கானத் திருமண உதவித் தொகையை ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாக உயர்த்தியும், வேலையில்லாத ஆண்களுக்குச் சுயஉதவிக் குழுக்கள் ஆரம்பிக்கவும், படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்குப் பணி விரைவில் கிடைக்கவும், அதுவரையில் திங்கள்தோறும் உதவித் தொகை வழங்கிடவும், படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில், தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் அமைத்திடவும் திட்டங்களை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியுள்ளார்கள். சிறுபான்மையினர் நலன் காக்கவும், மத நல்லிணக்கம் பேணவும், கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம், எஸ்மா சட்டம் இரத்து செய்யப்பட்டுவிட்டது.

கடந்த மாதம் தளபதியார் அவர்கள், தேனி மாவட்டத்தில் ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோது, அங்கே வறுமைக் கோட்டிற்குக்கீழே இருப்பவர்களுடைய சதவிகிதம், தவறுதலாகக் கடந்த ஆட்சியில் சேர்க்கப்பட்டதைக் கண்டுபிடித்து, 70 சதவிகிதமாக இருந்ததை, தளபதியார் அவர்கள் அந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு, அதை 34 சதவிகிதமாகக் குறைத்து, உண்மையான பயனாளிகளைக் கண்டுபிடித்துத் தெரிவித்தமைக்கு, எங்களுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றி கூறிக்கொள்கிறேன். இதுபோன்ற ஆய்வுக் கூட்டங்களை, தளபதியார் அவர்கள் நடத்திக் கொண்டிருப்பது, கடந்த கால ஆட்சியில் நடந்த தவறுகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவர உதவியுள்ளது என்பதை இந்தத் தருணத்தில் உங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

தளபதியார் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தின்போது, எங்கள் போடி நகருக்கு பாதாளச் சாக்கடைத் திட்டமும், போடி நகருக்குக் குடிநீர் வழங்குவதற்குப் புதிய பைப்-லைன் அமைத்துத் தரவும், பூதிப்புரம் கூட்டுக்



2007 ஜனவரி 24] [திரு. ச. லட்சுமணன்]

குடிநீர்த் திட்டத்திற்கு TUFIDCO மூலமாக ரூ.61 இலட்சமும், கோம்பை, பண்ணைபுரம் மற்றும் தேவாரம் பேரூராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலமாக, அப்பகுதிவாழ் மக்கள் பயன்பெறும் வகையில், திட்டங்களை தேனி மாவட்டத்தில் தெரிவித்துள்ளார்கள்.

எங்களுடைய போடி தொகுதியின் கோரிக்கையான தேனி மாவட்டம், எனது போடிநாயக்கனூர் தொகுதியில், தலைவர் கலைஞர் அவர்களால் இதற்கு முன்னால் கொண்டு வரப்பட்ட திட்டம் என்ற ஒரே காரணத்தினாலே, கடந்த 5 ஆண்டுக் காலமாக முடக்கி வைக்கப்பட்ட—18 ஆம் கால்வாய்த் திட்டத்தை மீண்டும் நிறைவேற்றிட நிதி ஒதுக்கீடு செய்துதந்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டு, அந்தத் திட்டத்தினைத் தங்களிடம் வலியுறுத்திப் பெற்றுத்தந்த, மறைந்த பாளையம் தந்த பண்பாளர் அய்யா பி.டி.ஆர். அவர்களுடைய பெயரை அதற்குச் சூட்டவேண்டும் என்று தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தேனி மாவட்டத்திலே, ஓடைப்பட்டியிலே திராட்சைப் பழங்களுக்கு, ஏற்றுமதிக்கு ஏற்ற வகையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய விற்பனைக் கட்டடம் அமைக்கப்படும் என்றும், சுருளி அருவியை முக்கியமான சுற்றுலாத் தலமாக அறிவித்தமைக்கும் தேனி மாவட்டப் பொதுமக்களின் சார்பாக நன்றி கூறிக் கொள்கிறேன். எனது தொகுதிப் பிரச்சினையான, தேனி மாவட்டம், போடி தொகுதியிலே பூதிப்புரத்திலே டபேதார் அணை வாய்க்கால் திட்டம் நிறைவேற்றித் தரவேண்டும். போடி தொகுதியானது மலைகள் சூழ்ந்த பகுதியாகும். ஆகவே, அங்குள்ள குரங்கணி டாப் ஸ்டேஷன் ரோடு அமைத்துத் தரவேண்டும். குரங்கணி டாப் ஸ்டேஷன் ரோடு அமையாவிட்டாலும்கூட அங்கு குரங்கணி டாப் ஸ்டேஷன் ரோப் கார் திட்டம் அமைத்துத் தர வேண்டும். தேவாரம் சாக்குளத்து மெட்டு திட்டம் அமைத்துத் தரவேண்டும். அகமலை பஞ்சாயத்திலே ஊரடி ஊத்துகாடு மலைகள் சூழ்ந்த பகுதியாகும். அங்கு ரோடு வசதி அமைத்துத் தரவேண்டும்.

முற்பகல் 10–45

தமிழ்நாட்டிலே கூடுதலாக இலவம் பஞ்சு தயாராகின்ற இடம் தேனி மாவட்டம்தான். ஆகவே, தேனி மாவட்டம், போடியிலே இலவம் பஞ்சு ஆண்டுக்குக் கூடுதலாக வருவாய் ஈட்டித் தரக்கூடியதாகும். அந்த இலவம் பஞ்சு 25 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டிக் கொடுத்தும், 2,000-க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பும் அளித்து வந்த கோடங்கிபட்டி அரசு இலவம் பஞ்சு அரைக்கும் தொழிற்சாலை கடந்த 3 ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு பெரும் வருவாய்

[திரு. ச. லட்சுமணன்] [2007 ஜனவரி 24

இழப்பு ஏற்பட்டுள்ளது. 2,000-க்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். எனவே, மீண்டும் அந்த ஆலையைத் திறக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தேனி மாவட்டத்திலே கால்நடை நோய்கள் நுண்ணறிவு அலுவலகம் இல்லை. கால்நடை நோய்கள் நுண்ணறிவு அலுவலகம் தற்போது மதுரையில் உள்ளது. அதற்கு 200 கிலோ மீட்டர் தூரம் சென்று வரவேண்டும். ஆகவே, தேனி மாவட்டம் போடியைத் தலைமையிடமாகக் கொண்டு கால்நடை நோய்கள் நுண்ணறிவு அலுவலகம் அமைத்துத் தரவேண்டும். போடியிலே ஒரு mobile dispensary அமைத்துத் தரவேண்டும். கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பு அணையைக் கட்டி வறண்டு கிடக்கும் பகுதிகளான கரட்டுபட்டி, ரெங்கநாதபுரம், சில்லுமரத்துப்பட்டி, சிவமலை மற்றும் இராசிங்காபுரம் விவசாயிகளுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று சொல்லி, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையிலே என்னைப் பேச அழைத்தமைக்கு நன்றி கூறிக்கொண்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின்மீது பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்ததற்காகத் தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்கின்றபோது, 28 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வைத்துவிட்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு சென்றுவிட்டது என்று சொல்லி இரண்டு, மூன்று ஆண்டுக் காலமாக அரசு நலத் திட்டங்களை அறிவிக்காமல் காலம் கடத்திச் சென்றார்கள். ஆனால், நம்முடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆட்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள் பொறுப்பேற்கின்றபோது, கடன் தொகை ரூபாய் 58 ஆயிரம் கோடி என்பதை இந்த நேரத்திலே நான் இந்தப் பேரவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். 58 ஆயிரம் கோடி ரூபாய் கடன் தொகையிலும்கூட இன்று தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பல அரிய, நலல திட்டங்களை டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார் என்கின்ற இந்தச் செய்தியையும் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2007 ஜனவரி 24] [திரு. கோவை தங்கம்]

யாருமே எதிர்பார்க்க முடியாத அளவிற்கு, ஒவ்வொரு நாளும் ஒரு சாதனையை, நலத் திட்டங்களை டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் அறிவித்து வருவது இன்று தமிழகத்திலுள்ள, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. நான் இந்த ஆளுநர் உரையினுடைய புத்தகத்தை முழுமையாகப் படித்துப் பார்த்தேன். பக்கம் 10-லே உலக வங்கியிடம் பேசி 6 இலட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பயன் அடைகின்ற வகையில் நடவடிக்கை எடுத்திருப்பது விவசாயிகளை மகிழ்ச்சி அடைய வைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல 10 ஆண்டுக் காலம், ஏழை எளியவர்கள், புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கின்ற வீடுகளை, அரசு அந்த ஏழை எளியவர்களுக்கே சொந்தமாக்கித் தருவோம் என்கின்ற திட்டம். இன்று சாதாரண ஏழை எளிய கூலித் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், சிறுபான்மை மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்தத் திட்டத்தினால் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய். இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் நடைபெறாத மிகப் பெரிய சாதனையான இந்தத் திட்டத்தை இன்று தமிழக மக்கள் வரவேற்று இதன்மூலமாக ஏழையெளிய மக்கள் பயனடைந்து வருகிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

(முற்பகல் 10-50)

கர்ப்பிணித் தாய்மார்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், கல் உடைக்கின்ற கூலித் தொழிலாளர்கள், சாதாரண விவசாயக் கூலித் தொழிலாளர்கள், வீட்டு வேலையிலே பணி செய்கின்றவர்கள் இவர்களுக்கு எல்லாம் — கர்ப்பிணிப் பெண்களுக்கு 6,000 ரூபாய் என்பது மிகச் சிறப்பானது. சாதாரணமாக வறண்டுபோன ரொட்டித் துண்டு கூட கிடைக்காத நிலையில் இருப்பவர்கள்—6,000 ரூபாயை கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தருவது என்பது இது இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அரிய சாதனை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

68.5 கோடி ரூபாயில் 2.5 இலட்சம் ஏழையெளியவர்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் என்கின்ற திட்டம். நல்ல அருமையான திட்டம். அதைப்போல எரிவாயு அடுப்பும் இணைப்பும் இலவசம் என்கின்ற திட்டம்மூலம் மூன்று இலட்சம் பேர்கள்

[திரு. கோவை தங்கம்] [2007 ஜனவரி 24

பயனடைந்திருக்கிறார்கள். இரண்டரை இலட்சம் வேலையில்லாத இளைஞர்களுக்கு 300 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கியதால் இன்று வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்கள் மத்தியிலே, படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை இன்று ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

விவசாயிகள் வாங்கிய கடன் 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இது இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும், 7,000 கோடி ரூபாய் இரத்து செய்யப்படவில்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். தேர்தல் நேரத்திலே, மாண்புமிகு தமிழக முதல்வர் ஐயா அவர்கள் இப்படி பல்வேறு திட்டங்களை அறிவித்தபோது, நாங்கள் எல்லாம் எப்படி இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவார் என்று எண்ணியதுண்டு. தேர்தல் முடிந்தபிறகு கண்டிப்பாக இந்த அரசு இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மிகவும் சிரமப்படும் என்று நாங்கள் எண்ணியதுண்டு. ஆனால், இன்று மகத்தான சாதனைகளையும், மகத்தான திட்டங்களையும் தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் ஐயா அவர்கள் நிறைவேற்றி வருவது எங்களுக்கு எல்லாம் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. 256 கோடி ரூபாயில் இலவச சேலை வேட்டிகள் வழங்குகின்ற திட்டம்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு 200 ரூபாய். அண்ணா தி.மு.க. ஆட்சியிலே 200 ரூபாய்தான் இருந்தது. இப்போது நம்முடைய ஆட்சியில் அது 400 ரூபாயாக உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது. அதைப்போல உடல் ஊனமுற்றவர்களுக்குத் திருமணத்திற்கு 10,000 ரூபாய் என்றிருந்தது, நம்முடைய ஆட்சியிலே இப்போது 20,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். உடல் ஊனமுற்றவர்கள் நமக்கு வாழ்க்கையே இல்லை என்று ஏங்கி இருக்கின்ற வேளையில், அந்த உடல் ஊனமுற்றவர்களுக்கு இந்தத் திருமண உதவித் தொகை 20,000 ரூபாய் என்று அறிவித்திருப்பதை மனிதநேயத்தோடு பாராட்டியாக வேண்டும்.

10,000 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைத்திட முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைவர் ஸ்டாலின் அண்ணன் அவர்கள் 3,500 குழுக்களை இதுவரை நியமித்திருக்கிறார்கள் என்பது பாராட்டுக்குரிய விஷயமாகும். அதைப்போல, பல்வேறு சாதனைகளை, பல்வேறு நலத் திட்டங்களை இன்று மக்களுக்கு அறிவித்ததைக்கண்டு நம்முடைய இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை மாநில முதலமைச்சர்களும் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.



2007 ஜனவரி 24] [திரு. கோவை தங்கம்]

**(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் திரு. துரை சந்திரசேகரன் தலைமை)**

இந்தியாவினுடைய ஜனாதிபதி அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுடைய ஆட்சியைப் பாராட்டுகின்றார்; அன்னை சோனியா காந்தி அவர்கள் பாராட்டுகின்றார்கள்; பாரதப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள் பாராட்டுகிறார்கள். நான்கு நாட்களுக்கு முன்பு உள் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள். உள் துறை அமைச்சர் அவர்களை நானும், மாண்புமிகு உறுப்பினர்கள் விடியல் சேகர் அவர்களும், ராஜசேகர் அவர்களும், ஞானதேசிகன், எம்.பி. அவர்களும், எங்களுடைய தலைவர் எங்களை வழி நடத்திச் செல்லுகின்ற மத்திய அமைச்சர் அன்புத் தலைவர் ஜி.கே. வாசன் அவர்களுடன் சென்று பார்த்தோம். மாண்புமிகு மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் அவர்கள் உள் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னார்கள். தமிழகத்தைப்பற்றிப் பேசுகின்றபோது அன்புத் தலைவர் ஜி.கே. வாசன் அவர்கள் தமிழ்நாட்டிலே தலைவர் கலைஞர் ஐயா அவர்களுடைய ஆட்சியில் நடைபெற்று வருகின்ற சாதனைகளை விரிவாக விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

இந்த வயதிலும் 24 மணி நேரத்தில், 20 மணி நேரம், இந்த மக்களுக்காக உழைத்து வருகிறார்கள் என்று உள் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்கின்றபோது, உள் துறை அமைச்சர் அவர்களும் அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்கள். ஆகவே, காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் பாராட்டுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்தியாவினுடைய ஜனாதிபதி, இந்தியாவினுடைய மகத்தான பிரதமர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவி அன்னை சோனியா காந்தி அவர்கள் போன்ற அனைவரும் இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்; அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

வால்பாறைக்கு, 100 ஆண்டுக் காலமாக வைத்த கோரிக்கையை ஏற்று, டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள், மனித நேயத்தோடு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக ஒரு கல்லூரியை வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன்; தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம். அந்தக் கல்லூரியைத் திறப்பதற்கு, பல

இன்னல் இடையூறுகளுக்கு மத்தியில், பல வேலைகளுக்கு மத்தியில் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 7 அமைச்சர்களோடு அங்கே வந்து, அந்தக் கல்லூரியைத் திறந்து வைத்தார்கள் என்பதற்காக நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கின்ற வகையில், இன்று வால்பாறையிலே ஏற்படுத்தப்பட்ட அந்தக் கலைக் கல்லூரிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுடைய பெயரையே சூட்டியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கல்லூரிக்கு டாக்டர் கலைஞர் கருணாநிதி கலைக் கல்லூரி என்றுதான் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. பாரதியார் பல்கலைக்கழகத்திலே அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இவ்வளவு திட்டங்களையும் இந்த அரசு மக்களுக்காக மனித நேயத்தோடு செய்திருக்கிறது. ஆனாலும், எல்லாத் தொழிலாளர்களுக்கும், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நல வாரியங்களை அமைத்துவிட்டீர்கள். ஆனால், தேயிலை – (மணியடிக்கப்பெற்றது) இப்பொழுதுதான் பேச ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள். 10 நிமிடங்கள் ஆகியிருக்கிறது.

**திரு. கோவை தங்கம்:** இப்பொழுதுதான் பேசவே ஆரம்பித்தேன். வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்கப்படவில்லை என்பது எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கின்றார்கள். அங்கு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் என்னைக் கேட்கின்றார்கள். நாங்கள் என்ன பாவம் செய்தோம்; எல்லோருக்கும் வாரியம் அமைத்திருக்கின்றார்கள், இந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏன் வாரியம் அமைக்கப்படவில்லை என்று கேட்கின்றார்கள். அதற்கு நான் என்ன பதில் சொல்வது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்களை நான் இந்த நேரத்திலே கேட்டு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய கருத்தினை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

1997 ஆம் ஆண்டு டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், 77 ரூபாய் அந்தத் தேயிலைத் தோட்டத்





தொழிலாளர்களுக்குக் கூலி கிடைத்தது. 2001 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியிலே ஐந்து ரூபாய் பிடித்தம் செய்துவிட்டார்கள். அ.தி.மு.க. ஆட்சியை எதிர்த்து நான் மூன்று முறை உண்ணாவிரதம் இருந்தேன். நான்காவது முறை, 7,000 பேர்கள் கைதாகின்ற அளவிற்கு அங்கு ஒரு மாபெரும் மறியல் போராட்டத்தை நடத்தினேன். அதற்குப் பிறகுதான், குறைத்த அந்த ஐந்து ரூபாயை, பிடித்தம் செய்த அந்த ஐந்து ரூபாயை உயர்த்தித் தருவதற்கு நிர்வாகம் முன் வந்தது. ஆனாலும், அந்த ஐந்து ரூபாயை உயர்த்திக் கொடுத்துவிட்டு, வேலைப் பளுவையும் உயர்த்திவிட்டார்கள்.

1997 ஆம் ஆண்டு, கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே 77 ரூபாய் கூலி, 16 கிலோ தேயிலை பறித்தார்கள். ஆனால் இன்று, 28 கிலோ பறிப்பதற்கும், 35 கிலோ பறிப்பதற்கும் வற்புறுத்தி, வேலை வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் ஐயா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள், அந்த நிர்வாகத்துடன் பேசுவதற்கு மூன்று முறை நேரத்தைக் குறித்தார்கள். என்னுடைய கெட்ட நேரமோ என்னவோ தெரியவில்லை. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்னும் நல்ல நேரம் வரவில்லை என்றே நினைக்கின்றேன். ஒருமுறை உள்ளாட்சித் தேர்தல் வந்துவிட்டது. இரண்டாவது முறை, டெல்லிக்குச் சென்று வந்து, பேசி முடிக்கிறேன் என்று சொன்னார்கள். மூன்றாவது முறையும் டெல்லிக்குச் செல்கின்ற நிலை ஏற்பட்டதால், நானும், எங்களுடைய தலைவர் அண்ணன் சுதர்சனம் அவர்களும், கொறடா பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், துணைக் கொறடா ஞானசேகரன் அவர்களும் தலைவர் கலைஞர் ஐயா அவர்களை நேரில் சந்தித்து, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய கஷ்டங்களையெல்லாம் விரிவாக, விளக்கமாக எடுத்துச் சொன்னோம். ஆனால், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இன்று கேட்கின்றார்கள். அன்னை சோனியா காந்தி அவர்கள், கோவை சிதம்பரம் பூங்காவிற்கு வந்தபோது, என்னிடத்திலே கேட்டார்கள். என்ன குறை இருக்கிறது என்று கேட்டபோது, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை நான் எடுத்துச் சொன்னேன். அன்னை சோனியா காந்தி அவர்கள் சிதம்பரம் பூங்கா கூட்டத்திலேயே, இலட்சக்கணக்கான பேர்கள் இருந்த அந்தக் கூட்டத்திலேயே பகிரங்கமாக அறிவித்தார்கள். ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்கு வருகிறது, வரப் போகிறது, டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே சொல்லி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை முடித்துத் தருகிறேன் என்று பகிரங்கமாக அறிவித்தார்கள். இன்னும் அந்தப் பிரச்சினை முடியவில்லை என்பதில் எனக்கு வருத்தம் ஏற்படுகிறது.

முற்பகல் 11-00

அதே சமயத்தில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மூன்று முறை கோவைக்கு வந்தும், இங்கேயும் நிர்வாகத்தை அழைத்துப் பேசி, 10 ஆண்டுகள் நீங்கள் சம்பள உயர்வு அவர்களுக்குத் தரவில்லை, சம்பளத்தை உயர்த்தித் தாருங்கள், வேறு நியாயமே பேசாதீர்கள் என்று வற்புறுத்திப் பேசினார்கள். இப்பொழுது நிர்வாகம் ஏறத்தாழ சம்பளம் கொடுக்க முன்வந்திருப்பதாக அறிகிறேன்.

நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்களிடத்திலும் 4, 5 முறை நேரடியாகச் சொல்லியிருக்கின்றேன். இதிலே நீங்கள் தலையிட்டால் நிச்சயமாக அந்த நிர்வாகத்தினர் ஒரு அரை மணி நேரம், ஒரு மணி நேரத்தில் இந்தப் பிரச்சினையை முடித்துவிடுவார்கள். நீங்களும் மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களிடத்திலே சொல்லி அந்த நிர்வாகத்தை அழைத்துப் பேசுவதற்கு உதவி புரியுங்கள் என்று கேட்டிருக்கின்றேன்.

அவர்கள் கல்லூரியைத் திறந்து வைக்கின்றபோது, மேடையிலேயே உட்கார்ந்துகொண்டு ஒரு அரை மணி நேரம் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்களோடு Cell phone-லே தொடர்பு கொண்டார்கள். அந்த நேரத்திலே Cell phone-லே கலைஞர் ஐயா அவர்கள் கிடைத்திருந்தால், அந்தப் பிரச்சினை அன்று solve ஆகியிருக்கும். ஆனால், Cell phone தொடர்பு கிடைக்கவில்லை என்பதை வருத்தத்தோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நான் வற்புறுத்தி, வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை முடித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அண்ணன் சுதர்சனம் அவர்கள், கல்லூரியைத் திறப்பதற்காக வந்த நேரத்தில், ஆழியாறுக்கு அருகிலே ஒரே ஒரு நிமிடம் கீழே இறங்கி நின்றார்கள். இரண்டு அட்டைப்பூச்சிகள் அவரைக் கடித்ததனால் அவருக்கு இரத்தம் சிந்தியது. இரண்டு அட்டைப்பூச்சிகள் அவர் கீழே இறங்கி நின்ற ஒரு நிமிடத்தில் கடித்துவிட்டன. ஆனால், ஒரு நாள் முழுவதும் அந்த அட்டைப்பூச்சிகளின் கடிகளுக்கிடையே அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் எத்தனை முறை கடிபட்டிருப்பார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். ஒரு நிமிடத்திலே அக்கடியினால் அவருக்கு அந்த அளவிற்கு மன வருத்தம் ஏற்பட்டது. ஆனால், பல ஆண்டு காலமாக அந்தத் தேயிலைத் தோட்டத்



தொழிலாளர்கள் அந்த அட்டைப்பூச்சிக் கடியிலே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

கொட்டுகிற மழை, பனி, வெயில் என்று வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கின்றார்கள். அதைப்போல, யானைகள், கரடிகள், புலிகள், சிறுத்தைப் புலிகள் போன்ற கொடிய வன விலங்குகளின் மத்தியிலே உயிரைப் பணயம் வைத்து பாடுபட்டுக்கொண்டிருக்கிற அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை தயவுசெய்து மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள் உடனடியாக முடித்துத்தருவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்களும் அப்பிரச்சினையை முடித்துத்தருவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முடித்துத்தர வேண்டுமென்று மன்றாடி நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் கேட்கின்றார்கள், டாக்டர் கலைஞர் ஐயா அவர்களைத் தவிர நமக்கு யார் இருக்கிறார்கள்? நமக்கு கதி ஏது? நாதி ஏது? ஏன் எங்களை கைவிட்டுவிட்டார்? ஏன் எங்களுடைய பிரச்சினையை முடிக்காமல் இருக்கிறார் என்று மிக வேதனையோடு கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, தயவுசெய்து உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்கள் இதிலே உடனடியாகத் தலையிட்டு, முதல்வர் ஐயா அவர்களிடத்திலே பேசி...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தத் தோட்டத் தொழிலாளர் ஊதிய உயர்வுப் பிரச்சினை நீதிமன்றத்திலே இருக்கிறது. நீதிமன்றத்திலே இந்தப் பிரச்சினை இருந்தாலும், தோட்டத் தொழிலாளர்களுடைய வாழ்வை வளப்படுத்திட வேண்டும் என்பதற்காகத் தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும், தொழிலதிபர்களையும் இரண்டு, மூன்று தடவை, 11-7-2006, 2-12-2006 ஆகிய தேதிகளிலே நேராக அழைத்துப் பேசியிருக்கிறோம்.

அடுத்து, இன்னும் 10, 15 தினங்களுக்குப் பிறகு இரு தரப்பினரும் வருகைதந்து பேசுவதாக இருக்கிறார்கள். ஆகவே, இந்த ஊதிய உயர்வுப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து, அந்தத் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வுக்கு இந்த அரசு நல்ல முடிவை எடுக்கும் என்ற உறுதியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2007 ஜனவரி 24

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், எழுச்சிமிகு இளைஞர் அணியினுடைய தலைவர் அண்ணன் ஸ்டாலின் அவர்களுக்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வால்பாறை தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருப்பது, அதனைச் சுற்றுலா மையமாக அறிவிக்கவேண்டுமென்ற கோரிக்கையினை சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–05*

ஆழியாறிலிருந்து வால்பாறைக்கு ரோப்–கார். அங்கே வால்பாறைக்கு வருபவர்கள் 40 வளைவுகளில் ஏறி வரவேண்டும். அந்த 40 வளைவுகளுக்கு மேலே, குடியிருப்புப் பகுதிக்கு போக அங்கேயிருந்து ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் அளவிற்குப் பயணம் செய்ய வேண்டும். அங்கே போனால் ஒரு எஸ்டேட்டில் 100 வீடுகள்தான் இருக்கும். அப்படியென்றால் 56 டிவிஷன்ஸ் இருக்கின்றன. 156 எஸ்டேட்ஸ் இருக்கின்றன. ஒரு எஸ்டேட்டில் 100 வீடுதான் இருக்கும். வால்பாறைக்கு போய் அங்கேயிருந்து ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் போக வேண்டும். ஆகவே, அதனை மனதிலே வைத்துக்கொண்டு வால்பாறைக்கு ஆழியாறிலிருந்து ஒரு ரோப்–கார் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும். அந்தக் காலத்திலே டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் மலைக்கள்ளன் படத்திற்கு கதை எழுதிய அந்த சினிமாவிலே அத்தகைய ரோப்–காரைக் காட்டுகிறார்கள். அவர்தான் அந்தப் படத்திற்கு கதை எழுதியிருக்கிறார். ரோப்–கார் வசதி செய்துதர கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆகவே, ரோப்–கார் வசதியை அமைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை மெயின் ரோடிலே யானைகள் பட்டப் பகலில் வழியில் நிற்கும். டிராபிக் ஜாம் ஆகிவிடும். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்கள் வந்தபோது காட்டு யானைகளை வழியிலே பார்த்தார் என்று நினைக்கிறேன். எனவே, அங்கு ஒரு மாற்று வழியை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை அரசு மருத்துவமனையிலே பிரசவம் என்று சொன்னால், 100 கி.மீ. தூரத்தில் இருக்கும் கோயம்புத்தூருக்குத்தான் கொண்டுவர



2007 ஜனவரி 24] [திரு. கோவை தங்கம்]

வேண்டும். பிரசவம் என்றாலே அங்குதான் கொண்டுவர வேண்டும். விபத்து என்றாலும் கோயம்புத்தூருக்குத்தான் கொண்டுவர வேண்டும். சென்ற முறைதான் எங்களுடைய மத்திய அமைச்சர் அன்புத் தலைவர் ஜி.கே. வாசன் அவர்களிடத்திலே நிதியைப் பெற்று. அங்கே அந்த மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கு நானும் என்னுடைய நிதியையும், ஞானதேசிகன் அவர்கள் அனுப்பிய நிதியையும் வைத்து அங்கே கூடுதலாகக் கட்டடங்களைக் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். அந்த அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோட்டூர் அரசு மருத்துவமனை, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனை, ஆழியாறு மருத்துவமனை, அதேமாதிரி அங்கலக்குறிச்சி மருத்துவமனை ஆகியவற்றை விரிவுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறையிலே இருக்கிற பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் இல்லை. கூடுதல் வகுப்பறைகள் இல்லை. கழிப்பிட வசதி இல்லை. குடிநீர் வசதி இல்லை. இதையெல்லாம் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கோயம்புத்தூரிலிருந்து, ஒரு கவன ஈர்ப்பு-

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஒரேயொரு நிமிடம். கவன ஈர்ப்புக் கொடுத்ததற்காக, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வந்து அந்த வேட்டைக்காரன்புதூர் பள்ளியைப் பார்வையிட்டு, உடனடியாக நடவடிக்கை எடுத்தார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, உணவுத் துறை அமைச்சர் அவர்கள் – இதுவரை வால்பாறைக்கு எந்த அமைச்சர்களும் வந்ததில்லை; கலெக்டர் வந்தது இல்லை. அப்படிப்பட்ட ஒரு இடத்திலே, இரவோடு இரவாக, அங்கே வந்து ரேஷன் கடைகளைப் பார்வையிட்டு, ஒரு நாளைக்கு 20 டன், 30 டன் அரிசிகளைப் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்தார். அவருக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** போதும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மாற்றுப் பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே நீண்ட காலமாக தொழிற்சாலைகள் எல்லாம் முடங்கிடக்கின்றன. அவற்றைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல ஆழியாறியிலும் நெல்லித்துறை மன்னம் பாலம், அதேபோல அர்த்தநாரிப்பாளையம் பாலம் ஆகிய இந்த இரண்டு பாலங்கள் நீண்டகாலமாகக் கட்டி முடிக்காமல் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, இதுகுறித்து சென்ற ஆட்சியில் 20 முறை இந்தச் சட்டமன்றத்திலே அந்த இரண்டு பாலங்களுக்காகக் கேட்டேன். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டே சொன்னேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உங்களுடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 20 இலட்சம், 30 இலட்சம் மதிப்புள்ள பாலத்தைக்கூட கட்டிக்கொடுக்கவில்லையென்று நேருக்கு நேராகவே இந்த அவையிலே நான் பதிவு செய்திருக்கிறேன். வாதாடியிருக்கின்றேன். ஆனால், நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே அந்த இரண்டு பாலங்களைக் கட்டுவதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து இந்த அளவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் ஐயா அவர்கள் வால்பாறை தொகுதியின் மேல் தனிக் கவனம் செலுத்தி, தாழ்த்தப்பட்ட மக்கள்மீதும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்மீதும், அன்பு வைத்து உதவிபுரிந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், வணக்கம். ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

*முற்பகல் 11–10*

***டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத வகையில் இந்த மாமன்றத்தில் தொடர்ந்து 50 ஆண்டு கால உறுப்பினராக இருந்து, பொன் விழா கொண்டாட இருக்கின்ற பிறவிப் போராளி முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இந்த அரசு 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற மொழிக்கிணங்க, கடந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் சொன்னதையெல்லாம் நிகழ்த்திக் காட்டி, விழா அரசாக வீற்றிருக்கிறது. சமீப கால உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அறிந்த அடுத்த கணமே சமூக நீதிக் காவலரும், தமிழினப் போராளியுமான எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் விடுத்த அறிக்கைக்கேற்ப, இந்திய





அரசியலமைப்புச் சட்டம், காலத்தின் தேவைக்கேற்ப இயற்றப்பட மத்திய அரசை வலியுறுத்துவதை எங்களின் பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது.

கடந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் வேளாண் தொழிலைத் தங்களுடைய வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள 60 விழுக்காடு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். என்றாலும்கூட உழவர் பெருமக்களின் நிலை என்னவென்று பார்த்தால், சொல்லவொண்ணா சோகம்தான் மிஞ்சி இருக்கிறது. உழவர் பெருமக்களின் நிலை உயர்ந்தபாடில்லை.

மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண் துறையின் பங்கு 18 சதவிகிதமே இருந்தாலுங்கூட, வேலைவாய்ப்பில் 50 விழுக்காடு இத்துறையே அளிக்கிறது. எனவே, வேளாண்மைத் துறையின் திட்ட முதலீட்டுத் தொகை உயர்த்தப்பட வேண்டும். இத்துறைக்கான அடிப்படைக் கட்டமைப்புகளில் அதிக அளவு முதலீடு செய்யப்பட வேண்டும்.

வேளாண் இடுபொருள் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆனால், விளைபொருள் விலை ஏறுவதில்லை. இந்தியா ஒரு விவசாய நாடு என்று பள்ளிகளிலே படித்திருப்போம். ஆனால், இந்தியாவில் உழவன் ஒருவனுக்குத்தான், தான் பெற்ற பிள்ளைக்குப் பெயர் வைக்க உரிமையில்லை என்பதைப் போல, தான் உற்பத்தி செய்கின்ற பொருளுக்கு தகுந்த விலை நிர்ணயம் செய்ய அருகதை இல்லை. வேளாண் விளைபொருட்கள் அனைத்திற்கும், அவற்றின் உண்மை உற்பத்தி விலையைவிடக் கூடுதலாக இருக்குமாறு விலை நிர்ணயம் செய்திட வேண்டும். உழவர்களின் அனைத்துப் பயிர்களுக்கும் அரசின் நேரடிக் கொள்முதலை விரிவுபடுத்த வேண்டும். உழவர் சந்தைத் திட்டம் அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

வங்கிகள் வேளாண்மைக்கு அதிக அளவில் கடன் வழங்க வழி செய்யப்பட வேண்டும். வீட்டிற்கும், வியாபாரத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் விண்ணப்பித்த உடனே மின் இணைப்பு வழங்குவதைப்போன்று, விவசாயத்திற்கும் மின் இணைப்பு உடனடியாக வழங்கப்பட வேண்டும். விவசாய மின் இணைப்புகளுக்கு ஆண்டு உச்சவரம்பு நிர்ணயம் செய்துகொள்ளக் கூடாது.

உழவுத் தொழிலில் நேரடி அனுபவம் உடைய உழவர்களை உள்ளடக்கிய வேளாண் மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும். கரும்புக்கு மத்திய அரசும், மாநில அரசும் வழங்குகின்ற கூடுதல் விலையை உயர்த்திடல் வேண்டும்.

சர்க்கரை ஆலைகளில் எத்தனால் தயாரிக்க ஊக்குவிக்க வேண்டும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் மது உற்பத்தி செய்ய அனுமதிக்க வேண்டும்.

தோட்டக் கலைப் பயிர்கள், காய் கனிகள், மலர்கள், மூலிகைகள் ஆகியவற்றைப் பயிரிட ஊக்கமளிக்கப்பட வேண்டும்.

விளைபொருட்களின் விற்பனைக்கும், ஏற்றுமதிக்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும்.

கடந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரிலேகூட நமது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பழுப்பு நிற அரிசி உத்தராஞ்சல் மாநிலத்திலிருந்தும், வெள்ளை நிற அரிசி ஆந்திர மாநிலத்திலிருந்தும் வந்தது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்றழைக்கப்படுகின்ற தஞ்சைத் தரணியிலே விளைந்து கிடக்கின்ற பல இலட்சம் டன் நெல் அறுவடை செய்ய கூலித் தொழிலாளர்கள் கிடைக்காமல் அழிந்துவிடும் நிலையில் உள்ளது என்று நேற்றைய செய்தித் தாளில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்கள். கதிரடிக்கும் இயந்திரங்களை வேளாண் பொறியியல் துறையின்வாயிலாக ஏற்பாடு செய்து அந்த அவல நிலையை நீக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

அதேபோல பொது விநியோகத் திட்டம், சத்துணவுத் திட்டம் போன்றவற்றிற்கான தானியங்களை தொலைவிலிருந்து கொண்டுவரப் படுவது தவிர்க்கப்பட வேண்டும். தொலைவிலிருந்து கொண்டு வரும்பொழுது ஏற்படும் விரயங்களைத் தவிர்க்க, கிராம, ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய, மாவட்ட அளவிலான தானிய வங்கிகள் அமைக்கப்பட வேண்டும். தானிய வங்கிகள் சேமிப்புக் கிடங்குகளாக மட்டுமின்றி, விளைபொருட்களைப் பதப்படுத்துவதற்காகவும், மதிப்பூட்டி பொருளாக்கும் பட்டறைகளாகவும் அமைக்கப்பட வேண்டும்.

அனைத்து விவசாயிகளுக்கும், அனைத்து வகையான பயிர்களுக்கும் காப்பீடு வழங்கப்பட ஆவன செய்ய வேண்டும்.

வட்டார அளவில் மண் பரிசோதனை நிலையம் அமைக்கப்பட்டு அனைத்து விவசாயிகளுக்கும், அனைத்து பயிர்களுக்கும் மண் பரிசோதனை செய்து அவர்கள் உரமிடும் செலவைக் குறைத்து உற்பத்தியை அதிகரிக்க ஆலோசனை வழங்க வேண்டும்.





இயற்கை வழி வேளாண்மை பற்றிய ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பயிர்களை விளைவிக்க அனுமதிக்கக்கூடாது என்பதை வலியுறுத்துகிறோம்.

உணவுப் பொருள்களின் கட்டுப்பாடற்ற இறக்குமதியைத் தடுக்கவேண்டி, மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

அனைத்திற்கும் மேலாக, பள்ளிப் பாடத்தில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை வேளாணமையை ஒரு தனிப் பாடமாக அமைக்க வேண்டும்.

இந்த வேளாண் துறையிலே முக்கியமாக நாங்கள் சொல்லவேண்டிய கருத்து என்னவென்றால், கடந்த காலத்திலே உழவர்களினுடைய கடன் தள்ளுபடி செய்யப்பட்டது, மிகுந்த பெருந்தன்மையோடு. ஆனால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களிலே இந்த கடன் தள்ளுபடியிலே பாரபட்சம் பார்க்கின்ற நிலைமை நிலவி வருகிறது. அதற்குக் காரணம் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணிபுரிபவர்கள் எந்த மாற்றத்திற்கும் உட்படாது தொடர்ந்து தாங்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து, பணியிலேயிருந்து ஓய்வுபெறும்வரை ஓரே கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிவதால் அவர்கள் குட்டி ராஜாக்கள் போல செயல்படுகிறார்கள். குறிப்பாக, தருமபுரி மாவட்டத்திலே, விவசாயிகள் மிகவும் வேதனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

இந்தியா கிராமத்தில் வாழ்கிறது என்பதற்கேற்ப 10 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க உள்ளதை வரவேற்கிறோம். அதேசமயம் கிராமங்கள்தோறும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க, தடை செய்யப்பட்ட பகுதிகளில் ஏழையெளிய மக்கள் குடியிருந்துகொண்டு வருகிறார்கள். மனித வாழ்வுக்கு உணவுத் தேவைக்கு அடுத்தாற்போல் இருப்பிடம்தான் தேவை. எனவே, இருப்பிடமில்லா மக்களை கணக்கெடுத்து, கிராமங்கள்தோறும் ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் நிலங்களை அரசு கையகப்படுத்தி, வீட்டுமனைகளாகப் பிரித்து, வீடற்ற ஏழையெளிய மக்களுக்குக கொடுத்துவிட்டு, தடை செய்யப்பட்ட பகுதிகளில் வாழ்கின்றவர்களை அப்புறப்படுத்த அறிவுறுத்தப்படலாம்.

ஒரு நாட்டினுடைய மனித வள மேம்பாட்டிற்கு முதல் காரணி ஆரோக்கியமான நோயற்ற வாழ்வே. அதற்கு ஆதாரமான வருமுன் காப்போம் திட்டத்தை நாங்கள் முழு மனதார வரவேற்கின்றோம். தமிழக இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சராக வீற்றிருக்கின்ற மருத்துவர் சின்ன அய்யா அவர்கள் நமது முதல்வரிடம் அளித்திட்ட உத்தரவாதத்திற்கேற்ப, மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும். அதன்மூலம் மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கையை இரு மடங்காக உயர்த்திட முனைந்திட வேண்டும்.

கிராமப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகளை அளிப்பது அரசு ஆரம்ப சுகாதார நிலையம். அங்குள்ள மருத்துவர்கள் 5 மணிநேரம்தான் பணி செய்கிறார்கள். அதற்குப்பிறகு கிராம மக்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பது அரிதாகிறது. எனவே, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும், பணியாளர் குடியிருப்பு வசதிகளுடன்கூடிய 24 மணி நேரமும் செயல்படுகின்ற நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும். வட்டார அளவில் உள்ள அனைத்து சுகாதார நிலையங்களும் 30 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனைகளாக உயர்த்தப்பட வேண்டும். அனைத்து சுகாதார மையங்களிலும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கான ART மருத்துவச் சிகிச்சை அளிக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

மாவட்ட மருத்துவமனையாக இருந்தாலும் சரி, வட்ட மருத்துவமனையாக இருந்தாலும் சரி, அங்கே காலியிடங்கள் நிறைய இருக்கின்றன என்ற அடிப்படையிலே உதவி மருத்துவர்களைத் தேர்ந்தெடுப்பதில், தேர்ந்தெடுத்தவர்களைப் பணி அமர்த்துவதில் பெரும் சிக்கல் நிலவுகிறது. நிறைய உதவி மருத்துவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்களை posting போட்டு அங்கே பணிக்கு அமர்த்துகிறார்கள். ஆனால், அடுத்த நாளிலோ அல்லது அடுத்த மாதத்திலோ அல்லது அடுத்த வாரத்திலோ அவர்கள் மாற்றுப் பணிக்குச் சென்று விடுகிறார்கள். அது அரசு பொது மருத்துவமனைக்காக இருந்தாலும் சரி அல்லது அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக இருந்தாலும் சரி அல்லது கிராமச் சுகாதார செவிலியர் இடமாக இருந்தாலும் சரி, அந்நிலையை மாற்றிட எந்த இடம் காலியாக இருக்கிறதோ, அந்த இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்லி, அந்த இடத்திற்கு மனுக்களைப் பெற்று, அவர்களைத் தேர்ந்தெடுத்து, அங்கே அவர்களைப் பணி அமர்த்தினால், உடனடியாக மாற்றிக் கொண்டு சென்று அந்த இடத்தை காலியிடங்களாக விட்டுச் செல்வதைத் தவிர்ப்பதற்கு இது நல்ல ஆலோசனையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.





அடுத்து, ஒரு முன்னோடித் திட்டமாக, 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில், வரைவு அறிக்கை தேசிய அளவிலே அறிவிக்கப்படுவதுதான் வழக்கமாக உள்ளது. ஆனால், தமிழ்நாடு அரசு, வரைவு அறிக்கைகளை மாவட்ட அளவில் மக்கள் கருத்துகளை அறிய எடுக்கப்பட்ட நடவடிக்கையின்மூலம் இந்தியாவிற்கே முன்னுதாரணமாக விளங்குகின்ற முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை நாங்கள் பாராட்டுகிறோம். அதுபோல, மருத்துவ மாணவர்களுக்கு, மருத்துவக் கல்வியிலே, மருத்துவத்தை மட்டும் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு இயல்பாகவே பொதுமக்களிடம் தொடர்பு கொள்வதிலும், நிர்வாகத் திறனோடு செயல்படுவதிலும் திறன் குறைவாக இருக்கிறது. அதனால், இந்திய மருத்துவக் கழகத்திற்கு, இந்தப் பொதுமக்கள் தொடர்பு, நிர்வாகத் திறன் போன்றவற்றை மருத்துவப் பாடத்தில் சேர்க்க தமிழக முதல்வர் அவர்கள் பரிந்துரைக்க வேண்டுகிறோம்.

இன்று, தமிழகத்திலே மிகப் பிரபலமாகப் பேசப்படுவது kidney racket என்று சொல்லப்படுகின்ற சிறுநீரகத் திருட்டு. இந்தச் சிறுநீரகத் திருட்டில் கொடையாளிகளை நிர்ணயிப்பது ஒரு கமிட்டி. அந்தக் கமிட்டியிலே எந்த மருத்துவரும் இடம் பெறுவது இல்லை. வழக்கமாக அந்தக் கமிட்டியிலே இருப்பவர்கள், D.M.S. மற்றும் D.M.E. போன்ற உயர் மட்டத்திலிருந்து வருபவர்கள். அதுபோல, அந்தக் கொடையாளிகள்கூட, 10 சதவிகிதம்தான் உறவினர்களாக இருக்கிறார்கள். மீதி 90 சதவிகிதத்தினர் உணர்வுபூர்வமாக ஒன்றுபட்டவர்கள்; அதாவது, emotionally attached category என்ற தரப்பில் வருபவர்களிடத்திலிருந்துதான் தவறு நடக்கிறது. எனவே, அந்த உணர்வுபூர்வமாக ஒன்றுபட்ட, emotionally attached category-ல் கொடையாளிகளை ஆராய்ந்து அறிய ஏதாவது சேவைச் சங்கங்களை உள்ளடக்கிய ஒரு கமிட்டியாக இருந்தால், அவர்கள் யார், எதற்காகக் கொடுக்கிறார்கள், என்ன நிலையிலே கொடுக்கிறார்கள், பொருளாதார நிலையைச் சுட்டிக்காட்டிக் கொடுக்கிறார்களா என்று ஆய்ந்து பார்க்க முடியும். எனவே, kidney racket போன்ற அசம்பாவிதமான நிகழ்வுகளைத் தடுக்க முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மருத்துவர் சின்ன அய்யா அவர்கள் மருத்துவமனைகளின் முறையற்ற விளம்பரங்களைக் கட்டுப்படுத்த மத்திய அரசு சட்டம் இயற்றவுள்ளது என்று அறிவித்திருக்கிறார். அதனை தமிழகம் முன்னுதாரணமாக ஏற்கெனவே

உள்ள Magical Remedies Act என்ற சட்டத்தினைக் கடுமையாக அமல்படுத்தி, அறியாமையில் அல்லல்படுகின்ற மக்களைக் காப்பாற்றவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக, மிகவும் பிரபலமாகாத ஒரு கொடுமை சுகாதாரத் துறையில் நடந்து கொண்டிருக்கிறது, என்னவென்றால், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை. கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை என்பது மிகவும் நுட்பமான ஒரு விஷயம். கல்லீரலைப் பிரேதத்திலிருந்துதான் எடுக்க வேண்டும். ஆனால், கடந்த காலத்திலே கோவையில் உயிருடன் வாழ்பவர்களிடமிருந்து கல்லீரலை எடுத்து மற்றவருக்குப் பொருத்தியதால், கல்லீரல் எடுத்தவரும், கல்லீரல் பொருத்தியவரும் இருவரும் இறந்து விட்டார்கள். இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதுபோன்ற நிலைமைகளைத் தடுக்க ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடரிலே இந்த அரசை ஏதாவது குறை கூற வாய்ப்பு இருக்கிறதா என்று தேடி அலைந்து கொசு அளவிற்கே கிடைத்திட்ட சிக்குன் குனியா காய்ச்சலைக் கட்டுப்படுத்தியமைக்கு இந்த அரசை முழு மனதோடு பாராட்டுகிறோம்.

அடுத்தபடியாக, என்னை இந்த அவைக்கு அனுப்பிவைத்த என் தொகுதி மக்களின் தேவைகளைப் பற்றி எடுத்துவைக்க விழைகின்றேன். எனது தொகுதி மக்களின் ஜீவாதாரப் பிரச்சினை ராஜா குமாரபாளையம், பொய்யேரி மற்றும் மோகனூர் வாய்க்கால்கள் ஆகும். இந்த வாய்க்கால்கள் இரண்டும் மன்னர் காலத்தவை ஆகும். அவற்றின் பாசனப் பரப்புகள் அரசால் இரட்டிப்பாக ஆக்கப்பட்டாலும்கூட, அவ்வாய்க்கால்களின் பாசன மேம்பாட்டிற்கான வேலைகள் எதுவும் கடந்த காலங்களில் செய்யப்படவில்லை. எனவே, பாசன மேம்பாட்டிற்கு உலக வங்கியின் நிதி உதவி ஒப்புதலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் வேளையில், ஒப்புதல் கிடைத்தவுடனேயே மேற்கூறிய இரு வாய்க்கால்களையும் நவீனப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலேயே (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புத் திட்டமாக காவிரியின் குறுக்கே மோகனூர் வாய்க்கால் இடையே பாலத்தை அமைக்க ஆய்வுக்குப்பின் நிதி ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார். தற்போது ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. வரும் நிதிநிலை அறிக்கையிலே அந்தப் பாலத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்து எங்கள் பகுதி மக்களுடைய நீண்ட நாள கோரிக்கையினை நிறைவேற்றுமாறு தாழ்ந்த பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



எனது தொகுதியிலே இருக்கின்ற பரமத்தி வேலூர் அரசு பொது மருத்துவமனை பெயரளவில் வட்ட மருத்துவமனையாக இருந்தாலும எந்தவொரு சிறப்பு மருத்துவப் பிரிவிற்கும் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் பரமத்தி வேலூர் அரசு மருத்துவமனையை 50 படுக்கை வசதிகளுடன்கூடிய விபத்து மற்றும் அவசர கால சிகிச்சைப் பிரிவு, கண் மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், பல் மருத்துவம் போன்ற சிறப்பு மருத்துவப் பிரிவுகள் அடங்கிய மருத்துவமனையாக மாற்றித்தர வேண்டுகிறேன். Tamil Nadu Health System Project-ன் வல்லுநர் குழு பார்வையிட்டு, ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள வேலைகளைச் செயய சிபாரிசுகள் செய்திருக்கிறது. அதனைக் குறைத்திடாமல முழுவதையும் ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன். எனது தொகுதியிலே இருக்கின்ற ஒரே அரசு ஆலை, சேலம் மத்திய கூட்டுறவு சர்க்கரை ஆலை என்பது அனைவருக்கும் தெரியும். அந்த வகையிலே 1964 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அந்த ஆலை கடந்த 40 ஆண்டுகளில் காவிரி மற்றும வாய்க்கால் பாசனங்கள் விரிவடைந்த நிலையிலே, சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் கூடுதலாகக் கரும்பு பயிரிடுகின்றனர்.

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** டாக்டர், நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** எனவே, ஆலையின் அரவைத் திறனை 2,500 டன்னிலிருந்து 5,000 டன்னாக உயர்த்திட ஆவன செய்ய வேண்டுகிறேன். கடந்த ஆண்டு எத்தனால் தயாரிக்க அனுமதித்ததற்கு இந்த அரசுக்கு நன்றி கூறுகிறேன். Co-generation என்று அழைக்கப்படுகின்ற மின்சாரம் தயாரிக்கும் ஆலையையும் அமைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். மேலும் நலிவடைந்த நிலையிலுள்ள அவ்வாலை சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் வாங்கியிருக்கின்ற ரூபாய் 71 கோடி ரூபாய் கடனை அரசு பங்காக 51 சதவீதம் எடுத்துக்கொண்டு, அவ்வாலையைக் கடன் சுமையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே, வில்லிபாளையம் மற்றும் ஜேடர்பாளையத்தில் துணை மின் நிலையம் அமைக்க இடம் தயாராக இருக்கிறது. அவ்விடங்களிலே துணை மின் நிலையம் அமைக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நல்லூர் கந்தம்பாளையம் துணை மின் நிலையத்திலுள்ள மின்மாற்றித் திறனை அதிகரிக்க ஆவன செயய அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் க. நெடுஞ்செழியன்] [2007 ஜனவரி 24

உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களே, எனது தொகுதியிலுள்ள பரமத்தி ஒன்றியத்தில் பல ஊரகச் சாலைகளை மேம்படுத்தத் தேவை இருக்கிறது. நபார்டு வங்கி உதவி பெற்று இந்தச் சாலைகளை மேம்படுத்த வேண்டிய நிலையிருக்கிறது. நபார்டு வங்கி ஒரு நிபந்தனையை விதித்துக்கொண்டு 7½ மீ. அகலமும், 2 கி.மீ. நீளத்திற்கும் மேலாக இருப்பதைத்தான் தேர்ந்தெடுத்துத் தார்ச் சாலைகளாக மாற்றுகிறார்கள். அந்த நிபந்தனைக்குக்கீழே உள்ள ஊரகச் சாலைகளையும் தார்ச் சாலைகளாக மாற்றிட நபார்டு வங்கி உதவி பெற்று ஆவன செய்து அக்கிராம மக்களின் நிலை மேம்படச் செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

அதேபோல ஓமலூர் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு மையத்தை அமைக்க மத்திய அரசு 1½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருக்கிறது. அந்த நிதியை முழுமையாகப் பெற்று, அந்த அரசு மருத்துவமனையை மேம்படுத்த ஆவன செய்யுமாறு தாழ்ந்த பணிவன்போடு கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு திரு. ஞா. ஜாண் ஜோசப்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பைத் தந்தமைக்காக முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமலாகிக் கொண்டிருக்கும் ஒரு டஜனுக்கும் அதிகமான திட்டங்களோடு புதிய சில திட்டங்களையும் தாங்கிய வண்ணமாய் கவர்னர் உரை அமைந்திருப்பதை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கின்றது.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நல்ல பல திட்டங்களைத் தந்து கொண்டிருக்கின்ற இந்த அரசைப் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாகத் தேங்காய்ப்பட்டணம் மீன்பிடித் துறைமுகம், குளச்சல் மீன்பிடித் துறைமுகம், குளச்சல் வர்த்தகத் துறைமுகம், இரப்பர் பூங்கா, மலர் ஆராய்ச்சி மையம் போன்றவற்றிற்காக மாவட்ட மக்கள் சார்பாக அரசுக்கு மீண்டும் நன்றியை உரித்தாக்கிக்கொள்கின்றேன். இவற்றைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



2007 ஜனவரி 24] [திரு. ஞா. ஜாண் ஜோசப்]

மேலும் ஒரு சிறிய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மத்திய விளையாட்டு ஆணையத்தின் பயிற்சி மையம் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் அமையவிருந்த நிலையில், அங்கே போதிய இடவசதி இல்லையென்ற காரணத்தைக் காட்டி வேறு மாவட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கான ஒரு முயற்சி இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குமரி மாவட்டத்தில் இடவசதி இருக்கிறது. மாற்று இடத்தை நாங்கள் காட்டிக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, தயவுசெய்து இந்த விளையாட்டுப் பயிற்சி மையம் கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் அமைய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று மிக்கப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சார்ந்த இரண்டு சிறிய பிரச்சினைகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஆய்வுக்கு வந்தபொழுதும் இதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். எனது தொகுதியில் மார்த்தாண்டம் பகுதியில் ஒரு பஸ் நிலையம் இருக்கிறது. 15 ஆண்டுகளுக்கு முன்னால் காளைச் சந்தையாக இருந்த பகுதியில் அந்த பஸ் நிலையம் அமைக்கப்பட்டது. இப்பொழுதும் கிட்டத்தட்ட அது ஒரு காளைச் சந்தை போலவே காட்சியளிக்கிறது. அந்த பஸ் நிலையத்தைச் சீரமைக்கத் தேவையான நிதியைத் தரவேண்டும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் அன்றும் கேட்டேன்; இப்பொழுதும் கேட்கிறேன்.

அதுபோல தாமிரபரணி ஆற்றுக்குக் குறுக்கே குழித்துறை என்ற இடத்தில் ஒரு தடுப்பணை மற்றும் நடைபாலம் அமைந்திருந்தது. அது காலப்போக்கில் பாழ்பட்டுப் போனது. இப்பொழுது பாழடைந்து உடைந்த நிலையில் கிடக்கிறது. தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் நடந்து செல்லக்கூடிய அந்தத் தடுப்பணை மற்றும் நடைபாலத்தையும் கட்டுவதற்கான நிதியையும், பஸ் நிலையம் கட்டுவதற்கான நிதியையும் இந்த நிதியாண்டிலேயே ஒதுக்கித் தந்து உதவிடுமாறு மிக்கப பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–30

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தை அரசு விரிவுபடுத்தவிருப்பதாக ஆளுநர் அறிக்கை கூறுகிறது. வறியோரை முன்னேற்றுவதற்கு இதுபோன்ற திட்டங்கள் மிக மிகத் தேவையென்று மார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது.

தமிழகத்தின் கிராமப்புறங்களில் 22 சதவீத மக்களும், நகரப் பகுதிகளில் 25 சதவீத மக்களும், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்வதாக 11-வது திட்டக் குழு அறிக்கை கூறுகிறது. ஒரு குடும்பத்தின் வருட வருமானம் ரூபாய் 12 ஆயிரத்திற்குக்கீழே இருந்தால், அது வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பம் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. இது அடிப்படையிலேயே தவறான அணுகுமுறை, தவறான நிர்ணயிப்பு என்பது எங்களுடைய கருத்து. வறுமைக்கோட்டை எப்படி நிர்ணயம் செய்ய வேண்டும் என்று மத்திய அரசு நியமித்த Dr. Ackroyd தலைமையிலான குழு ஒரு பரிந்துரை செய்துள்ளது. அந்தப் பரிந்துரைப்படி, ஒரு மனிதன் தினமும் 2,400 கலோரி சக்தி கிடைப்பதற்குத் தேவையான உணவை உண்ண வேண்டும். அதற்குத் தேவைப்படும் பணம், பிளஸ் இதர அத்தியாவசிய செலவுகளுக்குத் தினம் தேவைப்படும் பணம்—இவ்வளவு பணம் தினமும் வருமானம் உள்ளவர்தான் வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளவர் என்று Dr. Ackroyd பரிந்துரை செய்துள்ளார்.

Dr. Ackroyd பரிந்துரைப்படி பார்த்தால், ஒரு சிறிய குடும்பத்தின், அதாவது ஒரு தந்தை, தாய் இரண்டு பிள்ளைகள் உடைய ஒரு சிறிய குடும்பத்தின் ஆண்டு வருமானம் குறைந்தபட்சம் ரூபாய் 25 ஆயிரத்திற்கு மேலே இருந்தால்தான் அது வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ள குடும்பம். எனவே, விஞ்ஞான உண்மைகளுக்கும், மனிதனின் வாழ்க்கைத் தரத்திற்கும் ஏற்றாற்போல் வறுமைக்கோட்டை நிர்ணயம் செய்து, வறுமை ஒழிப்புத் திட்டங்களை நேர்மையுடனும், மனசாட்சியுடனும் அமல்படுத்த வேண்டும். அதற்காக மத்திய அரசை மாநில அரசு அழுத்தமாக வலியுறுத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கட்சி விரும்புகிறது. மத்திய அரசு அதைச் செய்யும் வரையில், சிறுநீரகங்களை விற்பதும், குழந்தைகளை விற்பதும், வறுமையால் குடும்பத்துடன் தற்கொலை செய்துகொள்வதும் தொடர் கதையாகவே இருக்கும். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இத்தகைய சம்பவங்கள் நடக்கின்றன. எங்கே நடந்தாலும் தமிழகத்தில் இதுபோன்ற குலை நடுங்கும் சம்பவங்கள் நடக்காமல் இருந்திருக்க வேண்டும். 'கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்தக் குடி' என்ற பெருமைமிகு தமிழகத்தில் இது நடந்திருப்பது நமக்கெல்லாம் தலைகுனிவு. 'மனித உறுப்பையே காசுக்கு விற்று வறுமைக்குத் தீனி போடும் காலமே நீ தொலையாயோ' என்று ஒரு கவிதை கூறுகிறது. அதைத் தொலைக்க இந்த அரசு ஆனதெல்லாம் செய்யும் என்றே நாங்கள் கருதுகிறோம். வறுமைக்கோடு பட்டியலைப் பொதுமக்கள் பார்வையிடுவதற்கு வசதி ஏற்படுத்தி, போதிய கால அவகாசம் கொடுத்து இறுதிப்படுத்த வேண்டும் என்பது எங்களுடைய கருத்து.





நலிவுற்றோர், ஊனமுற்றோர், விதவை, முதியோர், உதவித் தொகை பெற 18 வயதுக்கு மேல் ஆண் வாரிசு இருக்கக் கூடாது என்ற நிபந்தனை தளர்த்தப்படும் என்று கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டது.. அது இதுவரையிலும் அமலாகவில்லை. அதற்குரிய அரசாணை பிறப்பிக்க வேண்டும்.

யானைக் கால் நோயாளிகளை ஊனமுற்றோராக அறிவிப்பது, மாதாந்திர ஊதியம் வழங்குவது, காப்பகம் அமைப்பது என்ற பரிந்துரைகளுடன் இயக்குநர், (மலேரியா மற்றும் யானைக் கால்) சென்னை அவர்கள், அரசுக்கு 18-9-1998-ல் கடிதம் எழுதியுள்ளார். மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள அவர்களிடம் கருணை காட்டுமாறு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பணிவாய் வேண்டுகிறேன்.

கடலில் நேரடியாகச் சென்று மீன் பிடிப்பவர்கள் மட்டுமல்லாமல், மால் முடித்தல், இரை கொருத்தல், மடி இழுத்தல், மீன் உலர்த்துதல், மீன் கொண்டு சென்று விற்றல் போன்ற பணிகளில் ஈடுபடும் இருபால் மக்களையும் மீன் தொழிலாளர்களாகப் பதிவு செய்ய வேண்டுமென ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளோம்.

கடற்கரையிலிருந்து குடிபெயர்ந்து வேறு பகுதிகளில் குடியிருக்கும் உள்நாட்டு மீனவர்களில் அநேகம் பேர் இதே தொழிலைத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள், குறிப்பாக எங்களுடைய மாவட்டத்தில். எனவே, அவர்களையும் மீனவர் பட்டியலில் சேர்க்க வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11-35*

சுனாமிக்குப் பின் இரண்டு வருடங்கள் தாண்டிய பின்னரும், சுனாமியால் பாதிக்கப்பட்டோரில், சிலருக்கு இன்னமும் நிவாரணம் அளித்தபாடில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அறிக்கை பெற்று, அத்தகையோருக்கு உரிய நிவாரணம் வழங்கவேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்ட ஊராட்சி என அறிவிக்கப்பட்ட ஊராட்சிகளில், கடற்கரையில் இருந்து 1 கி.மீ. வரையில் உள்ள குடிசை வீடுகளுக்கு மாற்று வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. 1 கி.மீ. என்பதை ஊராட்சி முழுமைக்கும் விரிவுபடுத்தவேண்டும். மேலும், அரசு கட்டிக்கொடுத்த, மிக மோசமாகப் பழுதடைந்துள்ள மீனவக் காலனி வீடுகளையும் இத்திட்டத்தில் சேர்க்க வேண்டும். எனது தொகுதிக்குட்பட்ட கொல்லங்கோடு பேரூராட்சியிலும் மேற்கூறிய திட்டங்களை அமல்படுத்துமாறு வேண்டுகிறேன்.

அரசுப் புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருப்போருக்கு, பட்டா வழங்கும் அறிவிப்பு இலட்சக்கணக்கான குடும்பங்களை மகிழ்ச்சியின் எல்லைக்கே கொண்டு செல்லும் என்பதில் சந்தேகம் இல்லை. எனது தொகுதியில் களியல் வருவாய்க் கிராமத்தில், செண்பகத்தரிசு, சிற்றாறு, சக்கரபாணி, ஆம்பாடி போன்ற பகுதிகளில், நூற்றுக்கணக்கான குடும்பங்கள் 40 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருந்து வருகின்றனர். இந்தப் பூமி, அணைப் புறம்போக்கு என்று ஏதோ காலத்தில் தவறுதலாக வகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அணைக்கும், இப்பகுதிகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இதுகுறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம் வந்தபோது, அவருடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்துள்ளேன். இப்பகுதி மக்களுக்கும், அவர்கள் குடியிருக்கும் பகுதிக்கும் குடிமனைப் பட்டா வழங்க வேண்டும்.

ஆசிரியர் நியமனங்களின்போது இரு மொழி பேசப்படும் மாவட்டங்களில் மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மீடியங்களுக்கு நியமனங்கள் நடத்தப்படவில்லை. மாணவர்களின் நலன் கருதி, இந்த நியமனங்களை உடனே நடத்தவேண்டும். பாரபட்சமான போக்கைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். மேலும், உதவி ஆய்வாளர்கள் வேலைக்கு மனு செய்யும்போதே, தமிழ் தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ் கோரப்படுகிறது. இரு மொழி மாவட்டங்களில், இது பெரும் பிரச்சினையாக உள்ளது. எனவே, பிற துறைகளில் அமலில் இருப்பதுபோல, ஏற்கெனவே அமலில் இருந்து வருவதைப்போல, வேலையில் சேர்ந்த பிறகு, தமிழ்த் தேர்வை எழுத அனுமதிக்க வேண்டும்.

கிராம நிர்வாக அலுவலர்களை நியமனம் செய்யும்போது அதற்குரிய பயிற்சிமூலம் ஏற்கெனவே தேர்ச்சி பெற்று வேலைவாய்ப்பு அலுவலகங்களில் (மணியடிக்கப்பெற்றது) பதிவு செய்து காத்து இருப்போருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நடுநிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்ற அரசாணை, குமரி மாவட்டத்தில் மட்டும் இதுவரை அமலாகவில்லை. இதில் அரசின் தலையீட்டை வேண்டுகிறேன்.

ஒரு ஏக்கருக்கு மேல் சொந்த பூமி இருந்தால்தான், கூட்டுறவுக் கடன் பெற முடியும் என்று புதிய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தைப்போல, குத்தகை நிலத்தில் விவசாயம் செய்தாலும், தொடக்க வேளாண்மை வங்கிமூலம் கடன் கிடைக்கச் செய்ய வேண்டும்.





கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்தபோது, 2006 மார்ச் 31-க்குப் பின் கடனை அடைத்தவர்களுக்கும், அத்தொகை திரும்பத் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

சுய உதவிக் குழுக்கள் மேம்பட பொருளாதார நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஆளுநர் உரை கூறுகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** நேரம் ஆகிவிட்டது, போதும் முடித்து விடுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இதோ முடித்து விடுகிறேன். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பதற்கு, அரசு உதவினால்தான் அவை செயலூக்கமாக இருக்கும். நல வாரிய உதவிகள் பயனாளிகளைச் சென்றடைய வருடக் கணக்கில் ஆகிறது. போதிய பணியாளர்களை நியமனம் செய்வதுடன், நல வாரிய உதவிகளை அளிப்பதற்கு, ஒரு கால வரையறை நிர்ணயம் செய்து அறிவிப்பு வெளியிட வேண்டும். நல வாரிய உதவிகள் உரியவர்களிடம் சென்று சேராமல் தவறான கைகளில் சேர்ந்ததாகப் புகார்கள் உள்ளன. துறை அதிகாரிகளிடம் முறையிட்டால், அதிகாரிகள் கண்டு கொள்ளாமலே இருக்கின்றனர். இந்நிலையில், தவறுகளுக்கு அதிகாரிகளும் உடந்தையா என்ற சந்தேகம் பொதுமக்களிடம் எழுவது இயல்பே. அரசின் கவனத்திற்கு இந்த விஷயத்தையும் கொண்டு வர விரும்புகிறேன். இந்த வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றி கூறி அமர்கிறேன்.

முற்பகல் 11–40

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி.

**திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தத் தலைவருக்கும் இல்லாத பெருமையைப் பெற்று ஐந்தாம் முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும், எதையும் வென்றெடுக்கும் ஆற்றலைப் படைத்த, முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, எனது கன்னிப் பேச்சைத் துவக்குகின்றேன்.

[திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி] [2007 ஜனவரி 24

திருவோணம் ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராக தொடர்ந்து பணியாற்றிட எனது தந்தை அவர்களுக்கு வாய்ப்பளித்து, அவர் வழிவந்த என்னை சென்னைச் சட்டக் கல்லூரியினுடைய மாணவரணிச் செயலாளராகவும், அதேபோல தஞ்சை மாவட்டத்தினுடைய கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளராகவும் செயல்பட்டு இன்று தமிழகத்தை ஆட்சி செய்யும் சட்டம் இயற்றும் பாரம்பரியமிக்க இந்த அவையிலே இந்த இளம் வயதில் இடம் பெறக் காரணமாகவும், என்னைப்போன்ற பல இளம் உறுப்பினர்களும் இந்த அவையிலே இடம் பெறுவதற்குக் காரணமாகவும், பொதுவாக இளைஞர்கள் தங்களைப் பொது வாழ்க்கையில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு உந்துதலாகவும், வார்த்தெடுத்து வழி நடத்தக்கூடிய வழிகாட்டியாகவும், தமிழினத்தின் இளம் தலைவராகவும், திராவிட இயக்கத்தினுடைய அடுத்த வாரிசாகவும், எங்களையெல்லாம் வழி நடத்தக்கூடிய எங்கள் நெஞ்சம் நிறைந்த தலைவர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய கோடானுகோடி நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

உறங்கிக் கிடந்த தமிழர்கள், ஓய்ந்துபோன பாட்டாளி மக்கள், பட்டினி கிடக்கிற நிலைமைக்கு ஆளாகியிருந்த ஏர் உழவர்கள், கவனிப்பாரற்ற ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், உரிமைகள் பெறாமலே பல்வேறு வகையிலே பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள் அனைவரும் இந்த ஆட்சியிலே ஏதேனும் ஒரு வகையிலே நலம் பெற்று மன நிறைவோடு, மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளம்தான் பொங்கல் விழா பூரிப்போடு தமிழகம் எங்கும் கொண்டாடப்பட்டது. அப்படிப்பட்ட ஆட்சியைத் தந்திருப்பவர் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் ஓர் அரசியல்வாதியாகத் தன்னைக் கருதாமல், மனித நேயத்தை முன் நடத்திச் செல்லக்கூடிய ஒரு தலைவராகத் தன்னை ஆக்கிக் கொண்டு செயல்படுகிறார் என்பதற்கு எடுத்துக்காட்டு பல்வேறு உதாரணங்கள்.

இன்றைக்கு நாட்டிலுள்ள தலைவர்களுக்கெல்லாம் தலைவராக நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள், 'First impression is the best impression' என்று. அதன் அடிப்படையிலே, இந்த அரசின் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களாலும், செயல்பாட்டினாலும் ஒரு நல்ல தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்பது நாடறிந்த ஒன்று. உதாரணத்திற்குச் சொல்வோமேயானால், கிரிக்கெட் போட்டியில் ஒரு அணி நல்ல தொடக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுமேயானால், அந்தத் தொடக்கமானது



2007 ஜனவரி 24] [திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி]

அந்த அணி வெற்றி பெறுவதற்கு அடித்தளமாக அமையும். அதுபோல, தலைவர் கலைஞர் அவர்கள் இந்த அரசின் தொடக்க வீரராக களம் இறங்கி, எதிரணியின் பந்து வீச்சை 4 ரன்களாகவும், 6 ரன்களாகவும் அடித்து, எதிரணியின் பந்து வீச்சை துவம்சம் செய்து, அவர்களைத் தோல்வியில் துவளச் செய்து, நல்ல தொடக்கத்தை இந்த அரசுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நல்ல தொடக்கத்தின் மூலமாக, இந்த அரசு பல்வேறு சாதனைகளைப் புரிந்து, வெற்றிகரமான அரசாக, ஏழை எளிய மக்களின் நலனில் அக்கறைகொண்ட அரசாக, 5 ஆண்டு காலமும் செயலாற்றும் என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இல்லை.

முற்பகல் 11-45

தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய தலைவராக, முதல்வராக, தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி ஆட்சி செய்துகொண்டிருக்கிற காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களெல்லாம், தொகுதிக்குள் சென்று மக்களை, தொகுதி மக்களைப் பெருமிதத்துடனும், நெஞ்சுறுதியுடனும் சந்தித்துப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். இது ஏதோ நாங்கள் செய்த சாதனையாக எண்ணி அல்ல. தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த மரியாதை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு, அனைத்து பின்தங்கிய குடும்பத்து மக்களின் இதயத்திலும், உள் மனதின் உணர்வாய், ஒளிவீசும் கதிரவனாய், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் வீற்றிருக்கிறார்கள். அந்தத் தலைவர் அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, என் தொகுதி சம்பந்தமாக சில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியான திருவோணம் சட்டமன்றத் தொகுதியானது, மிகவும் பின் தங்கிய தொகுதி. அதுவும் விவசாயிகள் நிறைந்த தொகுதி. நம்முடைய அரசினுடைய தாரக மந்திரம், நடக்கப் பாதை, பார்க்க வெளிச்சம், குடிக்க சுகாதாரமுள்ள தண்ணீர், படிக்க பள்ளி என்பதாகும். அந்த அடிப்படையில் பார்த்தோமானால், என்னுடைய தொகுதியிலே இன்னும் அடிப்படை வசதிகள் முழுமை பெறாமலிருக்கின்றன. அவற்றை நம்முடைய மாண்புமிகு தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும்

[திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி] [2007 ஜனவரி 24

கவனத்திலேகொண்டு, என்னுடைய தொகுதியினுடைய அடிப்படை வசதிகளை நிறைவு செய்யுமாறு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலேயுள்ள வெட்டிக்காடிலிருந்து தஞ்சாவூர் செல்லும் கல்லணைக் கால்வாய் நெடுஞ்சாலையானது, மிகவும் குறுகிய சாலை. அந்தச் சாலையில் செல்லும் பேருந்துகள் சில நேரங்களில் ஆற்றில் கவிழ்ந்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தலைவர் கலைஞர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், அந்தச் சாலையை இருவழிச் சாலையாக மேம்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களுக்கு தொழில்நுட்பப் பூங்கா அமைத்துத் தரப்படும் என்பதை அறிவித்துள்ளார்கள். அவருடைய சொந்த மாவட்டமான தஞ்சை மாவட்டத்திற்கு, ஒரு தொழில்நுட்பப் பூங்காவை அமைத்துத்தர முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தேவையான இடமானது என்னுடைய தொகுதியில், சாமிப்பட்டியில் கிட்டத்தட்ட 1,500 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் இந்தத் தொழில்நுட்பப் பூங்காவை அமைத்துத்தர வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களால் என்னுடைய தொகுதியில், குருங்குளத்தில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை என்ற ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சர்க்கரை ஆலையினால், அந்தப் பகுதியினுடைய விவசாயிகள், அவர்களுடைய வாழ்க்கையிலே வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பெரிதும் உதவியாக இருந்து வருகிறது. அந்த வகையிலே இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அந்தச் சர்க்கரை ஆலையின் அரவைத் திறனை அதிகப்படுத்தும் விதமாக, கிட்டத்தட்ட 5,000 டன் என்று அதன் கொள்ளளவை, அரவைத் திறனை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு திட்டங்களையும், கோரிக்கைகளையும் என்னுடைய தொகுதியின் சார்பாக இங்கே வைக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் ஒரத்தநாடு ஒன்றியத்திலுள்ள ஒரத்தநாடு காவல் சரகத்தின்கீழ் சுமார் 90 கிராமங்கள் உள்ளன. மக்களுக்குப் பயன் அதிகரிக்கும் வகையிலும், அந்த ஒரத்தநாடு காவல் நிலைய சரகத்தை இரண்டாகப் பிரித்து, செல்லம்பட்டியில் ஒரு புதிய காவல் நிலையத்தை அமைத்துத்தர வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



2007 ஜனவரி 24] [திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி]

முற்பகல் 11–50

ஒரத்தநாடு காவல் நிலைய ஆய்வாளரின்கீழ் செயல்படும் திருவோணம் காவல் நிலையத்திற்கும், வாட்டாத்திக்கோட்டை காவல் நிலையத்திற்கும், தனியாக ஓர் ஆய்வாளரை நியமித்துத்தர வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தலைமை இடமான திருவோணத்தில், சுமார் 20 கிலோ மீட்டர் சுற்றுப் பரப்புள்ள பகுதிக்குப் பயன்படும் வகையிலே, திருவோணத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது திருவோணம் தொகுதியில் உள்ள தஞ்சாவூர் ஒன்றியத்தில் நாஞ்சிக்கோட்டை ஊராட்சியில், அன்னை சத்தியா நகர் என்று ஒரு நகர் உள்ளது. அந்த நகரிலுள்ள மக்கள் எல்லாம் கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு இன்னும் மனைப் பட்டா வழங்கப்படவில்லை. அவர்களுக்கு விரைவாக மனைப் பட்டா வழங்கிட நம்முடைய முதல்வர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, விளார் ஊராட்சியிலுள்ள இந்திரா நகரிலும் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு எல்லாம் மனைப்பட்டா வழங்கவில்லை. அவர்களுக்கும் வழங்குமாறு நம்முடைய முதல்வர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதைப்போல, அண்ணாவால் ஏற்படுத்தப்பட்ட இந்த ஆட்சியில், பெரியாருடைய வாழ்த்துகளோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த ஆட்சியில், அதுவும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த ஆட்சியில், நானும் ஓர் உறுப்பினராக இருக்கிறேன் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறேன் என்று கூறி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய ஆண்டில் இப்பேரவையின் கூட்டத் தொடரைத் துவக்கி வைத்து, நமது மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை, தமிழ்நாட்டு மக்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கான அரசியல் கோட்பாடாக

அமைந்துள்ளது. எனவே, இவ்வுரையினைப் பொதுவாக வரவேற்று, உழைக்கும் வர்க்கத்தின் சார்பாகவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும் நன்றியினை முழு மனதுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாபெரும் சமூகச் சீர்திருத்தப் போராளியும் சட்ட மேதையுமான அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம், கடந்த 50 ஆண்டுகளுக்கு மேல் ஏறக்குறைய 100 முறை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே, இன்றைய சமூக அரசியல் பொருளாதாரத் தேவைகளைக் கருதியும், தாழ்த்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் மக்கள் தொகையில் சரி பாதிக்கு மேலுள்ள பெண்கள் ஆகியோரின் நலன் காக்கும் நிகழ்காலத்திற்கான சமூக நீதிக் கொள்கைகளுக்கும், நமது எதிர்கால சமதர்மக் கொள்கைகளின் இலட்சியத்திற்கும் இசைவாக அரசியல் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

கூட்டாட்சி முறையின் கோட்பாடுகளின் அடிப்படையில், மத்திய மாநில அரசுகளுக்கிடையே அதிகாரப் பட்டியலை மறு ஆய்வு செய்து, இன்றைய தேவைக்கேற்ப மாற்றி அமைக்க வேண்டும். பொறுப்புகள் மிகுதியாக உள்ள வரி விதிப்பு, வரி வசூல் ஆகியவற்றில் மாநில அரசுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

முற்பகல் 11–55

"மாறாது என்ற வார்த்தையைத் தவிர மற்ற அனைத்தும் மாற்றத்திற்கு உட்பட்டதேயாகும்" என்ற மார்க்சிய கருத்தின் அடிப்படையில், சமூக நீதிக்கான கொள்கைகள் அமல்படுத்தப்படுவதற்கும், சமதர்ம சமுதாயம் காணும் நமது இலட்சியக் கனவு நனவாவதற்கும், மேற்கண்ட கருத்துகளை இம்மாமன்றத்தின் தீர்மானமாக இயற்றி, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கும், மத்திய அரசுக்கும் அளித்திட வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மீனவர்கள், வீடுகளில் பணி புரிவோர் மற்றும் ஊனமுற்றோர்களுக்கு நல வாரியம் அமைக்கப்படும் என்ற மனிதநேய அறிவிப்பினை ஏற்றுப் பாராட்டுகின்றோம். குறிப்பாக, வீட்டு வேலை செய்கின்றவர்களில் சரி பாதியாக பெண்கள் இருக்கின்றார்கள். அவர்கள் படுகின்ற இன்னல், ஒரு வேலையைச் செய்துவிட்டு அதிலிருந்து வருகின்ற வருமானத்தைப் பெறுவதற்கு அவர்கள் படுகின்ற அந்த இன்னல் ஆழத்தை உணர்ந்து இந்த அறிவிப்பு என்பது ஒரு மகத்தான அறிவிப்பு என்பதை மீண்டும் ஒருமுறை நான் பாராட்டுகிறேன்.



10 ஆண்டு காலம் குடியிருந்தவர்களுக்கு ஆறு மாதத்திற்குள் விரைந்து மனைப் பட்டா வழங்கப்படும் என்ற அறிவிப்பினை நன்றியுடன் வரவேற்கின்றோம். அதேசமயத்தில், கோவில் நிலங்களில், தர்ம ஸ்தாபனங்களில் நீண்ட பல காலங்களாகக் குடியிருக்கும் ஏழைகளுக்குப் பட்டா கிடைக்க வழியில்லை. பெரும்பாலும் கிராமப் பகுதியில் தலித் குடும்பங்கள் அதிகம். அவர்கள் அரசு சலுகைகளைப் பெறமுடியவில்லை. எனவே, அவர்களுக்கும் இந்த மனைப் பட்டா பயன்பெற வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உடனடியாக சிறு தொழில் பயிற்சி அளித்து அவர்களைப் பெரும் பொருள் உற்பத்தியில் ஈடுபடுத்தி அவர்களின் பொருளாதார வாழ்வினை வளப்படுத்திட வேண்டும். அதோடு, இளைஞர் சுய உதவிக் குழு அமைப்புகளை மேலும் பயனுள்ள வகையில் உருவாக்குவதற்கு அரசு மேலும் கூடுதலான கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீட்டினைப் பெற்றிருப்பது நமது தமிழக அரசு மிகவும் பெருமைக்குரியதாகும். இது மூடிக்கு இட ஒதுக்கீடுபோல் உள்ளது. சட்டம் இயற்றும் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் 30 சதவீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு கிடைத்தால்தான் அது ஜாடிக்கு இட ஒதுக்கீடு கிடைத்ததுபோல், இக்கொள்கை நிறைவேறி முழுமையாகப் பயன்படும். எனவே, இந்தக் கோரிக்கையை விரைந்து செயல்படுத்துவதற்கு, பெண் அடிமை மறையக் குரல் கொடுத்த தந்தை பெரியார் பிறந்த மண்ணில் நாம் கூட்டாகச் சிந்தித்துச் செயல்படுவோம்.

பெண்கள் ஆணையம், சிவில் கோர்ட் அதிகாரத்திற்குச் சமமான அதிகாரம் படைத்த இந்தப் பெண்கள் ஆணையம் சுதந்திரமாகச் செயல்படக்கூடிய வகையில், சட்ட ரீதியான வரைமுறைகளை உருவாக்க வேண்டும் என்று இந்தத் தருணத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் விவசாயத் தொழிலாளிகள், சிறு குறு விவசாயிகள் அனைவரையும் விடுபடாமல் கணக்கெடுத்து அடையாள அட்டைகளை வழங்கி, இந்நலத் திட்டத்தினை முன் தேதியிட்டு அமல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இதுவரை குடும்ப அட்டை கிடைக்காதவர்களுக்கு போர்க்கால வேகத்தில் நமது அரசு குடும்ப அட்டை வழங்க வேண்டும். புதிதாக

நடும்ப அட்டை பெற்றவர்களுக்கு இதுவரையில் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. எனவே, அவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு அரசு உரிய கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். சோற்றுப் பானைக்கான அரிசி விலை குறைந்து தமிழக மக்கள் மன மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள். இருப்பினும்கூட குழம்புச் சட்டிக்கான பொருட்களின் விலை இன்றைக்கு விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்திருப்பதை நமது அரசு கவலையோடு பார்க்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். நேற்றையதினம் பத்திரிகையில்கூட பருப்பு விலைகள் எல்லாம் ஒரு கிலோவுக்கு 5 ரூபாய், 4 ரூபாய் என்று சொல்லி ஓரே சமயத்தில் ஏறியதை நாம் பத்திரிகையில் பார்க்கின்றோம். எனவே, உடனடியாக அதைக் கவலையோடு பார்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை தமிழ்நாட்டு மக்கள் ஆர்வத்துடன், நியாயம் கிடைக்கின்ற நம்பிக்கையுடன், எதிர்பார்த்து இருக்கின்றார்கள். நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்புக்கு இடைக்காலத் தீர்ப்பின் கதி நிலைத்துவிடக் கூடாது. இடைக்காலத் தீர்ப்பின் அனுபவங்களை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை உரிய முறையில் சட்டமாக்கி, உச்ச நீதிமன்ற ஒப்புதலுடன் ஓர் உயர் அதிகார ஆணையத்தினை அமைத்து, காவிரி நதிநீர்ப் பங்கீட்டினை அமல்படுத்திட வேண்டும்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, தென் மாவட்டங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட வேண்டும்.

ஐக்கிய நாட்டு சபையின் சார்பில் தூதுவராக நமது மாநிலத்திற்கு வருகை தந்த அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் தலைவர் பில் கிளிண்டன் அவர்கள் நமது அரசுப் பணியினைப் பாராட்டியுள்ளார்கள் என்ற போதிலும், இப்பணிகளை மேலும் போர்க்கால அடிப்படையில் செய்து முடித்திட வேண்டும்.

ஆரம்பக் கல்வி முதல் உயர் தொழில்நுட்பக் கல்வி வரையிலும், நீதிமன்றத்திலும் அரசு நிர்வாகத்தின் ஆணை அனைத்து மட்டங்களிலும் தமிழே ஆட்சி மொழி, முதல் மொழி என்ற நிலையை ஏற்படுத்துவதற்கு காலவரையறை செய்திட வேண்டும். மொழிகளில் தாய் மொழி, நம் தமிழ் மொழி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நம் மொழிக்கு உயர் தனிச் செம்மொழி என்ற அந்தஸ்தை நமது முத்தமிழ் அறிஞர் நம் முதல்வர் அவர்களின் தலைமையில் நாம் பெற்றிருக்கிறோம்.



சிற்றூராட்சிகளுக்குப் பொருளாதார சுமை ஏற்படுத்தும் பிரச்சினைகளைக் கண்டறிந்து, நாம் தீர்வுகாண வேண்டும். அதேபோன்று, உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்கள், மறைந்த முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் கொண்டுவந்த பஞ்சாயத் ராஜ் சட்டத்தின் அடிப்படையில், அந்த மூன்று அடுக்கு முறையில், அவர்களுக்கான அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஊராட்சி முகமை என்ற அடிப்படையிலே அந்த அதிகாரம் என்பது குறைக்கப்படுவதை இந்த அரசு கவனத்தோடு பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நண்பகல் 12–00

கொடிய நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து ஏழையெளிய மக்களைக் காப்பாற்றும் வருமுன் காப்போம் திட்டம் வரவேற்கப்படக்கூடிய திட்டமாகும். இதற்கான மருத்துவர்கள், மருந்துகளுக்கான நிதியை அரசு அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு, இந்த வருமுன் காப்போம் திட்டம் போன்று, கடந்த காலத்திலே பெரியம்மை ஒழிப்புத் திட்டம் என்று இருந்தது. பொதுச் சுகாதாரத் துறையில் அந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த, கிட்டத்தட்ட 650–க்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றியிருக்கின்றார்கள்; இன்றைக்கும் பணியாற்றி வருகின்றார்கள். அப்படி பணியாற்றியவர்களுக்கு ஓய்வூதியம் என்பது, முழுமையான ஓய்வூதியம் கிடைக்கவில்லை. அதேபோன்று காலமுறை ஊதியம் என்பதும் அவர்களுக்கு முழுமையாகக் கொடுக்கப்படவில்லை. அப்படிப்பட்டவர்களில் கிட்டத்தட்ட 150 பேர் இறந்துவிட்டார்கள்; 350 பேர் ஓய்வு பெற்றுவிட்டார்கள்; மற்றவர்கள் இன்றைக்கும் பணியில் இருக்கின்றார்கள். நீண்டகாலமாக அவர்கள் கோரிக்கை வைத்து போராடிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, அப்படிப்பட்டவர்களின் நிலைமையைக் கண்டறிந்து அவர்களுக்கான காலமுறை ஊதியத்தையும் வழங்க வேண்டும்; அவர்களுக்கு கட்டாயமாக முழு ஓய்வூதியத்தையும் கொடுக்க வேண்டுமென்று இந்தச சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்னிலம் தொகுதி என்பது நகராட்சி எதுவும் இல்லாத முற்றிலும் கிராம மக்கள் வாழும் தொகுதி. இங்கே தொடங்கப்பட்ட திரு ஆரூரான் சர்க்கரை ஆலை உடனடியாக மூடப்பட்டுவிட்டது. நெல்லும், பருத்தியும், கரும்பும் உற்பத்தியாகிறது. மேலும், இப்பகுதியில் எண்ணெய் எரிவாயு எடுக்கப்படுகிறது. இந்த வளங்களைக் கொண்டு இப்பகுதியில் அனைத்துப் பகுதி மக்களும் பயன்பெறும் வகையில் தொழில் தொடங்கிட

வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். அதுபோன்று, நன்னிலம் தொகுதியில் நரிமணம், பனங்குடி பகுதியிலே எண்ணெய் எரிவாயு தொழிற்சாலை இருக்கின்றது. எனவே, அந்தப் பகுதியில் கன இரக இயந்திரங்கள் போக்குவரத்து இருப்பதால் சாலைகள் மிகவும் பழுதடையக்கூடிய நிலையிருக்கிறது. எனவே, அந்த O.N.G.C. மூலமாக வருகின்ற Royalty-யை நம்முடைய தமிழக அரசு பெற்று, அந்தச் சாலைகளைச் சரிசெய்யவும் மற்றும் நலத் திட்டங்களைச் செய்வதற்கும் அந்நிதியைப் பயன்படுத்துவதற்கு உதவ வேண்டுமென்று இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பகுதி மக்களுடைய கோரிக்கை, தொகுதி மக்களுடைய கோரிக்கை, சியாத்தமங்கை, சகடமங்களம், அந்த ஆறுகள் பாலங்களில், பல்வேறு உயிர்ச் சேதுங்கள் ஏற்படுகின்றன. எனவே, அந்தப் பாலங்களை விரைவில் கட்டித் தர அரசு ஆவன செய்ய வேண்டும். சமீபத்திலே நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பங்குபெற்று, ஆய்வு நடத்துகின்றபோது, இந்தக் கோரிக்கையை நாங்கள் முன்வைத்து வலியுறுத்தியிருக்கின்றோம். அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். எனவே, நடப்பு ஆண்டிலேயே செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு பிரச்சினைகள். நம்முடைய அரசு பெண்களுக்கு, கருவறை முதல் கல்லறை வரை நல்ல பல திட்டங்களை உருவாக்கியிருக்கின்றது. குறிப்பாக, பொங்கலன்றுகூட எரிவாயு அடுப்பு ஏழையெளிய பெண்களுக்கு வழங்கக்கூடிய திட்டத்தை அமல்படுத்தியிருக்கின்றோம். எனவே, அந்த வகையில் இந்த நல்லபல திட்டங்கள், யாருக்குச் சென்றடைய வேண்டுமோ, அந்த மக்களுக்குச் சென்றடையக்கூடிய வகையில், விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, எந்தவிதமான சிரமமும் மக்கள் அடையாமல், அவர்களுக்குச் சென்றடைய வேண்டுமென்று இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள்—ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இன்றைக்குத் தனியார் நிறுவனங்களின்மூலமாக பல்வேறு இடங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில் பல்வேறு மோசடிகள் நடக்கின்றன. இங்கே பல்வேறு மனுக்களைக் கொடுத்திருக்கின்றார்கள். ஒரு ஆசிரியர் பயிற்சி மையத்தில் 102 மாணவர்களைச் சேர்த்து, 50 பேரை மட்டும் முதலாவது ஆண்டுத் தேர்வு எழுதலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட இந்த



ஓர் ஆண்டிலே 1½ இலட்சம் ரூபாய் அவர்கள் அந்த நிறுவனத்திற்குச் செலுத்தியிருக்கின்றார்கள். 102 பேரில் 50 பேர் மட்டும் தேர்வு எழுதியிருக்கின்றார்கள். 52 பேர்களைத் தேர்வு எழுதவிடாமல் மடக்கியதோடு மட்டுமல்லாமல், அவர்கள் மிரட்டப்பட்டிருக்கிறார்கள். எனவே, உடனடியாக அவர்கள் தேர்வு எழுத வேண்டும். இப்படி மோசடி செய்கின்றவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆளுநர் உரையில் இடம் பெற்றுள்ள பாசன மேம்பாட்டுத் திட்டம குறித்து, விரிவான முறையில் விவசாயிகள் கருத்தறிந்து இந்த நூற்றாண்டு முழுமைக்கும் மக்களால் பேசப்படும் வகையில் நமது அரசு திட்டங்களை வகுத்து நிறைவேற்றிட வேண்டுமென்று இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இறுதியாக, சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்கச் சென்ற கர்நாடக, தமிழக அதிரடிப் படையினரால் பாதிக்கப்பட்ட அந்தப் பெண்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று சென்றமுறை, சட்டமன்ற முதல் கூட்டத் தொடரிலே நான் இங்கே உரையாற்றியபோது, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுந்து, உடனடியாக அந்தப் பிரச்சினையை பரிசீலித்து, அது நிறைவேற்றப்படும் என்று ஒப்புதல் வழங்கினார்கள். எனவே, அந்த ஒப்புதலோடு மட்டுமல்லாமல், கர்நாடக அரசுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, தொடர்ந்து நாங்கள் எடுத்த அந்த முயற்சிக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்து, இன்றைக்கு அது ஒரு மிகப் பெரிய வெற்றியாக நமக்குக் கிடைத்திருக்கிறது. அந்த மிகப் பெரிய வெற்றி முழுக்க முழுக்க மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும் எனறு தெரிவித்து, இந்த நேரத்திலே அவர்களுக்கு என்னுடைய சார்பிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சிறப்புமிகு கவர்னர் உரையை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று கூறி, நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல்: 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாணபுமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்ததற்காக முதலில் உங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

[டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்] [2007 ஜனவரி 24

தமிழகத்தை ஆளுகின்ற முதல்வர் கலைஞரைப்பற்றி, அவருடைய புதிய பரிமாணத்தைப் பற்றி, முக்கியமான பத்திரிகையாளர்கள், முக்கியமான அரசியல்வாதிகள் தெரிவிக்கின்ற கருத்தை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். மூன்று முறை முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் சிறந்த ஆட்சியாளராகத் திகழ்ந்தார்கள். நான்காவது முறை பொறுப்பேற்ற பிறகு, மாட்சிமை தங்கிய ஆட்சியாளராக அவர்கள் இருந்தார்கள். ஆனால், இப்போது ஐந்தாவது முறையாகப் பதவியேற்றபிறகு, அவர்கள் மிகவும் கனிந்துவிட்ட ஆட்சியாளராக மாறியிருக்கிறார்கள் என்று அவர்கள் முதல்வர் கலைஞர் அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள்.

மாற்றாரை மதிக்கும்வண்ணம் மட்டுமல்ல, தன்னைக் கடுமையாக எதிர்த்தவர்களை, தன்னைக் கடுமையாக விமர்சித்தவர்களைப் பாராட்டுகிற முகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடந்துகொள்கின்ற பாங்கு, அவர்களை அவ்விதம் பேச வைத்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

பொதுவாக, ஆன்மீகத்திலும் சரி, அரசியலிலும் சரி, தனக்கு மாறுபட்ட எண்ணங்களைக் கொண்டவர்களைக்கூட கலைஞர் அவர்கள் எப்படி நடத்துகிறார் என்பது மிகவும் வியப்பிற்குரிய ஒன்று, பாராட்டுகிற ஒன்று என்பதை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

நேற்றைய தினம் நடந்த விழாவிலே நம்முடைய வணக்கத்திற்குரிய, நம்முடைய நிதியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். கலைஞர் அவர்களைப்பற்றி அவர்கள் பேசுகிறபோது, அவர்கள் சொல்கிறார்கள்: அன்றைக்கு விறுவிறுப்பான, வேகமான சுய மரியாதைத் தொண்டர்; அடுத்த காலகட்டத்திலே தமிழர்களுக்கு வழி காட்டுபவர்; இன்றைக்கு வேற்றுமைகளுக்கு இடையே சமரச ஞானியாக விளங்குபவர். அவர் இந்த உலகத்திலே தனக்கு மாறுபட்டவர்களே இல்லையென்று காட்டிட வேண்டுமென்ற தீர்மானத்தோடு சில காலமாகச் செயல்பட்டு வருகிறார் என்று நமமுடைய பேராசிரியர் அவர்கள், 'அரசியல் ஞானி' என்று நம்முடைய தமிழக முதல்வரைப் பாராட்டியிருக்கிறார்கள். அதை நாங்கள வரவேற்கிறோம.

ஏனென்று சொன்னால், தமிழக முதல்வர் அவர்கள் ஆன்மீகத்திலே மாறுபட்டவர் என்ற கருத்துக்கு இரு வேறு இடமில்லை. ஆன்மீகத்தை மறுத்தவர் என்றாலும்கூட, ஆன்மீகவாதிகளை அவர்கள் அடையாளம் கண்டுகொண்டு சிறப்புச் செய்தவர்கள். வணக்கத்திற்குரிய வாரியார் சுவாமிகளுடைய நூற்றாண்டு விழா வந்தபோது, வாரியார்



2007 ஜனவரி 24] [டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

சுவாமிகளுடைய நினைவாக அஞ்சல் தலையை நடுவணரசு வெளியிட வேண்டுமென்று வற்புறுத்தி, அந்த விழாவிலே அவர்கள் பங்கேற்றுச் சிறப்புச் செய்தார்கள். அதேபோல, சில தினங்களுக்கு முன்பு நேரு விளையாட்டு அரங்கத்திலே நடந்த பாராட்டு விழாவிலே சத்ய சாயிபாபா அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள. யாரையும் நாடி வராத சத்ய சாயிபாபா அவர்கள், கலைஞருடைய இல்லத்திற்கு வருகை தந்தபோது, அவர்களை இன்முகமாக வரவேற்று, மிகவும் கௌரவமாக சிறப்புச் செய்தார்கள். அதைப்பற்றி பத்திரிகையாளர்கள் கேட்டபோதுகூட அவர்கள் சொன்னார்கள்: அவர்கள், சத்ய சாயிபாபா அவர்கள், அரசியல் பேசவில்லை, நான் ஆன்மீகம் பேசவில்லையென்று மனது புண்படாதவண்ணம் மிகவும் பண்பாடாக அவர்கள் பதில் சொன்னார்கள். அந்த அளவிற்கு ஒரு மேன்மையான ஆட்சி நடத்துகின்ற கலைஞர் அவர்களுக்கு முதலில் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10

மேதகு ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஒரு முக்கிய அம்சத்தைப்பற்றி நான் விவாதத்திற்கு வருகின்றேன். இந்திய அரசியல் சட்டத்தைப்பற்றி – re-drafting – திரும்பவும் எழுதப்பட வேண்டும் என்று மேதகு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது விவாதத்திற்குரியது என்றாலும்கூட, அதில் இருக்கின்ற முக்கிய அம்சங்களை நாம் நோக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்திய அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சென்றமுறை ஆண்ட B.J.P. அரசு சட்டத்தைக் கொண்டுவந்தது. அதற்காக ஒரு Commission–ஐப் போட்டார்கள். அப்போதுகூட, திராவிட முன்னேற்றக் கழகம் அதை வரவேற்கவில்லை. திருத்தங்களைத்தான் நாங்கள் வரவேற்கிறோம்; re-drafting என்று சொல்லப்படுகின்ற, திரும்பவும் எழுதப்பட வேண்டுமென்ற அந்தக் கொள்கையை நாங்கள் வரவேற்கவில்லை என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்குச் சொன்னது. இன்றைக்கு re-drafting என்று சொல்லப்படுகின்ற, அரசியல் நிர்ணயச் சட்டத்தை திரும்பவும் எழுதவேண்டுமென்ற கட்டாயம் எதற்காக ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம எண்ணிப் பார்க்கின்றபோது, ஒன்பதாவது அட்டவணைக்குண்டான நிலை, முல்லைப் பெரியாறு பிரச்சினையிலே Supreme Court அளித்த தீர்ப்பின் அடிப்படையிலே எழுந்த பிரச்சினைகள், காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பாக எழுந்த பிரச்சினைகள் போன்ற பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்ற நிலையிலே, நம்முடைய சமூக நீதிக்கு ஆபத்து வந்துவிடும் என்ற நிலையிலேதான், இன்றைக்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தைத்

திரும்பவும் எழுதவேண்டுமென்று இன்றைக்கு தமிழக அரசு மேதகு ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறது.

இது விவாதத்திற்கு வரும் என்பதிலே நாங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். எல்லா மாநில முதல்வர்களுக்கும் முதல்வர் அவர்கள் இதுகுறித்து கடிதம் எழுதவேண்டும். தேசிய அளவிலான ஒரு debate, ஒரு ஆரோக்கியமான விவாதம் எழுப்பப்பட வேண்டுமென்று நான் இந்தப் பேரவையின்வாயிலாக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், இந்த அரசியல் சட்டம்தான 50 ஆண்டு காலமாக, இந்த இந்தியத் திருநாட்டினுடைய இறையாண்மையைக் காப்பாற்றி இருக்கிறது. Contemporary countries என்று சொல்லப்படுகின்ற சக கால நாடுகளிலே இருக்கின்ற நிலைமைகளை எண்ணிப் பாாத்தோமானால், அந்த நாடுகள் சிதறுண்டுபோய் இருக்கின்றன. அந்த நிலையிலே, இந்தியா என்ற இந்த அற்புதமான திருநாடு, எந்த ஒரு சிதறலுக்கும் ஆளாகாமல், எந்த ஒரு division-க்கும் ஆளாகாமல், இப்போது இருக்கின்ற அரசியல் சட்டம் 50 ஆண்டுகளுக்கு மேலாக நம்முடைய திருநாட்டைக் காப்பாற்றியிருக்கிறது என்கிற உண்மையை நாம் இங்கே எண்ணிப் பார்க்கவேண்டும்.

நம்முடைய மதிப்பிற்குரிய மேலாண்மைமிக்க அன்றைய இதனுடைய மூலகர்த்தாக்கள், டாக்டர் அம்பேத்கர், பண்டித ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், முன்ஷீ, நம்முடைய டி.டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற மிகப்பெரிய Stalwarts என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த மனிதர்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசியல் சாசனம், நம்முடைய நாட்டைச் சிதறச் செய்யாமல் காப்பாற்றி இருக்கிறது என்ற உண்மையை இங்கே நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, இதைத் திருத்துகின்றபோது, மிகக் கவனமாகத் திருத்தவேண்டும். அப்படித் திருத்தி எழுதுகிறபோது, மிகப்பெரிய அளவிலே விவாதங்கள் நடத்தப்பட்டு, அதற்குரிய முஸ்தீபுகளிலே இறங்கி, அதற்குப் பிறகுதான் இது எழுதப்பட வேண்டும் என்ற எச்சரிக்கையை நாம் கவனமாகக் கையாளவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், இந்த இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய சிறப்பு அம்சமே, flexible என்று சொல்லப்படுகின்ற, எதையுமே இலாவகமாகக் கைக்கொள்கின்ற அந்த flexible nature - அந்தத் தன்மைதான் இன்றைக்கு நம்முடைய இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய சிறப்பு அம்சம். It is neither unitary nor federal என்று சொல்வார்கள். இதைச் சொல்லப்போனால், அதாவது, இணைந்த அரசினுடைய கொள்கையாக இல்லாமல் அல்லது federal system என்று சொல்லப்படுகின்ற கூட்டாட்சியினுடைய தத்துவமாக



இல்லாமல், இடைப்பட்ட நிலையிலே, quasi federal என்று சொல்லப்படுகின்ற natural-ல்தான் இந்த இந்திய அரசமைப்புச் சட்டம் நிலவுகிறது. ஆகவே, இதைத் திரும்பவும் எழுதுகின்றபோது, மிகவும் கவனமாகச் செய்யவேண்டுமென்று இந்தப் பேரவையின் மூலமாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இன்னொரு அம்சம், மத்திய அரசைப் பொறுத்தவரையிலே, சேவை வரியை மாநில அரசுக்கு மாற்றவேண்டுமென்று நாம் கேட்டிருக்கின்றோம். அது வரவேற்கத்தகுந்த ஒன்று. சேவை வரி மூலமாக மாநில அரசுக்குக் கிடைக்கவேண்டிய பங்கு நிச்சயமாகக் கிடைக்க வேண்டும் என்பதிலே எங்களுக்கும் உடன்பாடு உண்டு. 'பழையன கழிதலும், புதியன புகுதலும் காலத்தின் கட்டாயம்' என்பதனை யாரும் மறுக்கமுடியாது. ஆகவே, change should be made or life should be perished என்று வாழ்க்கைச் சட்டம் சொல்லுகிறது. அதாவது, மாற்றங்கள் வரவேண்டும் அல்லது வாழ்க்கை என்பது அழியப்படவேண்டும் என்ற வகையிலே மாற்றத்தை வரவேற்கின்ற அதேவேளையிலே, அந்த மாற்றம் நாட்டின் நலனுக்கு உகந்ததாக, இருக்கின்ற அத்தனை தரப்பு மக்களுக்கும் உகந்ததாக அமைய வேண்டுமென்று நான் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருக்குறளைப் பொறுத்தவரையிலே, சென்ற ஆண்டு தமிழ் மொழியைப் பொறுத்தவரையிலே, உயர்தனிச் செம்மொழி Classical language என்ற அந்தஸ்தை, அந்தச் சிறப்பினை மத்திய அரசின் மூலமாக நம்முடைய தமிழ் மொழிக்கு நம்முடைய தமிழக முதலமைச்சர் உள்பட அத்தனை தலைவர்களும் பெற்றுத் தந்தார்கள். அதைப் பாராட்டுகிற அதேவேளையிலே, திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் வலியுறுத்தி, இந்த ஆண்டு அந்தச் சிறப்பான பணியினை தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், பல்லாண்டு காலமாக நாம் அந்தக் கோரிக்கையை எழுப்பிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், நிறைவேறவில்லை. இன்றைக்கு மத்தியிலே ஆளுகின்ற அரசு, நம்முடைய அரசு. அந்தத் தருணத்தைப் பயன்படுத்தி, திருக்குறளை தேசிய நூலாக மாற்றவேண்டும்.

திருக்குறளைப் பொறுத்தவரையிலே, அதாவது உரிமைகள் பரவிவிட்ட காரணத்தால், வெவ்வேறு பதிப்புகள் அவரவர்களுக்கு ஏற்றவண்ணம வெளியிடுகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்று பேரறிஞர் தமிழ் அண்ணல் அவர்கள் நேற்றைக்குக்கூட ஒரு பத்திரிகையிலே

எழுதியிருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஏனென்று சொன்னால், திருக்குறளைப் பொறுத்தவரையிலே, மூலப் பதிப்பைப் பொறுத்தவரையிலே, ஒரு செம்பதிப்பு. அதாவது, இதுதான்; இதை மாற்றக்கூடாது என்ற வகையிலே ஒரு செம்பதிப்பை அரசின் சார்பாக வெளியிடவேண்டுமென்ற கோரிக்கையை நான் எழுப்ப விரும்புகிறேன். திருக்குறளுக்குக் குறளோவியம் தீட்டிய கலைஞர் அவர்கள், இந்த நல்ல நடவடிக்கையை எடுப்பார்கள் என்று நான் இங்கே நம்புகின்றேன்.

*பிற்பகல் 12-15*

உலகளாவிய அளவிலே இருக்கின்ற தமிழர்களை ஒன்று திரட்டி, 'பிரவேஷி பாரத்' என்று சொல்லப்படுகின்ற உலகளாவிய இந்தியர்களை ஒன்று திரட்டி புதுடெல்லியில் நடத்தப்படுகின்ற மாநாட்டைப்போல, அவர்களுடைய நலன்களைப் பேணிக் காக்கும்வண்ணம் தமிழர்களுடைய மாநாடு நம்முடைய சென்னையிலோ அல்லது நம்முடைய தமிழ்நாட்டினுடைய வேறு நகரிலோ நடத்தப்படவேண்டும். அப்படி நடத்தப்படுகின்றபோது, செல்வாக்குமிக்க தமிழர்களுடைய முதலீட்டை நாம் பெறமுடியும்; நாமும் அவர்களுக்கு உதவமுடியும் என்ற உண்மையை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், மலேசிய நாட்டினுடைய அடையாளமாக இருக்கின்ற 'Twin Tower' என்று சொல்லப்படுகின்ற அந்த இரட்டைக் கோபுரம் ஒரு தமிழரால் கட்டப்பட்ட கோபுரம் என்று நான் அறிகின்றேன். திரு. அனந்தகிருஷ்ணன் என்ற தமிழர்தான் அந்தக் கோபுரத்தினுடைய உரிமையாளர் என்ற உண்மையை அறிகின்றபோது, நம்மைவிட மிகச் செழிப்பாக இருக்கின்ற தென்கிழக்கு ஆசிய நாடான மலேசியாவிலே இருக்கின்ற அந்த உயர்ந்த தமிழர் போன்றவர்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை நான் விடுக்க விரும்புகின்றேன். அப்படி நடத்தினால், அது இருதரப்புக்கும் நிச்சயமாகப் பயன்படும் என்ற வகையிலே இதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மருத்துவத் துறையைப் பொறுத்தவரையிலே, கலைஞர் அவர்கள் தொலைநோக்கோடு செயல்பட்டார்கள்; செயல்படுகின்றார்கள் என்பதிலே இருவேறு கருத்துக்கு இடம் கிடையாது. கண்ணொளித் திட்டம் மிக அருமையான திட்டம். அவர்கள் சென்ற முறை ஆண்டபோது, இந்த cataract removal என்று சொல்லப்படுகின்ற அந்தக் கண் புரையை நீக்குகின்ற திட்டத்தை கிராம அளவிலே கொண்டுவந்து, மிகச் சிறப்பாக நடத்தினார்கள்; நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.





வருமுன் காப்போம் திட்டத்தைக்கூட சென்ற திங்களிலே, நம்முடைய வணக்கத்திற்குரிய எங்களுடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சுதர்சனம் அவர்களுடைய தொகுதியிலே அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்; மிகச் சிறந்த திட்டம். இதன்மூலமாக பல்வேறு ஏழைகள் கிராமப்புறங்களிலே பயன்பெறுகின்றார்கள்.

இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரைப் பொறுத்தவரையிலே, மிகப் பழமையான மருத்துவமனைகளிலே மிக முக்கியமான மருத்துவமனை பொது மருத்துவமனை. அதிக படுக்கை எண்ணிக்கையைக் கொண்ட மருத்துவமனை, பொது மருத்துவமனை. Government General Hospital என்று சொல்லப்படுகின்ற அந்தப் பொது மருத்துவமனை, ஆங்கிலேயர் காலத்திலேயே மிகவும் பழமையான ஒன்று. அதை விரிவாக்கம் செய்கின்றபோது,—ஒரு வாய்ப்பு கிடைக்காதா என்று நாங்கள் ஏங்கிக் கொண்டிருந்த நேரத்திலே, இன்றைக்கு அருகிலிருந்த மத்திய சிறை, புழலுக்கு மாற்றப்பட்டிருக்கிறது; வரவேற்கத்தக்கது ஒன்று. அந்தச் சிறை இருந்த அந்த இடம், சற்றேறக்குறைய 14 ஏக்கருக்கு மேல் இருக்கும் என்று நினைக்கின்றேன். அந்த இடத்திலே, பொது மருத்துவமனையை விரிவாக்கம் செய்து, இணை பொது மருத்துவமனையாக, Government General Hospital Annex என்ற வகையிலே அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைக்கின்றபோது, அது இலவசமான மருத்துவமனையாக அமையாமல், அதைக் கட்டணத்தோடுகூடிய பொது மருத்துவமனையாக அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்கு இருக்கின்ற தனியார் மருத்துவமனைகள், ஒரு ceiling இல்லாமல், உச்சவரம்பு இல்லாமல் அவர்கள் charge செய்கிறார்கள்; கட்டணத்தை வசூலிக்கின்றார்கள். ஏழை நடுத்தர மக்கள், மத்தியதர மக்கள் எல்லாம், அந்தக் கடுமையான கட்டண விதிப்புக்கு ஆளாகின்றார்கள். அவர்களையெல்லாம் காப்பாற்றுகின்றவண்ணம், அவர்கள் எல்லாம் பயனீட்டும்வண்ணம், இணை பொது மருத்துவமனையை, கட்டணத்தோடுகூடிய பொது மருத்துவமனையாக நீங்கள் அமைக்கவேண்டும் என்ற சிந்தனைக்குரிய கருத்தைப் பல பெரியவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதையே நான் வலியுறுத்த விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், இன்றைக்கு scan எடுக்க வேண்டுமென்று சொன்னால், வெளியே எடுத்தால் 3 ஆயிரம் ரூபாய் charge செய்கிறார்கள். ஆனால், அதையே Government General Hospital அல்லது ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, K.M.C. போன்ற நம்முடைய மருத்துவமனைகளிலே எடுக்கின்றபோது, அவர்கள் 500 ரூபாய்தான் charge செய்கிறார்கள். அப்படிச் செய்கின்றபோது,

அந்தப் பலனை நம்முடைய மத்தியதர மக்கள் நிச்சயமாகப் பெறுகிறார்கள். அந்தளவிலே, வருகின்ற அந்த இணை பொது மருத்துவமனை, எழுப்பப்படுகின்றபோது இணை பொது மருத்துவமனை, கட்டணத்தோடுகூட ஒரு தனியார் மருத்துவமனைக்கு ஈடாக, இணையாக உள்ள தரத்தோடு அமையவேண்டும். ஏற்கெனவே, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலே அத்தகைய ஒரு programme நடந்து கொண்டிருக்கிறது; மிகவும் வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கிறது. அதை அடியொற்றி இந்த மருத்துவமனை அமைய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார் மருத்துவமனைகளை regulate செய்கின்ற சட்டத்தையும் நாம் இயற்றவேண்டும். அப்படி வரன்முறைப்படுத்த வேண்டிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆகவே, Private Hospitals Regularisation Act என்று சொல்லப்படுகின்ற அந்தச் சட்டத்தை, இந்த அவையிலே இந்த அரசு கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அன்புமணி அவர்கள் சொன்ன கருத்தை நான் இங்கே வழிமொழிய விரும்புகின்றேன். தனியார் மருத்துவமனைகள் தங்களைப்பற்றிய விளம்பரங்களைச் செய்வதைத் தடை செய்யவேண்டும் என்ற அவருடைய கருத்தினை நேற்றைய 'இந்து' பத்திரிகையிலே வெளியிட்டிருக்கின்றார்கள்; வரவேற்கத்தகுந்த ஒன்று. ஏனென்று சொன்னால், எல்லோருமே விளம்பரங்கள் என்று வந்துவிட்டால், இந்த Magical Remedies Act என்பதைப்பற்றி டாக்டர் நெடுஞ்செழியன் அவர்கள் சொன்னார்களே. அதைப்போல, இந்த விளம்பரங்கள் செய்து மருத்துவத்தை ஒரு மலிவாக்குகின்ற அந்தப் பணியினை யார் செய்தாலும் தடுக்கவேண்டும். ஆகவே, மருத்துவமனைகள் தங்களைப்பற்றி விளம்பரங்கள் செய்துகொள்வதை, ஒரு சட்டத்தின்மூலமாகத் தடுக்கவேண்டும். மாநில அரசும் செய்யவேண்டும்; மத்திய அரசும் செய்யவேண்டும் என்ற கருத்தினை நான் ஆமோதிக்கிறேன்; வரவேற்கிறேன். ஆகவே, அதை நிச்சயமாகச் செய்யவேண்டும்.

*பிற்பகல் 12-20*

நம்முடைய சட்டப் பேரவைக்குப் புதிய வளாகம் கட்டுவதை நம்முடைய அரசு மீண்டும் பரிசீலிக்கவேண்டிய தருணம் இருக்கிறது என்று நான் நினைக்கின்றேன். நான் இதைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், இன்றைக்குச் சென்னையினுடைய மக்கள் தொகை ஏறக்குறைய ஒரு கோடியே பல இலட்சத்தைத் தாண்டியிருக்கிறது. ஏறக்குறைய





6-ல் ஒரு பகுதி, நம்முடைய தமிழ்நாட்டினுடைய ஆறில் ஒரு பகுதி மக்கள், சென்னையில் இருக்கிறார்கள். இந்த மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது இந்த மக்களை குடியமர்த்துவதற்கு துணை நகரங்கள் அமைப்பதிலே இருக்கிற சிரமங்களை உணர்ந்தபோது, நம்முடைய முக்கியமான அலுவலகங்கள் சென்னை நகருக்கு அப்பால் அமையுமானால் நிச்சயமாக வரவேற்கத்தக்க ஒன்றாக இருக்க முடியும். இதனைக்கூட நான் மலேசியா நாட்டோடு ஒப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கு இருக்கின்ற பிரதமருடைய அலுவலகம், பட்டாலிங் ஜெயா என்று சொல்லப்படுகின்ற மலேசிய நாட்டின் தலைநகரான கோலாலம்பூருக்கு வெளியே அமைந்திருக்கிறது. அப்படி அமைந்திருக்கின்றபோது, அவரைச் சார்ந்த அலுவலகங்கள், அவரைச் சார்ந்த அலுவலர்கள், மலேசிய நாட்டினுடைய தலைநகருக்கு வெளியிலே அமைந்திருக்கிறார்கள். அப்படி அமைகின்றபோது அந்த நாட்டினுடைய தலைநகரில் இருக்கின்ற ஜன நெருக்கடி, மக்கள் நெருக்கடி குறைந்திருக்கிறது. அதையே உதாரணமாக வைத்துக்கொண்டு பார்த்தால்கூட, நம்முடைய தலைமைச் செயலகத்திற்கு, நம்முடைய சட்டப்பேரவைக்கு புதிய வளாகம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன். அப்படி அமையுமானால், அது வரவேற்கத் தக்க ஒன்றாக இருக்க முடியும். நாம் இருக்கின்ற இந்த இடம்கூட, இராணுவத்திற்குச் சொந்தமான இடம் என்பதால், இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அந்தச் சிக்கல்களையெல்லாம் போக்கும்வண்ணம், ஒரு புதிய சட்டப்பேரவை வளாகத்தை இந்த அரசு அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் விடுக்க விரும்புகின்றேன்.

M.R.T.S. என்று இருக்கின்ற அந்த மின்சார இரயில் திட்டத்தைக்கூட மேலும் விரிவாக்கி செயின்ட் தாமஸ் மவுண்ட், வில்லிவாக்கம், திருவொற்றியூர் வரை ஒரு Circular train ஆக அமைத்தால் இந்த ஜனப் போக்குவரத்தை நிச்சயமாக எளிதாக ஆக்கமுடியும். ஆகவே, M.R.T.S. என்ற அந்தத் திட்டத்தை வேளச்சேரி, செயின்ட் தாமஸ் மவுண்ட், வில்லிவாக்கம், மாதவரம், திருவொற்றியூர் என்று அமைக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அமையுமானால் அது Circular train ஆகப் பெயர் பெறும். ஏற்கெனவே, பெங்களூரில் மிகச் சிறப்பாக அந்த Circular road-ஐ அமைத்து அவர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள். அந்தப் பெரிய நகரத்தைச் சுற்றி அவர்கள் சுற்றுப்பாதை, Circular பாதை அமைத்து அவர்கள் அந்த நகரத்திற்குரிய போக்குவரத்துப் பிரச்சினையை மிகச் சிறப்பாகக் கையாண்டிருக்கிறார்கள். அதேவகையிலே, இந்த Circular train அமைய

வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மெட்ரோ இரயிலைப் பொறுத்தவரையிலே, டெல்லி model, அதாவது டெல்லியைப்போல ஒரு தனி நிறுவனத்தை அமைத்து, அதன்மூலமாகச் செயல்படுத்தினால் நிச்சயமாக வரவேற்கத் தகுந்த பெரிய ஒரு முயற்சியாக அது அமையும் என்ற கருத்தினை நான் இந்தப் பேரவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

சுனாமியைப் பொறுத்தவரையில், சுனாமி வந்து இன்று இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும்கூட, அடுத்த சுனாமி எப்போது வரும் என்று யாராலும் சொல்ல முடியாது. இயற்கையின் சீற்றத்தை யாரும் அறிய முடியாது. அப்படி இருக்கக்கூடிய நிலையிலே, சுனாமியைத் தடுப்பதற்கு அல்லது சுனாமி இங்கே வருகின்ற நேரத்திலே காத்துக்கொள்வதற்கான முயற்சிகளில் இந்த அரசு இறங்கவேண்டும். கடலோரங்களில் தடுப்புச் சுவர் கட்டுவது, அல்லது மாங்குரோவ் என்று சொல்லப்படுகின்ற அந்த தடுப்புக் காடுகளை அமைக்கும் பணியினை நாம் செய்ய வேண்டுமென்ற கருத்தினை நான் கூற விரும்புகிறேன்.

மணலைப் பொறுத்தவரையிலே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, சாராயத்தைக் காட்டிலும் அதிகமான இலாபம் கிடைப்பது மணல் என்ற கருத்திலே யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. இதை regulate செய்ய வேண்டிய,—வரன்முறைப் படுத்தவேண்டிய கடமை அரசுக்கு உண்டு. கட்டுமானப் பொருட்களுடைய விலை ஏறுகிறது என்ற வகையிலே யாரும் அதைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. கட்டுமானப் பொருள்களின் விலை நிச்சயமாக ஏறிக்கொண்டுதான் இருக்கிறது. அந்தவகையிலே, மணல் விற்பனையை மிகவும் ஒழுங்குபடுத்தும்வண்ணம் மணல் வாரியம் அமைப்பது தமிழக அரசினுடைய தலையாயக் கடமையாக நாம் செய்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்று சொன்னால், கட்டுமானப் பணிகள்தான் இன்றைக்கு ஏழையெளிய மக்களை ஒரு நம்பிக்கையோடு வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் ஒரு வீடு என்ற கனவு எல்லோருக்கும் இருக்கிறது. ஏழையானாலும் சரி, பாழையானாலும் சரி, அவர்களுக்கு அந்தக் கனவு நிச்சயமாக இருக்கத்தான் செய்யும். ஆகவே, இந்தக் கட்டுமானப் பணியைப் பொறுத்தவரையிலே, அந்த மணலைப் பொறுத்தவரையிலே, ஒரு மணல் வாரியம், சிறப்பான முறைகளைக்கொண்டு அமைக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதேபோல, நம்முடைய மாநிலங்களுக்கிடையே,—ஆந்திராவைப் பொறுத்தவரையிலே நம்முடைய வணக்கத்திற்குரிய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள்: 28 ஆம் தேதி அங்கே குப்பத்திலே, கணேசபுரத்திலே புதிய அணை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவை ஆந்திர முதல்வர் அவர்கள் செய்ய இருக்கிறார்கள் என்ற கருத்தினை அவர்கள் சொன்னார்கள், தகவலைச் சொன்னார்கள்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, கேரள முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இந்த நான்கு மாநிலங்களுக்கிடையேயுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும்வண்ணம், ஏற்கெனவே தென்னகத்தினுடைய முதல்வர்களுடைய conclave என்று சொல்லப்படுகின்ற அந்தக் கூட்டமைப்பை மீண்டும் நிறுவ வேண்டும். அப்படி நிறுவினால் ஒரு நல்லெண்ணப் பரிமாற்றம் நிச்சயமாக ஏற்படும். ஆகவே, இந்த Southern Conclave என்று சொல்லப்படுகின்ற தென்னக முதல்வர்களுடைய கூட்டமைப்பை, நம்முடைய முதல்வர் அவர்கள் முயற்சி செய்து நிச்சயமாக அமைக்க வேண்டும். அப்படி அமைக்கின்றவண்ணமாக, அவர்கள் செய்தால் அது நிச்சயமாக, இந்த மாநிலங்களுக்கிடையே இருக்கின்ற உறவை வளப்படுத்தும். நிச்சயமாக நம்முடைய எண்ணப் பரிமாற்றங்களைப் பதிவு செய்யும். மிக எளிமையாக, மிக எளிதாகக் கருத்துப் பரிமாற்றங்கள் நிகழும் என்பதை நான் இங்கு வலியுறுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–25*

முதலீட்டைப் பொறுத்தவரையிலே முதலீட்டைக் குவிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருவதிலே நம்முடைய மாநில முதல்வருக்கு இருக்கின்ற பங்களிப்பை நான் பாராட்டுகின்றேன். அதேநேரத்திலே, இங்கே இருக்கின்ற விலைவாசி உயர்வு மிகவும் கவலைப்படத்தக்க ஒன்றாக இருப்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். பொதுவாக on line trading என்று சொல்லப்படுகிற. அதாவது கற்பனை விற்பனையிலே அவர்கள் விலையேற்றம் செய்கிறார்கள். அந்தக் கற்பனை விற்பனையை நீங்கள் தடை செய்ய வேண்டும். On line trading என்பதையே ban செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நிச்சயமாக இந்த விலைவாசி கட்டுப்படும் என்பதை நான் கூற விரும்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) ஏனென்று சொன்னால், மிக எளிதாக ஓர் அறையிலே உட்கார்ந்து கொண்டு எல்லாவற்றையும் செய்துவிடக்கூடிய வசதி இந்த on line trading என்று சொல்லப்படுகின்ற

அந்தக் கற்பனை விற்பனையிலே இருக்கிறது. அதை நீங்கள் தடை செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே, நான் விடுக்கின்ற சில கோரிக்கைகளை இந்த அரசு செவிமடுத்துச் செய்யும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன். என்னுடைய தொகுதிக்கு புதிதாக ஒரு போக்குவரத்துப் பணிமனை வேண்டும்.

நெடுஞ்சாலைத் துறைக்கும், பொதுப் பணித் துறைக்கும் பள்ளிப்பட்டு தொகுதிக்கு என்று தனி உட்கோட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். அதைப்போல State Highways என்று சொல்லப்படுகிற, இரண்டு மாநில முதன்மைச் சாலைகளை நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்றார்கள். 106 மற்றும் 108 என்ற எண்கள் இருக்கின்ற அந்த நெடுஞ்சாலைகளை அளித்ததற்காக அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே இன்னும் செய்ய வேண்டிய, மாவட்ட முதன்மைச் சாலைகள் பாக்கி இருக்கின்றன. அவற்றையும் நீங்கள் மாவட்ட முதன்மைச் சாலைகளாக மாற்றி உதவ வேண்டுமென்று நான் இங்கு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதி, தென் தமிழ்நாட்டில் இருக்கிற கன்னியாகுமரியைப்போல, வட தமிழ்நாட்டில் இருக்கின்ற முக்கியமான தொகுதி; ஒரு பின்தங்கிய தொகுதி. 1960–க்கு முன்பாக ஆந்திராவிலே இருந்த எங்கள் தொகுதி தமிழகத்தோடு இணைந்து இன்றைக்கு ஏறக்குறைய 46 ஆண்டுகளாகி இருந்தாலும்கூட அதனுடைய வளர்ச்சி இன்றைக்கும் உகந்ததாக இல்லை. ஆகவே, அதன் வளர்ச்சிக்கு உதவும் வண்ணம், இந்த அரசு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரேயொரு கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு விடுக்க விரும்புகிறேன். மீதம் இருக்கின்ற ஊர்ப்புற நூலகர்களை நீங்கள் Time scale–லே கொண்டு வர வேண்டும். கால முறை சம்பள நிர்ணயம் செய்து அவர்களுக்குச் சம்பளம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன.



***திரு. கோ. எதிரொலி மணியன்:** பேரவையின் மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிற ஒரு நல்ல வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கிற உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, தேர்தல் பேச்சு, அது தெருவோடு போச்சு என்று இல்லாமல், தேர்தல் நேரத்திலே சொன்ன வாக்குறுதிகளையெல்லாம் நிதிநிலை அறிக்கையிலே நிறைவேற்றி. தேர்தல் பேச்சு, சொன்னபடி தீர்த்தும் ஆச்சு என்கிற வகையிலே, ஏழே மாதங்களில் எல்லாவற்றையும் நிறைவேற்றி, எட்டாவது மாதத்தில் சொல்லாததையும் நிறைவேற்றி, குறிப்பாக எரிவாயு அடுப்பு இலவசம் என்று சொன்னீர்கள். ஆனால், சொல்லாத ஒன்று, இணைப்போடு வழங்குவோம் என்பது. ஆனால், இணைப்போடு எரிவாயு அடுப்பு வழங்கி இன்றைக்கு எதிரிக்குக்கூட பேசுவதற்கு எதையும் விட்டுவைக்காமல், எல்லாவற்றையும் நிறைவேற்றி இருக்கிற இந்த அற்புதமான ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிற தமிழக முதல்வர் அவர்களை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் பாராட்டுகிறேன், பெருமையடைகிறேன்.

நான் இந்த இரண்டாவது கூட்டத் தொடரிலே பேசுகிற அற்புதமான வாய்ப்பை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வதற்கு இன்னொரு காரணத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், இந்தச் சட்டப்பேரவை தொடங்குகிறபோது குறிப்பாக நாம் எல்லாம் வெற்றி பெற்று உறுப்பினர்களாகப் பதவி ஏற்ற பிறகு, எங்களைப் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் அழைத்து எங்களுக்குச் சில செய்திகளைச் சொன்னார்கள். அதிலே குறிப்பாக, அரசியலுக்கு வந்தவர்களுக்குத் தகுதி உண்டா என்று பலபேர் கேட்பார்கள். மருத்துவராக வேண்டுமா, M.B.B.S., படித்திருக்க வேண்டும். வழக்கறிஞராக வேண்டுமா, சட்டம் படித்திருக்க வேண்டும் என்றெல்லாம் தகுதி இருக்கிறபோது, அரசியலுக்கு என்று ஒரு தகுதி இருக்கிறதா என்று பலபேர் வியாக்கியானம் செய்வார்கள் மாண்புமிகு உறுப்பினர்களே, அரசியலுக்கு வருபவர்களுக்கு தகுதியைத் தருகிற ஒரே பள்ளி, அரசியல் பள்ளி நடத்துகிற ஒரே இயக்கம், பாட்டாளி மக்கள் கட்சி என்று சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது. தைலாபுரம் தோட்டத்திலே அரசியல் பயிற்சிப் பள்ளியை வைத்து, எங்களுக்கு வகுப்பு நடத்துகிற அற்புதமான வேளையில் அவர் சொன்னார், 'நீங்கள், உங்கள் அரசியல் நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி அல்லது அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அதிலே சால்வைகள் போர்த்துகின்ற பணியை நீங்கள் விலக்க வேண்டும். அதற்குப் பதிலாக புத்தகங்களை வழங்குங்கள். பெறுங்கள்' என்று சொன்னார்.

*பிற்பகல் 12–30*

தலைவர் கலைஞர் அவர்கள்கூடச் சொன்னார்கள். தம்முடைய தொண்டர்களுக்கு மாத்திரமல்ல, எல்லோருக்கும் சேர்த்துத்தான் சொன்னார்கள். "பொன்னாடை என்று போடுகிறீர்கள். அந்த ஆடையிலே பொன்னும் இல்லை, அது உடுத்துகின்ற ஆடையும் இல்லை. எனவே, புத்தகம் வழங்குங்கள்" என்று அவரும் சொன்னார். மாண்புமிகு உறுப்பினர்களே! இதை யாராவது கடைப்பிடிக்கிறீர்களோ இல்லையோ, எனக்குத் தெரியாது. ஆனால், கடந்த 7 மாத காலமாக, நான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து இன்றுவரையில் என் தொகுதியிலே நடைபெறுகிற அத்தனை நிகழ்ச்சிகளிலேயும் புத்தகங்கள்தான் வழங்குகிறேன். புத்தகங்கள்தான் பெற்றுக் கொண்டிருக்கிறேன். கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான புத்தகங்கள் என் இல்லத்தை இன்றைக்கு அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்களே, அதை இன்றைக்கு ஆணையாகப் பிறப்பித்து, அரசு நிகழ்ச்சிகளிலேகூட, புத்தகங்கள்தான் வழங்கவேண்டும் என்ற அற்புதமான ஓர் ஆணையை இன்றைக்கு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிற இந்த அறிவிப்பை நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இப்படிப்பட்ட எண்ணம், செயல்பாடுகள், இந்த நாட்டிலே உருவாக வேண்டும். மீண்டும் அந்தக் கலாச்சாரங்கள், சால்வை போர்த்துவது, பூச்செண்டு கொடுப்பது, இதையெல்லாம் விலக்க வேண்டும். அரசியல் என்பதை வித்தியாசமாகச் செய்ய வேண்டும். படித்தவர்களைப் போற்றுகின்ற விதமாக, புத்தகங்கள் எழுதுகின்றவர்களை ஊக்குவிக்கின்ற விதமாக, இன்றைக்குத் தலைவர் கலைஞர் 1 கோடி ரூபாய் சொந்தப் பணத்தைப் புத்தக வெளியீட்டாளர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அதை ஆணையாக வெளிட்டு, இன்றைக்கு அரசு விழாக்களிலே புத்தகங்களை வழங்க வேண்டுமென்று அறிவித்திருப்பதை நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம்.

குறிப்பாக ஒரு நிதிநிலை அறிக்கை வெளியிட்டு, அந்த நிதிநிலை அறிக்கையின்மூலமாக மக்களுடைய வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவது ஓர் அரசாங்கத்தினுடைய கடமை. எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஓர் அரசாங்கம் தன்னுடைய நிதிநிலை அறிக்கையை எப்படி வெளியிட வேண்டும் என்கிற முன்னோட்டமான ஓர் அறிக்கையை, ஒரு வரைவு நிதிநிலை அறிக்கையாக நாங்கள் வழங்குவது வழக்கம். குறிப்பாக, இந்தியாவில் எந்தவொரு கட்சியும் வழங்காத ஒரு நிதிநிலை அறிக்கையை, வரைவு நிதிநிலை



அறிக்கையை வழங்கியிருக்கிறோம். 2002–லே தொடங்கி, 2003–2004, 2004-2005 என்று ஜெயலலிதா ஆட்சியிலே மூன்று முறை நாங்கள் வழங்கினோம். ஆனால், அவர்கள் அதைக் கண்டுகொள்ளவேயில்லை. ஆனால், இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே நாங்கள் அளித்த அந்த வரைவு நிதிநிலை அறிக்கையை அப்படியே ஏற்று, பல்வேறு விஷயங்களைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, இன்றைக்கு அதை நிறைவேற்றியிருக்கிறார். அதிலே குறிப்பாக, ஒரு குடியரசுத் தலைவருக்குக் கிடைக்கிற மருத்துவ வசதி, சாதாரண குடிமகனுக்கும் கிடைக்க வேண்டும் என்கிற வகையிலே நிர்வாகம் செயல்படும் என்று நாங்கள் அறிவித்திருந்தோம். தலைவர் கலைஞர் இன்றைக்கு அதை ஏற்கிற விதமாக, ஏழைகளுக்கும் எலலா மருத்துவ வசதிகளும் கிடைப்பதற்கு வசதியாக, இன்றைக்கு வரும்முன் காப்போம் என்ற திட்டத்தை உருவாக்கி, நோய்களைக் கண்டறிவது மாத்திரமல்ல, கண்டறிந்து அந்த நோய்களைத் தீர்ப்பதற்கு வசதியாக அறிவுரையும் வழங்கி, ஆலோசனையும் வழங்குகிற ஓர் அற்புதமான திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றியிருப்பதை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய கிராமப்புறங்களில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களை, குறிப்பாக கிராமப்புற மக்களுடைய முன்னேற்றத்திற்கு, சுகாதாரத்திற்கு அவர்கள் நலனுக்கு, அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களையெல்லாம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தி, ஏழைகள் வாழ்விலே ஒளியேற்ற வேண்டுமென்று நான் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டிலே தொழில் வளம் என்று எடுத்துக்கொண்டால், ஏதோ ஒரு பகுதியிலே அதிகமாக இருக்கும்; ஒரு பகுதியிலே இருக்காது. எங்களுடைய கோரிக்கையெல்லாம், 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலேயும், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தொழிற்சாலையை நீங்கள் அவசியம் கொண்டுவரவேண்டும். எத்தனையோ சலுகைகளை வாரி வழங்கியிருக்கிற நீங்கள், அந்தந்தத் தொகுதியில் இருக்கிற மூலப் பொருட்களைக் கொண்டு, செயல்படக்கூடிய தொழிற்சாலைகளை உருவாக்கி, அந்தந்தப் பகுதியிலுள்ள மக்கள் நல்வாழ்விற்கு நீங்கள் உதவுகின்ற வகையிலே, தொகுதிக்கு ஒரு தொழிற்சாலையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு முன்பு பேசிய இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மணல் குவாரிகளுக்கு மணல் வாரியம் வேண்டுமென்று கேட்டார்கள். அதை நான் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், பொதுமக்களுக்கு குறைந்த விலையில், அதேநேரத்தில் சுலபமாக மணல் கிடைக்க வேண்டும். அப்படி மணல் கிடைப்பது என்பது, ஒரு பெரும் பிரச்சினையாக, தீராத பிரச்சினையாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. கிராமத்திலே சாதாரண மண் அல்லது மணல் எடுத்து, தன் சொந்த வீட்டிற்கோ, கோவிலுக்கோ எடுத்துச் சென்றால், அந்த அப்பாவியை மாட்டவைத்து, 40,000 ரூபாய் தண்டம் கட்டச் சொல்கிற அதிகாரிகள், இப்படிப்பட்ட மணல் குவாரிகளிலே கொள்ளையடித்துக் கொண்டிருப்பவர்களை ஊக்குவித்துக் கொண்டிருப்பதை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே இதை முறைப்படுத்த வேண்டும். அரசே அந்த மணல் குவாரியை ஏற்று நடத்த வேண்டுமென்று நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். காரணம், 1,000 ஆண்டுகள் சேர்ந்த மணல் ஆற்றிலே இருக்கிறது. ஆனால், அந்த 1,000 ஆண்டு காலமாகச் சேர்க்கப்பட்ட மணல் யாரோ ஒருவரால் கொள்ளையடிக்கப்படுகிறது. பழமொழி ஒன்று சொல்வார்கள், "ஆயிரம் தச்சர் கூடி அமைந்ததாம் மண்டபம், ஒருவன் கண் பட்டு உடைந்ததாம் மண்டபம்" என்று சொல்வார்கள். தேனீக்கள், தேன் கூட்டுக்கும் இதைச் சொல்வார்கள். அது இயற்கையினுடைய பொக்கிஷம். மணலும்கூட இயற்கையினுடைய பொக்கிஷம்தான். ஆயிரம் ஆண்டுகாலமாகச் சேர்க்கப்பட்ட மணல், ஏதோ ஓர் ஆண்டிற்குள்ளாக, இப்படிப்பட்ட முறையற்ற செயல்களால் இந்த மணல் கொள்ளையடிக்கப்படுகின்றது. தேவையற்ற அளவிற்கு அது வாரப்பட்டு, அந்த இயற்கை வளம் பாழடிக்கப்படுகிறது. குறிப்பாக, பாலாறு போன்ற பகுதிகள் இன்றைக்குப் பாழாறாக மாறிக்கொண்டிருக்கின்றன. குடி தண்ணீர் இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது, நீர்வளம் பாதிக்கப்படுகிறது, சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. எனவே, இதை நீங்கள் முறைப்படுத்த வேண்டுமென்று நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–35*

அதேநேரத்தில் இங்கே பல்வேறு விஷயங்கள் பற்றி பேசப்பட்டது. குறிப்பாக ஒரு தியேட்டரிலே சென்று ஒரு படம் பார்ப்போமென்று சொன்னால், ஒரு முறை பார்த்த படத்தை மறு முறை பார்க்கிறபோது, அவ்வளவு சிறப்பு இருக்காது, சந்தோஷம் இருக்காது. அப்படித்தான்



இன்றைக்குப் பார்த்தால், ஏற்கெனவே கடந்த கூட்டத்தொடரிலே நாம் எல்லாவற்றையும் செய்துவிட்டோம். பேசுவதற்கு ஒன்றுமே இல்லை. எல்லாமே செய்து முடித்துவிட்ட பிறகு எதைப் பற்றிப்பேசுவது என்று எல்லோரும் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். பேசுவதற்கு வாய்ப்பு இல்லை, பலபேர் எழுந்தே போய்விட்டார்கள். இங்கு வருவதே கிடையாது. ஏனென்றால், பேசுவதற்கு ஒன்றுமே இல்லையென்று அவர்கள் காலையிலேயே வெளிநடப்புச் செய்கிறார்கள். எனவே, நான் கேட்பதெல்லாம், இன்றைக்கு அதைப்பற்றிப் பேசுவதைவிட, நடந்து முடிந்ததையெல்லாம் பேசுவதைவிட, தொகுதியின்பால் அக்கறையுள்ள ஒரு செய்தியை இங்கே நான் முன்வைக்க விரும்புகின்றேன்.

என்னுடைய திருவண்ணாமலை மாவட்டத்திலே போக்குவரத்துக் கோட்டம், மண்டலம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டோம். நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். எப்போது பார்த்தாலும், நாங்கள் திருவண்ணாமலை மாவட்டத்திலே இருக்கிறவர்கள், வேலூருக்குப் போகவேண்டும். வேலூருக்குப் போகவேண்டும் என்றால், இதுதான் வேலையா? அவர்களும் கண்டுகொள்வதில்லையே என்று வேண்டுகோள் வைத்தார்கள். தலைவர் கலைஞரிடத்திலே. தலைவர் அவர்களும் சொன்னார்கள். "நீ என்னய்யா வேலூர், வேலூர் என்று போகிறாய்? வேலு, நீ இருக்கும் ஊருக்கே தருகிறேன் கோட்டம்" என்று சொல்லி, வேலு-ஊருக்கு ஒரு கோட்டம் அமைத்து, அண்ணன் அமைச்சர் நேருவின்மூலமாக அதை இன்றைக்குத் தொடங்கி வைக்கிற ஓர் அற்புதமான வாய்ப்பைத் தந்த தமிழக முதல்வர், திருவண்ணாமலை மண்டலத்தைத் தொடங்கிவைத்து, விழா நிகழ்த்திய நம்முடைய அமைச்சர் அவர்கள்—நான் மேடையிலும் வைத்தேன், சட்டப் பேரவையிலும் வைக்கின்றேன், என் தொகுதியிலே ஒரு பணிமனை அவசியம் தேவை. கிட்டத்தட்ட எந்தப் பகுதியில் பார்த்தாலும், 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு நகர்ப்புறம் இல்லை. ஒரு குக்கிராமத்திலே இருக்கின்ற அந்தப் பேரூராட்சி, நகர அந்தஸ்து உள்ள பேரூராட்சி. ஓரே ஒரு நகரப் பேருந்து இப்பொழுது இயங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே, நீங்கள் மனது வைத்தால் ஒரு புதிய பணிமனை தொடங்கி, பல புறநகர்ப் பேருந்துகளை, நகரப் பேருந்துகளை இயக்குகிற ஓர் அற்புதமான வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை சேத்துப்பட்டு நகரத்திலே நீங்கள் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த கூட்டத்தொடரில் நான் கோரிக்கை வைத்தது, பிரிட்டிஷ்காரன் காலத்திலே கட்டிய காவல் நிலையங்களெல்லாம் கலகலத்துப்போய் கிடக்கின்றன, கட்டவேண்டுமென்று கேட்டேன். ஆனால், நிதிநிலை

அறிக்கையிலே இடம் இல்லாமல் ஒதுக்கப்பட்டுவிட்டது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலாவது அதைச் சேர்த்து, பெரணமல்லூர் காவல் நிலையத்தையும், வடவணக்கம்பாடி காவல் நிலையத்தையும் நீங்கள் குடியிருப்போடு கட்டித்தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற தேசூர் பேரூராட்சியைச் சுற்றியிருக்கிற 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு தீயணைப்பு நிலையமே கிடையாது. ஏதாவது ஒரு தீ விபத்து என்று சொன்னால், 30 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சேத்துப்பட்டு, வந்தவாசி அல்லது திண்டிவனத்திலிருந்துதான் வண்டிகள் வரவேண்டும். எனவே, அங்கே தீயணைப்பு நிலையம் ஒன்றை உருவாக்கித்தர வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–40

திருவண்ணாமலை மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்தது. ஆனால், இருக்கின்ற அலுவலகங்களெல்லாம் அங்கே வந்து சேரவில்லை. திருவண்ணாமலை நகரத்திற்குள் ஆங்காங்கு இருக்கின்ற அலுவலகங்களும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இருக்கின்ற பகுதியிலேயே அத்தனை அலுவலகங்களும் இருந்தால் நல்லது. அதற்கு தேவையான இடம்கூட இருக்கிறது. போதுமான வசதி இருக்கிறது. அரசின் மனம் இருந்தால் மட்டும் போதும். அங்கே எல்லா அலுவலகங்களையும் கொண்டு வந்து வைக்கலாம். ஒரு சாமானியன், ஒரு விவசாயி வந்தால், ஒரே இடத்தில் எல்லா அலுவலகங்களையும் பார்க்கின்ற வாய்ப்பு, அதிகாரிகளைச் சந்திக்கின்ற ஒரு வாய்ப்பு இருக்க வேண்டும். அவன் ஆட்டோவை எடுத்துக்கொண்டு, இங்கேயும் அங்கேயும் அலைந்து, பணத்தைச் செலவழித்து வீணாகப் போக ஒரு நிலை இருக்கிறது. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலகத்திற்குள்ளாக எல்லா அலுவலகங்களையும் கொண்டு வந்து அமைக்க வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று, எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிகமான பால் உற்பத்தியாகின்றது. நம்முடைய பால் வளத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கேள்விப்பட்டார். வந்திருந்தார், புரிந்துகொண்டார். அவருக்கு என்னுடைய மாவட்ட அமைச்சர் கோரிக்கையும் கொடுத்திருக்கிறார். திருவண்ணாமலை மாவட்டத்திலே பால் அதிகமாக உற்பத்தியாகின்றது. ஆனால், எங்கள் பெயராலே



அந்த ஒன்றியம் இல்லை. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் என்று சொல்லி வேலூர் மாவட்டத்திலே இருக்கின்றது. உற்பத்தி செய்வது எல்லாம் நாங்கள். பெயரை வாங்கிக்கொள்வது வேலூர். எனவே, தயவுசெய்து வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தைப் பிரித்து திருவண்ணாமலை மாவட்டத்திற்கு நீங்கள் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தைத் தொடங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொண்டு, தந்த நல்வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழும், தமிழ்ப் பெயரும் நிலைத்திட, தலைவர் அவர்களின் புகைவண்டி மறியல் போராட்டத்தில் தண்டவாளத்தில் தலை வைத்து போராட்ட களம் கண்ட ஊருக்கு அருகில் உள்ள மால்வாய் என்ற குக்கிராமத்தில் பிறந்த என்னை தங்களின் தளகர்த்தர், நினைவில் வாழும் புரவலர் அன்பிலார் அவர்களும், திருச்சி மாவட்டத்தில் தங்களின் தளகர்த்தராக விளங்கும் மாண்புமிகு அண்ணன் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் போட்டியிட்ட லால்குடி தொகுதியில் போட்டியிட எனக்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு முதல்வர் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சிமன்றத் தலைவராக இருந்த எனக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பொறுப்பு கொடுத்ததோடு நில்லாமல், எங்கள் ஊருக்கு வருகை தந்து தலைமையேற்று எனக்கு திருமணம் செய்து வைத்ததோடு நில்லாமல், லால்குடி தொகுதிக்கு வேட்பாளராக தலைவர் தேர்வு செய்வதற்கு உறுதுணையாக இருந்து, வெயிலையும் பொருட்படுத்தாமல் தொகுதிக்கு வருகைபுரிந்து எனது வெற்றிக்கு உழைத்திட்ட இளைஞர் அணியின் எழுச்சிமிகு நாயகன் உள்ளாட்சியில் நல்லாட்சி செய்யும் ஓய்வறியா சூரியன் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், தான் ஒன்றியப் பெருந்தலைவராக இருந்த காலம் முதல் என்னை ஊராட்சி மன்றத் தலைவராக, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளராக, ஒன்றியச் செயலாளராக, பொதுக்குழு உறுப்பினராக ஆவதற்கும், இன்று சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கும், எனக்கு தந்தையில்லை என்ற குறையினை எங்கள் குடும்பத்தின் தலைமகனாக இருந்து, எனது வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக இருக்கும் மாவட்ட கழகச் செயலாளர் மாண்புமிகு அண்ணன் போக்குவரத்துத் துறை

அமைச்சர் அவர்களுக்கும், எனது வெற்றிக்கு உழைத்திட்ட தோழமைக் கட்சிகளின் தலைவர்களுக்கும், லால்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்து கடனிலேயே மறையும் விவசாயிகள்—தலைவர் கலைஞர் அவர்களின் அரசு பொறுப்பு ஏற்ற அன்றே கோப்பில் கையெழுத்திட்டு, ரூ. 7,000 கோடி கடன் தள்ளுபடி செய்து விவசாயிகள்—வாழ்வில் ஒளியேற்றினீர்கள். கடந்த சில ஆண்டுகளாக இயற்கைச் சீற்றத்தாலும், கடந்த அரசின் மெத்தன போக்காலும், குறுவை, தாளடி, சம்பா விவசாயம் பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டுதான் குறுவை பயிரும், சம்பா பயிரும், தாளடி பயிரும் நன்றாக உள்ளது. விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள்.

தேசிய நதி நீர் இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் வலியுறுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு விவசாயிகளின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எப்போது தலைவர் கலைஞர் ஆட்சி அமைகிறதோ அப்போது மட்டுமே சீரமைப்புப் பணிகளும், நலத் திட்டங்களும் நிறைவேற்றப்படும் என்பது லால்குடி தொகுதியின் வரலாறு.

கடந்த 2004–2005 ஆம் ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தின்போது திருச்சி மாவட்டத்தில் அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதி மட்டுமல்ல; விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திய பகுதியான லால்குடி தொகுதியில் உள்ள உப்பாறு, கூழையாறு, நந்தியாறு ஆகிய ஆறுகளில், தொடங்கும் இடம் முதல் கொள்ளிடத்தில் இணைகின்ற இடம்வரை இருக்கும் புதர்களையும், ஆக்கிரமிப்புகளையும் அகற்றி தூர்வாரி தரவும், வெள்ளம் ஏற்படுகின்ற காலங்களில் கொள்ளிடக் கரைகள் உடைந்து ஊருக்குள் தண்ணீர் புகுந்துவிடுவதைத் தடுத்திடவும் கொள்ளிடக் கரைகளை உயர்த்தித் தரவேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–45*

2004–2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளச் சேதத்தின்போது பல ஊர்களில், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோரின் கூரை வீடுகள் சேதம் அடைந்து, அனைத்து வீடுகளும் இதுவரை அவர்களால் சீர்செய்துகொள்ள முடியவில்லை. எனவே, அந்த வீடுகளுக்குச் சிறப்பு நிதி ஒதுக்கி, அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றிட வீடுகள் கட்டித்தர



வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கடந்த முறை திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபொழுது, திருச்சிக்கு மருத்துவக் கல்லூரி வழங்கியதால், திருச்சி அரசு மருத்துவமனை, கல்லூரி மருத்துவமனையாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, லால்குடி அல்லது புள்ளம்பாடியில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ஏதேனும் ஒன்றினை மாவட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தித் தரவேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி, தஞ்சை மாவட்டத்தை இணைக்கும் செங்கறையூர், பூண்டிக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பதற்கு மாண்புமிகு அண்ணன் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் பெரும் முயற்சியால் கடந்த 15 தினங்களுக்கு முன்பாக இடத்திற்கே வந்து ஆய்வு செய்த மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, அந்தப் பணியினை இவ்வாண்டே தொடங்கிட உத்தரவினைப் பெற்றுத் தந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினை தொகுதியின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சி–சிதம்பரம் சாலை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. சீர்கெட்டுக் கிடந்த அதனைச் சீர் செய்வதற்காக நிதி ஒதுக்கிக் கொடுத்த மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரை என்பது அரசின் கொள்கைக் குறிப்பு என்பதைவிட சாதனைத் தொகுப்பு என்பதே சாலப் பொருத்தமுடையது என்பதனைத் தெரிவித்து, சிறப்புமிக்க இந்த ஆளுநர் உரையை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

***திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். அகிலமெங்கும் ஒளி வீசும் ஆதவனைப் போல், தரணி எங்கும் புகழ்வீசும் தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றபின் குறுகிய காலத்தில் ஏழை மக்களின நலன் ஒன்றையே முக்கியம் எனக் கருதி, இந்த அரசு யாராலும செய்ய முடியாத இலவச வண்ணத்

தொலைக்காட்சிப் பெட்டி, இலவச எரிவாயு இணைப்பு போன்றவற்றை வழங்கும் திட்டங்களை அறிவித்து, அதைச் செய்து காட்டியது, அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளது. இந்தத் திட்டங்களையெல்லாம் பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது, வாழ்த்துகிறது, மேலும் சிறப்பாகச் செயலாற்ற பா.ம.க. துணை நிற்கிறது.

ஆளுநர் உரை மாற்றாரை மட்டுமல்லாமல், இந்த நாட்டு மக்களையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது. 9–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூபாய் 25 ஆயிரம் கோடியாக இருந்த திட்ட ஒதுக்கீடு, 11–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூபாய் 80 ஆயிரம் கோடி அளவிற்கு அறுதியிட்டு திட்டப் பணிகளைச் செயல்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளதை பா.ம.க. வரவேற்கிறது.

2007 ஆம் ஆண்டு துவங்கும் 13–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு அனைத்துத் தரப்பு மக்களும் வாழ்க்கைத் தரம் உயர ரூபாய் 2 இலட்சம் கோடி பெற்று திட்டம் செயல்படுத்த வேண்டும் என அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு 31–12–2006 ஆம் தேதிக்குள் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளுக்கு பதிவுக் கட்டணம் சமச் சீர் செய்ய கால அவகாசம் கொடுத்திருந்தது. காலம் முடிந்துவிட்ட காரணத்தால், ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகளில் தடையில்லாச் சான்று வழங்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் நிலம் கிரயம் செய்பவர்கள் கிரயம் செய்யாமல் உள்ளனர். இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, கால அவகாசத்தை மேலும் ஒரு மாத காலம் நீட்டித்துக் கொடுக்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பல்வேறு இடங்களில், வனத் துறைக்குச் சொந்தமான இடங்களில் மக்கள் பல ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள். கவர்னர் உரையில், 10 ஆண்டுகளுக்கு மேல் அரசு நிலங்களில் வசிப்பவர்களுக்கு 6 மாத காலத்திற்குள் பட்டா வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தச் சலுகை, பயன் அளிக்கும் வகையில் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் வசிப்பவர்களுக்கும் பட்டா வழங்க வேண்டுமாயும், அப்பகுதி மக்களுக்கு சாலை வசதி அமைத்துக் கொடுக்க, உள்ளாட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கு, வனத் துறை, நிலம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமாயும், இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில் தமிழக அளவில் தேசிய நெடுஞ்சாலைகளில் அவசர சிகிச்சை பெறுவதற்கு தனியார் மருத்துவமனைகளின் வாகன ஊர்தி நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. விபத்து ஏற்படும்பொழுது, பாதிக்கப்பட்ட பயணிகளை அந்த ஊர்திகளில் ஏற்றி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லாமல், தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோயாளிகள் வேறு அரசு மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறத் தடுக்கப்படுகின்றனர். எனவே, நெடுஞ்சாலைகளில் உள்ள தனியார் மருத்துவமனையின் அவசர சிகிச்சை ஊர்திகளை அகற்றிவிட்டு, அரசே அவசரகால ஊர்திகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.





பிற்பகல் 12–50

இவ்வரசு அனைத்துத் துறைகளிலும் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பி வருகிறது. இந்தத் தருணத்தில், அனைத்துத் துறைகளிலும் பணியில் இருந்தபோது மரணம் அடைந்தவர்களைக் கண்டறிந்து அவர்களின் வாரிசுகளுக்கு அரசுப் பணி வழங்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் படித்துவிட்டு, வேலை வேண்டி பல இலட்சம் பேர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வைத்துள்ளனர். அரசு. பணி நியமனம் செய்யும்போது, அரசு வேலை பெற வயது உச்சவரம்பு பூர்த்தி அடையும் நிலையில் உள்ள வேலை இல்லாத பட்டதாரிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முன்னுரிமை அளிக்க வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 25–12–2006 ஆம் தேதியில் காவிரி ஆற்றில் நெருஞ்சிப்பேட்டையிலிருந்து பூலாம்பட்டிக்கு 89 பயணிகளுடன் வந்த படகு ஆற்றில் மூழ்கும் நிலை ஏற்பட்டது. பயணிகள் ஆற்றில் குதித்து நீந்தி வந்ததனால், பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது. இதனால், தற்போது பூலாம்பட்டிக்கும், நெருஞ்சிப்பேட்டைக்கும் இடையே படகு சவாரி நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, பூலாம்பட்டிக்கும் நெருஞ்சிப்பேட்டைக்கும் இடையே காவிரி ஆற்றில் பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பாலம் கட்டும்வரை நெருஞ்சிப்பேட்டை barrage–ஐ இரவு நேரங்களில் திறந்து பயணிகள் போக்குவரத்திற்கு உதவ வேண்டுமாய் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பூலாம்பட்டியை சுற்றுலாத் தலமாக்க வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேட்டூர் அணை நிரம்பும்போது ஒவ்வொரு முறையும் உபரி நீர் கடலில் கலந்து வீணடிக்கப்படுகிறது. எனவே, உபரி நீர் பயன்படும் வகையில், புதிய கால்வாய் ஒன்று வெட்டி, ஓமலூர், தாரமங்கலம், எடப்பாடி, சங்ககிரி ஆகிய தொகுதிகளின் விவசாய மக்கள் பயன்பெற வகை செய்ய வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் இரும்பாலைக்கு நிலம் கொடுத்தவர்களுக்கு இன்னும் வேலைவாய்ப்பு கொடுக்கப்படவில்லை; ஒரு தலைமுறை முடிவடையப் போகிறது. ஆனால், அந்த இரும்பாலையில் வெளி மாநிலத்தவர்கள் வேலை செய்து வருகிறார்கள். ஆனால், நிலம் கொடுத்தவர்கள் வேலை கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க ஆவனசெய்ய வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எடப்பாடியில் கவுண்டம்பட்டிக்கும், வெள்ளாண்டிவலசுக்கும் இடையே சரபங்கா நதியின் குறுக்கே பாலம் ஒன்று கட்டிக் கொடுக்க வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன். தாராபுரத்திற்கும் வேம்பனேரிக்கும் இடையே பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன். எடப்பாடி நகரத்தில் பாதாளச் சாக்கடை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன். சரபங்கா நதியைத் தூர்வாரி கான்கிரீட் தளம் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எடப்பாடியில் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்க வட்டச் சாலை ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எடப்பாடியில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய அரசுக் கட்டடம் கட்ட இடம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எடப்பாடி தாலுகா அந்தஸ்தில் உள்ளது. தாலுகா அந்தஸ்தில் உள்ள அந்தப் பகுதிக்கு நீதிமன்றமும், கருவூலமும் தொடங்கப்பட வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். எடப்பாடி தாலுகா மருத்துவமனை தரம் உயர்த்தப்பட வேண்டும். அங்கு அறுவை சிகிச்சை மையம் தொடங்கப்பட வேண்டுமென்றும் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொங்கணாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை மையம் ஒன்று உள்ளது. உற்பத்தியாகும் பஞ்சு அங்கு அதிகமாக விற்பனைக்கு வருகின்றன. அதனால், கொங்கணாபுரத்தை மையமாக வைத்து அங்கு நூற்பாலை ஒன்று தொடங்க வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எடப்பாடி தொகுதியில் உள்ள மாணவ மாணவிகள் வெகு தூரம் சென்று கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், அங்கு கலைக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். எடப்பாடி தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில்



கரும்பு விவசாயம் அதிகமாகச் செய்யப்படுகிறது. ஆகவே, எடப்பாடி தொகுதியில் சர்க்கரை ஆலை ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமாயும் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எடங்கணசாலை மற்றும் இளம்பிள்ளைபேரூர் உள்ளடக்கிய பகுதிகளில் ஜவுளிகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, இந்தப் பகுதியில் ஜவுளிப் பூங்கா ஒன்றை அமைக்க வேண்டுமாய் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அழகப்பம்பாளையம்புதூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன். மாங்குட்டபட்டி, வேடிச்சிக்காடு, குண்டுரசம்பாளையம் ஆகிய பகுதிகளில் குடிநீர் உந்து நிலையங்களை அமைத்துக் கொடுக்க வேண்டுமாயும் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எடப்பாடி தொகுதி மக்களுக்கு சரியான குடிநீர் வழங்கப்படாமல் உள்ளது. அதனால் பூலாம்பட்டியிலிருந்து மகுடஞ்சாவடி வரை புதிய தனி குடிநீர்க் குழாய் அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 12–55*

கிராமப்புற மாணவர்கள் உயர் கல்வி பெற கடன் வழங்க வங்கிகள் முன்வர அரசு வலியுறுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஒரு வீட்டில் இரண்டு குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் குடும்பம் நடத்த முடியாத அவல நிலை இருந்து வருகிறது. அவர்களையெல்லாம் கண்டறிந்து அவர்களுக்கு நிலங்களை ஒதுக்கி வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதுடன் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமாயும் அந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான கட்டமைப்புப் பணிகளையும் செய்து கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேலும், விழுப்புரம், முகையூர் தொகுதி, கொடுக்கப்பட்டு வசந்த கிருஷ்ணாபுரம், கெடிபுரம் ஆற்று மேம்பாலம் கடந்த ஆண்டில் ரூபாய் 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்து டெண்டர் விடப்படாமல் நிலுவையில் உள்ளது. எனவே, நமது அரசு இந்த நல்ல திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து 10 கிராம மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமாய் கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன்

[2007 ஜனவரி 24

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனவரி திங்கள் 20 ஆம் நாளன்று தமிழக சட்டப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய தீர்மானத்தின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எனது கருத்துகளைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உவந்தளித்திருக்கக்கூடிய இந்தப் பேருரை என்பது கடந்த 8 மாத காலமாக தமிழகத்திலே ஆண்டுகொண்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழக மக்களுக்கு செய்து இருக்கக்கூடிய நன்மைகள் சம்பந்தமாக அமலாகிக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்கள் சம்பந்தமாக பல்வேறு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இவற்றை வரவேற்பதோடு, தொடர்ந்து இந்தத் திட்டங்கள் குறிப்பிட்ட பயனாளிகளுக்குச் சென்று கிடைப்பதை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை முதலிலே முன்வைக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுபோல 10 ஆண்டுகளுக்கும் மேலாக அரசுப் புறம்போக்கு நிலங்களிலே வீடுகளைக் கட்டிக் குடியிருக்கும் ஏழை எளியவர்களுக்குப் பட்டா வழங்க கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலும்கூட, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த உத்தரவு என்பது அமலாக்கப்படாத சூழ்நிலை. 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள்ளாக அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகளைக் கட்டிக் குடியிருக்கும் ஏழை எளியவர்களுக்குப் பட்டா வழங்கவேண்டுமென்ற இந்த அரசாணை என்பது உண்மையிலேயே புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து கொண்டிருக்கக்கூடிய மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.

நான் இந்த அரசாங்கத்திடம் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்வது, சென்னை மாநகரம் போன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய மிகப் பெரும் நகரங்களில் வாழக்கூடிய மக்களுக்கு, சென்னை மாநகரத்தில் 32 கிலோ மீட்டர் தூரத்திற்கு பட்டா வழங்கக்கூடாது என்ற உத்தரவு என்பது அமலிலே இருக்கிறது. சென்னை நீங்கலாக மாவட்ட தலைநகரங்கள் மற்றும் பெரு நகரங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு 16 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதிகளில் வாழக்கூடியவர்களுக்குப் பட்டா வழங்கக்கூடாது என்ற விதி என்பது அமலாகிக் கொண்டிருக்கிறது. இந்த விதிகள் என்பது தளர்த்தப்பட்டால்தான் சென்னை போன்ற நகரங்களிலும், தமிழகத்திலே மற்ற நகரங்களிலும் வாழக்கூடிய மக்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்திருக்கக்கூடிய இந்தத் திட்டம் என்பது பயனளிப்பதாக அமையும் என்பதை முதலிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2007 ஜனவரி 24] [திரு. கே. மகேந்திரன்]

சென்னைப் பெருநகர வளர்ச்சி சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தோடு இணைந்து 4.5 ஆயிரம் கோடி ரூபாயில் புதிய வளர்ச்சித் திட்டங்கள் என்பது சென்னையிலே அமலாக்கப்படும் என்ற அறிவிப்பு என்பது ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3-ன் கீழும், அதேபோன்று ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழும் சென்னை மாநகரத்திற்குத் தேவையான சாலைகள் மற்றும் மேம்பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆளுநர் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது சென்னை மாநகரம் என்பது வட சென்னை, தென் சென்னை, மத்திய சென்னை என்று மூன்று பாராளுமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய பகுதியாக இருந்துகொண்டிருக்கிறது. சென்னை மாநகரத்தில் கடந்த காலத்தில் அமலாக்கப்பட்டு இருக்கக்கூடிய பறக்கும் இரயில் திட்டம் என்பது சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து துவங்கி வேளச்சேரி வரை இப்போது பணிகள் நடந்து முடிந்து தாம்பரம் வரை அது நீடிப்பதாகவும் அந்த நீடிப்பு என்பது கோயம்பேடு வரை தொடர்வதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. கோயம்பேடு வரை வரக்கூடிய அந்த பறக்கும் இரயில் திட்டம் என்பது மாதவரம், திருவொற்றியூர், டி.எச். சாலை என்று வருவதுதான் வட சென்னை மக்களின் நீண்ட கால கனவுகளை நிறைவேற்றக்கூடிய திட்டமாக இருக்கும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு பெரம்பூர் பகுதியில் இருக்கக்கூடிய வியாசர்பாடி இரயில்வே மேம்பாலம், கணேசபுரம் இரயில்வே மேம்பாலம் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்தபோது, சென்னை மாநகரத்தினுடைய மேயராக இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றிருந்தபோது சென்னை மாநகரத்தில் 10 மேம்பாலங்கள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

பிற்பகல் 1-00

பெரம்பூர் மேம்பாலப் பணிகள் என்பது இப்பொழுது மீண்டும் துவங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாலம் உள்பட வியாசர்பாடி இரயில்வே மேம்பாலம், கணேசபுரம் இரயில்வே

[திரு. கே. மகேந்திரன்] [2007 ஜனவரி 24

மேம்பாலம் என்பது கட்டி முடிக்கப்படுவதன்மூலம்தான் வட சென்னைப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் சென்னை மாநகரத்தோடு மழைக் காலங்களிலே தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் என்று வரும்போது அந்த வளர்ச்சித் திட்டத்தில் வட சென்னையும் முழுமையாக சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு சென்னையிலே பாதாள இரயில் திட்டம் அமலாக்குவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த ஆய்வுகளில்கூட சென்னை பாரிமுனையிலிருந்து கோயம்பேடு வரையும், அதேபோன்று பாரிமுனையிலிருந்து தாம்பரம் வரையும் அந்தப் பாதாள இரயில் திட்டம் அமலாக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பாதாள இரயில் திட்டம் என்பது சென்னை பாரிமுனையிலிருந்து திருவொற்றியூர் வரையும், அதேபோன்று தேசிய நெடுஞ்சாலை எண் 5 பாரிமுனையிலிருந்து E.H. சாலையிலும் அந்தத் திட்டம் அமலாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழக அரசாங்கம் மேற்கு வங்க மாநிலத்திலே வழங்கப்பட்டுக் கொண்டிப்பதைப் போல நிலமற்ற ஏழைகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தை அமலாக்கிக் கொண்டிருப்பதை மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பழங்குடியின மக்களுக்கு இனச் சான்றிதழ் கிடைக்காத காரணத்தினால் அவர்கள் இந்தத் திட்டத்திலே பயனடைய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு நம்முடைய ஆளுநர் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டு காலமாக நடைபெறாமல் இருந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நம்முடைய அரசாங்கத்தால் நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது முன்னுக்கு வந்திருக்கக்கூடிய பிரச்சினை என்பது திருப்பத்தூர் தாலுகாவில் கதிர்புரம், இஸ்லாபுரம், குறுவர்வலசை ஆகிய பஞ்சாயத்துகளுக்கு பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெறாமல் இருக்கிறது. அங்கே மலைசாதியினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தப் பஞ்சாயத்துகளுக்கு குறிப்பிட்ட அந்த இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடைக்காத ஒரே காரணத்தினால் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெறாமல் இருக்கிறது. அங்கே பஞ்சாயத்துத் தேர்தல்



2007 ஜனவரி 24] [திரு. கே. மகேந்திரன்]

நடைபெறுவதற்கு மலைவாழ் மக்களுக்கு இனச் சான்றிதழ் வழங்குவதை நம்முடைய அரசு விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்திரா குடியிருப்புத் திட்டத்தில் இன்றைக்கு கட்டப்படும் வீடுகளுக்கு மத்திய மாநில அரசாங்கத்தின் சார்பாக 32 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. இது 200 சதுர அடி கொண்ட வீடுகளாக அமைக்கப்படுகிறது. அதேநேரத்தில் சமீபத்தில் 2 ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்படக்கூடிய வீடுகள் என்பது 300 சதுர அடி வீடு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு கட்டிக் கொடுக்கப்படுகிறது. 300 சதுர அடி வீடு என்பது 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் என்றால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்படக்கூடிய இந்திரா குடியிருப்புத் திட்டத்திலே கட்டப்படக்கூடிய அந்த வீடுகளுக்கு 32 ஆயிரம் ரூபாய் என்றிருப்பதை எந்த வகையிலும் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. ஏனென்றால், இன்றைக்குப் பல பயனாளிகளிடம் இந்தத் திட்டம் என்பது அமலாகும்போது பயனாளிகள் ஒரு பகுதி பணத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்கக்கூடிய நிலைமை இருக்கக்கூடிய காரணத்தினால் சுனாமிக்காக கட்டப்படக்கூடிய வீடுகளுக்கு சதுர அடிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறதோ அதேபோன்று நிதி, இந்திரா குடியிருப்புத் திட்டத்திலே வரக்கூடியவர்களுக்கும் ஒதுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கான சலுகைகள் என்பது இப்போது இந்து மதத்தைச் சார்ந்த ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படுவதைப்போல கிறித்துவ மதத்தைப் பின்பற்றக்கூடியவர்களுக்கும் அந்தச் சலுகைகள் வழங்கப்படும் என்று ஏற்கெனவே கடந்த ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதற்கான அரசாணை என்பது வெளியிடப்படாமல் இருக்கிறது. அந்த அரசாணை வெளியிடப்பட்டிருந்தால், உடனடியாக அந்தப் பகுதி மக்களுக்கும் அது கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனறு பணிவன்போடு நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

விவசாயத் துறையினுடைய வளர்ச்சி சம்பந்தமாக பல்வேறு விவரங்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. விவசாயத் துறையிலே 4 சதவிகிதமான வளர்ச்சியை தமிழகத்திலே ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்போது இன்றைக்கு வேளாண் துறையில் Bt. பருத்தி, Bt. நெல், கத்தரி என்று பெரும் பாதிப்பு ஏற்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக

போராட்டங்களை நடத்தியுள்ளார்கள். இதை கணக்கில் கொண்டு **Mahyco Company**யைத் தடை செய்திட தமிழக அரசு முன்வர வேண்டும் என்று உங்களை பணிவன்போடு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று இன்றைக்கு நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று (மணியடிக்கப்பெற்றது) ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்த மின் இணைப்புகள் எல்லாம் அவர்களது தந்தை பெயரில் அல்லது தாத்தா பெயரில் இருக்கக்கூடிய காரணத்தினால் இப்போது இருக்கக்கூடிய நெசவாளர்களால் நம்முடைய அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நலத் திட்டத்தை பெற முடியாத நிலைமை இருக்கிறது.

பிற்பகல் 1-05

இதிலே இந்த விதிகள் என்பது தளர்த்தப்பட்டு அனைத்து நெசவாளர்களுக்கும் இந்தப் பயன் என்பது கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க பண்ணை சாரா கடன்களுக்கு முந்தைய அ.தி.மு.க. அரசில், ஒருமுறை கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் சாதாரண வட்டி மற்றும் தவணை தவறிய தொகைமீதான கூடுதல் வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனால், தற்போது தமிழக அரசு அறிவித்துள்ள புதிய திட்டத்தின்படி தவணை தவறிய தொகைமீதான வட்டியையும் மற்றும் அபராத வட்டியையும் சேர்த்து, சென்ற அரசு அறிவித்ததைவிட கூடுதலாக தொகை நிர்ணயித்து கடன்தாரர்களுக்கு notice அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் இருக்கின்றன. இரு notice-களையும் அமைச்சரின் பார்வைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கக்கூடிய தீர்மானத்தின்மீது பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

***திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகுந்த நேர நெருக்கடிக்கு இடையில் எனக்கு வாய்ப்பளித்தமைக்கு உங்களுக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் கருப்பசாமி பாண்டியன் அவர்களால் முன்மொழியப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் காமராஜ் அவர்களால் வழிமொழியப்பட்ட ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகிற வாய்ப்பினைத் தந்தமைக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற தத்துவத்தின் அடிப்படையில் நடைபெற்று வருகிற அரசு என்பதை ஆளுநர் உரை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. அரசாங்கத்தினுடைய கொள்கைக் குறிப்பு என வர்ணிக்கப்படுகிற இந்த ஆளுநர் உரை என்பதைவிட, அரசாங்கத்தினுடைய சாதனைக் குறிப்பு என்பது சாலப் பொருத்தமாக இருக்கும். ஒரு நல்ல நிதிநிலை அறிக்கை எதிர்காலத்திலே கிடைக்க இருக்கிறது என்கிற நம்பிக்கையை ஊட்டுகிற உரையாக இந்த ஆளுநர் உரை அமைந்துள்ளது.

ஆளுநர் உரையில் இடம் பெறும் திட்டங்கள் அந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்று, செயலாக்கத்திற்கு வரத் தேவையான நிதி ஒதுக்கீட்டையும் பெற உறுதியளித்திருக்கிற உரையாக இந்த ஆளுநர் உரை அமைந்துள்ளது. தேர்தல் வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றி முடித்த அரசின் சார்பில் இடம் பெற்றுள்ள ஆளுநர் உரை, மேலும் பல புதிய நல்ல திட்டங்களை எதிர்பார்க்கும் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது.

வைக்கப்பட்டுள்ள ஆளுநர் உரை, தோழமைக் கட்சி தலைவர்களும், அரசியல் விற்பன்னர்களும், திறன்மிக்க நிர்வாகிகளும். பத்திரிகையாளர்களும் மற்றும் அனைத்துத் தரப்பினரும் பாராட்டு தெரிவிக்கின்ற அளவிற்குப் புகழ் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது இந்த ஆளுநர் உரை.

நடைபெறுகின்ற பல்வேறு அரசியல் நிகழ்வுகளுக்கிடையில் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிற மிக முக்கியமான தீர்மானங்களில் ஒன்றாக, சட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகிற பாப்பாபட்டி, கீரிப்பட்டி உள்ளிட்ட நான்கு ஊராட்சிகளில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டுவந்த கால கட்டத்தில், அவர்களுக்கு என்று ஒரு தனிச் சட்டத்தை உருவாக்கி, மீண்டும் அவர்கள் தேர்தலிலே நின்று அந்த மன்றத்திலே இடம்பெறலாம் என்கின்ற சட்டத்தை நிறைவேற்றி, சுழற்சி முறை இருந்தாலும்கூட, அந்த நான்கு ஊராட்சிகளுக்கென்று தனிச் சிறப்பினை ஏற்படுத்திய நம்முடைய முதல்வர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி உள்ளிட்ட நான்கு ஊராட்சிகளுக்கு நடந்த இந்தத் தேர்தல் என்பதை சிலர் செய்தியாகவும், பத்திரிகையிலே வருகின்ற நிகழ்வுகளாகவும் கருதிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சி என்பதை ஒரு சாதாரண

நிகழ்ச்சியாகவோ, ஒரு செயலாகவோ எடுத்துக்கொண்டுவிட முடியாது. தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், கழகத் தலைவர் கலைஞரும், பேராசிரியர் பெருந்தகை அவர்களும், இந்த இயக்கத்தினுடைய கொள்கையையொட்டிப் பணியாற்றுகிற இந்தக் கால கட்டத்தில், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட அனைத்துச் சமுதாயத்து மக்களும் இந்த மண்ணிலே அங்கீகரிக்கப்படுவார்கள் என்கின்ற சமூகநீதி சிந்தனையோடு இன்றைக்கு அடுத்த தலைமுறைக்கு வழிவகுக்கிற, அடுத்த தலைமுறையினுடைய எதிர்கால தமிழகத்தின் நிகழ்கால தலைவன் என்று கருதப்படுகிற, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய காலத்தில் நிறைவேறியிருக்கிறது என்பது இந்த வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று. இந்த நிலையில் இந்த நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்கின்ற தத்துவத்தில், உரிமைக்குக் குரல் கொடுத்து, உறவுக்குக் கை கொடுத்து, மத்திய அரசிடமிருந்து நன்மைகளை, உரிமைகளை முறையாகப் பெற்று, தமிழகத்திற்குப் பெருமையைச் சேர்க்கும் பங்கை இந்த அரசு வகுத்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-10*

காலத்தின் தேவைக்கேற்ப புதிய அரசமைப்புச் சட்டம் தேவையென்று அரசியல் வல்லுநர்கள் கூறுகிற நேரத்திலும், மாறுதல் ஒன்றே மாறாதது என்ற காரல் மார்க்சினுடைய தத்துவத்திற்கேற்ப காகிதத்தில் கூட்டாட்சியாகவும், நடைமுறையில் ஒற்றையாட்சியாகவும் அமையும் வகையில் உள்ள இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணம் நிறைவேறும் வகையில், இந்திய அரசியல் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை இந்த மாமன்றத்தில் வைத்ததோடு, தலைவர் கலைஞர் அவர்கள் நேற்று நடத்திய முரசொலி அறக்கட்டளை நிகழ்ச்சியிலேகூட, சமுதாய எழுத்தாளராகக் கருதப்படுகிற ஜெயகாந்தன் அவர்களுடைய 'வாக்குமூலம்' என்கிற புத்தகத்திலே இடம் பெற்றிருக்கிறது. இந்திய அரசியல் சட்டம் மாற்றப்படவேண்டிய ஒன்று. அது மாற்றப்படாத ஒன்று என்றால், அது அடிமை சாசனம் என்றுதான் விடுதலை பெற்ற இந்தியர்கள் கருதுவார்கள் என்று ஜெயகாந்தன் 'வாக்கு மூலம்' என்ற புத்தகத்திலே குறிப்பிட்டிருக்கிறார் என்று நம்முடைய தலைவர் அவர்கள் நேற்றைய நிகழ்ச்சியிலே குறிப்பிட்டார்கள்.



சேவை வரியை விதிக்கும் அதிகாரம் மாநில அரசுக்குத்தான் வழங்கப்பட வேண்டும் என்கின்ற எங்களுடைய மிக முக்கியமான கொள்கையாக இருக்கிற மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தியிருக்கிற தீர்மானம். 11–வது திட்டக் காலத்தில், ரூ.80,000 கோடிக்குப் பணிகளைச் செயல்படுத்தி, 9 சதவிகித வளர்ச்சி விகிதத்தை அடைய எடுக்கப்படும் நடவடிக்கை. சிறு தொழில் மற்றும் விவசாயம் சேர்ந்த தொழிலுக்கு முன்னுரிமை அளிக்க, வேலை வாய்ப்புகளை அதில் உருவாக்குதல், பெரும்பான்மைச் சமுதாயத்திற்குத் தரவேண்டிய மரியாதையைத் தந்து, சிறுபான்மைச் சமுதாயத்திற்கு பாதுகாப்பாக இருக்கக்கூடிய அரசு, நம்முடைய அரசு என்பதையும், தனித் திறன் மிக்கதாகக் காவல் துறை விளங்க மேற்கொண்டுள்ள திட்டங்கள் ஆகியவை பாராட்டி, வரவேற்கக்கூடிய அம்சங்களில் ஒன்றாகும்.

நான் சார்ந்துள்ள டெல்டா மாவட்ட விவசாயிகளின் சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அரசுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். கடன் ஒன்றே வாழ்வு என்று நினைத்திருக்கிற விவசாயிகளினுடைய வாழ்வில், 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனை இரத்து செய்து விவசாயிகளினுடைய வாழ்வில் ஒளியேற்றியது மட்டுமின்றி, மீண்டும் அவர்களுக்குக் கடன் வழங்குகிற அந்தத் திட்டத்தை நிறைவேற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு குறுவை, சம்பா சாகுபடியில் விவசாயிகள் காணும் மகிழ்ச்சி, இளைஞர்கள் அதிக வேலைவாய்ப்பு கிடைக்க ஏற்படுத்தப்பட்டுள்ள வாய்ப்புகள், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், சைக்கிள்கள், எரிவாயு அடுப்புகள் ஆகியவை தொடர்ந்து வழங்கும் திட்டம், மின் கட்டணம் செலுத்தும் முறையை கணினிமயமாக்குதல், ஊனமுற்றோர், மீனவர்களுக்கு தனி நல வாரியம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கம் மேலும் வலுப் பெற நடவடிக்கை. 33 சதவிகித இட ஒதுக்கீட்டை உள்ளாட்சித் தேர்தலில் நடைமுறைப்படுத்தி, நம்முடைய அரசு நாடாளுமன்றத்திலும் 33 சதவிகித இட ஒதுக்கீட்டை மகளிருக்குப் பெறுவதற்கான வழிவகைகளை ஏற்பாடு செய்து, கோரிக்கைகளை வைத்திருக்கிற இந்த அறிவிப்புகள், தமிழகத்தில் வாழ்கின்ற தமிழர்கள், எதிர்காலத்தில் இந்த இனம் வளமோடும், செழிப்போடும் வாழ்ந்திட வேண்டும் என்பதற்காக இந்த நாட்டில், தமிழகத்தில் வாழும் தமிழர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் உள்ள தொப்புள் கொடி உறவு என்ற அந்த உணர்வோடு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற அரசின் ஆவல். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெரும் முயற்சியால், அன்றைய

பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட காவிரி நடுவர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு நல்ல தீர்ப்பாக அமைய வேண்டும் என்ற தமிழக மக்களின், குறிப்பாக டெல்டா மாவட்ட விவசாயிகளின் சார்பில் எதிர்பார்ப்பு உணர்வைப் பிரதிபலிக்கும் இந்த வரிகள்.

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் தென் மாவட்ட விவசாயிகள் உரிமை காத்திட மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், சிக்கலான பிரச்சினைகளுக்குத் தெளிவான தீர்வு காணும் முதல்வர் என்று 'இந்து' நாளேடு பாராட்டி பெருமை சேர்க்கும் முதல்வர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ்,

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவ தெங்குங் காணோம்"*

என்று அன்னைத் தமிழுக்கு அரியணையிலே வைர மணி மகுடம் சூட்டி, இன்றைக்கு தமிழ் செம்மொழி என்கின்ற அந்தஸ்தை பெற்று இருக்கிறது. அதைத்தான் ஒரு கவிஞர் சொன்னார், ஒரு பரிதிமாற் கலைஞர் கண்ட கனவை, இன்றைக்கு பகுத்தறிவு கலைஞர் அவர்களால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்கின்ற அந்தச் சொல்லை இந்த மன்றத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நீதிமன்றத்திலேகூட நெடுங்காலமாக வைக்கப்பட்டிருக்கிற ஒரு கோரிக்கையான தமிழிலே வாதாடுவதற்கும், இந்த மாமன்றத்திலே தீர்மானம் இடம் பெற்றிருக்கிறது என்பதைவிட அந்தத் தீர்மானம் நிறைவேற்றுகின்ற நேரத்தில் நானும் இந்த மன்றத்திலே அங்கம் வகித்தேன் என்று பெருமைப்படுகிறேன்.

தமிழகத்தில் வாழும் அத்தனை தமிழர்களும், வாழ்த்துகின்ற அளவிற்கு ஆட்சி நடத்துகின்ற நம்முடைய முதல்வர் அவர்கள் காலத்தில், அவர்களின் பொற்காலத்தில் 20-1-2007 அன்று, தமிழக சட்டப் பேரவை வரலாற்றில் பதிவாகி உள்ள ஒரு நிகழ்வினை மகிழ்ச்சியுடன் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் உரை படிக்கத் துவங்கிய மேதகு ஆளுநர் அவர்கள், "மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, வணக்கம்." என்று தொடங்கி, "13-வது சட்டப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடரில் உங்கள் அனைவருக்கும் எனது அன்பான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து, இந்த 2007 ஆம் ஆண்டிலும் தமிழக அரசின் சிறப்புமிக்க திட்டங்களால் மாநிலத்தின் பொருளாதாரம் மேம்பட்டு, மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்ற நம்பிக்கையோடு





இவ்வுரையைத் தொடங்குகின்றேன்." என நமது தாய் மொழியாம் தமிழ் மொழியில் பேசிய மேதகு ஆளுநர் பஞ்சாப் சிங்கம், சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களுக்கு இந்த மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

என்னுடைய தொகுதியின் இரண்டு பிரச்சினைகளை முன் வைத்து நான் விடைபெற விழைகிறேன். அதற்கு முன்னால் என் பகுதியிலே நிறைவேறியிருக்கிற சில பணிகளுக்கு நன்றி தெரிவிப்பதும் சட்டமன்ற உறுப்பினருடைய கடமை என்ற முறையில், என்னுடைய தொகுதியில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக சற்றேறக்குறைய 30-க்கும் மேற்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், சற்றேறக்குறைய 70 இலட்சம் ரூபாய்க்கு சாலைகள் மேம்பாடும் செய்திருக்கிற உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து 2 பாலங்களை வழங்கியமைக்கும் நன்றி தெரிவித்து, நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க 3 புதிய வழித்தடங்களை ஏற்பாடு செய்திருக்கிற போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் மாணவர்கள் தங்கி படிப்பதற்கு 2 மாணவ விடுதிகள் வழங்கிய பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தேரெழுந்தூர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்திய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து ஒரு மிக முக்கியமான பிரச்சினையைச் சொல்லி விடைபெறுகிறேன்.

என்னுடைய தொகுதியில் தாலுகா தலைமை மருத்துவமனை குடவாசலிலே அமைந்திருக்கிறது. அது ஒரு தாலுகாவினுடைய தலைமை இடம். அந்த மருத்துவமனைக்கு என்று பல்வேறு வரலாறுகள் இருக்கின்றன. அது 1880 ஆம் ஆண்டு பிரிட்டிஷ்காரர்களால் நிறுவப்பட்ட அந்த மருத்துவமனை. அதற்குப் பின்னால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்கு அறிமுகமான ஏ.கே. சின்னையா ஆர்கத்தியார் அவர்களால் இடம் வழங்கப்பட்டு 1955 ஆம் ஆண்டு முற்றிலும் மேம்படுத்தப்பட்டு அதி நவீனமயமாக்கப்பட்டது. இடையில் அது கேட்பாரற்று கிடந்ததன் காரணமாக அதில் இருக்கக்கூடிய அத்தனை வசதிகளும் அங்கே இல்லாமல்போய் இன்றைக்கு ஒரு விபத்து நடந்தால்கூட அங்கே சிகிச்சை அளிப்பதற்கு மருத்துவர்கள் இல்லாத ஒரு தாலுகா தலைமை மருத்துவமனையாக இருக்கிறது என்பதை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன்.

அதேபோல் என்னுடைய குத்தாலம் பகுதியில் மருதூரில் இருக்கக்கூடிய எரிவாயு மின் சுழலி திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட அந்த மின் சுழலி நிலையம் இன்றைக்கு பழுதடைந்து உள்ளது. பழுதடைந்து 15 நாட்களுக்கு மேலாகியிருக்கிற அந்த நிலையம் தொடர்ந்து நீடிக்குமேயானால் அந்தப் பகுதியிலே மின் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கக்கூடிய இன்றையச் சூழ்நிலையில் அங்கே மின்சாரத் தட்டுப்பாடு வரும் சூழ்நிலை இருக்கிறது என்பதையும் இங்கே கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன்.

இதே குடவாசல் பகுதியிலே அருள்மிகு கோனேசுவர சுவாமி கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் குடியிருக்கக் கூடியவர்களுக்கு (குறுக்கீடு) ஒரு நிமிடம். ஓர் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். அவர்கள் அங்கே பகுதி கட்டிக் கொண்டிருந்தவர்கள் என்பதற்காக 99 ஆம் ஆண்டிலிருந்து Retrospective Effect என்று கொடுத்து வாடகை செலுத்த வேண்டுமென்று, ஒருவர் 10 ரூபாய் அங்கே பகுதி செலுத்தினால் அவர் 100 ரூபாய் செலுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இன்றைக்கு அங்கே இருக்கிறது. கட்டவில்லையென்றால் நீங்கள் குடியிருக்கக்கூடிய இடத்தை காலி செய்திட வேண்டுமென்று அதிகாரிகள் அறிவுறுத்துகிறார்கள். அதில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புக் கவனம் மேற்கொண்டு அவர்களுடைய வாழ்வில் பாதுகாப்பு அளித்திட வேண்டும். அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிட வேண்டும்.

நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த ஆளுநர் உரைமீது நன்றி தெரிவிக்கிற விவாதத்தில் வாய்ப்பு அளித்தமைக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, கொண்ட கொள்கைக்கும், ஏற்றுக் கொண்ட இலட்சியத்திற்கும் வாழ்கின்ற வாழ்க்கைக்கும் மாறுபாடு இல்லாமல் வாழ்கிற நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி என்பது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரிகள். அவை அனைத்தும் பாராட்டுகளைப் பெறுகின்றன என்று கூறி இந்த ஆளுநர் உரையை வரவேற்று நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

***திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலே ஒரு சிறிய கிராமத்திலே பிறந்த என்னை அரசியலில் ஆளாக்கி அழகுபார்த்த தலைவர் ஐயா மூப்பனாரை வணங்கி இந்த ஆளுநர் உரைமீது பேசுவதற்கு ஒரு வாய்ப்பினை நல்கி இங்கே சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்த்துக் கொண்டிருக்கிற





அன்னை சோனியாவுக்கும், அன்புத் தலைவர் வாசனுக்கும் என் பணிவான வணக்கத்தை உரித்தாக்கி, ஆளுநர் உரை நல்ல வரவேற்கக்கூடிய அம்சங்கள் கொண்டிருக்கிற உரை. தமிழக சட்டமன்றம் ஒரு காலத்தில் அம்மாவின் துதி பாடுகின்ற மன்றமாக இருந்ததை மாற்றி, நல்ல கருத்துகளை எடுத்து வைக்கிற மன்றமாக ஆக்கி, இங்கே எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் வாய்ப்பினை தந்து, இரசித்துக் கொண்டிருக்கிற இந்த நல்ல சட்டசபை தலைவருக்கு நன்றி தெரிவித்து, இந்த உரையிலே கடந்த 8 மாதங்களில் ஏராளமான அற்புதமான திட்டங்களை அள்ளித் தந்து அழகு சேர்க்கிற உரையாக இந்த உரை அமைந்திருக்கிறது. 8 மாதங்களிலே அள்ளித் தந்திருக்கிற திட்டங்கள் மூலம் ஏழையெளிய விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்து வாழ்க்கையில் ஒளியேற்றியிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களே, உங்களுக்கு என்றும் விவசாயிகள் நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள். O.A.P. வயது முதியவர்களுக்கு எல்லாம் ஓய்வூதியத்தை உயர்த்திக் கொடுத்து வாழ்விலே ஒளியேற்றியிருக்கிறார்கள். உடல் ஊனமுற்றவர்க்கெல்லாம் 500 ரூபாய் மாத ஓய்வூதியத்தை உயர்த்தி பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 1–20*

கர்ப்பிணிப் பெண்களுக்கு 6,000 ரூபாய், 2 ரூபாய்க்கு ஏழைகளுக்கு அரிசி, வண்ணத் தொலைக்காட்சி, இலவச சமையல் எரிவாயு, இலவச வேட்டி சேலை இப்படி அள்ளித் தந்திருக்கிற திட்டங்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் தலைவர், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து, பெருந்தலைவர் காமராஜர் படத்தை, இருக்கிற பள்ளிகளில் எல்லாம் வைத்து பூஜித்து, அந்தப் பெருந்தலைவர் பிறந்த நாளிலே சத்துணவிலே இரண்டு முட்டைகள் வழங்குகிற திட்டத்தை அறிவித்து, மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் இருக்கும் என்பதை நிரூபித்திருக்கிற இந்த ஆட்சிக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் தொடர்கிறது என்கின்ற செய்தி இனிப்பான செய்தி. இளைஞர்களுக்குத் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளைத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, இங்கே பேச ஆரம்பிக்கின்றேன்.

அனைத்து கிராம மறுமலர்ச்சித் திட்டம் என்கின்ற அற்புதமான திட்டத்தின்மூலமாக மிகப் பெரிய கிராம வளர்ச்சிக்கு வழிவகுத்திருக்கிறார்கள். கடந்த வாரத்திலே சென்னிமலையிலே ஒரு திட்டத்தைத் துவக்கச் சென்றிருந்தேன். வருமுன் காப்போம் திட்டம்

என்று சொல்லி துவக்கி வைக்க அழைத்திருந்தார்கள். நானும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கார்வேந்தன் அவர்களும் சென்றோம். அங்கே பெருமையோடு ஒரு மூதாட்டி சொன்னார்கள், நன்றாக எல்லா test-களும் பண்ணினார்கள் ஐயா, இந்த ஆட்சி நன்றாக இருக்க வேண்டும் ஐயா, நீ நன்றாக இருக்க வேண்டும் ஐயா, என்று சொல்லி என்னையும் சேர்த்துப் பாராட்டினார்கள். அந்த மருத்துவரை மதியம் இரண்டு மணிக்கு அழைத்துக் கேட்டேன், எத்தனை பேர் சிகிச்சை பெற்றார்கள் என்று கேட்டேன். மதியம் இரண்டு மணிக்கே 2,000 பேர் சிகிச்சை பெற்றார்கள் என்று சொன்னார். அப்படி ஆயிரக்கணக்கான மக்களுடைய நலனில் அக்கறை கொண்டிருக்கிற இந்த ஆளுநர் உரைக்கு, இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் சுற்றிச் சுழன்று வந்து, தமிழகத்தின் பல்வேறு நகரங்களுக்கெல்லாம் வந்தபோது, சென்னிமலைக்கு வந்தபோது, கோவில் நகரமாக இருக்கிற சென்னிமலை பேரூராட்சியை, heritage town ஆக அறிவித்து பல திட்டங்களைக் கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, காங்கேயம் பேரூராட்சியை model town ஆக அறிவித்து, 25 கோடி ரூபாயிலே புதிய வளர்ச்சித் திட்டங்களுக்காக உத்தரவிட்டுச் சென்றமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, காவலர் நலன் காக்க மூன்றாவது காவல் துறை கமிஷனை நியமித்து, அதிலே எங்களையும் பங்கு பெறச் செய்து, ஏற்றமிகு காவலர்களுக்கு ஒத்துழைப்பு நல்கியிருக்கிற இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக இருப்பது மின் பிரச்சினை. மின்சாரக் கட்டணத்தைக் கட்ட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். அதற்கு ஒரு நல்ல திட்டத்தை அரசு பரிசீலிக்குமா? மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கனிவோடு பார்க்கிறார்கள். Wind Mill என்ற ஒரு திட்டத்தை, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று அல்லது இரண்டு, மூன்று பஞ்சாயத்துகளுக்கு சேர்ந்து மானியத்தோடு—சில வசதியான பஞ்சாயத்துகள் இருக்கின்றன; அரசின் உதவியோடு ஒரு wind mill-ஐப் போட்டுவிட்டால், அதன்மூலம் மின்சாரத்தை மாற்றாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். பல்வேறு ஊராட்சிகளிலே மின்சாரக் கட்டணத்தைக் கட்ட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே மரபு சாரா எரிசக்தித் துறையினுடைய உதவியோடு இதை அமல்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, முக்கியமான ஓர் அறிவிப்பு கவர்னர் உரையிலே வந்திருக்கிறது. நதிகளை இணைக்கிற திட்டம். பல ஆண்டுகளாக தென்னக நதிகளை இணைக்க வேண்டுமென்கின்ற கோரிக்கை பேச்சு வாக்கிலே, எழுத்து வாக்கிலே, ஏட்டு வாக்கிலே இருந்துகொண்டேயிருக்கிறது. நதிகளை இணைப்பதற்கு ஆக்கப்பூர்வமான திட்டத்தை வலியுறுத்தி முன்னிறுத்த வேண்டும். முதல்கட்டமாக தென்னக நதிகளையாவது இணைத்து மேற்குப் பகுதியிலே, கேரளா பகுதியிலே கடலிலே கலக்கிற நீரையெல்லாம் தமிழகத்தினுடைய வறட்சிப் பகுதிகளுக்கு—காங்கேயம், குண்டடம், சென்னிமலை, வெள்ளக்கோவில், தாராபுரம், கரூர், மொடக்குறிச்சி போன்ற வறட்சிப் பகுதிகளுக்கு வளம் சேர்க்கிற அளவிலே நதிகளை இணைக்கிற திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து அதை செயல்திட்டமாக ஆக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்திய அரசியல் சட்டத்தையே மறு ஆய்வு செய்ய வேண்டுமென்ற மாற்றியமைக்க வேண்டுமென்கின்ற கோரிக்கை யோசிக்க வேண்டிய விஷயம், விவாதிக்க வேண்டிய விஷயம். மாநில அளவிலே, அகில இந்திய அளவிலே விவாதங்கள் தேவை என்கின்ற கருத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும், என் சார்பிலேயும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே 13-வது அம்சமாக, 56 சதவிகித மக்கள் வேளாண் துறையை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். 4 சதவிகித வளர்ச்சிக்கு விவசாயத்தை நம்பியுள்ள குடும்பங்களிலுள்ள இளைஞர்களுக்கு தொழில் துறை மற்றும் நற்பணித் துறை, Service Sector-லே உயர் வளர்ச்சியின் பயன்களை அடைய நடவடிக்கை மேற்கொள்வோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு விளக்கமான திட்டங்களைத் தீட்ட வேண்டும். இன்றைக்கு விவசாயம் ஒரு நலிவடைந்த தொழிலாக மாறிக்கொண்டிருக்கிற சூழ்நிலையிலே அதற்கு ஒரு நல்ல திட்டத்தைத் தீட்ட வேண்டும்.

அடுத்து, அருமைத் தலைவர் இராஜீவ் காந்தி அவர்களுடைய கனவாக இருந்த, 33 சதவீத இட ஒதுக்கீடு, மகளிருக்கு இட ஒதுக்கீடு என்கிற திட்டம் இன்றைக்கு பஞ்சாயத்து ராஜிலே அறிமுகப்படுத்தி பெருமை சேர்த்துக்கொண்டிருக்கிற நேரத்தில், அன்னை சோனியா காந்தி அவர்கள் இந்த நாட்டினுடைய மத்திய அரசினுடைய, தேசிய ஒருங்கிணைப்புக் குழுவினுடைய தலைவராக இருந்துகொண்டிருக்கக்கூடிய நேரத்தில் 33 சதவீத இட ஒதுக்கீடு சட்டமன்றத்திலேயும், நாடாளுமன்றத்திலேயும் நடைமுறைப்படுத்துவோம் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதற்கான ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்ய வேண்டுமென்று நான் காங்கிரஸ்

[திரு. விடியல் எஸ். சேகர்] [2007 ஜனவரி 24

பெரியக்கத்தின் சார்பிலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, எனது தொகுதியிலே முக்கிய கோரிக்கையாக இருப்பது, என் தொகுதிக்கும், அருமைக்குரிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சருடைய தொகுதிக்கும் இடையே குண்டடம், சங்கராண்டாம்பாளையத்திற்கும், வெள்ளக்கோவில் ஒன்றியத்திற்கும் இடையே இருக்கிற அமராவதி ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் வேண்டுமென்ற கோரிக்கை கடந்த பல ஆண்டுகளாக நிலுவையிலே இருக்கிறது. அந்தப் பாலம் இல்லாத காரணத்தினாலே, 37 கிலோ மீட்டர் சுற்றி வர வேண்டிய பிரச்சினையிலே மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தத் தரைப் பாலத்தை சேர்க்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 1–25

அடுத்து, சென்னிமலையிலே இருந்து ஊத்துக்குளிக்கு நொய்யல் ஆற்றின் குறுக்கே பொதுப் பணித் துறையின் சார்பிலே ஒரு மேம்பாலம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையைச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமான பிரச்சினை, காங்கேயத்திலே அரசு மருத்துவமனை. மிகப் பெரிய தேசிய நெடுஞ்சாலையை இணைக்கிற பகுதி. கோவைக்கும் திருச்சிக்கும் இடையே இணைக்கிற பகுதி. ஈரோட்டுக்கும், சேலத்திற்கும், பழனிக்கும் இடையே இணைக்கின்ற பகுதி. நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. அங்கே தேவையான மருத்துவர்கள் 7 பேர். இன்றைக்கு பணியிலே இருப்பவர்கள் இரண்டே இரண்டு மருத்துவர்கள் மட்டும்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். விபத்து ஏற்பட்டால், அங்கே ஆம்புலன்ஸ் வசதி இல்லை. அங்கே கட்டடங்கள் போதவில்லை, நர்சுகள் இல்லை என்கின்ற கோரிக்கை இருந்து கொண்டிருக்கிறது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கருணையோடு, கருணைகூர்ந்து பார்த்து, கண்டிப்பாக, இந்த அரசு மருத்துவமனையை தாலூகாவினுடைய தலைநகராக இருக்கின்ற காங்கேயம் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்திக் கொடுக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, சென்னிமலை நெசவாளர்கள் நிறைந்து வாழும் பகுதி. நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் காசநோய் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதால், அவர்கள் வருவது சென்னிமலை மருத்துவமனைக்குத்தான். அதனுடையத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே கூடுதல் வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2007 ஜனவரி 24] [திரு. விடியல் எஸ். சேகர்]

காங்கேயத்தில் இருக்கின்ற வீரணம்பாளையம் என்ற ஊராட்சியிலே மிகப்பெரிய மக்கள் தொகை நிறைந்த ஊராட்சியிலே ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டு, 3 ஆண்டுகளாகப் பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றது. அது என்றைக்குத் திறக்கப்படுமோ என்ற நல்ல நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

அதற்கடுத்தபடியாக, நலத் திட்டங்களுக்காக விண்ணப்பிக்கிறபோது, முதியோர் உதவித் தொகைக்காக இருந்தாலும்சரி, மற்றபடி கர்ப்பிணி பெண்களுக்கு உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கிறபோதும்சரி, 12,000 ரூபாய் என்று வருமான வரம்பு விதித்திருக்கிறார்கள். ஓர் ஆண்டுக்கு 12,000 ரூபாய் வருமானம் என்பது, மாதம் 1,000 ரூபாயை வைத்து எப்படி குடும்பம் நடத்த முடியும்? அந்த வருமான வரம்பை 24,000 ரூபாயாக ஓர் ஆண்டுக்கு அதிகரிக்க வேண்டும். அப்படி அதிகரித்தால், ஏழை மக்கள் நிறைய அந்தத் திட்டங்களிலே பயன்பெற முடியும்.

எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் கைத்தறித் துறை அமைச்சராக இருக்கிறார்கள். எனவே, நெசவாளர்களுக்கு பல ஆண்டுகளாக அளிக்காமல் இருக்கிற கூலியை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அகவிலைப் படி உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் வற்புறுத்திக் கேட்பதெல்லாம், நெசவாளர்களுக்கு ஓய்வூதியத் தொகை ரூ.200 ஆக இருந்து கொண்டிருக்கிறது. முதியோர்களுக்கெல்லாம் ரூ.400 ஆக, உடல் ஊனமுற்றவர்களுக்கு ரூ.500 ஆக உயர்த்தி இருக்கின்ற இந்த அரசு, நெசவாளர்களுக்கும் ஓய்வூதியத்தை ரூ.400 ஆகவோ ரூ.500 ஆகவோ உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கோவில் நிலங்களுக்குப் பட்டா பிரச்சினை தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. காங்கேயத்தில் இருக்கிற பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலத்திலே 30 ஆண்டுகளாகக் குடியிருந்து வருகிற மக்கள், காங்கேயம் டவுனிலே, 13–வது வார்டிலே, இலட்சுமி நகரிலே குடியிருந்து வருகிற மக்களுக்கு நிலப் பட்டா கேட்டு விண்ணப்பித்துக் கொண்டேயிருக்கிறார்கள். அதையெல்லாம் அரசு பரிசீலனை செய்து, வருவாய்த் துறையும் இணைந்து — கட்டணம் செலுத்தத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் குடியிருக்கிற நிலத்திற்கு நிலப் பட்டா பெறுவதற்குக் கட்டணம்கூட செலுத்தத் தயாராக இருக்கிறார்கள்— அதற்கு நிலப் பட்டா வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நத்தக்காடையூர் பகுதியிலே 110 K.V. துணை மின் நிலையம் (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். மின் இணைப்பு

[திரு. விடியல் எஸ். சேகர்] [2007 ஜனவரி 24

வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அங்கு 110 K.V. துணை மின் நிலையம் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கவர்னர் உரையிலே கடந்த முறை சொன்னார்கள், போக்குவரத்தினுடைய வசதியை மேம்படுத்துவதற்காக மினி பஸ் திட்டத்தைக் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். மினி பஸ் திட்டத்தை விரிவுபடுத்துவோம் என்று சொன்னார்கள். அதற்கான நல்ல அறிவிப்பு வரவில்லை. கடந்த கலைஞருடைய ஆட்சியிலே, மினி பஸ்ஸுக்காக நல்ல திட்டங்களைத் தீட்டி, அந்த மினி பஸ்ஸைக் கொண்டு வந்தார்கள். அதை மேலும் விரிவுபடுத்தி, மினி பஸ்களை விடப் போகிறோமா, எப்பொழுது விடப் போகிறோம்; சில கிராமங்களுக்கெல்லாம் மினி பஸ்களை அதிகரிப்பதற்கும், அதிலே அந்தக் கிராம மக்கள் பயன்பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, புதிய ரேஷன் அட்டை. எங்கு போனாலும், புதிய ரேஷன் கார்டு வரவில்லை என்கின்ற கோரிக்கை வந்து கொண்டே இருக்கிறது. புதியதாகக் கொடுக்கப்பட்ட ரேஷன் அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கவில்லை என்ற கோரிக்கையும் இருந்து கொண்டிருக்கிறது. இரண்டுக்கும் தனிக் கவனம் செலுத்தி, உணவுத் துறை அமைச்சர் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைவருக்கும் உயர் கல்வி கிடைக்கிற அறிவிப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன். மின்சார வாரியத்திலே ஊழியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. பஞ்சாயத்துகளிலே விளக்குகள் எரியவில்லை என்று சொன்னால், மின் ஊழியர்கள் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். சுகாதாரத்திலே குப்பைகளை அள்ள வேண்டும் என்று சொன்னால், சுகாதாரப் பணிக்கு இன்னும் ஆள் போடவில்லை என்று சொல்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். எனவே, அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலே கணினி ஆய்வகம் வரும் என்ற அறிவிப்புக்கு நன்றி தெரிவித்து, பள்ளியிலே நின்று போனவர்களுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டம். அற்புதமான திட்டம் Skill Development Programme அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

புதிய தொழிற்சாலைகளுக்கு நன்றி. V.A.T. அறிவிப்புக்கு நன்றி. இன்னும் முக்கியமான ஒரே ஒரு பிரச்சினையை மட்டும் முன்வைத்து விடைபெறலாம் என்றிருக்கிறேன். மிகப் பெரிய பிரச்சினை, ஈரோடு மாவட்டத்திலே மாசு பிரச்சினை. திருப்பூரிலே சாயத் தொழிற்சாலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள் சார். நேரத்தை extend பண்ண முடியாது.



2007 ஜனவரி 24]

**திரு. விடியல் எஸ். சேகர்:** ஒரே ஒரு நிமிடம். அருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்துப்பாளையத்திலே, நொய்யல் ஆற்றிலே மாசுப் பிரச்சினைக்கு, காளிங்கராயன் வாய்க்காலில் இருக்கிற மாசுப் பிரச்சினைக்கு, பெருந்துறை சிப்காட் தொழிற்சாலை மாசுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக பைப் லைன் மூலமாக அதைக் கொண்டு வந்து, அந்த R.O. system அமைத்து, அதைச் சுத்திகரித்து கடலிலே கலக்க வேண்டிய திட்டம், மிகப் பெரிய திட்டமாக இருக்கிறது. அத்திட்டத்தினை மத்திய, மாநில அரசுகள் நிறைவேற்றிட ஆவன செய்திட வேண்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 25-1-2007 (வியாழக்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

5. தமிழ்நாடு மின் வாரியத்திற்கு 28-8-1991 முதல் 5-2-1993 வரையிலான கால அளவிற்கு விற்பனை செய்த ஆர்.ட்டி.எஸ். கிரில்களின் மீது வணிகர்கள் செலுத்த வேண்டிய எட்டு சதவீதம் மற்றும் நான்கு சதவீதத்திற்கும் இடையிலான வரி வேறுபாட்டுத் தொகை, மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரி ஆகியவற்றை வணிகர்கள் எட்டு சதவீதம் என்கிற உயர் வீதத்தில் வரி வசூலித்திருக்கக்கூடாது என்கிற நிபந்தனைக்குட்பட்டு தள்ளுபடி செய்தது குறித்து 27-10-2006 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் அரசாணை (2டி) எண் 154-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) பிரிவு 53 (5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

7. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

25. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

26. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

---

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227483
சென்னை-600 008
நூலகம்

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.